மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்துவிட்டேன், போதும். நேரமில்லை.* please. *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் இருந்தால், சொல்லுங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கு இன்று பிறந்தநாள். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பாக அவருக்கு வாழ்த்துகளைச் சொல்லிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

உறுப்பினர் கேட்கின்ற அந்தச் சாலை, மாநில நெடுஞ்சாலை சம்பந்தப்பட்டது அல்ல. குறிப்பாக, இது முழுக்க முழுக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் போடப்படுகின்ற சாலை, ஒன்று. இன்னொன்று, பக்கத்தில் ஒரகடம் போகின்ற சாலையானது, மாநில அரசாங்கத்தின் சாலை. எனவே, இப்போது வெளிவட்ட சாலை ஒன்று புதிதாக போடுவதற்காக திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டு, உலக வங்கியின் நிதியுதவியோடு போடப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, ஒரகடம் பகுதியில் மாநில அரசின் சார்பாக நீங்கள் கேட்கின்ற பாலம் அமைக்கப்படும்.

(இ) சிறுவாணி ஆற்றின் குறுக்கே கேரள அரசு அணை கட்டுவது குறித்து–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு, சற்றுமுன் வந்த செய்தி. 60 மில்லியன் கன அடியிலிருந்து 70 மில்லியன் கன அடி வரைக்கும் தண்ணீரைத் தேக்கக்கூடிய அளவிற்கு கட்டியிருக்கிறார்கள். இதுகுறித்து நம்முடைய அதிகாரிகள் ஆய்வு செய்திருக்கிறார்கள். கேரள அரசுடன் தொடர்பு கொண்டிருக்கிறார்கள். எனவே, இரண்டு மாநிலங்களையும் கூட்டு கள ஆய்வு செய்து, பிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள்.*

(ஆ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்– இரண்டாகப் பிரித்தல், உரிய நேரத்தில் கலந்தாய்வு நடத்துதல் மற்றும் காலிப் பணியிடங்களை நிரப்புதல்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மை– உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர், உறுப்பினர் அவர்கள் வேளாண் கல்லூரியில் பணியிடங்கள் காலியாக உள்ளதென்று கூறினார்கள். கடந்த 2014–ல்*

உதவிப் பேராசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். அதன் பின்னர் 10 ஆண்டு காலமாக இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை. கிட்டத்தட்ட 792 பணியிடங்கள் காலியாக உள்ளன. 10 ஆண்டு கால பிரச்சினை. இப்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குச் சென்றிருக்கிறது. அது விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி. நன்றி.

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: அதேபோல பல்கலைக்கழகத்தை இரண்டாகப் பிரிக்கும் நோக்கம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பிற்காலத்தில் அது நிதிநிலைமைக்கேற்ப நடைபெறும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(உ) கடலூர் மாவட்டம், வீராணம்-பாளையங்கோட்டை விவசாயப் பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்திற்குள் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள். ஒரு நிமிடம்தான், ஒரு நிமிடத்தில் பதிவு செய்யுங்கள்.

திரு. ம. சிந்தனை செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முப்போகம் விளைகின்ற கடலூர் மாவட்டத்தின் நிலங்களை, குறிப்பாக வீராணம் மேற்குப் பகுதி விவசாய நிலத்தையும், திருமுட்டம் பகுதியில் இருக்கின்ற பாளையங்கோட்டை விவசாய நிலத்தையும் ஒன்றிய அரசு, தமிழக அரசோடு கலந்தாலோசிக்காமல் ஏலம் விடுவதற்கு முயற்சித்ததை, 24 மணி நேரத்திற்குள் தனது ஆளுமையான அணுகுமுறையால் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்கள் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள். அதற்கு என் நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

அந்தப் பகுதியை பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலம் என்கின்ற வரையறைக்குள் கொண்டு வருவதன்மூலம் எங்களுக்கு ஒரு நிரந்தர பாதுகாப்பும், நிம்மதியும் கிடைக்கும். ஆகவே, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

(ஊ) திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.*

திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்கு 2003 ஆம் ஆண்டு 37,200 சதுர அடி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் கட்டடமும் கட்டப்பட்டு, நூலகம் செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில் கூடுதல் கட்டடம் வேண்டுமென அங்கேயிருந்து கோரிக்கை அனுப்பப்பட்டு,* estimate*-ம் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. 17,000 சதுர அடி இடத்தை மாவட்ட நிர்வாகம் எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல், திரும்ப எடுத்துக்கொள்வதற்கு ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது. இந்த ஆணையை இரத்து செய்ய வேண்டும். அந்த இடத்தில் உடனடியாகக் கூடுதல் நூலகக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

(எ) நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி அவர்கள்.*

திரு. எம்.ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் தொகுதி, நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதியில் ஏற்பட்டிருக்கக்கூடிய குடிநீர்த் தட்டுப்பாடு குறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.* (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தவரையில், இங்கிருந்து அதிகாரிகளை அனுப்பி ஆய்வு செய்யப்பட்டது. அங்கு, ஏற்கெனவே வருகிற தண்ணீர் குறைந்துவிட்ட காரணத்தால், தற்போது*

2023 ஏப்ரல் 21] [திரு. கே.என். நேரு]

மோட்டார் பம்ப் மூலமாக இறைத்துக் கொடுக்கிற வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாநகராட்சி முழுவதும் தண்ணீர்த் தட்டுப்பாடு இல்லாமல் கொடுப்பதற்கு புதிய திட்டம் ஒன்று AMRUT திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 296.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தத் திட்டம் எடுக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் தொடங்கவிருக்கின்றன. எனவே, இந்த வெயில் காலத்தினைச் சமாளித்திடும் வகையில், மோட்டார்மூலம் அனைத்துப் பகுதிகளுக்கும் தண்ணீர் கொடுக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஏ) கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்கள், மின் வேலியால் யானைகள் உயிரிழப்பதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. முனுசாமி அவர்கள்.

திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில், யானை வழித்தடங்களில் மின் வேலிகள் அமைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால், அவ்வழித்தடங்களில் செல்லக்கூடிய யானைகள் மின்வேலியில் மின்சாரம் தாக்கி அடிபட்டு இறந்துவிடுகின்றன. அதோடுமட்டுமல்ல, அந்த இரண்டு மாவட்டங்களில் தொடர்ச்சியாக மர்மமான முறையிலும் பல யானைகள் இறந்திருக்கின்றன. இனி, அவ்வாறு யானைகள் இறக்காமல் அவற்றைக் காப்பாற்றுகின்ற வகையில், நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(ஊ) திருவாரூர் மாவட்ட மைய நூலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்–தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்களின் கோரிக்கைக்கு பதில் சொல்லவிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரையுடன் இந்தக் கூட்டத் தொடர் நிறைவடையவிருக்கின்ற இந்த வேளையில், நன்றியைச் சொல்லி என்னுடைய பதிலைக் கூற நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2023 ஏப்ரல் 21

நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் சமூக நீதி பாதுகாவலர், ஜனநாயகப் பாதுகாவலர் அவர்களுடைய விதி 110-ன்கீழான அறிவிப்பிற்கு, கல்வியில் இட ஒதுக்கீட்டைப் பெற்றிருக்கின்ற அனைவருடைய சார்பாக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழால், தமிழினத்திற்காக, தமிழகத்தை ஐந்து முறை ஆண்டவர், கலைஞர் அவர்கள். தமிழால் தமிழினத்திற்காக தமிழகத்தை ஐந்து முறை ஆண்டவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஐந்து முறைதான் ஆண்டாரா? ஐந்து முறைதான் ஆண்டாரா? இதோ, ஆறாவது முறையும் அவரே ஆளுகிறார்; இந்த அறிவிப்பின்மூலம் அவரே வாழ்கிறார் என்று சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைப் பொறுத்தமட்டில், திருவாரூர் மாவட்டத்திற்கு மாவட்ட மைய நூலகம் அமைக்க நகரத்தினை ஒட்டி, திருவாரூர் வட்டம், விஜயபுரம், கிராம வார்டு சர்வே எண் 35-ல் உள்ள 0.32.78 ஹெக்டேர் அரசு புன்செய் நிலத்தில் நூலகக் கட்டடம் கட்ட முன்நுழைவு அனுமதி வழங்கி, திருவாரூர் மாவட்ட ஆட்சியரால் 27-3-2003-ல் ஆணை வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து, மேற்சொன்ன இடத்தில், திருவாரூர் மாவட்ட மைய நூலகம் கட்டும் பணி தொடங்கப்பட்டு, 6-9-2006 அன்று தற்போதைய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது திறக்கப்பட்டது. தரைத்தளத்தில் 5,000 சதுர அடி மற்றும் முதல் தளத்தில் 5,000 சதுர அடி என மொத்தம் 10,000 சதுர அடி பரப்பளவில் அந்த நூலகம் இயங்கி வருகிறது. இந்நூலக தரைத்தளக் கட்டடத்தில் நாளிதழ், பருவ இதழ் பிரிவு, நூல் இரவல் பிரிவு, புதிய நூல்கள் பிரிவு, மாற்றுத் திறனாளிகள் பிரிவு மற்றும் முதல் தளத்தில் சொந்த நூல்கள் பிரிவு, செவி மற்றும் பேச்சுத் திறன் குறைபாடு உடையவர்களுக்கான சிறப்புப் பிரிவு, குடிமைப் பணி பிரிவு மற்றும் குற்ற உதவிப் பிரிவு ஆகிய பிரிவுகளுடன் இந்நூலகமானது சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 16-12-2021 அன்று அந்த நூலகத்தை ஆய்வு செய்ய நான் நேரடியாகச் சென்றேன். அங்கு மராமத்துப் பணிகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து அறிந்து, ஏறத்தாழ 31.1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தற்போது புதுப்பிக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

2023 ஏப்ரல் 21] [*திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி*]

நிலமாற்ற தலமான சர்வே எண் 35, அரசு புன்செய் தரிசு நிலம் என வகைப்படுத்தப்பட்டுள்ளது. இந்த சர்வே எண் நாகப்பட்டினம்–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையையொட்டி அமைந்துள்ளது. இத்தலத்தின் வடக்கில் சர்வே எண் 36–ல் அருள்மிகு தியாகராஜ சுவாமி ராஜன் கட்டளைக்குச் சொந்தமான 3,250 சதுர மீட்டர் பரப்பளவில் புறவழிச் சாலையிலிருந்து தென்பகுதி ஓரமாக 100 மீட்டர் தூரத்திற்கு அணுகு சாலை தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலை தொடர்ச்சியாக நில மற்றும் சர்வே எண் 35 வழியாக நூலகக் கட்டடம் வரை செல்கிறது. இந்தத் தார்ச் சாலையின் இருபுறமும் மற்றும் நூலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தைச் சுற்றிலும் நூலகத் துறையால் முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது. நூலகம் அமைவதற்குமுன் தார்ச் சாலையாக அமைக்கப்பட்டுள்ள இடம் பொதுப் பாதை மற்றும் வண்டிப் பாதையாக பொதுமக்கள் பயன்பாட்டில் இருந்து வந்துள்ளது. இதன் வழியாகவும் மற்றும் மாவட்ட நூலகத்திற்கு ஒதுக்கப்பட்ட இடத்தின் வழியாகவும் விவசாய நிலங்களுக்குச் செல்ல பாதை வசதி இருந்து வந்துள்ளது.

நூலகத் துறையினால் அமைக்கப்பட்ட முள்வேலியினால், மைய நூலகத்தின் வடபுறம் மற்றும் தென்புறம் உள்ள குடியிருப்புகளுக்குச் செல்லும் பாதையும் தடைபட்டுள்ளதால் அப்பகுதியைச் சுற்றியுள்ள பொதுமக்கள் மற்றும் தனி நபர்கள், தங்களது பட்டா நிலங்களுக்குச் சென்று வர பாதை வசதி கோரி தொடர்ந்து வலியுறுத்தி வந்ததால், மேற்கூறிய சர்வே எண்களுக்கு உரிய பாதை வசதி ஏற்படுத்திட ஏதுவாக, தற்போது நூலகம் அமைந்துள்ள இடத்தை மறுஅளவீடு செய்து திருவாரூர் வருவாய் கோட்ட அலுவலரிடமிருந்து வரப்பெற்ற அறிக்கையின்படியும் 8–10–2022 அன்று திருவாரூர் மாவட்ட வருவாய் அலுவலரின் சர்வே inspection *அடிப்படையிலும், 10–11–2022 அன்று திருத்திய நிலமாற்ற ஆணை வெளியிடப்பட்டுள்ளது.*

முற்பகல் 10–20

திருவாரூர் மாவட்ட நூலகத்திற்கு வழங்கப்பட்ட இடத்தில் நாகப்பட்டினம்...(மணியடிக்கப்பெற்றது) உடனே முடித்துவிடுகிறேன். திருவாரூர் மாவட்ட நூலகத்திற்கு வழங்கப்பட்ட இடத்தில் நாகப்பட்டினம்–தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து மாவட்ட நூலகத்திற்குச் செல்வதற்காகவும், பொது மக்கள் இந்த சர்வே எண் பின்புறமுள்ள குடியிருப்பு மற்றும் நஞ்சை நிலங்களுக்குச் செல்ல

[திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி] [2023 ஏப்ரல் 21

ஏதுவாகவும் பொதுப் பாதை பயன்பாட்டிற்காக 0.3.5 ஹெக்டேர் இடம் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட நூலகத்தின் இடம் எதுவும் கையகப்படுத்தப்படவில்லை. மாவட்ட நூலகத்திற்கு சர்வே எண் 35/3–ல் 0.1.5.4 ஹெக்டேர் இடமானது அளிக்கப்பட்டுள்ளது. பாதையின் இருபுறமும் மீதமுள்ள நிலங்கள், புஞ்சை தரிசு என்ற வகைப்பாட்டில் வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்நிலையில் மாவட்ட நூலகத்தினை விரிவாக்கம் செய்திட, கூடுதல் நிலம் வழங்கிட கோரி, இன்றுவரை கோரிக்கை மனு ஏதும் வரப்பெறவில்லை. பின்னர், கோரிக்கை வரப்பெற்றால், அதே சர்வே எண்ணில் மீதமுள்ள புஞ்சை தரிசிலிருந்து நிலமாற்றம் செய்திட மாவட்ட நிருவாகத்தால் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஐ) வால்பாறை தொகுதி, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட தினக்கூலியை நடைமுறைப்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.*

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது வால்பாறை தொகுதியில் தேயிலைத் தோட்டங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக 425 ரூபாய் 40 காசு என்று அறிவிக்கப்பட்டு, இதுநாள்வரை அரசிதழிலும் வெளியிடப்படவில்லை; இதை நடைமுறைப்படுத்தவுமில்லை என்பதை அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

(ஒ) கீழ்வேளூர் தொகுதி, விவசாயக் கல்லூரிக்குக் கட்டடம் கட்டுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கீழ்வேளூர் தொகுதி, கீழ்வேளூரில் ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க வேண்டுமென்பது எங்களுடைய நீண்ட நாள் கனவு, 10 ஆண்டுக் கால கனவு. அந்தக் கனவை நிறைவேற்றி, கீழ்வேளூரில் விவசாயக் கல்லூரி தந்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு*

2023 ஏப்ரல் 21] [*திரு. வி.பி. நாகைமாலி*]

வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் முதலிலே நான் கோடானுகோடி. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இதில் ஒரு பிரச்சினையை மட்டும் சொல்லுங்கள்; நேரமில்லை.*

திரு. வி.பி. நாகைமாலி: *நான் தவறாக எதுவும் சொல்லவில்லையே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தவறு, சரி என்பதில்லை. எனக்கு நேரமில்லை.*

திரு. வி.பி. நாகைமாலி: *ஆகவே, கட்டடம் கட்டப்படாமல் இருக்கிறது. நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கான கோப்புகள் தலைமைச் செயலகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. கட்டடம் இல்லாத காரணத்தினால், கட்டமைப்பு வசதி இல்லாத காரணத்தினால், இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு படிக்கக்கூடிய மாணவர்கள் பக்கத்திலிருக்கிற கல்லூரிக்குச் சென்று படிக்கிற ஒரு சூழல் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விரைந்து அந்த நிலத்தை எடுத்து, கட்டடம் கட்டுவதற்கான பணியினைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிவு செய்யப்பட்டுவிட்டது; உட்காருங்கள்.*

(ஓ) தொழிற்சாலை நிலங்கள், ரியல் எஸ்டேட் நிலங்களாக மாற்றுவதைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் தொழிற்சாலைகளுக்கென்று கையகப்படுத்தப்பட்ட நிலங்களை தற்போது பெரும்* corporate *நிறுவனங்கள்* real estates*–ஆக மாற்றி வருகிறார்கள். அதேபோன்று, அந்த நிலங்களில் பஞ்சமி நிலங்களும் இருக்கின்றன. அதை அரசு உடனடியாகத் தடுத்து நிறுத்தி, ஏனைய திட்டங்களுக்கு அந்த நிலத்தைப் பயன்படுத்த முன்வர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(ஔ) கடலூர் மாவட்டம், நீட் தேர்வு அச்சத்தால் மாணவி நிஷா உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்கள்.*

திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. கடலூர் மாவட்டம், நெய்வேலி வட்டம் 9–ல் வசித்து வரும்* NLC *ஒப்பந்தத் தொழிலாளி உத்ராபதி என்பவரின் மகள் நிஷா,* NEET *தேர்வு எழுத நெய்வேலி இந்திரா நகரிலுள்ள ஒரு தனியார் பயிற்சி மையத்தில் படித்து வந்தார்.* NEET *தேர்வு பயம் காரணமாக 5–4–2023 அன்று மாலை 5–00 மணியளவில் வடலூர் இரயில்வே கேட் அருகில், பெங்களூரு–காரைக்கால் விரைவு இரயில் முன்பு பாய்ந்து அவர் தற்கொலை செய்து கொண்டார். இதுபோன்ற தற்கொலையைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்த ஏழை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். (குறுக்கீடு) பதிவு செய்துவிட்டீர்கள்.*

(அஅ) ஆணவக் கொலைகளைத் தடுக்க தனிச் சட்டம் இயற்றுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலமாக அதிகரித்து வருகின்ற ஆணவக் கொலைகளைத் தடுக்கும் விதத்தில் தனிச் சட்டம் இயற்ற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(அஆ) தேங்காய் மட்டை தொழிற்சாலை முடங்கிவரும் நிலை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேங்காய் உரிக்கும் மட்டையைப் பயன்படுத்தும் தொழிற்சாலை தொழில் இப்போது முடங்கிக்*

2023 ஏப்ரல் 21] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

கொண்டிருக்கிறது. இந்தியாவிலேயே அதிகமாக தேங்காய் உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு அந்த மட்டையிலிருந்து ரூ.1.50, ரூ.2.00 கிடைக்கும். சுற்றுச்சூழலின் காரணமாக இந்தத் தொழில் முடங்குவதால், ஏறத்தாழ ரூ.1,000 கோடி நஷ்டம் ஏற்படுவதால், அரசு உடனடியாக அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அஇ) நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசியினால் ஏற்படும் பிரச்சினை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள். அவருக்கு மைக் கொடுங்கள்.*

முற்பகல் 10–25

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் நியாய விலைக் கடைகளில் செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படும் என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்து, அது நடைமுறைக்கு வந்திருக்கின்றது. இந்தியாவிலே 60 விழுக்காடு மக்களுக்கு ஊட்டச்சத்து குறைவாக இருப்பதால், அரிசியில் இரும்புச் சத்தை சேர்க்கக்கூடிய வகையில், செறிவூட்டப்பட்ட அரிசி வழங்கப்படுகிறது. ஆனாலும், ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குறைபாடு இருப்பதால், இரும்புச் சத்தை அதிகரிப்பதன் காரணமாக நீரிழிவு நோய், கணைய நோய். . . (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதைப் பார்த்துக் கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள். (குறுக்கீடு) புரிந்து கொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) புரிந்துகொண்டுவிட்டார்கள். (குறுக்கீடு) அதில் பிரச்சினை இருக்கிறது என்று சொல்லிவிட்டீர்கள். அதைப் புரிந்து கொண்டுவிட்டார்கள்.*

(அஈ) ஒன்றிய அரசு இரத்து செய்த அமைப்புசாரா சங்கங்களின் சட்டங்களை மீண்டும் அமல்படுத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.*

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அமைப்புசாரா சங்கங்களின் சட்டங்களை, ஒன்றிய அரசு* silent *ஆக இரத்து செய்துவிட்டது. அதனை நாம் அமல்படுத்துவோமா என்ற கேள்வியை எழுப்பி, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

(அஉ) தீப்பெட்டித் தொழிலுக்கு எதிரான Plastic lighter விற்பனையைத் தடை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பெட்டித் தொழில் தென்மாவட்ட மக்களின் வாழ்வாதாரமாக மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான ஏழைப் பெண் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் வருமானத்தைத் தருகின்ற தொழிலாக இருக்கின்றது. தற்சமயம் பிளாஸ்டிக்காலான* lighters *வெளிநாடுகளிலிருந்து முறைகேடாக இங்கே விற்பனைக்கு பெருமளவில் உள்ளதால், தீப்பெட்டி விற்பனை பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட, கோவில்பட்டியில் உள்ள ஒரு தீப்பெட்டித் தொழிற்சாலையை 8–9–2022 அன்று ஆய்வு செய்தார்கள். உடனடியாக மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள். 15–11–2022 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற உற்பத்தியாளர்கள் மாநாட்டில் மாண்புமிகு அண்ணன் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய அனுமதியுடன் நானும் சென்று மத்திய அரசை வலியுறுத்தியிருக்கிறோம். அந்த* lighter–*ஐ தடை செய்து, தீப்பெட்டித் தொழிலை வாழ வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பிறந்த நாள் பரிசாக அறிவிப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

(அஊ) கோயம்புத்தூர் மாவட்டம், தொழிற்சாலைகளால் நதிநீரில் ஏற்படும் மாசு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

2023 ஏப்ரல் 21]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொங்கு மண்டலம் தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியாகும். காவிரி, காளிங்கராயன், பவானி, நொய்யல், அமராவதி என அத்தனை நதிகளுடைய தண்ணீரைக் குடிப்பவர்கள் புற்றுநோயாலும், தோல் வியாதிகளாலும் அவதிப்படுகிறார்கள். என்னைப் போன்றவர்கள் கொங்கு மண்டலத்தில், உயிரிழப்புக்கு வருத்தம் தெரிவிக்கச் சென்றால், பாதி உயிரிழப்பு புற்றுநோயால் ஏற்படுகிறது என்பது தெரிய வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஸ்டெர்லைட்டால் பாதிப்பு ஏற்படுவதைப் போன்று பல மடங்கு* pollution *அங்கு ஏற்படுகிறது. எனவே, இதில் அரசு சிறப்பான கவனத்தைச் செலுத்த வேண்டும். இதில், ஒரேயொரு குறிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன்; கொரோனா காலத்தில் தொழிற்சாலைகளும், ஊரும் அமைதியாக இருந்தபோது, மொத்தத் தண்ணீரும் சுத்தமாக இருந்தது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அள) ஜல்லிக்கட்டுக்கான நுழைவுச் சீட்டு, கிராம கமிட்டியின்மூலம் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நடைபெறும் ஜல்லிக்கட்டு விளையாட்டுக்கு ஆன்லைன் மூலமாக வழங்கப்படும்* token-*ஐ இரத்து செய்து, அந்தந்த கிராமக் கமிட்டியின் மூலமாக* token *வழங்க வேண்டும் என்று ஜல்லிக்கட்டு ஆர்வலர்கள் வலியுறுத்துவதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

(அஉ) தீப்பெட்டித் தொழிலுக்கு எதிரான Plastic lighter விற்பனையைத் தடை செய்தல்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், தீப்பெட்டித் தொழில் நலிவடைந்திருக்கிறது. அதனால், தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசின்*

கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழகத்தில் ஏறத்தாழ 400-க்கும் மேற்பட்ட தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்சாலைகள்மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 50 மில்லியன் அமெரிக்கன் டாலர் அளவிற்கு விற்பனை நடைபெற்று வருகிறது. மேற்கண்ட தீப்பெட்டித் தொழிற்சாலைகள்மூலம் விருதுநகர் மற்றும் அதன் அருகிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பைப் பெற்று வருகிறார்கள். தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்குப் பிரதான அச்சுறுத்தலாக இருப்பது, பெட்ரோலிய எரிபொருள் நிரப்பப்பட்ட plastic lighters *ஆகும். சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும்* lighters *ஆல் தீப்பெட்டித் தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக குறைந்த விலைக்கு இறக்குமதி செய்யப்படும் ஒரு* lighter *ஆனது 20 தீப்பெட்டிகளில் உள்ள தீக்குச்சிகளுக்கு சமமான திறன் கொண்டது. (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *இந்திய தீப்பெட்டி சந்தையில் சுமார் 20 சதவிகிதத்திற்கும் மேலாக* lighters *ஆல் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக, சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும்* lighters*-ஐ தடை செய்ய வேண்டும் என்று 8-9-2022 அன்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஒன்றிய அரசின் மாண்புமிகு வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்கள். மேலும், தீப்பெட்டிக்கான மரக் கட்டைகளை இறக்குமதி செய்வதில் உள்ள இடர்பாடுகளைக் களைந்திட வேண்டி, 14-2-2022 அன்று தமிழக அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் துறைச் செயலாளர் அவர்களால், ஒன்றிய அரசின் வர்த்தகம் மற்றும் தொழில் துறையின் செயலாளர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், முடித்துவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: *தீப்பெட்டிக்காக இறக்குமதி செய்யப்படும் மரக்கட்டைகள் புகையூட்டம்*

செய்யப்பட வேண்டுமென்றபட்சத்தில், 5 மடங்கு கட்டணம் விதிக்கப்பட்டிருந்ததை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் தொடர்ந்த வழக்கில், இடைக்கால தடை விதித்து நீதிமன்றம் ஆணை வழங்கியுள்ளது. மேலும், ஒன்றிய அரசின் தாவரப் பாதுகாப்பு இயக்குநரக அலுவலகத்தின் குறிப்பாணை, 12–7–2022–ன்படி, குஜராத் உயர் நீதிமன்ற தீர்ப்பாணை வழங்கப்பட்ட, 28–6–2022 முதல் 5 மடங்கு கூடுதல் கட்டணம் வசூலிக்க வேண்டாமென அறிவுறுத்தியிருக்கிறது. இதன்மூலம் தமிழ்நாடு உற்பத்தியாளர்களுடைய வாழ்வாதாரத்தை கவனத்தில் கொண்டு, தகுந்த நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

(அஏ) கன்னியாகுமரி மாவட்டம், பன்றியைக் கொன்றதாக 3 வழக்கறிஞர்கள் கைது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்றைய தினம் 3 வழக்கறிஞர்கள் தங்களுடைய சொந்த estate-க்குச் சென்றபோது, அங்கே இருக்கக்கூடிய தெரியாத நபர் ஒருவர் ஒரு பன்றியைக் கொன்றுவிட்டார். ஆனால், பன்றியைக் கொன்றவரை விட்டுவிட்டு, 3 வழக்கறிஞர்களையும் கைது செய்து, forest அலுவலகத்தில் ஒரு நாள் முழுவதும் வைத்திருக்கிறார்கள். எனவே, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசின் கவனத்திற்கு வந்துவிட்டது. Arrest செய்துவிட்டார்கள் என்று சொல்லிவிட்டீர்கள்.

(அஐ) வீட்டு வசதி வாரிய குடியிருப்புதாரர்களுக்கு உரிமைப் பத்திரங்கள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன் அவர்கள்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் வீட்டு வசதி வாரியத்தால் 24,000 வீட்டுமனைகளும், வீடுகளும் ஒதுக்கப்பட்டன. முழுமையாக

[திரு. அம்மன் K. அர்ச்சுணன்] [*2023 ஏப்ரல் 21*

பணம் கட்டிய பின்பும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் உரிமைப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்பதன்மீது அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது 6 மாத காலம், 1 ஆண்டு காலமாக இல்லை, பத்தாண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருக்கிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்பொழுது அதற்கான ஒரு குழுவை அமைத்திருக்கிறோம். எனவே, அதனை முழுமையாகத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.*

(அஒ) திருமங்கலம் தொகுதி, புதிய பேருந்து நிலையம் மற்றும் இரயில்வே மேம்பாலம் அமைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கான நில ஒப்படைப்புக்கு அரசாணை வெளியிடப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். தற்போது அது இரத்து செய்யப்பட்டுள்ளதாக அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தற்போது இதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

அதேபோல், இரயில்வே மேம்பாலத்திற்கான நிதியொதுக்கீடு செய்யப்பட்டு, முன்னாள் முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டார்கள். அதுவும் தற்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

2023 ஏப்ரல் 21]

(அஓ) கன்னியாகுமரி மாவட்டம், கால்வாய்களைத் தூர்வாரி பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிடுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் நீர்வரவுகளை அதிகமாகக் கொடுக்கக்கூடிய பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு 1, 2 மற்றும் முக்கூடல் அணைகளில் தாராளமாகத் தண்ணீர் இருக்கிறது. ஆனால், தக்கலை ஒன்றியம், குறுந்தங்கோடு ஒன்றியம், கிள்ளியூர் ஒன்றியம், முஞ்சிறை ஒன்றியம் போன்ற பகுதிகளில் கால்வாய்கள் சரியாக சீர் செய்யப்படாத காரணத்தினால், கடைநிலை வரை தண்ணீர் செல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். குடி தண்ணீருக்குக்கூட வாய்ப்பில்லாமல், அந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, உடனடியாக அந்தக் கால்வாய்களைச் சீர் செய்து, தூர்வாரி, செப்பனிட்டு, மக்களுக்குத் தண்ணீர் கிடைப்பதற்கும், விவசாய மக்கள் தங்களுடைய பயிர்களைப் பேணுவதற்கும் வசதியாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் மேயர் அவர்கள், நாகர்கோவிலில் குடிதண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது; பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளிலிருந்து தண்ணீர் திறக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். உடனடியாகத் தண்ணீரை திறந்து விடும்படி நான் உத்தரவிட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதோடு ராதாபுரம் தாலுகாவிற்கும் சேர்த்து தந்துவிடுங்கள்.*

2. அறிக்கைகள் அளித்தல்—*தொடர்ச்சி*

(அ) மதிப்பீட்டுக் குழு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு முனைவர்* T.R.B. *ராஜா அவர்கள், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அவர்கள்.*

முனைவர் T.R.B. **ராஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் 14 முதல் 19 வரையிலான ஆறு அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு திரு. தா. உதயசூரியன் அவர்கள், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் அவர்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2021–2023 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 44 முதல் 53 வரையிலான பத்து அறிக்கைகளை குழுவின் சார்பாக இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்புத் திட்டங்களுக்கான) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்புத் திட்டங்களுக்கான) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நில ஒருங்கிணைப்பு (சிறப்புத் திட்டங்களுக்கான) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

முற்பகல் 10–35

(ஆ) தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (மூன்றாம்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (மூன்றாம்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (மூன்றாம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22–காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23–தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) –*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். 20–4–2023 ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கைகள் மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றின் மீதான விவாதத்திற்கு பதிலுரை மற்றும் வாக்கெடுப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)* Agenda*–விற்குள் சென்றுவிட்டோம், உட்காருங்கள். (குறுக்கீடு) இனிமேல் அவ்வளவுதான். (குறுக்கீடு) இருங்கள், இருங்கள். (குறுக்கீடு) பதிலுரையைக் கேட்டு விட்டு நான் வாய்ப்பு தருகிறேன். (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடுகள்)*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான், முதலமைச்சர். (குறுக்கீடுகள்) ஆனால், (குறுக்கீடுகள்)*

6. பேரவை நிகழ்வுகள் முழுவதையும் நேரடி ஒளிபரப்பு செய்தல் குறித்த எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கை—மாண்புமிகு பேரவைத் தலைவரின் குறிப்புரை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றும்போது உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவுசெய்து மரபுப்படி (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்றார்கள். விதிப்படி தயவுசெய்து அமருங்கள். (குறுக்கீடுகள்)*

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி, எழுந்து நின்று ஏதோ பேசினார்.)

நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) தயவுசெய்து அவையில் அமரும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதிலுரைக்கு வந்துவிட்டார்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிற்கும்போது மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் எழுந்து நிற்பது முறையல்ல, நியாயமல்ல. (குறுக்கீடுகள்) சட்டமல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இதையும் கேட்டுவிட்டுச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஒரே ஒரு நிமிடம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, இவர்கள். (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் (திரு. ஓ. பன்னீர்செல்வம் தவிர) அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

ஒரு நிமிடம் உட்கார்ந்து, வெளிநடப்பு செய்கின்றவர்கள் இதையும் கேட்டுவிட்டுச் செல்லுங்கள். நேற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது இரண்டு மணி நேரம் மதிய உணவு உண்ணாமல்கூட நாகரிகத்தோடு, ஜனநாயகத்தோடு இந்த அவை நடைபெற வேண்டும் என்ற காரணத்திற்காக

(மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முழுமையாக இருந்தார்கள்.

இன்றும் காலையிலே அறையிலே வந்து, நாங்கள் விதி 55–ன்கீழ் பேசுவதற்கு எங்களுக்கு வாய்ப்புத் தாருங்கள் என்று கேட்டார்கள். அதையும் ஜனநாயக முறைப்படி நாம் கொடுத்திருக்கின்றோம். தொடர்ந்து அவர்கள் கூறுகின்ற ஒரே காரணம், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது நேரலை விட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். நான் ஒன்றைச் சொல்லி விரைவாக நிறைவு செய்ய விரும்புகின்றேன். பல முறை இதற்கு நான் பதில் சொல்லியிருக்கின்றேன். இந்த அரசு பொறுப்பேற்ற பின்புதான் நேரடி ஒளிபரப்பு நாங்கள் அறிமுகம் செய்வோம் என்று தேர்தல் அறிக்கையிலே சொல்லி, அதன்படி கேள்வி–பதில் நேரத்தை நேரடியாக ஒளிபரப்பு செய்து வருகின்றோம். தொடர்ந்து படிப்படியாக, இப்போது விதி 55 உட்பட, agenda–வில் எடுக்கப்பட்டதற்கும் நேரடி ஒளிபரப்பு செய்கின்றோம். தொடர்ந்து அவர்கள், எங்களைக் காட்ட வேண்டும், இல்லையென்றால் பதிலுரைக்கு இருக்க மாட்டோம் என்று செல்வது எந்தவகையில் நியாயம் என்பதை கேட்டுக்கொண்டிருக்கின்ற மக்கள்தான் முடிவு செய்ய வேண்டும். எந்த அளவில் 10 ஆண்டு காலம் நடைபெற்ற சட்டமன்றத்தை இப்போது ஜனநாயகரீதியாக நடத்த வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லி, ஒருபோதும்கூட மறுக்காமல் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு பேசுவதற்கு வாய்ப்பை பல முறை நான் அதிகமாகக் கொடுத்தும், bell அடித்து நிறுத்தும்போதுகூட மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னும் 2 நிமிடங்கள், 5 நிமிடங்கள் கொடுங்கள் என்று சொல்கின்ற அளவிற்குத்தான் அவர்களுக்கு தொடர்ந்து அந்த வாய்ப்பைக் கொடுத்து, ஜனநாயக மாண்பை காத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நீங்கள் பார்த்தீர்களானால், சட்டமன்றம் நடைபெறுகின்ற அனைத்து நாட்களிலும், அனைத்து அமைச்சர்கள் பதில் சொல்கின்ற அனைத்து நாட்களிலும் அமர்ந்திருக்கின்றார்கள். ஒரே ஒரு நாள் 'வைக்கம்' நிகழ்வுக்கு மட்டும் திருவனந்தபுரம் சென்றதைத் தவிர, அனைத்து நாட்களிலும் இருந்திருக்கின்றார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நாகரிகத்தோடு இருக்கின்றார்கள். ஏன், இவர்களுக்கு எல்லாம் முழுமையாக ஒளிபரப்பு செய்ய முடியாத நிலையில் இருக்கிறது என்பதை ஒரு நிமிடம் நான் சொல்கின்றேன். முழுமையாக நேரடி ஒளிபரப்பு செய்ய வேண்டுமென்பதுதான் எங்களுடைய எண்ணம். இன்று எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள்

திரு. இரா. காமராஜ் அவர்களை அழைத்துவந்து என்னிடம் சொன்னார்கள். "நானும், என் அருகில் இருக்கின்ற திரு. கருப்பணன் அவர்களும் ஏதோ தவறான நடவடிக்கையில் சட்டமன்றத்தில் ஈடுபட்டதாக ஒரு தொலைக்காட்சியில் எங்களை குறை சொல்லி செய்தி வருகின்றது." தயவுசெய்து அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். நான் அப்போது சொன்னேன். இதற்காகத்தான் Zero hour-ஐ நாங்கள் live ஆக ஒளிபரப்பு செய்ய மாட்டோம் என்கிறோம். ஏனென்றால், ஒரு சட்டமன்றத்தினுடைய மாண்பைக் காப்பாற்ற வேண்டியது மிக, மிக, மிக முக்கியம். (மேசையைத் தட்டும் ஒலி) கேள்வி நேரத்தில் ஒளிபரப்பப்பட்டது நேரடி ஒளிபரப்பு என்ற காரணத்தினால், அந்தச் சமயத்தில் நீங்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்ததோ அல்லது என்ன செய்தீர்களோ அதைத்தான் முன்னாள் அமைச்சர்கள் திரு. காமராஜ், திரு.கருப்பணன் ஆகியோர்களைப் பற்றி ஊடகங்களிலே செய்தியாக வெளியிட்டிருப்பது உங்களுடைய மனதை புண்படுத்துகிறது. இந்த அவையில் பேசப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையையும், ஒவ்வோர் உறுப்பினருடைய செயல்பாடுகளையும் பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைகளெல்லாம் வெளியே சென்று கொண்டிருக்கின்றன.

முற்பகல் 10–40

மாண்புமிகு உறுப்பினர்களுடைய மாண்பைக் காப்பாற்ற வேண்டும்; இந்த அவையைக் காப்பாற்ற வேண்டும். இந்த அவையில் பேசுகின்ற சில வார்த்தைகள் தவறாக வெளியே சென்று, அதன்மூலம் நாட்டில் எந்தப் பகுதியிலும் பதட்டமோ, அமைதியின்மையோ ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு விஷயத்திலும் நிதானமாகச் சிந்தித்து, ஆலோசித்து, இந்த நேரடி ஒளிபரப்பைக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல மாநிலங்களுக்கு அலுவலர்களை அனுப்பி, அவர்கள்மூலம் அங்கு என்ன நடக்கிறது என்பதையெல்லாம் அறிந்து, தெரிந்துதான் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தொடர்ந்து மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்தச் செயலில் ஈடுபடுவதை மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், ஜனநாயக ரீதியில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தச் சட்டமன்றத்தில் 38 ஆண்டுகளுக்குப் பிறகு ஜனநாயகத்தை மலரச் செய்தவர் இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

(மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து ஒரு நிமிடம் நான் சொல்வதைக் கேட்டுவிட்டுச் செல்லுங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவரிடம் சொன்னேன். அவர்கள் வெளிநடப்பு செய்தாலும், அறையில் இருந்தாலும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

இப்போது கேள்வி நேரமும், அதனைத் தொடர்ந்து கவன ஈர்ப்புகளும் நேரடி ஒளிபரப்புக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அடுத்த கட்டமாக, தற்போது கவன ஈர்ப்பு நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கிற கருத்துகள் வெளியில் பொதுமக்களைச் சென்றடைய வேண்டுமென்பதில் இருவேறுபட்ட கருத்துகள் இந்த அரசுக்கு ஒருபோதும் இல்லையென்பதை நீங்கள் நன்றாக அறிந்திருப்பீர்கள். ஆகவே, நான் உட்பட எல்லோருமே இங்கு என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பது குறித்து மக்களைச் சென்றடைய வேண்டுமென்று சொன்னால், நம்மையும் நாம் தயார் செய்துகொள்ள வேண்டுமென்பது மிக, மிக முக்கியம். ஆகவேதான் பல நேரங்களில் நான் bell அடித்து எல்லோரையும் அமைதியாக இருங்கள் என்று சொல்வதற்குக் காரணம், கேள்வி நேரத்தில் பல உறுப்பினர்கள் தங்களுடைய இருக்கையிலிருந்து அங்கும் இங்கும் செல்வதையெல்லாம் பொதுமக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகத்தான் நான் அதை பலமுறை சொல்லியிருக்கிறேன். அவை நடவடிக்கைகளில் ஒருபோதும் ஏன் இவ்வாறு செய்தீர்கள், ஏன் இவ்வாறு செய்யவில்லை என்று இதுவரை சொல்லாத ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்றால், இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அந்தளவுக்கு சுதந்திரமாக என்னையும் நடவடிக்கை எடுக்கச் சொல்லி, எல்லா கட்சி உறுப்பினர்களும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்; ஜனநாயக முறைப்படி எல்லோருக்கும் அந்த வாய்ப்பைக் கொடுத்து கொண்டிருக்கின்றோம். ஆகவே, இந்த அளவில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இத்தனை நிகழ்வுகளுக்கு இடையே வேண்டுமென்றே இவ்வாறு அவர்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பதிலுரையைக் கேட்காமல் இந்த அவையிலிருந்து வெளிநடப்பு செய்வதை மக்கள் ஒருபோதும் மன்னிக்க மாட்டார்கள் என்றுதான் நான் எண்ணுகின்றேன்.

காரணம், இந்த அவை நாகரிகமாக நடந்து கொண்டிருப்பதை ஒருபோதும் அவர்கள் ஏற்கவில்லையோ என்றுகூட எனக்கு வருத்தமாக இருக்கின்றது. நிச்சயமாக, இந்த அரசு ஒளிவுமறைவில்லாமல், தெளிவாக, ஜனநாயக முறையில்தான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து நேரடி ஒளிபரப்பு செய்வதற்கு முதலில் இந்த அவையை, நம்மை தயார் செய்துகொண்டு, தொடர்ந்து படிப்படியாக நேரடி ஒளிபரப்பு நடைபெறும் என்பதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆகவே, எதிர்க்கட்சித் தலைவர் உட்பட மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று அவையிலிருந்து வெளிநடப்பு செய்தது எனக்கு மிக்க வேதனையாக இருக்கின்றது, வருத்தமாக இருக்கின்றது. இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை பதிலுரையாற்ற நான் அன்போடு அழைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–45

5. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 22 – காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 23 – தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை)

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், முதல்–அமைச்சர்! ஆனால், எனது துறையான உள் துறையின் மீதான மானியக் கோரிக்கைதான் அனைத்து துறைகளிலும் கடைசியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது ஏன் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். அனைத்துத் துறைகளும் உங்கள் துறைதானே என்று நீங்கள் நினைப்பதால்தான், அப்படி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு முதலில் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) தனது துறையின் சார்பிலான மானியக் கோரிக்கை விவாதத்தில் பதிலளித்துப் பேசியபோது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பேசிய ஒன்றை சுட்டிக்காட்டினார். பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களின் ஒவ்வொரு துறையையும் குறிப்பிட்ட தலைவர் கலைஞர் அவர்கள், நாம் வகிக்கக்கூடிய துறைகள் வேறுபட்டிருந்தாலும், நாம் அனைவரும் 'அண்ணாத்துரை'-யைச் சேர்ந்தவர்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மைதான்.

எனக்கு தலைவர் கலைஞர் முதலில் வைக்க நினைத்த பெயர் என்னவென்றால், அய்யாத்துரை! எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரும் தனித்தனி துறையை வகித்தாலும் நீங்கள் அனைவரும் இந்த அய்யாத்துரையின் இரத்த நாளங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

இது ஏப்ரல் 2023, 2 ஆண்டுகளுக்கு முன்னால் இதே ஏப்ரல் மாதத்தில்தான் தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவதற்கு முடிவெடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், வீழ்ந்து கிடக்கும் தமிழ்நாடு எழுச்சி பெறும்; (மேசையைத் தட்டும் ஒலி) "தாழ்ந்த தமிழ்நாடு தலைநிமிரும்" (மேசையைத் தட்டும் ஒலி) என்று மக்கள் முடிவெடுத்தார்கள். மே 7 ஆம் நாள், "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்!" என்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்னும் இரண்டு வார காலத்தில் இரண்டு ஆண்டு காலம் நிறைவடைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறது. இனி தமிழ்நாட்டை நிரந்தரமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆளவேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மனநிறைவுடன் முடிவெடுக்கும் வகையில் இந்த இரண்டாண்டு காலமாக ஆட்சியை நடத்தி வருகிறோம் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

மிக மோசமான நிதி நெருக்கடி; நிதி மேலாண்மையில் ஒன்றிய அரசின் உதவியின்மை ஆகிய மிகக் கடினமான சூழல்கள் உள்ளபோதிலும், மகத்தான சாதனைகளை கழக அரசு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் செய்து கொடுத்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் தமிழ்நாடு அரசு நன்மை செய்து கொண்டிருக்கிறது என்பதை என்னால் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்! (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர்க்கு பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி செய்து தரப்பட்டதன் மூலமாக, இதுவரை 265 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை செப்டம்பர் மாதம் முதல் தர இருக்கிறோம். இதன் மூலமாக ஒரு கோடி மகளிர், மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் பெறப் போகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்துகொண்ட நலத் திட்ட உதவி விழாக்களின் மூலமாக மட்டும் ஒரு கோடி பேருக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது 62 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த வருவாய்ப் பற்றாக்குறையை, நடப்பு மதிப்பீடுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைத்துள்ளோம்.

தமிழ்நாட்டை நோக்கி 2 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தொழில் முதலீடுகளை நாம் ஈர்த்துள்ளோம்.

மாநில உள்நாட்டு உற்பத்தி 6.11 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

வேளாண் உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. பாசனப் பரப்பும் அதிகமாகியிருக்கிறது.

இப்படி துறைவாரியாக நான் சொல்லத் தேவையில்லை. அனைத்து அமைச்சர்களும் அவற்றை விரிவாக, இதே அவையில், ஆதாரங்களோடு சொல்லி இருக்கிறார்கள். இப்படி துறைரீதியாகச் சாதனைகளை நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் அரசாக, நம்முடைய திராவிட மாடல் அரசாக நமது அரசு அமைந்துள்ளது.

உதயசூரியன் உதிப்பதற்கு முன்னால் எழுந்து உழவுக்குச் செல்லும் உழவர்களின் முகத்தில் மலர்ச்சி இருக்கிறது. காரணம், இலவச மின்சாரம் கிடைக்கிறது.

முற்பகல் 10–50

காலை நேரத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது; காரணம், பள்ளியிலேயே காலை உணவு கிடைக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பல்வேறு பணிகளுக்காக புறப்படும் மகளிர் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது; காரணம், பேருந்துகளில் கட்டணமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி மக்களுக்கு நேரடியாக தினமும் பலன் தரும் அரசாக தமிழ்நாடு அரசு இருக்கிறது. அதனால்தான் அவதூறுகளை யார் அள்ளி வீசினாலும், திசை திருப்பும் திருகுவேலைகளை யார் செய்தாலும், மக்கள் மனங்களை யாராலும் மாற்ற முடியவில்லை; ஏமாற்றவும் முடியவில்லை! (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் தேர்தலில் மட்டும் வெல்லவில்லை; மக்களின் மனங்களை வென்று, அவர்கள் நெஞ்சங்களில் நிரந்தரமாகக் குடியேறி இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல. இது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனிப்பட்ட கட்சியின் அரசும் அல்ல. இது ஓர் இனத்தின் அரசாக (மேசையைத் தட்டும் ஒலி)–எட்டுக் கோடி மக்களின் அரசாக (மேசையைத் தட்டும் ஒலி)–ஒரு கொள்கையின் அரசாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் என்ற கோட்பாட்டின் அரசாக இருக்கிறது. சமூகநீதி–சமத்துவம்–சமதர்மம்–சகோதரத்துவம்–மொழி உரிமை–இன உரிமை–மாநில சுயாட்சி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய 'திராவிடவியல் கோட்பாடு' என்பதே திராவிட மாடல் சாசனம்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற அய்யன் வள்ளுவரின் நெறியும், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கும், திராவிட இயக்கத்தின் தீரர்களாம் சர் பிட்டி தியாகராயரும், டி.எம். நாயரும், நடேசனாரும் காட்டிய வழியும், தந்தை பெரியாரின் சுயமரியாதை சமதர்மமும், பேரறிஞர் அண்ணாவின் தமிழ்நாடு உரிமை முழக்கங்களும், தமிழினத் தலைவர் கலைஞரின் ஒடுக்கப்பட்டோர் சமூக நீதிச் செயல்பாடுகளும், இனமான பேராசிரியரின் மொழி, இன உரிமை வழிகாட்டுதல்களும், என்னுள் இருந்து என்னை இயக்கிக் கொண்டு இருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

இவைதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் சாதனைக்கும், கம்பீரத்துக்கும், வெற்றிக்கும், துணிச்சலுக்கும் காரணங்கள்! (மேசையைத் தட்டும் ஒலி) ஓர் அரசு, மக்கள் நல அரசாகவும் இருக்க வேண்டும், அதேநேரத்தில் கொள்கை அரசாகவும் இருக்க வேண்டும். மக்களுக்கான உதவிகளை மட்டும் செய்துவிட்டு, கோட்பாடுகளில் இருந்து விலகிச் சென்றுவிடக் கூடாது. ஒரு பக்கம் மக்கள் நலன், இன்னொரு பக்கம் கொள்கை உரம். இவை இரண்டையும் முன்னெடுக்கும் ஆட்சியாக இரண்டாண்டுகளை நாம் நிறைவு செய்யப்போகிறோம்.

இது இந்தியாவையே ஈர்க்கும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பது,என்னுடைய பெருமை மட்டுமல்ல; இந்த அமைச்சரவையின் பெருமை! எங்களுக்குத் தோளோடு தோள் சேர்த்து நிற்கும் இந்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுடைய பெருமை! (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நாங்கள் கவனிக்கத் தவறும் இடங்களைச் சுட்டிக்காட்டும் உரிமை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் உண்டு. ஆனால், அந்தக் கடமையிலிருந்து தவறி என்ன நிலைக்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் எனக்கும் வேதனையாக இருக்கிறது. இருந்தாலும், அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவை பல ஆரோக்கியமான விவாதங்களைக் கண்டிருக்கிறது.

அதேபோன்ற ஆரோக்கியமான விவாதமாகவே உங்கள் அனைவரது உரைகளையும் நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆதரித்தாலும், எதிர்த்தாலும் மக்களுக்காகத்தான் பேசுகிறீர்கள் என்று எடுத்துக்கொள்பவனாக, ஏற்றுக்கொள்பவனாக நான் இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆசிரியராய் இருந்து, இந்த அவைக்குத் தலைமை ஆசிரியராக மட்டுமல்ல, சட்டமன்ற நெறிமுறைகளுக்கு ஆசானாகவும் திகழ்ந்து வரும் மாண்புமிகு பேரவைத் தலைவரான தங்களுக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! உள்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் 12 பேர் பேசி இருக்கிறார்கள். பாராட்டிப் பேசி இருந்தாலும், விமர்சித்துப் பேசி இருந்தாலும், இரண்டு தரப்புக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சில காவலர்களின் செயல்பாடுகள் குறித்து, இங்கே விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

இதுபற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை, இதே அவையில் பேசியதை, நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10–55

“எந்த சமுதாயத்தில் இருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடியாக, அந்தப் படையினர் விளங்குவார்கள். அந்தச் சமுதாயத்திலிருந்து வெகுதூரம் அவர்கள் விலகி இருப்பது இல்லை.

போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல் போலீஸ் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறு இழைத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைபாட்டையே அவை காட்டுகின்றன. தங்களால் உருவாக்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். முரண்பாடு ஏற்படுகின்ற இடங்களில் எல்லாம் அவர்கள் இருந்தாக வேண்டி இருக்கிறது.

சகல விதத்திலும் சகிப்புத் தன்மையோடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் பற்றற்ற அமைதியுடன் நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பெற்ற பயிற்சிக்கு ஒப்ப, கடமை உணர்ச்சி மிக்கவர்களாக அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது” என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படித்தான் காவல் துறையினர் நடந்து வருகிறார்கள்.

அவர்களது செயல்பாட்டில் குற்றங்குறைகள் இருக்கலாம். குறையே இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். குறை கண்டுபிடிக்கப்பட்டதும், அவை திருத்தப்பட்டனவே தவிர,

கண்டும் காணாமல் விடப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) சம்பவம் நடந்ததும், குற்றவாளி தப்பிவிட்டார் என்றோ, குற்றவாளியைக் கைது செய்யவில்லை என்றோ, குற்றவாளியைக் காப்பாற்றினார்கள் என்றோ புகார் இருந்தால், சொல்லுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன். அதில் நான் உறுதியாக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தக் குற்றவாளியையும், அது யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட கொம்பனாக இருந்தாலும் அவர்களை, நாங்கள் நிச்சயமாகக் காப்பாற்ற மாட்டோம் என்று இந்த மாமன்றத்தில் உறுதியாகக் கூறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிறு சிறு தவறுகள் நடந்திருந்தாலும், அதனைத் திருத்திக்கொள்ளும் பண்பை காவல் துறையினர் பெற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் இந்த மாநிலத்தில் என்னென்ன இருக்கிறது என்று பேசினார்கள். என்னென்ன இல்லை என்பதைச் சொல்வதாக எனது உள்துறை அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மதச் சண்டைகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டு வன்முறைகள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கலவரங்கள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) துப்பாக்கிச் சூடு இல்லை. காவல் நிலைய மரணங்கள் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இல்லை, இல்லை, இல்லை...என்றுதான் என்னால் சொல்ல முடியும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதெல்லாம் இல்லை என்பதற்கு அடையாளமாகத்தான், புதிய தொழிற்சாலைகள் வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) புதிய முதலீடுகள் வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) புதிய நிறுவனங்கள் வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியும் வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிக்கு நல்ல பெயர் வருகிறது. "அமைதியான மாநிலம் தமிழ்நாடு" என்ற நற்பெயர் வருகிறது. ஒரு மாநிலம் வளருகிறது என்றால், அது அமைதியான மாநிலமாக இருக்கிறது என்று பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! சட்டம்-ஒழுங்கைப் பேணி, பொதுமக்களிடம் அச்ச உணர்வைப் போக்கி இருக்கிறது நமது அரசு. எந்தவிதக் குறுக்கீடும் இன்றி

காவல் துறையைச் செயல்பட அனுமதித்துள்ளோம். இதனால்தான் சமூகவிரோதிகள், கொள்ளையர்கள், வன்முறையாளர்கள் உடனுக்குடன் கைது செய்யப்படுகிறார்கள்.

"ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்

தேர்ந்துசெய் வஃதே முறை"

இங்கிருக்கிற கூட்டணிக் கட்சிகள் அனைவரும் எதிர்க்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் இதில் மாறுபடுகிறார். ஆதலால், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, இதை மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். நீங்கள் தேர்வுக் குழுவிற்கு அனுப்பி, இதிலிருக்கிற சாதக–பாதகங்களை ஆராய்ந்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்கிற ஒரு வேண்டுகோளை முன்வைக்கிறோம். ஏன் இதை முன் வைக்கிறோம் என்று சொன்னால், இது மே தினத்தில் நாம் பெற்ற உரிமைகளைப் பறிப்பதாக இருக்கும். Overtime இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் அதற்கான பணப் பயன் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதற்காகத்தான் OT செய்கிறார்கள். OT–க்கான பணப் பலனை தருகிறார்கள், நாங்கள் மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதிவு செய்துவிட்டீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். பதிவு செய்து விட்டீர்கள். சொல்லுங்கள், திரு. தி. வேல்முருகன், முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்ல வருகிறேன் என்றால், நம் தொழிலாளர்கள் ஆண்டாண்டு காலமாக இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி, வழக்கைச் சந்தித்து போராடிப் பெற்ற உரிமையைப் பறிப்பதாக இந்திய அரசு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டத்தை, சுயமரியாதை இயக்கம் கொண்ட, தொழிலாளர் பாதுகாப்பு அரணாக இருக்கிற, நம்முடைய தமிழக அரசு, முத்தமிழறிஞர் கலைஞர் அரசு, சமூக நீதி அரசு, கண்டிப்பாக, இந்தச் சட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதற்காக மறு ஆய்வுக் குழுவிற்கு இதை உட்படுத்த வேண்டும் என்கிற வேண்டுகோளை முன்வைக்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

2023 ஏப்ரல் 21]

திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சட்டமுன்வடிவில் தொழிற்சாலைகளைப் பாதுகாக்கின்ற அதேநேரத்தில் தொழிலாளர்களுடைய நலனையும் பாதுகாக்க வேண்டிய உட்கருத்து இதில் இருப்பதால், இந்தப் பிரச்சினையை, இந்தச் சட்டத்தை* Select Committee*-க்கு அனுப்ப வேண்டுமென்று கோருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் உள்ள 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வாராந்திர மற்றும் தினசரி வேலை நேரம், வரம்பு முறைகள், ஓய்வு, இடைவேளை, மிகைநேரம் (*overtime*), மிகைநேரப் பணிக்கான சம்பளம், வாராந்திர விடுமுறை குறித்த எந்த மாற்றமுமின்றி, தற்போது உள்ள நடைமுறைகள் தொடர்ந்து இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். சிறப்பு நேர்வுகளில், திருத்தி அமைக்கப்படவுள்ள, 65(*a*) பிரிவின்கீழ் விதிவிலக்கு கோரும் தொழிற்சாலைகளுக்கு அரசின் பரிசீலனைக்குப் பின்பு, சில நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் தொழிலாளர் நலன் பாதிக்காத வகையில், தொழிலாளர்களின் ஒப்புதலுடன் மட்டுமே நடைமுறைப்படுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இங்கு பேசிய உறுப்பினர்களுக்கு நான் ஒன்றைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். எந்தவொரு தொழிற்சாலையாக இருந்தாலும், எந்த நிறுவனமாக இருந்தாலும், அந்த நிறுவனங்களிலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு இம்மியளவும் இடையூறு இல்லாமல் (குறுக்கீடு) இருங்கள், உட்காருங்கள்* brother*. (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, உங்கள் கருத்தை பதிவு செய்து விட்டால், மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பேசவிடுங்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: எந்தவொருதொழிற்சாலையாக இருந்தாலும், நிறுவனமாக இருந்தாலும், அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு இம்மியளவும் இடர்பாடுகள் இல்லாமல், அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மட்டும்தான் இந்தத் திருத்தம் கொண்டுவரப்படுகிறது. ஒருவேளை தொழிற்சாலையிலே பணிபுரிகின்ற தொழிலாளர்கள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை, எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்றால், அரசாங்கம் பரிசீலனை செய்து, ஆய்வு செய்த பிறகுதான் நடைமுறைப்படுத்தப்படும். நிச்சயமாக, மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதியாரின் அரசாங்கம் ஒருபோதும் தொழிலாளர்களுக்கு எதிராக இருக்காது. இந்த அரசு தொழிலாளர்களின் நலன் காக்கின்ற அரசாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. வி.பி. நாகைமாலி, திரு. ம. சிந்தனை செல்வன், திரு. K. மாரிமுத்து, திரு. மா. சின்னதுரை மற்றும் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2–ல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (குறுக்கீடு)

இல்லை. நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்தை இந்த ஒட்டுமொத்தமான (குறுக்கீடு) நீங்கள் ஒன்றை (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். திரு. வி.பி. நாகைமாலி* sir, *உட்காருங்கள். (குறுக்கீடு) உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலை முதலில் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

பிற்பகல் 12–50

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு உறுப்பினர்கள், முதலில் நான் சொல்லும் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள், பின்னர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லும் விளக்கத்தை கேட்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் சொல்லும் பதிலை முதலில் கேட்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. தி. வேல்முருகன், திரு. வி.பி. நாகைமாலி உட்காருங்கள். எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் முதலில் உட்காருங்கள். நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு உறுப்பினர்கள் நான் சொல்லும் விளக்கத்தைக் கேட்டுக்கொள்ளுங்கள்,*

பிறகு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லும் விளக்கத்தை தயவுசெய்து கேளுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு விஷயத்தை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார். நான் சொல்லும் விளக்கத்தை சற்று கவனமாகக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்லும் விளக்கத்தை சற்று கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) நான் ஒரு அமைச்சர். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் சொல்வதை முதலில் கேளுங்கள். (குறுக்கீடுகள்) முதலில் எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. வி.பி. நாகைமாலி, முதலில் உட்காருங்கள். (குறுக்கீடு) நான் சொன்ன பிறகு எழுந்திருங்கள். (குறுக்கீடு) நான் சொன்ன பிறகு எழுந்திருங்கள். (குறுக்கீடு) முதலில் உட்காருங்கள். அதாவது, எல்லா உறுப்பினர்களும், தங்கள் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்திருக்கிறீர்கள். எல்லோருடைய கருத்துகளையும் கேட்டு, மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் அழகாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். தொழிலாளர்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி முதலில் உட்காருங்கள். உட்காருங்கள் Sir. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்கமாட்டேன் என்கிறீர்களே! மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அதை உள்வாங்குங்கள். உங்கள் மனதில் இருந்ததைச் சொன்னீர்கள், அதனை நான் பதிவு செய்திருக்கிறேன். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், தெளிவான கருத்தாக எந்த தொழிலாளர்களுக்கும் இது எந்தப் பாதிப்பும் ஏற்படுத்தாது, அவர்கள் விரும்பினால், (குறுக்கீடு) என்னை பேச விடமாட்டேன் என்கிறீர்களே, திரு. வி.பி. நாகைமாலி. (குறுக்கீடு) நீங்கள் உட்கார்ந்தால் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, பிறகு நீங்கள் எழுந்து பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) என்னை நீங்கள் பேசவே விடமாட்டேன் என்கிறீர்களே! (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நான் பேசி முடித்த பிறகு, உங்களுக்கு நான் வாய்ப்பைத் தருகிறேன். (குறுக்கீடு) ஒரு அமைச்சர் பதிலை தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எல்லா உறுப்பினர்களும் தங்கள் கருத்துகளைச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர்

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதேபோன்று மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார். இந்தச் சட்டம் சென்ட்ரலில் இன்னும் pass *ஆகவில்லை; அதற்குள் இங்கே கொண்டு வர வேண்டிய அவசியம் என்ன என்று சொல்லியிருக்கிறார்கள். அதுவும் பதிவாகியிருக்கிறது. நம்முடைய முன்னாள் முதலமைச்சர் அவர்கள் இதனை* Select Committee*-க்கு அனுப்புங்கள் என்று சொல்லியிருக்கிறார். முதலமைச்சர் அவர்களுக்கும் தெரியும். தமிழ்நாட்டில் உள்ள ஓய்வூதியம்,* pension *இரத்து செய்யப்பட்டு, அது* individual*—அரசு ஓய்வூதியம் நிறுத்தினார்கள். மாண்புமிகு திரு. வாஜ்பாயி அவர்கள்—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதை நிறைவேற்றுவதற்கு முன்னால், உங்கள் அரசுதான், அதை நிறைவேற்றியது மாண்புமிகு அம்மாவின் அரசு. இப்படி பல சட்டங்கள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் தெளிவான பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலைக் கேளுங்கள் முதலில். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலைச் சொல்லட்டும். (குறுக்கீடு) நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேனே! (குறுக்கீடு) அவர் பதிலைச் சொல்லட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் பதிலை முதலில் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உணர்வுகளை மதிப்பதில் எங்களுக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. (குறுக்கீடுகள்) முதலில் என்னுடைய விளக்கத்தைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) அதற்குப் பின் நீங்கள் வலியுறுத்துங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களின் பதிலைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *நான் விளக்கம் சொல்வதற்கு என்னை நீங்கள் அனுமதிக்க வேண்டும் இல்லையா? (குறுக்கீடுகள்) ஓர் அமைச்சர், நான் விளக்கம் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டும். (குறுக்கீடுகள்)*

[2023 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: ஓர் அமைச்சராக நான் சொல்லக்கூடிய விளக்கத்தைச் சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. நான் அனுமதிக்கப்பட வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர், நீங்கள் பேசுங்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: அதில் மாறுபட்ட கருத்துகள் இருக்கலாம். கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத் திருத்தத்திற்கும், உங்களுக்கும் மாறுபட்ட கருத்துகள் இருக்கலாம். உங்களுடைய மாறுபட்ட கருத்துகள் இந்த அவையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். நான் சொல்லக்கூடிய விளக்கத்தில், உங்களுக்கு மாறுபட்ட கருத்துகள் இருந்தால், நீங்கள் பேசலாம். ஆனால், நான் பேசுவதை நீங்கள் தடை செய்வது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. எனவே, நான் சொல்ல விரும்புவது, (குறுக்கீடுகள்) அதைத்தான் நான் கேட்கிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்லக்கூடிய விளக்கத்தை நீங்கள் கேளுங்கள். நான் உங்களிடம் என்ன சொல்ல வருகிறேன் என்பதைக் கேளுங்கள். அவர் ஒரு விளக்கத்தைச் சொல்லியிருக்கிறார். இந்தச் சட்டத்தை, (குறுக்கீடு) அண்ணே, அதை நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். அரசாங்கத்தின் சார்பில் நான் சொல்வது, இந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான அடிப்படையான நோக்கம், தொழிற்சாலைகளில் ஒரு நெகிழ்வுத் தன்மை வேலை செய்யக்கூடிய இடங்களில் வர வேண்டும் என்பதுதான். இன்றையதினம் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீட்டிற்காக நம்முடைய நாட்டை நோக்கி வருகின்றன. குறிப்பாக இந்தியாவை நோக்கி பெரிய கம்பெனிகள் வருகின்றன. அவை தமிழ்நாட்டிற்கு வருகிறபோது, குறிப்பாக நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், electronics sectors-மின்னணு தொழிற்சாலைகள் வருகிறபோது, அவர்கள் வேலை நேரங்களில் இத்தகைய ஒரு நெகிழ்வுத் தன்மையை எதிர்பார்க்கிறார்கள். தொழிற்சாலைகள் எல்லாம் ஒரு நெகிழ்வுத் தன்மையைக் கொண்டு வர வேண்டும். அரசாங்கம் உடனடியாக எதையும் கொண்டு வந்து விடவில்லை. இதுகுறித்து ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்து, அந்தக் குழு அதனை முழுமையாகப் பரிசீலனை செய்து—

2023 ஏப்ரல் 21] [திரு. தங்கம் தென்னரசு]

அவர்களெல்லாம் சொன்னார்கள்; ஏதோ ஒன்றிய அரசு கொண்டு வருவதற்காக, இதை நாங்கள் கொண்டு வரவில்லை. அதை நான் தெளிவுபடுத்துகிறேன். ஒன்றிய அரசு கொண்டு வந்ததற்காக நாங்கள் கொண்டு வரவில்லை. (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். நான் சொன்ன பிறகு சொல்லுங்கள். அதற்குப் பிறகு committee-*யில் வைத்து விவாதித்து, இந்தக் குறிப்பிட்ட தளர்வுகள் என்பது, தமிழ்நாடு அரசினால் வகுக்கப்படக்கூடிய சில கொள்கைகளினால் வழி நடத்தப்பட வேண்டும் என்பதை நாங்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்.*

பிற்பகல் 12–55

மிகக் குறிப்பாக இது யாருக்குப் பொருந்தும் என்றால், யார் அதை opt *செய்கிறார்களோ, எந்தத் தொழிலாளர்கள் அதை விரும்புகிறார்களோ, அவர்கள் அதை எடுத்துக்கொள்ளலாம். எல்லோருக்குமே 12 மணிநேரம் வேலை என்பதெல்லாம் கிடையாது. இது* shop floor-*ல் இருக்கும்.* Computer companies and electronic companies *அல்லது* shoe making factories *மற்றும் இப்போது* non-leather shoe factories *ஆகிய நிறுவனங்களில் வேலைதளத்தில் இருக்கக்கூடிய வேலைகள் அல்லது மின்னணுப் பொருட்கள் உற்பத்தி செய்யக்கூடிய இடத்தில் இருக்கின்ற வேலை என்பது ஒருவிதமாக இருக்கிறது அல்லது இயந்திரங்கள் தயாரிப்பு,* Car manufacturing factories-*ல் இருக்கக்கூடிய* shop floor *வேறுவிதமாக இருக்கிறது. எனவே, இந்த அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில், எந்தெந்தத் தொழில்களுக்கு இது பொருந்துகிறதோ, அந்த குறிப்பிட்ட தொழில்களுக்கு மட்டும்தான் இந்தச் சட்டத் திருத்தம் பொதுவாக அமையும். இது* number one. *நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, இதில் வரக்கூடியவர்கள், சேரக்கூடியவர்கள், அதிலே வேலை பார்க்கக்கூடியவர்கள் தன்னார்வ அடிப்படையில்* voluntary-*யாக நாங்கள் செய்கிறோம்; நாங்கள் 12 மணிநேரம் வேலை செய்துவிட்டு, வாரத்தில் 3 நாட்கள் விடுப்பு எடுத்துக்கொள்கிறோம் என்று அவர்களே விரும்பி வந்தால், இந்தச் சட்டத் திருத்தம் அவர்களுக்குப் பொருத்தமாக அமையும்.*

மற்றொன்று, அவர்கள் வேலை பார்க்கக்கூடிய இடங்களிலே இருக்கக்கூடிய சூழ்நிலைகள்; வேலை பார்க்கக்கூடிய தளம், Air conditioned atmosphere *ஆக, குளிரூட்டப்பட்ட வசதியுடையதாக இருக்க வேண்டும்; அந்தத் தொழிலாளர்கள் தங்கக்கூடிய இடத்திலிருந்து எவ்வளவு வேகமாக அங்கு வந்து சேர முடியும், அப்படி வந்து சேர்வதற்கான போக்குவரத்து வசதிகள்*

[திரு. தங்கம் தென்னரசு] [2023 ஏப்ரல் 21

அங்கு இருக்கின்றனவா; அவர்கள் தங்குமிடத்தில் தேவையான பல்வேறு வசதிகள் இருக்கின்றனவா; தங்குமிடம் வெகுதூரத்தில் இல்லாமல் பக்கத்தில் இருக்கிறதா என்பதைப் போன்ற பல்வேறு காரணிகள்; அதேபோன்று, அவர்கள் வேலை செய்யக்கூடிய இடத்தில் அவர்களுக்கு என்னென்ன வசதிகளெல்லாம் செய்து கொடுக்கப்படுகின்றன போன்றவற்றையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கருத்தில் கொண்டுதான் இந்த 12 மணிநேர வேலை என்பது அனுமதிக்கப்படும் என்பதையும் நான் உறுப்பினர்களுடைய கவனத்திற்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை . . . (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) எல்லோர் சார்பாகவும் யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) அது யாரென்று முடிவு செய்துவிட்டுச் சொல்லுங்கள். நான் அவர்களைப் பேச அழைக்கிறேன். எல்லோருக்கும் repeat செய்ய மாட்டேன். ஒருவர் மட்டும் பேசினால் போதும். யாராவது ஒருவர் பேசுங்கள். (குறுக்கீடு) எல்லோரும் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள். (குறுக்கீடு) வேறு யாருக்கும் அனுமதி கிடையாது. திரு. வி.பி. நாகைமாலி அவர்களை மட்டும் அனுமதிக்கிறேன். அடுத்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுவார்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, சட்டத் திருத்தத்தில் குறிப்பிட்டுள்ளபடி விருப்பப்பட்டு வேலை செய்யக்கூடியவர்கள் செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், அதற்காகத்தான் OT என்ற ஒன்று இருக்கிறது. 8 மணிநேரம் வேலை முடிந்த பிறகு விருப்பப்பட்டவர்கள் வேலை செய்வதுதான் OT. ஆக, OT என்கிற ஒரு சட்டம் இருக்கின்றபோது, நிச்சயமாக. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கருத்தை நான் பதிவு செய்துகொள்கிறேன். மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவ்வளவுதான், வேறு யாருக்கும் வாய்ப்பு கிடையாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர், என்னைப் பார்த்துப் பேசுங்கள்.

2023 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்கு ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்கிறேன், கேளுங்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், பேசுங்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்கு 48 மணிநேரம் வேலை செய்ய வேண்டும். ஒரு நாளைக்கு 8 மணிநேரம். 8 மணிநேரத்திற்குமேல் வேலை செய்தால் அதற்கு overtime என்று பெயர். அவர்கள் 48 மணி நேர வேலையை 4 நாட்களில் முடித்த பிறகு அந்த வாரத்தில் 3 நாட்கள் மீதம் இருக்கின்றன. Usual ஆக sunday விடுமுறை. ஆனாலும், 5–வது நாளாக அந்தத் தொழிலாளர் வேலை செய்ய விரும்பினால் அவருக்கு சம்பளம் வழங்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, இந்தச் சட்டத் திருத்தம் என்பது, அனைத்து நிறுவனங்களுக்கும், அனைத்து தொழிற்சாலைகளுக்கும் கொண்டுவரப்படவில்லை. தேவைப்படுகின்ற நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் விதிவிலக்கு அளித்து, தொழிலாளர்களுக்கு எந்த வகையிலும் அது overtime ஆக இருக்கட்டும், அவரது ஓய்வாக இருக்கட்டும், மற்ற விஷயங்களாக இருக்கட்டும், எதுவாக இருந்தாலும் பாதிக்கப்படாத வகையில் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, இதுபோன்று வேலை செய்ய விரும்புகின்ற தொழிலாளர்களை ஏற்றுக்கொள்கிற நிறுவனங்களை மட்டுமே அரசு ஆய்வு செய்து, பரிசீலனை செய்த பிறகு இச்சட்டத் திருத்தம் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு யதார்த்தத்தை மட்டும், practical ஆக என்ன பிரச்சினை இருக்கிறது என்ற உண்மையை மட்டும் நான்

பதிவு செய்ய விரும்புகிறேன். உதாரணமாக, என்னிடமுள்ள தொழிற்சாலையில் 5,000 பேர் வேலை செய்கிறார்கள் என்று வைத்துக்கொண்டால், ஒரு விடுமுறை தினத்தன்று எனக்கு shipment செய்யப்பட வேண்டும்; அன்று விருப்ப அடிப்படையில் வரும் 1,000 தொழிலாளர்களை வைத்து நான் வேலை செய்கின்றபோது, அரசு அதிகாரிகள் அங்கு வந்து சட்டப்படி நீங்கள் இன்று வேலை பார்க்கக் கூடாது என்று சொல்கிறார்கள்; அதனால் சுமார் ஐந்து அல்லது ஆறு கோடி ரூபாய் மதிப்புள்ள என்னுடைய shipment அன்று நடைபெறவில்லை. மொத்தமுள்ள 5,000 பேரில், 1,000 பேர்தான் வேலை செய்கிறார்கள். சம்பளத்திற்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை; சம்பளமில்லாமல் யாரும் வேலை பார்ப்பதில்லை. அப்படி யாரும் நடத்துவதும் கிடையாது. ஆனால், ஒரு சில இடங்களில் emergency–க்குக்கூட தொழிற்சாலைகள் இதுபோன்று வேலை செய்ய முடிவதில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய காலகட்டம் அப்படி இருக்கிறது. முன்பெல்லாம் இந்த அளவிற்கு digital system கிடையாது. அப்போது, விடுமுறை நாட்களிலோ அல்லது over time–முறையிலோ மறைமுகமாக வேலை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பிற்பகல் 1–00

இப்போது buyer எல்லாம், எந்த நாட்டில் இருந்தாலும் நம்முடைய factory–ல் camera வைத்துவிடுகிறார்கள். நாம், விடுமுறை நாட்களிலோ அல்லது இரவிலோ வேலை பார்க்கும்போது அங்கேயிருந்து கேமராவில் பார்த்துவிட்டு, 'இந்த goods எனக்கு வேண்டாம்' (குறுக்கீடு) என்று அவர்கள் சொல்கிறார்கள். யதார்த்தமான, practical பிரச்சினையை மட்டும் பதிவு செய்யுங்கள். (குறுக்கீடு) Practical ஆன பிரச்சினையை மட்டும் பதிவு செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள் (குறுக்கீடு) நான் சொல்கிறேன். ஒரே நிமிடம் (குறுக்கீடு) உங்களுக்கு நான் தரச் சொல்கிறேன் (குறுக்கீடு) உங்களுக்காகத்தான் பேசுகிறேன். (குறுக்கீடு) உங்களுக்காகத்தான் பேசுகிறேன். (குறுக்கீடு) உங்களுக்காகத்தான் பேசுகிறேன். (குறுக்கீடு) இந்த மாதிரி பேசாதீர்கள்.

2023 ஏப்ரல் 21] [திரு. துரைமுருகன்]

இது கொஞ்சம் confusion ஆன subject-தான். ஆனால், மாண்புமிகு அமைச்சர் திரு. சி.வி. கணேசன் மற்றும் மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு ஆகியோர் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இவர்கள் கேட்பது, இந்த முறையைக் கொண்டு வந்தால், தொழிற்சங்கங்களின் உரிமையே போய்விடும் என்பதுபோல் பயப்படுகிறார்கள். திரு. ஈஸ்வரன் அவர்கள் கேட்பது, இந்தச் சட்டத்திற்காக அல்ல. நீங்கள் முதலாளிகள் இஷ்டத்திற்கு வைத்துக்கொள்ளலாம் என்று சொன்னால், நாளைக்கு தொழிலாளிகளுக்கு அந்த உரிமை அற்றுப்போய்விடும். அதற்கு நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். இருந்தாலும், தோழமைக் கட்சிகள் எங்களோடு எல்லாவற்றிலும் இருப்பவர்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது, இல்லை, நாங்கள் சொல்வதுதான் சரி என்று தூக்கி எறியாது, மாண்புமிகு தளபதி அவர்களின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், உங்களை திருப்தி செய்யும் அளவிற்குத்தான் மாண்புமிகு அமைச்சர்கள் 2 பேர் பதில் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தச் சட்டமுன்வடிவின்மூலம் நாளைக்கு ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், தொழிலாளர் வர்க்கத்திற்கு, 8 மணி நேரம் வேலை என்பது சாதாரணமானது அல்ல; பிறப்புரிமை, தொழிலாளர்களுடைய பிறப்புரிமை. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக செய்த போராட்டத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், 1 மணிநேரம் நான் பேசலாம். அதனால், அதில் கை வைக்க மாட்டோம். அதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை கொள்கையே. ஆகையால், இந்தச் சட்டமுன்வடிவில் உங்களுக்கு ஏதாவது பிரச்சினை இருந்தால், மறுபடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு போகலாம். நிச்சயமாக, ஒரு எள்ளு, மூக்குத்தி அளவுக்குக்கூட தொழிலாளிகளுக்கு பாதிப்பு ஏற்படுமானால், முதலில் குரல் கொடுப்பவர், மாண்புமிகு முதலமைச்சர் தளபதியாகத்தான் இருப்பார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், நம்புங்கள். எங்களை நம்பி தொடருகிறீர்கள். நம்பி வாருங்கள். நீங்கள், உங்களின் கருத்தைச் சொல்லுங்கள். (குறுக்கீடு)

(உறுப்பினர்கள் திரு. வி.பி. நாகைமாலி, திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. மா. சின்னதுரை, திரு. K. மாரிமுத்து, திரு. ம. சிந்தனை செல்வன், திரு. S.S. பாலாஜி மற்றும் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

[2023 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஈ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2023), மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 13-4-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2023 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2–ல் திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2023 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 1–05

(அஉ) தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/2023), மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 19-4-2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பேரவைக் குழுக்களுக்கான உறுப்பினர்கள் தேர்வு

(i) மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2023–2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. P.R.G. அருண்குமார்
2. திரு. க. அன்பழகன்
3. திரு. S.R. இராஜா
4. திரு. எஸ். காந்திராஜன்
5. திரு. S. சந்திரன்
6. திரு. ம. சிந்தனை செல்வன்
7. திரு. ச. சிவகுமார்
8. திரு. செல்லூர் கே. ராஜு
9. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
10. திரு. கோ. தளபதி
11. திரு. வி.பி. நாகைமாலி
12. திரு. இ. பரந்தாமன்
13. திரு. மு. பூமிநாதன்
14. திரு. ஓ.எஸ். மணியன்
15. திரு. செ. ராஜேஷ் குமார்
16. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2023–2024 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கின்ற முறையில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

பேரவை விதி 196–ன்கீழ், திரு. க. அன்பழகன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(ii) பொதுக் கணக்குக் குழு

2023–2024 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
2. திரு. அம்மன் K. அர்ச்சுணன்
3. திரு. ட்டி. இராமச்சந்திரன்
4. முனைவர் த. இனிகோ இருதயராஜ்
5. திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
6. திரு. தா. உதயசூரியன்
7. திரு. க. கார்த்திகேயன்
8. திரு. ஆ. கிருஷ்ணசாமி
9. திரு. துரை. சந்திரசேகரன்
10. டாக்டர் சி. சரஸ்வதி
11. திரு. கு. செல்வபெருந்தகை
12. திரு. S. சேகர்
13. திரு. நத்தம் ஆர். விசுவநாதன்
14. திரு. S.S. பாலாஜி
15. திரு. தே. மதியழகன்
16. திரு. G.V. மார்க்கண்டேயன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், *2023–2024* ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, நிதித் துறைக்குப் பொறுப்பு வகிப்பவர் என்கிற முறையில் மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

பேரவை விதி 204-ன்கீழ், திரு. கு. செல்வபெருந்தகை அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(iii) பொது நிறுவனங்கள் குழு

2023–2024 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Committee on Public Undertakings) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. ப. அப்துல் சமது
2. திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்
3. திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்
4. திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்
5. திரு. கடம்பூர் ராஜூ
6. திரு. இராம. கருமாணிக்கம்
7. திரு. மு.பெ. கிரி
8. திரு. ஆ. கோவிந்தசாமி
9. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
10. திரு. மா. சின்னதுரை
11. ஐ.பி. செந்தில்குமார்
12. திரு. அ. சௌந்தரபாண்டியன்
13. திரு. ஒய். பிரகாஷ்
14. திரு. பூண்டி கே. கலைவாணன்
15. திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்
16. டாக்டர் சி. விஜயபாஸ்கர்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப் பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 2023–2024 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கின்றேன்.

தவிர, மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது கணக்குக் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதி 213-ன்கீழ், திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 1–10

(iv) **அவை உரிமைக் குழு**

2023–2024 ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு (Committee on Privileges) பேரவையின் பதினான்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்காணும் பதினான்கு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. திரு. மு. அப்துல் வஹாப்
2. திரு. ஆ. அருண்மொழிதேவன்
3. திரு. இரா. இராஜேந்திரன்
4. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
5. திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்
6. திரு. கே.பி. சங்கர்
7. திரு. S. சதாசிவம்
8. திரு. ஏ.ஆர்.ஆர். சீனிவாசன்
9. திரு. ந. தளவாய் சுந்தரம்
10. திரு. நிவேதா எம். முருகன்
11. முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
12. திரு. K. மாரிமுத்து
13. திரு. ஈ. ராஜா
14. திருமதி S. விஜயதரணி

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், *2023–2024* ஆம் ஆண்டிற்கான அவை உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாக இருப்பார்கள்.

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

பேரவை விதி 227(3)-ன்கீழ், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் இக்குழுவின் தலைவராக இருப்பார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

(v) அலுவல் ஆய்வுக் குழு

அலுவல் ஆய்வுக் குழுவைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே இக்குழுவில் உறுப்பினர்களாக உள்ளவர்களே 2023-2024 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழு உறுப்பினர்களாகத் தொடர்வார்கள்.

(vi) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 239(1)-வது விதியின்கீழ், 2023-2024 ஆம் ஆண்டுக்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்குக் கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. பொ. அர்ஜுனன்
2. திரு. J.L. ஈஸ்வரப்பன்
3. திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜே. ஜான் எபினேசர்
4. திரு. பெ.சு.தி. சரவணன்
5. திருமதி க. சிவகாமசுந்தரி
6. திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி
7. திரு. பெரி. செந்தில்நாதன்
8. திரு. க. செல்வராஜ்
9. திரு. R.D. சேகர்
10. திரு. ஈ. பாலசுப்ரமணியன்
11. திரு. தி. ராமச்சந்திரன்
12. திரு. கே.ஆர். ஜெயராம்

பேரவை விதி 240-ன்கீழ், திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

(vii) **அரசு உறுதிமொழிக் குழு**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 248(1)-வது விதியின்கீழ், 2023–2024 ஆம் ஆண்டுக்கான அரசு உறுதிமொழிக் குழுவிற்கு கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. கா. அண்ணாதுரை
2. திரு. இரா. அருள்
3. திரு. இ. கருணாநிதி
4. திரு. மு. சக்ரபாணி
5. திரு. மொ. பழனியாண்டி
6. திரு. ரா. மணி
7. திரு. ரூபி ஆர். மனோகரன்
8. திரு. M.K. மோகன்
9. திரு. பெ. ராமலிங்கம்
10. திரு. அ.செ. வில்வநாதன்
11. திரு. தி. வேல்முருகன்
12. திரு. S. ஜெயக்குமார்

பேரவை விதி 249(1)-ன்கீழ், திரு. தி. வேல்முருகன் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நன்றி, திரு. தி. வேல்முருகன்.

(viii) **அவைக் குழு**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 253(1)-வது விதியின்கீழ், 2023–2024 ஆம் ஆண்டுக்கான அவைக் குழுவிற்குக் கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திருமதி V. அமலு
2. திரு. சீ. கதிரவன்
3. திரு. கு. சின்னப்பா
4. திரு. மா. செந்தில்குமார்

5. திரு. T.M. தமிழ்செல்வம்
6. திரு. க. தேவராஜி
7. திரு. அ. நல்லதம்பி (கெங்கவல்லி)
8. திரு. அ. பண்ணாரி
9. திரு. மு. பன்னீர்செல்வம்
10. திரு. ந. புகழேந்தி
11. திரு. ஆ. மகாராஜன்
12. திரு. ச. மாங்குடி
13. திரு. M. ராஜமுத்து
14. திரு. A.G. வெங்கடாசலம்
15. திரு. அ. வெற்றிஅழகன்
16. திரு. த. வேலு
17. திரு. பொன். ஜெயசீலன்
18. திரு. ஒ. ஜோதி

பேரவை விதி 253(1)–ன்கீழ், திரு. மு. பன்னீர்செல்வம் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

(ix) பேரவை விதிகள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 256(1)–வது விதியின்கீழ், 2023–2024 ஆம் ஆண்டுக்கான பேரவை விதிகள் குழுவிற்குக் கீழ்க்காணும் உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. மாண்புமிகு பேரவைத் தலைவர்
2. மாண்புமிகு முதலமைச்சர்
3. மாண்புமிகு திரு. துரைமுருகன்,
 நீர்வளத் துறை அமைச்சர் மற்றும் பேரவை முன்னவர்
4. மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி,
 பேரவைத் துணைத் தலைவர்

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

5. திரு. எடப்பாடி K. பழனிசாமி,
எதிர்க்கட்சித் தலைவர்
6. திரு. N. அசோக்குமார்
7. திரு. S. அம்பேத்குமார்
8. திரு. ட்டி. இராமச்சந்திரன்
9. திரு. செ. கிருஷ்ணமுரளி
10. திரு. துரை. சந்திரசேகர்
11. திரு. ம. சிந்தனை செல்வன்
12. திரு. கோ. செந்தில்குமார்
13. திரு. A.K. செல்வராஜ்
14. திரு. வி.பி. நாகைமாலி
15. திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா
16. திருமதி வானதி சீனிவாசன்
17. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்

பேரவை விதி 256(1)–ன்படி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராவார்.

(X) மனுக்கள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 261(1)–வது விதியின்கீழ், 2023–2024 ஆம் ஆண்டுக்கான மனுக்கள் குழுவிற்குக் கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. கோ. ஐயப்பன்
2. திரு. V.P. கந்தசாமி
3. திரு. ப. கார்த்திகேயன்
4. திரு. செ. சுந்தரராஜன்
5. முனைவர் கோவி. செழியன்,
அரசு தலைமைக் கொறடா

6. திரு. A. நல்லதம்பி

7. திரு. மு. பாபு

8. திரு. கே. பொன்னுசாமி

9. டாக்டர் வை. முத்துராஜா

10. திரு. R. ராதாகிருஷ்ணன்

11. திரு. மு. ஜெகன் மூர்த்தி

பேரவை விதி 261(2)-ன்படி, முனைவர் கோவி. செழியன், அரசு தலைமைக் கொறடா அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(XI) பேரவை நூலகக் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 264(1)-வது விதியின்கீழ், 2023-2024 ஆம் ஆண்டுக்கான பேரவை நூலகக் குழுவிற்குக் கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. JMH. அசன் மௌலானா

2. திரு. க. கணபதி

3. திரு. ஜெ. கருணாநிதி

4. திரு. வே. சம்பத்குமார்

5. திரு. கே.எஸ். சரவணகுமார்

6. திரு. எஸ். சுதர்சனம்

7. திரு. ந. தியாகராஜன்

8. திருமதி கு. மரகதம் குமரவேல்

9. திரு. A.P. ஜெயசங்கரன்

10. திரு. செ. ஸ்டாலின் குமார்

பேரவை விதி 264(3)-ன்கீழ், திரு. எஸ். சுதர்சனம் அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் அமைதியாக இருங்கள்.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

(xii) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 268(i)–வது விதியின்கீழ், 2023–2024 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவிற்குக் கீழ்க்காணும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை நியமனம் செய்கிறேன்:

1. திரு. கி. அசோக்குமார்
2. திரு. T.K. அமுல் கந்தசாமி
3. திரு. ச. அரவிந்த் ரமேஷ்
4. திருமதி கு. சித்ரா
5. திரு. எஸ். தங்கப்பாண்டியன்
6. திருமதி ஆ. தமிழரசி
7. திரு. S. பழனி நாடார்
8. திரு. K.A. பாண்டியன்
9. திரு. இரா. மாணிக்கம்
10. டாக்டர் A.R.R. ரகுராமன்
11. திருமதி ம. வரலட்சுமி

பேரவை விதி 268(ii)–ன்படி, திருமதி ஆ. தமிழரசி அவர்களை இக்குழுவின் தலைவராக நியமனம் செய்கிறேன்.

(ஈ) அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழு மற்றும் அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டப்படியாக அமைக்கப்பட்ட அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழுவிற்கு (Academic Council) பணியாற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சபா. இராசேந்திரன் மற்றும் டாக்டர் இரா. இலட்சுமணன் ஆகியோரிடமிருந்தும் மற்றும் அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவில் (Syndicate) பணியாற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்களிடமிருந்தும் முறையாக வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன.*

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

தேர்ந்தெடுக்கப்பெற வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும் முறையாக வரப்பெற்றுள்ள வேட்புத்தாள்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புத்தாள் அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தந்த பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

அண்ணாமலை பல்கலைக்கழக கல்விக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு காலமாகும். அண்ணா பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 12–9–2024 வரை ஆகும்.

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால், அந்நாளோடு அப்பல்கலைக்கழகங்களின் அமைப்புகளில் அவர் வகித்து வரும் உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

10. பேரவை நிறைவேற்றிய அலுவல்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதினாறாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாம் கூட்டத்தொடரின் முதல் கூட்டம் 9–1–2023 அன்று தொடங்கி 13–1–2023 வரையிலும் மற்றும் இரண்டாம் கூட்டம் 20–3–2023 முதல் (இன்று) 21–4–2023 வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இக்கூட்டத்தொடர்களில் பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பின்வருமாறு:

பேரவை கூடிய மொத்த நாட்கள் (ஆளுநர் உரையாற்றிய நாள் உட்பட)	– **26** நாட்கள்
மாலையிலும் பேரவை கூடிய நாட்கள்	– 8 நாட்கள்
அவைக் கூட்டம் நடைபெற்ற மொத்த நேரம்	– **142** மணி **30** நிமிடங்கள்

9–1–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பேரவையில் உரையாற்றினார்கள்.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் மற்றும் பதிலுரை—

நடைபெற்ற மொத்த நாட்கள்	–	*4 நாட்கள்*
உரையாற்றிய உறுப்பினர்கள்	–	*16 பேர்*
உரையாற்றிய நேரம்	–	*6 மணி 1 நிமிடம்*
அதில் ஆளுங்கட்சியினர்	–	*6 பேர்*
		பேசிய நேரம் 1 மணி 19 நிமிடங்கள்
இதர கட்சியினர்	–	*10 பேர்*
		பேசிய நேரம்
		4 மணி 42 நிமிடங்கள்

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 3 மணி 23 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் பதிலுரை ஆற்றிய நேரம்	–	*50 நிமிடங்கள்*

பிற்பகல் 1–20

நிதி அலுவல்கள்—

2023–2024 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 20–3–2023 அன்றும் 2023–2024 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 21–3–2023 அன்றும் மின்னணு முறையில் பேரவைக்கு அளித்தார்கள்

நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் மற்றும் பதிலுரை நடைபெற்ற நாட்கள்	–	*4 நாட்கள்*
பங்கேற்ற உறுப்பினர்கள்	–	*25 பேர்*

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

உரையாற்றிய நேரம்	–	*8 மணி 4 நிமிடங்கள்*
அதில் ஆளுங்கட்சியினர்	–	*12 பேர் பேசிய நேரம் 2 மணி 44 நிமிடங்கள்*
இதர கட்சியினர்	–	*13 பேர் பேசிய நேரம் 5 மணி 20 நிமிடங்கள்*

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 2 மணி 36 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் பதிலளித்த நேரம்	–	*49 நிமிடங்கள்*
மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் பதிலளித்த நேரம்	–	*44 நிமிடங்கள்*

மானியக் கோரிக்கைகள்—

விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற மொத்த நாட்கள்	–	*15*
உரையாற்றிய உறுப்பினர்கள்	–	*171*
உரையாற்றிய நேரம்	–	*44 மணி 18 நிமிடங்கள்*
அதில் ஆளுங்கட்சியினர்	–	*84 பேர் பேசிய நேரம் 18 மணி 1 நிமிடம்*
இதர கட்சியினர்	–	*87 பேர் பேசிய நேரம் 26 மணி 17 நிமிடங்கள்*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

இதர கட்சியினருக்குக் கூடுதலாக 8 மணி 16 நிமிட நேரம் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பொறுப்பில் உள்ள துறைகள் சம்பந்தமாக பதிலளித்த நேரம்	–	*1 மணி 14 நிமிடங்கள்*
தனது பொறுப்பிலுள்ள துறைகள் மட்டுமல்லாமல் இதர துறைகள் தொடர்பான விவாதங்களிலும் உறுப்பினர்களின் கருத்துகளுக்கு உடனுக்குடன் மாண்புமிகு முதலமைச்சர் விளக்கம் அளித்த நேர்வுகள்	–	*3 முறைகள்*
மாண்புமிகு அமைச்சர்கள் பதிலுரையாற்றிய மொத்த நேரம்	–	*23 மணி 20 நிமிடங்கள்*

வெட்டுத் தீர்மானங்கள்—

வரப்பெற்றவை	*7525*
அனுமதிக்கப்பெற்றவை	*6922*
அவையில் முன்மொழியப்பெற்றவை	*2326*

வினாக்கள்—விடைகள்—

9–1–2023–ல் இப்பேரவைக் கூட்டம் தொடங்கியது முதல் 21–4–2023 வரை உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்ட மொத்த வினாக்கள்	-	*17680*
அளித்த உறுப்பினர்கள் எண்ணிக்கை	-	*98*
அனுமதிக்கப்பெற்றவை	-	*7215*
உடுக்குறியிட்டவை	-	*1766*
உடுக்குறியிடாதவை	-	*5433*
குறுகிய கால வினா	-	*16*

TRUTH ALONE TRIUMPHS

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

உடுக்குறியிட்ட வினாக்கள்—

அவையில் விடையளிக்கப்பட்டவை	-	196
மொத்த துணை வினாக்கள்	-	658

அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்களில் முதல் மூன்று நிலைகளில் இருப்பவர்கள்—

நேரமின்மை காரணமாக இப்பட்டியலைப் படித்ததாகக் கருதி பேரவையின் அனுமதியோடு அவர்களுடைய பெயர்களை அவைக் குறிப்பில் இணைப்பாக பதிவு செய்துவிடுகிறேன். @

அவையில் அதிக அளவு வினாக்களுக்கு விடையளித்த அமைச்சர்களில் முதல் ஐந்து நிலைகளில் இருப்பவர்கள்—

வரிசை எண்.	அமைச்சர்	வினாக்களின் எண்ணிக்கை
(1)	மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்	17
(2)	மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்	15
(3)	மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்	14
(4)	மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்	12
(5)	மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர்	10

வினாக்கள்–விடைகள் எடுத்துக்கொள்ளப்பெற்ற மொத்த நாட்கள்	-	20
வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்பட்ட நாட்கள்	-	16

@ 583 முதல் 588 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

நீட்டிக்கப்பட்ட மொத்த நேரம்	-	*4 மணி 26 நிமிடங்கள்*
குறுகிய கால வினா	-	*1*
உடுக்குறியிடாத வினாக்கள்—		
அவைமுன் வைக்கப்பெற்றவை	-	*797*
உடுக்குறியிடாதவையாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள்	-	*1,000*
சிறப்புக் கவன ஈர்ப்பு—		
அவசரத் தன்மை வாய்ந்த மிக முக்கியமான பொருட்கள் குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பு (Special Mention) என்ற வகையில் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை	-	*12*
மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை	-	*5*
உரையாற்றிய உறுப்பினர்கள்	-	*80*
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம்	-	*4 மணி 8 நிமிடங்கள்*
தகவல் கோரல்—		
தகவல் கோரல் என்ற முறையில் அவ்வப்போது முக்கியப் பிரச்சினைகள் அவையில் எழுப்ப அனுமதிக்கப்பட்டு பதிலளித்த நேர்வுகள்	-	*40*
மாண்புமிகு முதலமைச்சர் பதிலளித்தவை	-	*5*
உரையாற்றிய உறுப்பினர்கள்	-	*33*
எடுத்துக்கொள்ளப்பட்ட மொத்த நேரம் (அமைச்சர்களின் பதிலுரை உட்பட)	-	*2 மணி 15 நிமிடங்கள்*
கவன ஈர்ப்புகள்—		
உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்றவை	-	*945*
கவன ஈர்ப்பாக அனுமதிக்கப்பெற்றவை	-	*160*
அவையில் விளக்கம் அளிக்கப்பெற்றவை	-	*15*

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள்—

அவையில் எழுப்பப்பெற்றவை	-	2
உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை	-	2

அரசினர் சட்டமுன்வடிவுகள்—

வரப்பெற்றவை	-	23
நிறைவேற்றப்பெற்றவை	-	24

பிற்பகல் 1–25

நிறைவேற்றப்பெற்ற முக்கிய சட்டமுன்வடிவு

19–10–2022 அன்று நிறைவேற்றப்பெற்று, 6–3–2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பட்ட தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, 2022, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் 23–3–2023 அன்று மறு ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்டு ஆளுநர் அவர்களுக்கு மீண்டும் அனுப்பப்பட்டு ஆளுநர் அவர்களால் ஒப்புதலும் அளிக்கப்பட்டது.

திரும்பப் பெறப்பெற்றவை	-	ஏதுமில்லை

அரசினர் தனித் தீர்மானம்—

வரப்பெற்றவை	-	3
நிறைவேற்றப்பெற்றவை	-	3

முக்கியத் தீர்மானங்கள்

1. 150 ஆண்டு காலக் கனவுத் திட்டமான சேது சமுத்திரத் திட்டத்தை மேலும் தாமதமின்றி நிறைவேற்ற ஒன்றிய அரசைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் 12–1–2023 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு அந்தந்த மாநில ஆளுநர்கள் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றும், இப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளித்திட வேண்டுமென்றும் ஆளுநருக்கு

உரிய அறிவுரைகளை வழங்குமாறு ஒன்றிய அரசையும், மாண்புமிகு குடியரசுத் தலைவரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் 10–4–2023 அன்று ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

3. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைக் கிறித்துவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களும் அனைத்து வகையிலும் சமூக நீதியின் பயன்களைப் பெற, அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு இந்திய அரசை வலியுறுத்தும் தீர்மானம் 19–4–2023 அன்று ஒருமனதாக இந்த அவையில் நிறைவேற்றப்பட்டது.

விதி 110—ன்கீழ் மாண்புமிகு அமைச்சர்களின் அறிக்கைகள்—

மொத்தம் அளிக்கப்பெற்றவை	-	3
மாண்புமிகு முதலமைச்சர் அளித்தவை	-	3

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110—ன்கீழ் சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். அவற்றுள் முக்கியமானவற்றை அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். **(குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) எல்லோரும் கொஞ்சம் கவனியுங்கள்.**

1. **1924** ஆம் ஆண்டு, மார்ச் **30** அன்று மாபெரும் சமூக சீர்திருத்தத்திற்கு அடையாளமாக விளங்கும் வைக்கம் போராட்டம் தொடங்கியதன் நூற்றாண்டு தொடக்க நாளான **30—3—2023** அன்றிலிருந்து "வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா" நிகழ்ச்சிகளை, தமிழ்நாடு அரசு சிறப்பாக நடத்தத் திட்டமிட்டிருப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **30—3—2023** அன்று அறிவித்தார்கள்.

2. சமூக சீர்திருத்தத்தின் பெருமைமிகு தலைவராகவும், ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் ஒளிவிளக்காகவும், நெறிசார்ந்த அரசியலின் அடையாளமாகவும், பட்டியலின மக்களின் உரிமைக்காகப் போராடியவருமான அய்யா இளையபெருமாள் அவர்களின் நூற்றாண்டைப் போற்றும் வகையில், கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் அவருக்கு நூற்றாண்டு நினைவரங்கம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **18—4—2023** அன்று அறிவித்தார்கள்.

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

3. முன்னாள் பாரதப் பிரதமர் மறைந்த திரு. வி.பி. சிங் அவர்களின் நினைவைப் போற்றும் வகையிலும், மரியாதை செய்யும் விதமாகவும் சென்னையில் முழு உருவ கம்பீரச் சிலை அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 20–4–2023 அன்று அறிவித்தார்கள்.

பேரவைக் குழுக்கள் அவைக்கு அளித்துள்ள அறிக்கைகள்—

மதிப்பீட்டுக் குழு	-	14
பொதுக் கணக்குக் குழு	-	47
பொது நிறுவனங்கள் குழு	-	34
அரசு உறுதிமொழிக் குழு	-	45
மனுக்கள் குழு	-	8
சட்ட விதிகள் ஆய்வுக் குழு	-	1
பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு	-	1

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—

(அ) சட்டமுறை விதிகளும் ஆணைகளும்	-	132
(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்	-	353

உறுப்பினர்கள் வருகை—

9–1–2023 முதல் 21–4–2023 வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல் நேரமின்மை காரணத்தால் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்யப்படுகிறது.@

பார்வையாளர்கள்—

பார்வையாளர்கள் மாடத்தில் அனுமதிக்கப்பட்டவர்கள்

மொத்தம்	-	20,137
ஆண்கள்	-	18,345
பெண்கள்	-	1,792

@ 589 முதல் 592 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

நூலகம்—

முதல் மற்றும் இரண்டாம் கூட்டத் தொடர்களில் சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்தோர்	-	145
வழங்கப்பெற்ற நூல்கள்	-	346
புதியதாக வரப்பெற்ற நூல்கள்	-	210
(பேரவை நடவடிக்கைக் குறிப்புகள்) புதியதாக வாங்கப்பெற்ற நூல்கள்	-	2

பிற்பகல் 1–30

நடவடிக்கைக் குறிப்புகள்—

உறுப்பினர்கள் ஆற்றிய மொத்த உரைகள் (குறுக்கீடுகள் தவிர)	-	693
தட்டச்சு செய்யப்பெற்ற மொத்தப் பக்கங்கள்	-	8,053
மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்ற நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	-	1,388
தலைமைச் செயலகத்தின் பல்வேறு துறைகளுக்கு அனுப்பப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளின் எண்ணிக்கை	-	372

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

சிறப்பு நேர்வுகள்—

1. மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, மாதம் ஆயிரம் ரூபாய் தேவைப்படும் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும் வகையில் 'மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்' 27–3–2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

2. செவித்திறன் மாற்றுத் திறனாளிகள் புரிந்துகொள்ளும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிகழ்வுகளின்

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

தொகுப்பு, YouTube மூலமாகவும், ஊடகங்கள் வாயிலாகவும் ஒளிபரப்பு செய்திடும் வகையில், சைகை மொழியில் பதிவு செய்து வழங்கும் நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 17-4-2023 அன்று தொடங்கி வைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

3. முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் மற்றும் மருத்துவப் படி உயர்த்துதல் குறித்து 19-4-2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டார்கள்.

பேரவை நடைபெற உதவிய அனைவருக்கும் நன்றியுரை—

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவைக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னதாகவே அவைக்கு வந்திருந்து பேரவை நடவடிக்கைகள் சீரோடும், சிறப்போடும் அமைய எனக்குப் பெரிதும் உதவியாக இருந்தார்கள். கேள்வி நேரம் உட்பட அனைத்து விவாதங்களிலும் கலந்துகொண்டு, உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை உன்னிப்பாகக் கவனித்து, அவர்கள் தெரிவிக்கும் கோரிக்கைகள் குறித்து உடனுக்குடன் உரிய விளக்கங்களை அளித்துள்ளார்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு அவர்கள் பேச வாய்ப்புக் கோரும் நேர்வுகளில் பேசுவதற்கான வாய்ப்பினை வழங்கிட வேண்டும் என்கிற தன்னுடைய எண்ணத்தினை வெளிப்படுத்தி, எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்குப் போதுமான அளவில் நேரம் வழங்கப்பட்டு, பேரவையை ஜனநாயக முறையில் நடத்திட எனக்குப் பேருதவியாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மானியக் கோரிக்கைகள் மீதான விவாதங்களில் அமைச்சர்கள் பதிலுரையின்போது, பதிலுரையை முழுமையாகக் கவனித்து பேரவை நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வந்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

"இது எனது அரசு அல்ல, இது நமது அரசு" என்ற நோக்கில் ஆட்சியைச் சிறப்பான முறையில் இந்திய நாட்டிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாக திகழும்

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

வகையில் 'திராவிட மாடல்' ஆட்சியினை சிறப்பாக நடத்தி வருகின்றார். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையில் விவாதிக்கப்படும் பொருளிலிருந்து விலகிச் சென்று அல்லது அவை மரபுக்கு அப்பாற்பட்டு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கையில், தனக்கே உரித்தான பாணியில் அவையின் விதிமுறைகள் மற்றும் மரபுகளைச் சுட்டிக்காட்டி தனது கருத்துகளை உறுதிபட தெரிவித்து, இப்பேரவையை செம்மையாக நடத்துவதிலே எனக்குப் பேருதவியாக இருந்த மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரவை நிகழ்ச்சிகள் இனிதே நிறைவேறவும், உறுப்பினர்கள் விவாதங்களிலே சிறப்பாகப் பங்கேற்கவும் உதவிபுரிந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், மாண்புமிகு மாற்றுத் தலைவர்கள், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது கனிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பேரவைக் கூட்டம் இனிதே நடைபெற அனைத்து உதவிகளையும் செய்த தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இக்கூட்டத் தொடர் சிறப்பாக நடைபெற அனைத்து வகைகளிலும் உதவிய, அனைத்து துறைச் செயலாளர்கள் மற்றும் அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஏற்கெனவே தொடர்ந்து காகிதமில்லா நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை அளிக்கப்பட்டுவரும் நிலையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினை முழுவதும் காகிதமில்லா சட்டமன்றமாக்கிடும் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக டிஜிட்டல் ஹவுஸ் *(Digital House)* திட்டத்தை

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 21

12–4–2023 அன்று முதல் செயல்படுத்தும் விதமாக, தொடுதிரை சிறு கணினிகளில் மின்–புத்தகம் (e-Book) செயலி உருவாக்கப்பட்டு, பயனாளர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) அனைத்து மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் உள்ளீடு செய்யப்பட்டன. House Controller Module மற்றும் Display Unit Module ஆகியவை செயல்படுத்தப்பட்டு, உரையாற்றும் உறுப்பினர் பெயர், புகைப்படம், பேசும் பொருள், துறை, உரையாற்றும் நேரம் குறித்த விவரங்கள் பேரவை மண்டபத்தில் பொருத்தப்பட்டுள்ள நான்கு பெரிய திரைகளில் காண வழிவகை செய்யப்பட்டது.

பிற்பகல் 1–35

பாராளுமன்ற அமைச்சகத்திலிருந்து வந்திருக்கும் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் இச்செயலக அலுவலர்கள்மூலம் பேரவை மண்டபத்தில், காலையில் பேரவை கூடுவதற்கு முன், மின்–புத்தக செயலி பயன்படுத்தும் விதம் குறித்தும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இவ்வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செயல்பாடுகள் காகிதமில்லா முறையில் நடைபெறுவதற்கு அனைத்துப் பணிகளையும் ஒருங்கிணைத்துப் பணியாற்றிய சட்டப் பேரவைச் செயலாளர் தலைமையிலான National e-Vidhan Application-NeVA குழுவினரை மனதாரப் பாராட்டுகின்றேன்.

பதினாறாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாம் கூட்டத்தொடர் அலுவல்கள் சிறப்புற நிறைவேற, அனைத்து வகைகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்து, மிகச் சிறந்த முறையில் உதவிபுரிந்த பேரவைச் செயலாளர் முனைவர் கி. சீனிவாசன், பேரவை சிறப்புச் செயலாளர், கூடுதல் செயலாளர்கள் உள்ளிட்ட பேரவையின் அனைத்து அலுவலர்களுக்கும் மற்றும் அனைத்துப் பணியாளர்களுக்கும், எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோன்று, பாதுகாப்பு ஏற்பாடுகளை திறம்பட செய்திட்ட காவல் துறைத் தலைவர், பெருநகர சென்னை காவல் ஆணையர் உள்ளிட்ட அனைத்து காவல் துறை அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளை அன்றாடம் சிறப்பாக நேரடி ஒளிபரப்பு செய்ய உதவிய செய்தி–மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திரைப்பட பிரிவினருக்கும், ஒலிவாங்கிகளை இயக்கும் பொதுப் பணித் துறையின் ரேடியோ

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

பிரிவினருக்கும், சட்டமன்ற நிகழ்வுகளை சிறந்த முறையில் மக்களுக்கு எடுத்துச் சென்ற பொதிகை தொலைக்காட்சி, அகில இந்திய வானொலி, தனியார் தொலைக்காட்சிகள், நாளிதழ்கள், பத்திரிகைகள், ஊடகங்கள், சமூக வலைதளங்கள், செய்தி நிறுவனங்கள், செய்தியாளர்கள், நிருபர்கள் மற்றும் புகைப்படக் கலைஞர்கள் என அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கிய அனைத்து பேரவைக் காவலர்களுக்கும் (Watch and Ward) பேரவையின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உரையாற்றியபோது 9–1–2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் இந்தப் பேரவையின் மாண்பினை நிமிரச் செய்தது, (மேசையைத் தட்டும் ஒலி) நிலைக்க செய்தது, நீடிக்க வைத்தது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவின் பல மாநிலங்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானத்தை, பேரவை நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தின் நகலை கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்பாட்டை பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) அத்துணை ஊடகங்களும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நெஞ்சுரத்தைக் கண்டு வியந்தனர். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, 23–3–2023 ஆம் நாளன்று இந்தப் பேரவையில் மாண்புமிகு ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பெற்ற 2022 ஆம் ஆண்டு, தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தை தடை செய்தல் மற்றும் இணையவழி விளையாட்டுகளை ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு, மீண்டும் நிறைவேற்றப்பெற வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதற்கும் அனுமதி தராமல், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இசைவளிக்காமல் வைத்திருந்த நிலையில், இப்பேரவையில் 10–4–2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தின்மூலம் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உடனடியாக அடுத்த நிமிடமே இந்தச் சட்டமுன்வடிவிற்கு இசைவளிக்க செய்தது மட்டுமல்ல, (மேசையைத் தட்டும் ஒலி) இணையவழி சூதாட்டம்மூலம் மேலும்

உயிரிழப்புகள் நடைபெறாமல் தடுத்து, இந்த மன்றத்தின் மாண்பு, பாரம்பரியம், சிறப்பு ஆகியவற்றை காப்பதற்குக் காரணமாக இருந்துள்ளார் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். மேலும், ஆளுநர் அவர்கள் சட்டமுன்வடிவிற்கு இசைவளிக்க கால நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்தியாவிலேயே முதல்முதலாக தமிழகச் சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானத்திற்கு மேற்கு வங்காளம், கேரளா மற்றும் டெல்லி உட்பட பல மாநிலங்களிலிருந்து முதல்வர்கள் அங்குள்ள அதிகாரிகள் எல்லாம் இந்தத் தீர்மானத்தைக் கேட்டு, அதன்படி தீர்மானம் இயற்ற முடிவு செய்துள்ளார்கள்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு உரிமைகள் மற்றும் இட ஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை கிறித்தவராக மதம் மாறிய ஆதி திராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி அவர்களும் அனைத்து வகையிலும், சமூகநீதியின் பயன்களைப் பெற அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு இந்திய அரசமைப்பை வலியுறுத்தும் தீர்மானம் 19–4–2023 அன்று இப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

பிற்பகல் 1–40

மேலும், நேற்றைக்கு இந்த மாமன்றத்தில் நடைபெற்ற விவாதம், உண்மையிலேயே பாராட்டப்படவேண்டியது. ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள அனைவரும் மகிழ்ச்சியடையக்கூடியது. அரசின்மீது குற்றங்களைச் சொல்வதற்காகத்தான் எதிர்க்கட்சிகள் உள்ளன என்பதை மாண்புமிகு கலைஞர் அவர்களுக்குப் பிறகு, இந்தச் சட்டமன்றத்தில் உண்மையாக்கிய பெருமை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோருமே இங்கே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசியல் கட்சிகள் மூலமாகத்தான் நாம் வந்திருப்போம். அரசியல் கட்சிகள்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அரசியல் தலைவர்கள். தோழமைக் கட்சியாக இருந்தாலும், இதரக் கட்சிகளாக இருந்தாலும் அவர்களை எவ்வாறு நடத்துவார்கள் என்றால் அன்றாடம் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுமையாக, பெருமையாக ஆளுங்கட்சிக்கு தோழமையாக

2023 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

இருக்கின்ற, தோழமைக் கட்சிகளையும் அன்போடு அரவணைத்து, அவர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுடைய கொள்கைக்கு ஒருபோதும் எதிர்க்கருத்து சொல்லாத ஒரு மாண்புமிகு முதலமைச்சர் இருக்கிறார் என்றால் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதைவிட சிறந்தது எதிர்க்கட்சிகளுக்கு ஏதேனும் இடைஞ்சல் செய்ய வேண்டுமென்று ஒருபோதும் எண்ணியது இல்லை. அவர்களையும் முழுமையாக பேச அனுமதித்த பெருமைக்குரிய ஒரு முதலமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிகள் சில சந்தர்ப்பங்களில் ஏதேனும் நிகழ்வு ஏற்பட்டு, அவர்களுக்கு இடைஞ்சல் செய்கின்ற அளவிற்கு ஏதேனும் வாய்ப்பு ஏற்பட்டால் எல்லோரும் பயன்படுத்துவார்கள். ஆனால், மாண்புமிகு நமது இன்றைய முதல்வர் அவர்கள், அவ்வாறு நிலை ஏற்பட்டு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களையும், மாண்புமிகு உறுப்பினர் அய்யப்பன், மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் போன்றோர்களை அவர்கள் இயக்கத்திலிருந்து நீக்கியதாக ஒரு தபால் தந்திருக்கிறார். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. சரியாக அவர்களை பழிவாங்க வேண்டுமென்று சில அரசியல் தலைவர்கள் நின்றால், ADMK–1, 2 என்று அவர்களைப் பிரித்துக் கொடுத்து, எவ்வளவு இடையூறு செய்ய முடியுமோ, அவ்வளவு செய்யலாம். ஒரு காலத்தில் 'ஜா' அணி, 'ஜெ' அணி என்றெல்லாம் இருந்ததை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மறந்திருக்க மாட்டார்கள். எவ்வளவு பெருந்தன்மையாக, அது எதிர்க்கட்சியாக இருந்தாலும், அந்தக் கட்சி உள் விவகாரங்களில் தலையிடுவது நாகரிகம் இல்லை என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நாகரிகமான, ஜனநாயக முறையில் பண்பான, ஒரு கண்ணியமிக்க (மேசையைத் தட்டும் ஒலி) அரசியலையும் நடத்தி, ஆட்சியையும் நடத்துகின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்தப் பேரவையின் சார்பாக நன்றியோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

8. அரசினர் தீர்மானங்கள்—*தொடர்ச்சி*

(ஆ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் தீர்மானம். பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறக் கோரும் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"பேரவை விதி 25(1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–43 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

116. 23–11–2021 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின், பாகம்–II, பிரிவு–2–ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/804(d)/2021 ஆம் எண் அறிவிக்கைக்கு பதிலாக, தமிழ்நாடு முன் தீர்வுக்கான

2023 ஏப்ரல் 21]

அதிகார அமைப்பினை அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்பினர்களைக்கொண்டு ஏற்படுத்தியது குறித்து 21–12–2022 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவு (B1)த் துறையின் அரசாணை (நிலை) எண் 197–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

117. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

118. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 35(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

119. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

120. 2017–2018 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ்–ஆங்கிலம்)

121. 2018–2019 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

122. 2019–2020 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

123. 2020–2021 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. [1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர் கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16 பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்–ஆங்கிலம்)

124. 2021–2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 18/2013) 395(1)(b) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

125. 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (தமிழ்நாடு பதிவுத் துறையில் ஸ்டார் 2.0 மென் பொருள் பயன்பாட்டின் தகவல் தொழில்நுட்ப தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

126. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (பிரதம மந்திரி குடியிருப்பு திட்டம்–ஊரகம் அமலாக்கம் மீதான செயலாக்க தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

127. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (இணக்கத் தணிக்கை (வருவாய்)). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 21]

128. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (இணக்கத் தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

129. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்த செயலாக்க தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

130. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (மாநில நெடுஞ்சாலைகள் துறையின் சாலைகள் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு குறித்த செயலாக்கத் தணிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

131. 2021 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை (தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தின் மீதான செயலாக்கத் தணிக்கை அறிக்கை). [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

132. 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் நாளன்றுடன் முடிவடைந்த ஆண்டிற்கான இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவரின் மாநில நிதிநிலை மீதான தணிக்கை அறிக்கை. [இந்திய அரசமைப்புச் சட்டம் 151(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

331. 2021—2022 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நகர்ப்புர அடிப்படை வசதி மேம்பாடு மற்றும் புதுப்பிப்பு நிதியத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

332. காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023—2024. (தமிழ்)

333. மதிப்பீட்டுக் குழுவின் பதினான்காவது அறிக்கை. (2021—2023)

334. மதிப்பீட்டுக் குழுவின் பதினைந்தாவது அறிக்கை. (2021—2023)

335. மதிப்பீட்டுக் குழுவின் பதினாறாவது அறிக்கை. (2021—2023)

336. மதிப்பீட்டுக் குழுவின் பதினேழாவது அறிக்கை. (2021—2023)

337. மதிப்பீட்டுக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. (2021—2023)

338. மதிப்பீட்டுக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. (2021—2023)

339. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து நான்காவது அறிக்கை. (2021—2023)

340. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஐந்தாவது அறிக்கை. (2021—2023)

341. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஆறாவது அறிக்கை. (2021—2023)

342. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஏழாவது அறிக்கை. (2021—2023)

2023 ஏப்ரல் 21]

343. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து எட்டாவது அறிக்கை. (**2021—2023**)

344. அரசு உறுதிமொழிக் குழுவின் நாற்பத்து ஒன்பதாவது அறிக்கை. (**2021—2023**)

345. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை. (**2021—2023**)

346. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து ஒன்றாவது அறிக்கை. (**2021—2023**)

347. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து இரண்டாவது அறிக்கை.(**2021—2023**)

348. அரசு உறுதிமொழிக் குழுவின் ஐம்பத்து மூன்றாவது அறிக்கை. (**2021—2023**)

349. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பன்னிரெண்டாவது பட்டியல் (**2023**)) (வரிசை எண்கள் **1** முதல் **100** வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

350. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதின்மூன்றாவது பட்டியல் (**2023**)) (வரிசை எண்கள் **1** முதல் **100** வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

351. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதினான்காவது பட்டியல் (**2023**)) (வரிசை எண்கள் **1** முதல் **100** வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

352. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதினைந்தாவது பட்டியல் (**2023**)) (வரிசை எண்கள் **1** முதல் **100** வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

353. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (பதினாறாவது பட்டியல் (**2023**)) (வரிசை எண்கள் **1** முதல் **150** வரை) (உடுக்குறியிட்ட வினாக்கள், உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்டது)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு-I

(1-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

(பட்டியல்கள் 12 முதல் 16 வரை)@

பட்டியல்—12

1—

மெட்ரோ இரயில் சேவை

வினா எண் 929—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கோவை முதல் உக்கடம், விமான நிலையம், அவினாசி சாலை, கணியூர் வரை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மெட்ரோ இரயில் சேவை திட்டத்தை திருப்பூர் வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) கோவை முதல் உக்கடம், விமான நிலையம், அவினாசி சாலை, கணியூர் வரை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பெருந்திரள் துரிதப் போக்குவரத்து அமைப்பினை திருப்பூர் வரை நீட்டிக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) தற்போது பரிசீலனையில் இல்லை என்பதால் இவ்வினாவிற்கு பதில் வழங்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

2—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 1298—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

@ *இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.*

[2023 ஏப்ரல் 21

கள்ளக்குறிச்சி ஒன்றியம், புக்கிரவாரி ஊராட்சியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், புக்கிரவாரி பகுதியைச் சுற்றி புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க, வரையறுக்கப்பட்ட அளவுகோல்களின்படி, 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் மூன்று தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் (மேற்கே 18 கிலோ மீட்டர் தொலைவில் கள்ளக்குறிச்சி மற்றும் வடக்கே 22 கிலோ மீட்டர் தொலைவில் தியாகதுருகம் மற்றும் தெற்கே 22 கிலோ மீட்டர் தொலைவில் சின்னசேலம்) உள்ளதால் இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கூறிய நிலையங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஊர்திகளைக் கொண்டு மேற்கொள்ள இயலும் என்பதால், புக்கிரவாரி பகுதியில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை எழவில்லை.

3—

காவல் நிலையம்

வினா எண் 1310—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், நமச்சிவாயபுரம் ஊராட்சியில் புறக்காவல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி உட்கோட்டம், சின்னசேலம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட நமச்சிவாயபுரம் கிராமமானது சின்னசேலம் காவல் நிலையத்திலிருந்து 7 கி.மீ. தொலைவில் உள்ளது. மேற்படி கிராமத்திலிருந்து பொதுமக்கள் காவல் நிலையம் வந்து செல்வதற்கு போதுமான போக்குவரத்து வசதிகள் உள்ளதால், மேற்கண்ட புறக்காவல் நிலையம் அமைக்க அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

4—

அடுக்குமாடி குடியிருப்பு

வினா எண் 1315—திரு. மா. செந்தில்குமர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி துணை கண்காணிப்பு அலுவலக ஊழியர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், அரசாணை (நிலை) எண் 424, வருவாய்த் துறை, நாள் 12–11–2019–ன்படி தனியாக பிரிக்கப்பட்டு 26–11–2019 முதல் இயங்கி வருகிறது. இதில் 3 உட்கோட்டங்கள், 26 காவல் நிலையங்கள் இயங்கி வருகின்றன. அதில் கள்ளக்குறிச்சி உட்கோட்டம் அரசாணை (நிலை) எண் 346, உள் துறை, நாள் 8–11–1994–ன்படி இயங்கி வருகிறது. இதன்கீழ் 7 காவல் நிலையங்கள், 1 போக்குவரத்து காவல் நிலையம், 1 மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல் நிலையம் மற்றும் 1 அனைத்து மகளிர் காவல் நிலையம் இயங்கி வருகிறது. கள்ளக்குறிச்சி காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு கீழ்க்கண்டவாறு பணியாளரின் எண்ணிக்கை ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:

	காவல் துணை கண்காணிப்பாளர்	*ஓட்டுநர் (காவலர்)*
ஒப்பளிக்கப்பட்டது	*1*	*1*
பணிபுரிபவர்கள்	*1*	*1*

கள்ளக்குறிச்சி உட்கோட்ட துணைக் காவல் ஆளிநர்களுக்கு அரசாணை (நிலை) எண் 576, உள் (காவல்–10) துறை, நாள்: 8–7–2005–ன்படி அரசு குடியிருப்புகள் கட்டப்பட்டு இயங்கி வருகிறது. காவல் துணைக் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகம் சர்வே எண் 332/1B–ல் 0.20 ஹெக்டேர் பரப்பளவில் அரசாணை (நிலை) எண் 512, உள் (காவல்–10) துறை, நாள் 26–5–2010–ன்படி கட்டப்பட்டு,

11–6–2014 அன்று திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. மேலும், கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மற்றும் காவல் ஆளிநர்களுக்கு 34 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அதில், கள்ளக்குறிச்சி உட்கோட்டத்தில் அயல் பணியாக பணிபுரியும் 5 காவலர்கள் குடியிருந்து வருகிறார்கள். கள்ளக்குறிச்சி காவல் துணைக் கண்காணிப்பாளரின் ஓட்டுநராக ஆயுதப்படையில் பணிபுரிபவர்கள்தான் பணியமர்த்தப்படுகிறார்கள். இது புதிய மாவட்டம் என்பதால் ஆயுதப்படை வளாகத்திற்கு இடம் தேர்வு செய்து, குடியிருப்பு கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில், கள்ளக்குறிச்சி துணைக் காவல் கண்காணிப்பாளரின் ஓட்டுநருக்கு குடியிருப்பு ஒதுக்கப்படும்.

காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கும் காவலர் குடியிருப்புக்கும் இடையே உள்ள தூரம் 2 கி.மீ. ஆகும். ஆதலால் பணியாளர்கள் அலுவலகம் வருவதற்கு எவ்வித இடர்பாடுகளும் இல்லை. எனவே, இத்தகைய சூழ்நிலையில் காவல் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள குறைந்த எண்ணிக்கையிலான ஊழியர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டடம் கட்டப்பட வேண்டிய நிலை தற்போது ஏற்படவில்லை.

5—

மெட்ரோ இரயில் திட்டம்

வினா எண் 3050—திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மெட்ரோ இரயில் திட்டத்தில் குறிச்சி, ஈச்சனாரி, வெள்ளலூர் பகுதிகளை சேர்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

கோயம்புத்தூர் நகருக்கான ஒருங்கிணைந்த நகர்வு திட்டத்தின் அடிப்படையில், வெள்ளலூர் முதல் தண்ணீர்பந்தல் வரையிலான (21.4 கி.மீ.) ஒரு வழித்தடம் கோயம்புத்தூர் நகருக்கான பெருந்திரள் துரிதபோக்குவரத்து அமைப்பு ஏற்படுத்துவதற்கு உகந்த வழித்தடமாக சாத்தியக்கூறு அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ளது. ஆலோசகர் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுவரும் விரிவான திட்ட அறிக்கை,

2023 ஏப்ரல் 21]

டிசம்பர் 2021–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட பின்னரே, வெள்ளளூர் முதல் தண்ணீர்பந்தல் வரையிலான (21.4 கி.மீ.) வழித்தடம் எந்தக் கட்டத்தில் செயல்படுத்துவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பது தெரியவரும். கோயம்புத்தூர் நகருக்கான ஒருங்கிணைந்த நகர்வு திட்டத்தின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட வழித்தடப் பகுதிகளில் குறிச்சி மற்றும் ஈச்சனாரி இடம் பெறவில்லை.

6—

குடியிருப்புகள் கட்டுதல்

வினா எண் 4262—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியில் தீயணைப்பு படையினருக்கு குடியிருப்புகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு அரசாணை (நிலை) எண் 156, உள் (காவல்–17) துறை, நாள் 25–2–2011–ன்படி, 1 நிலைய அலுவலர் மற்றும் 12 பணியாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டு, 3–12–2014 முதல் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

7—

தீயணைப்பு நிலையம்

வினா எண் 5480—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், தெற்கு கடையத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையம் பகுதியைச் சுற்றி, புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க, வரையறுக்கப்பட்ட அளவுகோல்களின்படி 25 கிலோ மீட்டர் தொலைவிற்குள் இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் (கிழக்கே 35 கிலோ மீட்டர் தொலைவில் ஆலங்குளம், மேற்கே மேற்கு தொடர்ச்சி மலையும், தெற்கே 18 கிலோ மீட்டர் தொலைவில் அம்பாசமுத்திரம், வடக்கே 20 கிலோ மீட்டர் தொலைவில் தென்காசி) உள்ளதால், இப்பகுதியில் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளை மேற்கூறிய நிலையங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் ஊர்திகளைக் கொண்டு மேற்கொள்ள இயலும் என்பதால், கடையம் ஊராட்சி ஒன்றியம், தெற்கு கடையத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

8—

மெட்ரோ இரயில் திட்டம்

வினா எண் 18184—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) சென்னையில் திருமங்கலத்திலிருந்து முகப்பேர் வழியாக அம்பத்தூர் வரையிலும் மெட்ரோ இரயில் திட்டத்தை விரிவுபடுத்த ஒன்றிய அரசை மாநில அரசு வலியுறுத்துமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், முதலமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை மெட்ரோ இரயில் திட்டம்–கட்டம்–II–ன்கீழ், வழித்தடம்–3, வழித்தடம்–4 மற்றும் வழித்தடம்–5 ஆகிய மூன்று வழித்தடங்கள், மொத்தம் 118.9 கி.மீ. நீளத்தில் தற்பொழுது செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், வழித்தடம்–5–ல் அமையவுள்ள உயர்த்தப்பட்ட திருமங்கலம் மெட்ரோ இரயில் நிலையத்திலிருந்து முகப்பேர் மற்றும் அம்பத்தூர் வழியாக ஆவடி

2023 ஏப்ரல் 21]

வரை மெட்ரோ இரயிலை நீட்டிப்பதற்கான ஒரு விரிவான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும் என 2022–2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட பதிலுரையின்போது மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்பினை விரைவில் செயல்படுத்துவதற்கான பூர்வாங்க பணிகளை அரசு துவக்கியுள்ளது.

9—

கால்வாய் திட்டம்

வினா எண் 195—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி மாவட்டம், சிறப்பு திட்ட கோட்டம், ராமநதி-ஜம்புநதி மேல்மட்ட கால்வாய் திட்டப் பணியை விரைந்து செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ராமநதி-ஜம்புநதி மேல்மட்டக் கால்வாய் திட்டப் பணிக்கு தேசிய வன உயிரின ஆணைய அனுமதி பெறுவதற்கான கருத்துரு தலைமை வன உயிரின பாதுகாவலர், சென்னை அவர்களுக்கு கள இயக்குநர், களக்காடு முண்டந்துறை புலிகள் சரணாலயம், திருநெல்வேலி அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10—

தடுப்பணை

வினா எண் 305—திரு. சு. ரவி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சி, விருதசீரர் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி, நெமிலி ஒன்றியம், பள்ளூர் ஊராட்சி, விருதசீரர் ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

11—

நந்தன் கால்வாய் திட்டம்

வினா எண் 470—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி வரை நந்தன் கால்வாய் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி வரை நந்தன் கால்வாய் திட்டத்தைச் செயல்படுத்த நில அளவைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நில அளவைப் பணிகளின் அடிப்படையில் சாத்தியக்கூறு இருப்பின், நந்தன் கால்வாயை கீழ்பெண்ணாத்தூர் பேரூராட்சி வரை கொண்டுசெல்ல நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

12—

நீர்வழித்தடம்

வினா எண் 485—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடியில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும் இணைக்கும் வகையில் நீர்வழித்தடம் அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

மன்னார்குடியில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும் இணைக்கும் வகையில் நீர்வழித்தடம் அமைப்பது தொடர்பாக தற்போது அரசிடம் கருத்துரு ஏதும் இல்லை.

13—

கால்வாயைத் தூர்வாருதல்

வினா எண் 649—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி மாவட்டம், சிற்றாறு வடிநில கோட்டத்திற்குட்பட்ட மானூர் கால்வாயைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்திலுள்ள மானூர் பெரிய குளத்தினை தூர்வாரி ஆழப்படுத்துவதற்கும், மடைகள் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளுவதற்கும், மேலும் தேவையான இடங்களில் கால்வாயைத் தூர்வாரி பராமரிப்புப் பணிகள் மேற்கொள்வதற்கும் திட்ட மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

14—

படகு குழாம்

வினா எண் 1353—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் உள்ள வேளச்சேரி ஏரியைத் தூர்வாரி, ஆழப்படுத்தி படகு குழாம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் புனரமைப்புத் திட்டத்தின்கீழ், ரூ.25.00 கோடி மதிப்பீட்டில் வேளச்சேரி ஏரியினைத் தூர்வாருதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், வேளச்சேரி ஏரியில் படகு குழாம் அமைப்பது தொடர்பாக நீரியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் படகு குழாம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15—

நீரொழுங்கி

வினா எண் 2221—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் தொகுதியில் பாயும் வெட்டாற்றின் குறுக்கே உத்தமசோழபுரம் கிராமத்தில் புதிதாக கடைமடை இயங்கும் அணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் தொகுதி, உத்தமசோழபுரம் கிராமம், வெட்டாற்றின் குறுக்கே கடைமடை நீரொழுங்கி கட்டுவதற்கு தொழில்நுட்ப/நிதி சாத்தியக்கூறுகள் இருப்பின், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

16—

படுகை அணைகள்

வினா எண் 2370—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

(அ) கும்பகோணம் தொகுதி, குடிதாங்கியில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே படுகை அணைகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, குடிதாங்கி கிராமம், கொள்ளிடம் பகுதியில் நில நீர் மட்டங்கள் மற்றும் நில நீரின் தன்மை குறித்து தொழில்நுட்ப சாத்தியக்கூற்றின் அடிப்படையில், நிலத்தடிநீர் மட்டத்தினை உயர்த்திட காப்புக் காடுகளுக்கு இடர்பாடில்லாமல், தரைகீழ் அணை (Sub surface dyke) *அமைக்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.*

17—

கால்வாய் மேம்படுத்துதல்

வினா எண் 2381—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, கொண்டங்கி மற்றும் காயார் ஏரிகளின் கொள்ளளவை உயர்த்தி, பாசனக் கால்வாய்களை மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கொண்டங்கி மற்றும் காயார் ஏரிகளின் கொள்ளளவினை 90.16 மி.க.அ. மற்றும் 377.00 மி.க. அடியாக உயர்த்துவது மட்டுமின்றி இதர ஏரிகளையும் ஆழப்படுத்தி புனரமைக்கும் பணிகளை மேற்கொள்ள புனரமைப்புப் பணிகளின்கீழ், ரூ.14.20 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்ட

திட்ட மதிப்பீடு ஆய்வில் உள்ளது. ஆய்வுக்குப்பின், நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

18—

கதவணை

வினா எண் 2984—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, தொண்டியக்காட்டில் மரைக்காகோரையாற்றில் கதவணை கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ஆம்.

19—

நாட்டார் கால்வாய் திட்டம்

வினா எண் 3039—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை நாட்டார் கால்வாய் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை நாட்டார் கால்வாய் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான தொழில்நுட்ப/நிதி சாத்தியக்கூறுகளுக்குட்பட்டு, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20—

தூர்வாருதல்

வினா எண் 3053—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

உளுந்தூர்பேட்டை தொகுதியில் ஏரி, குளங்களைத் தூர்வார அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள 1) செம்பிமாதேவி ஏரி, 2) அலங்கிரி ஏரி, 3) சாலாபாக்கம் ஏரி, 4) பிடாகம் ஏரி, 5) களமருதூர் ஏரி, 6) தாமல் ஏரி, 7) செம்மணங்கூர் ஏரி, 8) மதியனூர் ஏரி, 9) உளுந்தூர் ஏரி, 10) உ.கீரனூர் ஏரி, 11) கூவாடு ஏரி மற்றும் 12) பா.கிள்ளானூர் ஏரி ஆகிய 12 எரிகளை புனரமைக்கும் பணிக்கான கருத்துரு அரசுக்கு கிடைக்கப்பெற்றபின், நிதி சாத்தியக்கூறிற்குட்பட்டு இக்கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

21—

தடுப்பணைகள்

வினா எண் 3054—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள கெடிலம் ஆற்றில் 5 இடங்களில் தடுப்பணைகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதியில் உள்ள கெடிலம் ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22—

புதிய வடிகால்

வினா எண் 3068—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதியில் புனித தோமையார்மலை ஒன்றியம், கோவிலம்பாக்கம் ஏரிக்கு புதிய வடிகால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதியில் புனித தோமையார்மலை ஒன்றியம், கோவிலம்பாக்கம் ஏரிக்கு புதிய வடிகால் அமைக்க நிரந்தர வெள்ளத்தடுப்புப் பணிகள் திட்டத்தின்கீழ், ரூ.13.10 கோடியில் பெரு மூடுவடிகால்வாய் அமைக்க திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது. நிதிநிலைக்குட்பட்டு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

23—

வெள்ளத்தடுப்புச் சுவர்

வினா எண் 3069—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதியிலுள்ள கீழ்க்கட்டளை கால்வாயில் தற்போது கட்டப்பட்டுவரும் வெள்ளத்தடுப்புச் சுவரை கீழ்க்கட்டளை ஏரியின் கலங்கள் வரை நீட்டித்து கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதியிலுள்ள கீழ்க்கட்டளை கால்வாயில் தற்போது கட்டப்பட்டுவரும் வெள்ளத்தடுப்புச் சுவரை கீழ்க்கட்டளை எரியின் கலங்கள் வரை நீட்டித்து கட்ட ரூ.16.75 கோடியில் தாங்கு சுவர் (Retaining Wall) அமைக்க திட்ட மதிப்பீடு அரசின் பரிசீலனையில் உள்ளது.

24—

தொட்டி பாலம் சீரமைத்தல்

வினா எண் 3336—திரு. இரா. அருள்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாத்தூர் தொட்டிப்பாலத்தினை சீரமைத்து புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாத்தூர் தொட்டிப்பாலம் 60 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த கட்டமைப்புடன்கூடிய பாலம் ஆகும். எனவே, அதனை சீரமைத்து புதுப்பிக்க தொழில்நுட்ப மற்றும் ஏனைய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

தடுப்புச் சுவர்

வினா எண் 3564—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, ஆலங்குடி முதல் வேட்டக்காரனிருப்பு வரை அரிச்சந்திரா ஆற்றின் வலது கரையில் தடுப்புச் சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதி காவிரி கழிமுகப் பகுதியில் வெண்ணாறு உபவடி நிலத்தில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் பருவநிலை மாறுதல் தழுவல் திட்டத்தின்கீழ், அரிச்சந்திரா நதி புனரமைப்பு மற்றும் மறுகட்டுமானப் பணி ரூ.275.33 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் ஆலங்குடி கிராமத்தில் 100 மீட்டர் தடுப்புச் சுவர், காடந்தேத்தி கிராமத்தில் பேருந்து நிறுத்தம் பின்புறம் மற்றும் பக்கவாட்டில் 100 மீட்டர் தடுப்புச் சுவர் பணிகள் சேர்க்கப்பட்டு, பாசனக் காலம் முடிவுற்ற பின் தொடங்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 21*

26—

மின் இறவைப் பாசனம்

வினா எண் 3565—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யத்தில் மானங்கொண்டான் ஆற்றில் கடைசி கதவணை அமைந்துள்ள இடத்தில் மின் இறவைப் பாசனத் திட்டம் அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, வேதாரண்யத்தில் மானங்கொண்டான் ஆற்றின் புனரமைக்கும் பணி ஆசிய வளர்ச்சி வங்கித் திட்டம் பகுதி 2–ல் எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மின் இறவைப் பாசனத் திட்டம் அமைக்க தள ஆய்வு செய்யப்பட்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

27—

தடுப்பணை

வினா எண் 3576—திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் தொகுதியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வெள்ளைப்பாக்கம்–அழகியநத்தம் இடையே தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கடலூர் தொகுதிக்குட்பட்ட தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே வெள்ளப்பாக்கம் அழகியநத்தம் இடையே

2023 ஏப்ரல் 21]

தடுப்பணை அமைக்க அரசின் நிதிநிலைக்கேற்ப, சாத்தியக்கூறு இருப்பின், நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

நவீனப்படுத்துதல்

வினா எண் 3597—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான், சுள்ளான் ஆறு நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், சுள்ளான் ஆறு நவீனப்படுத்தும் பணி, தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் பகுதி–IV–ன்கீழ், மேற்கொள்ள அரசின் நிதிநிலைக்கேற்பவும், சாத்தியக்கூறு இருப்பின், நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

29—

தடுப்பணை

வினா எண் 3642—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், வடவேர் கிராமம் பயன்பெறும் வகையில் புத்தாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, குடவாசல் வட்டம், இராதாநல்லூர் கிராமத்தில் உள்ள வடவேர் வாய்க்காலுக்கு நீர் வழங்கும்பொருட்டு புத்தாற்றின் குறுக்கே மைல் 66/5-ல் தடுப்பணை (தளமட்ட சுவர்) கட்டும் பணிக்கு ரூ.196.00 இலட்சத்திற்கு அரசாணை (4டி) எண் 31, பொதுப் பணித் (க்யூ2) துறை, நாள் 22-2-2021-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது.

30—

படகு இல்லம்

வினா எண் 4267—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதியின் அவல்பூந்துறையில் ஊராட்சிக்கு சொந்தமான சுமார் 200 ஏக்கர் பரப்பளவுள்ள குளம் தூர்வாரி, கரைகளைப் பலப்படுத்தி படகு இல்லம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம்பூந்துறை, அவல்பூந்துறை மற்றும் குளுர் ஆகிய 3 கிராமங்களில் சுமார் 173 ஏக்கர் பரப்பளவில் அவல்பூந்துறை குளம் அமைந்துள்ளது. இக்குளம் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் மற்றும் அவல்பூந்துறை பேரூராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ளது. எனவே, மேற்கண்ட குளத்தை நீர்வளத் துறையிடம் ஒப்படைப்பு செய்யும்பட்சத்தில், குளத்தை தூர்வாரி கரைகளை பலப்படுத்தி, படகு குழாம் அமைக்க விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்து, உரிய நிதி ஒதுக்கீடு பெற்று, பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 ஏப்ரல் 21]

31—

தடுப்பணை

வினா எண் 4380—திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, தேனி–அல்லிநகரம் வீரப்ப அய்யனார் கோயில் மேற்கு பகுதியில் உள்ள தம்புரான்கானல் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டம், அல்லிநகரம், வீரப்ப அய்யனார் கோயில் மேற்குப் பகுதியில் உள்ள தம்புரான்கானல் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைப்பது புதிய திட்டம் என்பதால், தள ஆய்வு செய்யப்பட்டு, தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை பெறப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

மேல்மட்டக் கால்வாய்

வினா எண் 5488—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி மாவட்டத்தில் ஜம்புநதி மேல்மட்டக் கால்வாய் பணியை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், இராமநதி ஜம்புநதி மேல்மட்டக் கால்வாய் திட்டப் பணிகளைத் தொடர

வனத் துறையின் அனுமதி கேட்கப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், பணிகள் விரைந்து செயல்படுத்தப்படும்.

33—

தடுப்புச் சுவர்

வினா எண் 5496—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், பெத்தநாடார்பட்டி ஊராட்சி, இலங்காபுரிபட்டணம் கால்வாய் கரையில் தடுப்புச் சுவர் அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், ஆலங்குளம் தொகுதி, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம், பெத்தநாடார்பட்டி ஊராட்சி, இலங்காபுரிபட்டணம் கால்வாய் கரையில் தடுப்புச் சுவர் கட்ட விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

தடுப்பணைகள்

வினா எண் 7172—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், நந்தியாற்றின் குறுக்கே தரணிவராகரம், கோரமங்கலம், தாழூர் ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள தடுப்பணைகளை புதிதாகக் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதி, திருத்தணி வட்டம், நந்தியாற்றின் குறுக்கே தரணிவராகரம், கோரமங்கலம் ஆகிய பகுதிகளில் புதிய தடுப்பணை கட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், தாழூர் பகுதியில் புதிதாக தடுப்பணை கட்ட தள தொழில்நுட்ப ஆய்வு அறிக்கையின்படி, சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில், உரிய ஒப்புதல் பெறப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படும்.

35—

பாலம் அகலப்படுத்துதல்

வினா எண் 7851—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்ணச்சநல்லூர், No.2 கரியமாணிக்கம் ஊராட்சி, வாத்தலை புது பாலத்தை அகலப்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மண்ணச்சநல்லூர், No.2 கரியமாணிக்கம் ஊராட்சி, வாத்தலை புது பாலத்தை அகலப்படுத்திட சாத்தியமில்லை.

36—

தடுப்புச் சுவர்

வினா எண் 10230—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 21

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பாலக்குறிச்சி ஊராட்சியில் பாலக்குறிச்சி முதல் பூந்தோட்டம் வரை 75 மீ. வெண்ணாற்றில் தடுப்புச் சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், பாலக்குறிச்சி ஊராட்சியில் பாலக்குறிச்சி முதல் பூந்தோட்டம் வரை 75 மீ. வெண்ணாற்றில் தடுப்புச் சுவர் அமைக்கும் பணி ஆசிய வளர்ச்சி வங்கியின் பகுதி–II (ADB Phase–II)–ன்கீழ் எடுத்துக்கொள்வதற்கான ஆரம்ப திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, இந்திய அரசாங்கம் பொருளாதார விவகாரத் துறையின் பரிசீலனையில் உள்ளது. பொருளாதார விவகாரத் துறையின் ஒப்புதலுக்குட்பட்டு, தக்க மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

37—

நதிநீர் இணைப்பு

வினா எண் 10252—திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பம்பை–வைப்பாரை நதிநீர் இணைப்பை செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, பன்மாநில நதிநீர் இணைப்பிற்கான சிறப்புக் குழு மற்றும் ஒன்றிய அரசிடம், பம்பை–வைப்பார் நதிநீர் இணைப்புத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

2023 ஏப்ரல் 21]

38—

தடுப்பணை

வினா எண் 11350—திரு. ஆ. கோவிந்தசாமி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம், பாப்பிரெட்டிப்பட்டி, வரட்டாறு குறுக்கே நான்கு இடத்தில் தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம், பாப்பிரெட்டிப்பட்டி, வரட்டாறு குறுக்கே நான்கு இடத்தில் தடுப்பணைகள் கட்ட தொழில்நுட்ப ரீதியாக சாத்தியமில்லை.

39—

அலுவலகங்கள்

வினா எண் 11404—திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு வெண்ணாறு வடிநில மற்றும் காவேரி கோட்ட வடிநில அலுவலகங்கள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள காவேரி பாசன பரப்புகளில் நீர் பங்கீடு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள நன்னிலம் உபகோட்டத்தை சார்ந்த திருமருகல் பிரிவு 1 மற்றும் 2 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வெண்ணாறு பாசன

பரப்புகளில் நீர் பங்கீடு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள நாகப்பட்டினத்தில் ஒரு உபகோட்டமும், கீழ்வேளூர் மற்றும் திருவாரூர் உபகோட்டத்திற்குட்பட்டு பிரிவு அலுவலகங்களான திருநெல்லிக்காவல் 1 மற்றும் 2, திருத்துறைப்பூண்டி உபகோட்டத்திற்குட்பட்ட பிரிவு அலுவலகங்களான தலைஞாயிறு, திருத்துறைப்பூண்டி பிரிவு எண் 1 மற்றும் 2 ஆகியவை இயங்கி வருகின்றன. எனவே, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கென வெண்ணாறு வடிநில மற்றும் காவேரி கோட்ட அலுவலகங்கள் அமைக்கத் தேவையில்லை.

40—

தூர்வாருதல்

வினா எண் 11427—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் அருகே பள்ளி ஓடை ஏரி பாசன வாய்க்காலை தூர்வாரி, செப்பனிட்டுத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் அருகே பள்ளி ஓடை ஏரி பாசன வாய்க்கால் 2022–2023 ஆம் நிதியாண்டில் பராமரிப்பு நிதியின்கீழ், நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில், தூர்வார நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

41—

தடுப்பணை

வினா எண் 11810—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஒன்றியம், மேலந்தல் ஊராட்சியில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

ரிஷிவந்தியம் தொகுதி, மேலந்தல் கிராமத்தின் அருகே தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப அடிப்படையில் சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

தடுப்பணை

வினா எண் 11817—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை யூனிட்–1 தண்ணீர் தேவைக்கு தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

*தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே மூங்கில்துறைப்பட்டு அருகில் திருவண்ணாமலை–சங்கராபுரம் நெடுஞ்சாலை மேம்பாலத்தின் கீழ் பகுதியில் பாலத்தின் தூண்களை பலப்படுத்தும்பொருட்டு அமைக்கப்பட்டுள்ள நீர் ஊடுருவா தடுப்புச் சுவர் (*Cutoff Wall*) காரணமாக, பாலத்தின் மேற்பகுதியில் கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை யூனிட்–1–க்கு வடக்கில் சுமார் 500 மீட்டர் நீளத்திற்கு ஆற்றில் தண்ணீர் தேக்கம் அமைந்துள்ளது. மேலும், ஆலையின் தண்ணீர் தேவை அளவிற்கு தண்ணீர் தேக்கம் உள்ளது. பாலத்தின் மேல்பகுதி ஆற்றுப்படுகை முழுவதும் மேற்பரப்பில் கடினப்பாறைகள் நிறைந்து காணப்படுவதால், அப்பகுதியில் தடுப்பணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

[*2023 ஏப்ரல் 21*

43—

தடுப்பணை

வினா எண் 12666—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வக்ராநல்லூர் ஊராட்சியில் பள்ளிவர்த்தி கிராமத்திற்கு புதிய தடுப்பணை கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வக்ராநல்லூர் ஊராட்சியில் பள்ளிவர்த்தி கிராமத்திற்கு புதிய தடுப்பணை கட்டுவதற்கு உரிய தள ஆய்வு மேற்கொண்டு, சாத்தியக்கூறுகள் இருப்பின், தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

44—

தடுப்பணை

வினா எண் 12951—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கந்தர்வகோட்டை ஒன்றியம், சங்கம் விடுதி ஊராட்சியில் கரையவிடுதி கிராமத்தில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கந்தர்வகோட்டை ஒன்றியம், சங்கம் விடுதி ஊராட்சியில் கரைய விடுதி கிராமத்தில் வள்ளிப்பட்டி வாரியின் குறுக்கே ஒரு புதிய தடுப்பணை தற்போதைய வழிகாட்டுதல்களின்படி அமைக்க சாத்தியமில்லை.

2023 ஏப்ரல் 21]

45—

தடுப்பணை

வினா எண் 15114—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பலூர் தொகுதி, தேனூர் ஊராட்சி, சமாதி காடு அருகே பெரிய தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், தேனூர் ஊராட்சி, சமாதி காடு அருகே பங்குனி ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

தடுப்பணை

வினா எண் 15138—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, கெட்டுஅள்ளி மௌையன் ஓடையில் தடுப்பணை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சியில் ஓடும் கெட்டுஅள்ளி மௌையன் ஓடையின் குறுக்கே புதிய தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியம் இல்லை.

[*2023 ஏப்ரல் 21*

47—

தடுப்பணை

வினா எண் 21206—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆரணியாற்றின் குறுக்கே மேல்மாளிகைப்பட்டு பகுதியில் தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆரணியாற்றின் குறுக்கே மேல்மாளிகைப்பட்டு பகுதியில் தடுப்பணை அமைக்க கோரப்பட்டுள்ள தளம், நிலநீர் நுகர்வு மண்டல வகைப்பாட்டின்படி (Ground Water Extraction Category) *"பாதுகாப்பு மண்டலத்தில்"* (Safe Zone) *அமைந்துள்ளது. இத்தளத்திற்கு மேற்புறமாக 0.3 கி.மீ. பாலமும், 2.30 கி.மீ. தொலைவில் தடுப்பணையும் அமைந்துள்ளது. கீழ்புறமாக 4.70 கி.மீ. தொலைவில் மற்றொரு தடுப்பணை அமைந்துள்ளது.*

நிலத்தடிநீர் நுகர்வு வகைப்பாட்டின் அடிப்படையில், அதிநுகர்வு (Over Exploited) *மற்றும் மிதநுகர்வு* (Critical) *பகுதிகளில் மட்டுமே வழிகாட்டுதல் நெறிமுறைகளின்படி தடுப்பணைகள் அமைக்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. எனவே, மேல்மாளிகைப்பட்டு பகுதியில் தடுப்பணை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

48—

கால்வாய் சீரமைத்தல்

வினா எண் 21450—முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டத்தில் பிரதான கால்வாயின் பழுதை சீரமைத்து கடைமடை வரை தண்ணீர் செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரம்பிக்குளம் பிரதான கால்வாயில் நீர்க் கசிவினால் ஏற்படும் நீரிழப்புகளை குறைக்கும்பொருட்டு, ஆழியாறு வடிநிலக் கோட்டம், பொள்ளாச்சி கட்டுப்பாட்டில் உள்ள பரம்பிக்குளம் பிரதான கால்வாயின் பழுதை சீரமைக்கும்பொருட்டு, 2022–2023 ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட பணிகளில் கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தில் பரம்பிக்குளம் பிரதான கால்வாய் சரகம் 20/600 கி.மீ. முதல் 20/900 கி.மீ. வரை மற்றும் 32/000 கி.மீ. முதல் 36/000 கி.மீ. வரை உள்ள கால்வாய்களை புனரமைக்கும்பொருட்டு, ரூபாய் 7.50 கோடி மதிப்பீட்டில் இரண்டு பணிகளுக்கும், மேலும் திருப்பூர் மாவட்டம், உடுமலை தாலுகாவில் பரம்பிக்குளம் பிரதான கால்வாய் சரகம் 1/200 கி.மீ. முதல் 2/000 கி.மீ. வரை 3/000 கி.மீ. முதல் 3/300 கி.மீ. வரை 4/500 கி.மீ. முதல் 4/800 கி.மீ. வரை உள்ள கால்வாய்களை புனரமைக்கும்பொருட்டு, ரூபாய் 17.60 கோடி மதிப்பீட்டில் மூன்று பணிகளுக்கும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் செயலாக்கத்தில் உள்ளன.

49—

அணையை சீரமைத்தல்

வினா எண் 23429—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நெருப்பூர் அடுத்துள்ள மத்தளப்பள்ளம் அணை பாசன வாய்க்கால்களை சீரமைத்து முழுவதுமாக பயன்பாட்டிற்குக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நெருப்பூர் அடுத்துள்ள மத்தளப்பள்ளம் அணை மற்றும் அதன் பாசன

[*2023 ஏப்ரல் 21*

வாய்க்கால்கள் ரூ.120.71 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய அரசின் பங்களிப்புத் திட்டமான Repair, Renovation & Restoration *திட்டத்தின்மூலம் தூர்வாரி சீரமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.*

50—

தொழிற்சாலை

வினா எண் 28267—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஏரியூர் பகுதியில் டாமின் கிரானைட் பாலிசிங் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், நீர்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு கனிம நிறுவனத்தில் புதிய குவாரிகள் இயக்கப்பட்டு, கிரானைட் கற்துண்டங்கள் அதிகளவில் உற்பத்தி செய்யும்பட்சத்தில், புதிய கிரானைட் பாலிசிங் தொழிற்சாலைகள் அமைப்பது குறித்து ஆராயப்படும். இந்நிலையில், கிரானைட் பாலிசிங் தொழிற்சாலைகள் நிறுவுதலுக்கான சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை.

51—

புதிய பேருந்து நிலையம்

வினா எண் 1029—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி, நீடாமங்கலத்தில் புதிய பேருந்து நிலையம் கட்ட இடம் ஒதுக்கீடு செய்து கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதியில் நீடாமங்கலம் பேரூராட்சி மட்டுமே உள்ளது. இப்பேரூராட்சியானது நாகப்பட்டினம்-மைசூர் தேசிய நெடுஞ்சாலை வழித்தடத்தில் அமைந்துள்ளது. இந்நேர்வில் நீடாமங்கலத்தை தலைமையிடமாகக் கொண்டு பேருந்துகள் ஏதும் இயக்கப்படுவதில்லை. நீடாமங்கலம் பேரூராட்சிக்கு சொந்தமாக வேறு இடங்கள் இல்லை. இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில், பரப்பனாமேடு, சித்தமல்லி மேல்பாதி, ஒளிமதி மற்றும் வையகளத்தூர் ஆகிய பகுதிகளில் இரயில்வே மேம்பாலம் அமைக்க நில எடுப்புப் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அப்பணி முடிவுற்ற பின்னர், அணுகுசாலை அருகில் பேருந்து நிலையம் அமைக்க நிலம் கண்டறிய உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

52—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 1389—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணியில் உள்ள குடிநீர் வாரிய அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதியில் தரமணி பணிமனை அலுவலகம் தற்பொழுது இந்திரா நகர், 2–வது அவென்யூவில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டி வளாகத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. தரமணி பீலியம்மன் கோயில் தெருவில் தரமணி

[2023 ஏப்ரல் 21

பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள பழைய நீரேற்று நிலைய வளாகத்தில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

53—

புறநகர் பேருந்து நிலையம்

வினா எண் 1453—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, ஈரோடு மாநகராட்சியை ஒட்டியுள்ள லக்காபுரம் ஊராட்சி சோலார் பகுதியில் ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் புதிய புறநகர் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாநகர பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, விரிவான போக்குவரத்து (*Comprehensive Mobility Plan*) திட்டத்தின்கீழ் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட லக்காபுரம் பஞ்சாயத்து சோலார் பகுதியில், ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான 20 ஏக்கர் நிலத்தில் புதிதாக புறநகர் பேருந்து நிலையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. இப்புறநகர் பேருந்து நிலைய திட்டத்தினை ரூ.73.50 கோடி உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

54—

எல்லை வரையறை

வினா எண் 2256—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள பெரிய வார்டுகளை பிரிக்கவும், எல்லைகளை வரையறை செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பு விவரங்களின் அடிப்படையில், 14-12-2018 அன்று தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை செய்யப்பட்ட மயிலாடுதுறை நகராட்சியின் மொத்தமுள்ள 36 வார்டுகளுக்கான எல்லை வரையறை குறித்து மறுபரிசீலனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

55—

பாதாள சாக்கடை

வினா எண் 2257—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருநாகேஸ்வரம் பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 15,082 ஆகும். பேரூராட்சியின் பரப்பளவு 5.00 சதுர கிலோ மீட்டர் மற்றும் 15 வார்டுகள் உள்ளன. தற்போதைய மக்கள்தொகை உத்தேசமாக 16,698 ஆகும். இப்பேரூராட்சியில் 36.31 கிலோ

[2023 ஏப்ரல் 21

மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 1.17 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பேரூராட்சியின் எல்லைக்குள் 4,490 எண்ணிக்கையிலான குடியிருப்புகள் அமைந்துள்ளன.

இப்பேரூராட்சியானது, கும்பகோணம் நகராட்சியிலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, திருநாகேஸ்வரம் பேரூராட்சியில் உருவாகும் கழிவுநீரை கும்பகோணம் நகராட்சியில் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுசென்று, கும்பகோணம் நகராட்சியுடன் ஒருங்கிணைந்து தொகுப்பு முறையில் செயல்படுத்திட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மேல் நடவடிக்கைகள் தொடரப்படும்.

56—

பாதாள சாக்கடை

வினா எண் 2259—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, தாராசுரம் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதிக்குட்பட்ட தாராசுரம் பேரூராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, 15,326 ஆகும். பேரூராட்சியின் பரப்பளவு 2.10 சதுர கிலோ மீட்டர் மற்றும் 15 வார்டுகள் உள்ளன. தற்போதைய மக்கள்தொகை உத்தேசமாக 17,651 ஆகும். இப்பேரூராட்சியில் 28.86 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 11.65 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பேரூராட்சியின் எல்லைக்குள் 4,045 குடியிருப்புகள் அமைந்துள்ளன.

2023 ஏப்ரல் 21]

இப்பேரூராட்சியானது, கும்பகோணம் நகராட்சியிலிருந்து சுமார் 1 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மேலும், தாராசுரம் பேரூராட்சியில் தினசரி குறைந்த அளவு கழிவுநீரே உருவாகிறது. இதற்கென தனியே பாதாள சாக்கடைத் திட்டமோ, கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமோ கட்டத் தேவையில்லை. எனவே, தாராசுரம் பேரூராட்சியில் உருவாகும் கழிவுநீரை கும்பகோணம் நகராட்சியில் ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள பாதாள சாக்கடைத் திட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டுசென்று, கும்பகோணம் நகராட்சியுடன் ஒருங்கிணைந்து தொகுப்பு முறையில் செயல்படுத்திட சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, மேல்நடவடிக்கைகள் தொடரப்படும்.

57—

பாதாள சாக்கடை

வினா எண் 2603—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, திருபுவனம் பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்திலுள்ள, மானாமதுரை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருபுவனம் பேரூராட்சியின் 36.26 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள் மற்றும் 24.00 கிலோ மீட்டர் நீளமுள்ள வடிகால்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், பேரூராட்சி எல்லைக்குள் 8,751 குடியிருப்புகள் அமைந்துள்ளன.

இப்பேரூராட்சியில், பாதாள சாக்கடைத் திட்டம் அல்லது கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, இப்பேரூராட்சியின் நிதிநிலைமைக்கேற்ப உரிய திட்டம் செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

[*2023 ஏப்ரல் 21*

58—

கூட்டுக் குடிநீர்

வினா எண் 2854—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, கூட்டுடன்காடு ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) *வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கூட்டுடன்காடு ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் 27 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் இந்த ஊராட்சியைச் சார்ந்த குடியிருப்புகளுக்கு வடிவமைக்கப்பட்ட குடிநீரின் அளவான 48,000 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது மற்றும் சோதனை ஓட்டத்தில் உள்ள 90 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 1.84 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் 0.31 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், ஜல்ஜீவன் மிஷன் 2020–2021 மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

59—

கூட்டுக் குடிநீர்

வினா எண் 2857—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், கட்டாலங்குளம் ஊராட்சிக்குட்பட்ட குக்கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், கட்டாலங்குளம் ஊராட்சிக்கு தற்போது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் 27 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், சாயர்புரம், பெருங்குளம் மற்றும் 115 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 1.20 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இக்குடியிருப்புகளுக்கு சோதனை ஓட்டத்தில் உள்ள 90 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் 36,000 லிட்டர் குடிநீர் வழங்க வழிவகை செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், இக்குடியிருப்புகளுக்கு உள்ளூர் நீராதாரம் மூலமும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது மற்றும் ஜல்ஜீவன் மிஷன்மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

60—

கூட்டுக் குடிநீர்

வினா எண் 2863—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், குலசேகரநல்லூர் ஊராட்சிக்கு கூட்டுக் குடிநீர் (TWAD) *வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், குலசேகரநல்லூர்

ஊராட்சிக்குட்பட்ட குலசேகரநல்லூர், குலசேகரநல்லூர்–H, *சங்கராஜபுரம், பச்சைபெருமாள்புரம் ஆகிய குடியிருப்புகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்படும் 239 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 47,850 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இவ்வூராட்சிக்குட்பட்ட ஓசனூத்து குடியிருப்புக்கு கடம்பூர், விளாத்திகுளம், புதூர் பேரூராட்சி மற்றும் 180 வழியோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் வடிவமைக்கப்பட்ட அளவான 14,000 லிட்டர் குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. மேலும், உள்ளூர் நீராதாரம் மூலமும் மேற்காணும் குடியிருப்புகளுக்கு 96,495 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. ஜல்ஜீவன் மிஷன்மூலம் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஊராட்சி நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

61—

கூட்டுக் குடிநீர்

வினா எண் 2865—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், முறம்பன் கிராமத்தில் கூட்டுக் குடிநீர் (TWAD) *கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியம், முறம்பன் ஊராட்சியில் தற்போது குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்பட்டுவரும் 239 கடலோர கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்மூலம் முறம்பன் குடியிருப்புக்கு வடிவமைக்கப்பட்ட அளவான 25,560 லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இக்குடியிருப்புக்கு

2023 ஏப்ரல் 21]

உள்ளூர் நீராதாரம் மூலமும் 9,585 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

62—

பேரூராட்சி

வினா எண் 16081—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் பேரூராட்சியை முதல்நிலை பேரூராட்சியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

தருமபுரி மண்டலம், கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் பேரூராட்சி, தற்போது முதல்நிலை தரத்திற்கு மேல்நிலையிலுள்ள தேர்வுநிலை பேரூராட்சியாக செயல்பட்டு வருவதால், அப்பேரூராட்சியை முதல்நிலை பேரூராட்சியாக மாற்றிடக் கோரும் கேள்வி தற்போது எழாது என்ற விவரம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

63—

கழிவுநீர் சுத்திகரித்தல்

வினா எண் 20720—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, பாதாள சாக்கடை கழிவுநீரை சுத்திகரித்து அடையாற்றில் கொண்டுவிடும் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பல்லாவரம் தொகுதி, பாதாள சாக்கடை கழிவுநீர் தற்சமயம் கீழ்க்கட்டளை பிரதான கழிவு நீரேற்று நிலையத்தில் சேகரம் செய்து, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியத்திற்குச் சொந்தமான பெருங்குடியில் உள்ள சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்படுகிறது. கழிவுநீரை சுத்திகரித்து அடையாற்றில் கொண்டுவிடும் திட்டம் தற்சமயம் இல்லை.

64—

கலைக் கல்லூரி

வினா எண் 136—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பாபநாசம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் கலைக் கல்லூரி புதிதாக துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாபநாசம் தொகுதி அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் தற்பொழுது 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 5 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 18 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

65—

கல்வியியல் கல்லூரி

வினா எண் 283—திரு. சு. ரவி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதியில் கல்வியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதி அமைந்துள்ள ராணிப்பேட்டை மாவட்டத்தில் தற்பொழுது 5 சுயநிதி கல்வியியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. மேலும், இம்மாவட்டத்திற்கு அருகில் உள்ள வேலூர் மாவட்டம், வேலூரில் 1 அரசு கல்வியியல் கல்லூரி அமைந்துள்ளது. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், அரக்கோணம் தொகுதியில் கல்வியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

66—

கலை மற்றும் அறிவியில் கல்லூரி

வினா எண் 382—திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மணப்பாறையில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மணப்பாறை தொகுதி அமைந்துள்ள திருச்சி மாவட்டத்தில் தற்பொழுது 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும்,

9 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 19 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருச்சி மாவட்டம், மணப்பாறை தொகுதிக்குட்பட்ட பகுதியில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

67—

புதிய பல்கலைக்கழகம்

வினா எண் 702—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, எழுமாத்தூர் அரசு கலைக் கல்லூரிக்கு அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிய பல்கலைக்கழகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பாரதியார் பல்கலைக்கழகம் 1982-ல் கோயம்புத்தூரில் நிறுவப்பட்டது. கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர் ஆகிய நான்கு மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரிகள் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ளன. இப்பல்கலைக்கழகம், கோயம்புத்தூர், ஈரோடு, நீலகிரி மற்றும் திருப்பூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் உள்ள மாணவர்களின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த மொடக்குறிச்சி தொகுதியில் உள்ள அனைத்து கல்லூரிகளும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற கல்லூரிகளாக இயங்கி வருகின்றன.

2. இந்நிலையில், மொடக்குறிச்சி தொகுதி, எழுமாத்தூர் அரசு கலைக் கல்லூரிக்கு அருகில் உள்ள அரசுக்கு சொந்தமான இடத்தில் புதிய பல்கலைக்கழகம் தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2023 ஏப்ரல் 21]

68—

கலைக் கல்லூரி

வினா எண் 1912—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

சேந்தமங்கலம் தொகுதி அமைந்துள்ள நாமக்கல் மாவட்டத்தில் தற்பொழுது 5 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 2 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலையில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

69—

கலைக் கல்லூரி

வினா எண் 1932—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் தற்பொழுது 5 அரசு கலை மற்றும் அறிவியல்

[2023 ஏப்ரல் 21

கல்லூரிகளும், 1 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 20 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/ மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், உளுந்தூர்பேட்டை தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

70—

கலைக் கல்லூரி

வினா எண் 3247—திரு. மு. பாபு: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செய்யூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செய்யூர் தொகுதி அமைந்துள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், நான்கு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் மற்றும் 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இவை தவிர, 44 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், செய்யூர் தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

71—

பொறியியல் கல்லூரி

வினா எண் 4068—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தளியில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி அமைந்துள்ள கிருஷ்ணகிரி மாவட்டத்தில், ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், 4 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 3 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 8 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 31 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், கிருஷ்ணகிரி மாவட்டம், தளி தொகுதியில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

72—

பொறியியல் கல்லூரி

வினா எண் 5312—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் அரசு பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்போரூர் தொகுதி அமைந்துள்ள செங்கல்பட்டு மாவட்டத்தில், அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரி ஒன்றும், 36 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 14 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 2 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 4 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 42 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட

மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

73—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 5323—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செங்கோடு தொகுதி, மல்லசமுத்திரம் ஒன்றிய பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மல்லசமுத்திரம் ஒன்றிய பகுதி அமைந்துள்ள நாமக்கல் மாவட்டத்தில், ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 22 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருச்செங்கோடு தொகுதியில் புதிதாக பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

74—

கலைக் கல்லூரி

வினா எண் 5324—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செங்கோடு தொகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு தொகுதி அமைந்துள்ள நாமக்கல் மாவட்டத்தில் தற்பொழுது ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இரண்டு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 21 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, 30 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 21 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதியில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

75—

மகளிர் கலைக் கல்லூரி

வினா எண் 6747—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு வட்டத்தில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி அமைந்துள்ள திருவள்ளூர் மாவட்டத்தில் தற்பொழுது மூன்று அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 33 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, 38 சுயநிதி பொறியியல்

[2023 ஏப்ரல் 21

கல்லூரிகளும், ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், இரண்டு அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் 19 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதிக்குட்பட்ட பள்ளிப்பட்டு வட்டத்தில் புதிதாக ஒரு மகளிர் கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

76—

கலைக் கல்லூரி

வினா எண் 6767—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் புதிதாக கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி அமைந்துள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் தற்பொழுது ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், நான்கு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 16 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, ஒரு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியும், 34 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் ஆறு சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

77—

கலைக் கல்லூரி

வினா எண் 7484—திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் ஒன்றியம், காளையார்கோவிலில் புதிய கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் அமைந்துள்ள சிவகங்கை மாவட்டத்தில் தற்பொழுது நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், நான்கு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 15 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், ஏழு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், இரண்டு அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் ஒன்பது சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தொகுதி, காளையார்கோவில் பகுதியில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

78—

பொறியியல் கல்லூரி

வினா எண் 7581—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி மாவட்டத்தில் பொறியியல் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்தில், 5 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 11 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 4 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 3 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 23 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தென்காசி மாவட்டத்தில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

79—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 7582—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) தென்காசி மாவட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்தில், 11 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், தென்காசி மாவட்டத்தில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2023 ஏப்ரல் 21]

80—

கலைக் கல்லூரி

வினா எண் 12055—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நாட்டார்மங்கலத்தில் கலைக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் தற்பொழுது நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 28 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, எட்டு சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், இரண்டு பல்கலைக்கழக பொறியியல் கல்லூரிகளும், இரண்டு அரசு தொழில்நுட்பக் கல்லூரிகளும் மற்றும் ஐந்து சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், நாட்டார்மங்கலத்தில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

81—

பொறியியல் கல்லூரி

வினா எண் 12244—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் புதிதாக பொறியியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கீரனூர், கந்தர்வகோட்டை அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில், 10 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 21 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும், 6 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், ஓர் அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், 37 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அம்மாவட்ட மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் புதிதாக ஒரு பொறியியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

82—

தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 26663—திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி அமைந்திருக்கும் சேலம் மாவட்டத்தில், ஓர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி, 1 அரசு உதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் 22 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சங்கரி தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

2023 ஏப்ரல் 21]

83—

கலைக் கல்லூரி

வினா எண் 26664—திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் கலைக் கல்லூரி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரி தொகுதி அமைந்துள்ள சேலம் மாவட்டத்தில், தற்பொழுது ஐந்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இரண்டு அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 37 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர, ஓர் அரசு பொறியியல் கல்லூரியும், 18 சுயநிதி பொறியியல் கல்லூரிகளும், ஓர் அரசு தொழில்நுட்பக் கல்லூரியும், ஓர் அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 20 சுயநிதி தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதி மாணவ/மாணவிகளின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், சேலம் மாவட்டம், சங்கரியில் புதிதாக ஒரு கலைக் கல்லூரி கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

84—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 38285—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, புழல் 22–வது வார்டு, புழல் பாலாஜி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி அமைந்துள்ள சென்னை மாவட்டத்தில், 4 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், 5 அரசு சிறப்பு பயிலகங்கள், 2 அரசு நிதியுதவிபெறும் பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல்வி இயக்கக இணைவுபெற்ற 2 பயிலகங்கள் மற்றும் 7 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், மாதவரம் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, புழல் 22–வது வார்டு, புழல் பாலாஜி நகரில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 51024—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செங்கோடு தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருச்செங்கோடு தொகுதி அமைந்துள்ள நாமக்கல் மாவட்டத்தில், 1 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரியும் 1 அரசு உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரியும் மற்றும் 21 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால்,

2023 ஏப்ரல் 21]

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

86—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 58813—திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

வந்தவாசி தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில், 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 16 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 59030—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில், 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள்

[*2023 ஏப்ரல் 21*

மற்றும் 7 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டையில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

வினா எண் 66416—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, பேரளம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில், 2 அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் 7 சுயநிதி பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் இத்தொகுதி மாணாக்கர்களின் உயர் கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருவதால், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, பேரளம் பகுதியில் பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

89—

கோளரங்கம்

வினா எண் 66422—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, குடவாசல் பகுதியில் கோளரங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்திற்கு அருகில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழக அரசால் அண்ணா அறிவியல் மையம் (கோளரங்கம்) கடந்த 1999 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகிறது. திருவாரூர் மாவட்டம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் உள்ள மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மேற்கண்ட அறிவியல் மையத்திற்கு சென்று பயனடைந்து வருவதால், நன்னிலம் தொகுதி, குடவாசல் பகுதியில் கோளரங்கம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

90—

இருவழிச் சாலை

வினா எண் 573—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, சோழகம்பட்டி–சுரக்குடிப்பட்டி சாலையை இருவழிச் சாலையாக மேம்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதி, சோழகம்பட்டி–சுரக்குடிப்பட்டி மாவட்ட இதர சாலையான கி.மீ. 0/0–4/0–ல் கி.மீ. 2/0–4/0 வரையிலான சாலைப் பகுதி 2019–2020 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் (CRIDP), *ரூ.177.12 இலட்சம் மதிப்பில் அகலப்படுத்தி மேம்பாடு செய்யப்பட்டு நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள சாலைப் பகுதியானது இனிவரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்படும்.*

[2023 ஏப்ரல் 21

91—

இருவழித்தடம்

வினா எண் 12637—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, நாமக்கல் முதல் பரமத்தி–வேலூர் செல்லும் சாலையை தொட்டிப்பட்டி முதல் தண்ணீர்காட்டி தோட்டம் வரை இடைவழித் தடத்திலிருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்:

நாமக்கல் தொகுதி, நாமக்கல் முதல் பரமத்தி– வேலூர் செல்லும் சாலையானது, மாவட்ட இதர சாலையான தொட்டிப்பட்டி–கணவாய்ப்பட்டி சாலை கி.மீ. 0/0–2/900 ஆகும்.

இச்சாலையை இடைவழித் தடத்திலிருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி மேம்படுத்திட வருங்காலங்களில் அரசின் நிதிநிலைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் எடுத்து செயலாக்கம் செய்ய தக்கவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

92—

உழவர் சந்தை

வினா எண் 67—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் பெருநகராட்சியில் ஏற்கெனவே இயங்கி வந்த உழவர் சந்தையை மீண்டும் செயல்படுத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உழவர் சந்தை தாம்பரத்தில் துவக்குவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. தகுந்த இடம் தேர்வு செய்யப்பட்டு, புதிய உழவர் சந்தை துவக்கப்படும்.

93—

உழவர் சந்தைகள்

வினா எண் 200—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாட்டில் புதிதாக கூடுதல் உழவர் சந்தைகளை திறக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் புதிதாக கூடுதல் உழவர் சந்தைகள் திறப்பது குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

94—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 288—திரு. சு. ரவி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் தொகுதியில் புதிதாக வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

95—

சிமெண்ட் நெற்களம்

வினா எண் 546—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், பரவாக்கோட்டை மேலத் தெருவில் சிமெண்ட் நெற்களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஒன்றியம், பரவாக்கோட்டை மேலத் தெருவில் சிமெண்ட் நெற்களம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

96—

ஏல மையம்

வினா எண் 591—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதியில் வெற்றிலை ஏல மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவையாறு தொகுதியில் வெற்றிலை ஏல மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

97—

உலர்களம்

வினா எண் 1300—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சின்னசேலம் ஒன்றியம், நல்லாத்தூர் ஊராட்சியில் தானிய உலர்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

சின்னசேலம் ஒன்றியம், நல்லாத்தூர் ஊராட்சியில் தானிய உலர்களம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

98—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 2355—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் பகுதியில் இயற்கை வேளாண்மை விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் பெயரில் புதிதாக வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

99—

விவசாயிகளுக்கு மானியம்

வினா எண் 3006—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை நாற்றங்கால் நர்சரி விவசாயிகளுக்கு பசுமைக் குடில் அமைக்க மானியம் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதியில் வேகாக்கொல்லை நாற்றங்கால் நர்சரி பகுதிகளில் பசுமைக் குடில் அமைக்க விரும்பும் விவசாயிகளுக்கு வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகங்களிலும் மற்றும் உழவன் செயலி மூலமும் பதிவு செய்வதன் அடிப்படையில், முன்னுரிமை அளித்து தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 4,000 சதுர மீட்டர் பரப்பளவில் பசுமைக் குடில் அமைக்க 50 சதவீதம் அரசு மானியம் வழங்கப்படும்.

100—

பண்ணைக் குட்டை

வினா எண் 3007—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, நாற்றங்கால் நர்சரி விவசாயிகளுக்கு பண்ணைக் குட்டை அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி உள்ளிட்ட தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விவசாயிகளும் பயன்பெறும் வகையில் கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 500 பண்ணைக் குட்டைகள் ரூ.5 கோடியில் அமைத்திட அரசாணை எண் 59, வேளாண்மை உழவர் நலத் (வஇுபதி) துறை, நாள் 9-3-2022 மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நெய்வேலி தொகுதியில் 4 பண்ணைக் குட்டைகள் விசூர் கிராமத்தில் இந்த ஆண்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

பட்டியல்–13

1—

நெல் ஆராய்ச்சி மையம்

வினா எண் 3045—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதியில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதியில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

2—

நெற்களம்

வினா எண் 3363—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், பாபுராஜபுரம் ஊராட்சியில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் ஒன்றியம், பாபுராஜபுரம் ஊராட்சியில் நெற்களம் அமைப்பதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

3—

தரமுயர்த்துதல்

வினா எண் 4229—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு-சிதம்பராபுரம் தெற்கில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள கரடி ஓடை அணையை தரமுயர்த்தி, பெரிய நீர்ப்பிடிப்பு அணையாக மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஒன்றியம், சீவலப்பேரி கிராமம், சிதம்பராபுரம்

2023 ஏப்ரல் 21]

(குக்கிராமம்) தெற்கில் மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள கரடி ஓடை எண் 725-ல் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-2019-ன்கீழ், கசிவுநீர்க் குட்டை வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் அப்பகுதி மழையளவு நீர்ப்பிடிப்புப் பகுதி பரப்பு மற்றும் நீர்வரத்து ஆகியவற்றைக் கொண்டு கொள்ளளவு வடிவமைக்கப்பட்டு, ரூ.23,86,096/- தொகையில் 23-3-2020 அன்று கட்டி முடிக்கப்பட்டு, தற்போது பயன்பாட்டில் உள்ளது. கசிவுநீர்க் குட்டை அணையினை நீர்ப்பிடிப்பு அணையாக மாற்றி தரமுயர்த்திட, அதில் கூடுதல் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வது, கசிவுநீர்க் குட்டையின் பாதுகாப்புக்கு உகந்தது அல்ல என்பதால் அணையினை தரம் உயர்த்திட வாய்ப்பில்லை.

4—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 4394—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை— உழவர் நலத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரியில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

5—

மண்புழு உரக் குடில்

வினா எண் 7106—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வல்லம் ஊராட்சி, மானடிக்குப்பத்தில் மண்புழு உரக் குடில் அமைக்க அரசு முன்வருமா?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

தேசிய தோட்டக்கலை இயக்ககத் திட்டத்தின்கீழ், 25 மெட்ரிக் டன் (600 சதுர அடி) கொள்ளளவு கொண்ட நிரந்தர மண்புழு உரக்கூடம் அமைக்க 50 சதவீத மானியத்தில் ரூ.50,000/– மானியமாக வழங்கப்படுகிறது. நெய்வேலி வட்டத்தில் மண்புழு உரக்கூடம் அமைக்க முன்வரும் விவசாயிகள் இத்திட்டத்தின்மூலம் பயன்பெறலாம். மேலும், இத்திட்டத்தின்கீழ், இவ்வினத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள் பண்ருட்டி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநரை அணுகி, மானியம் பெற்றுக்கொள்ளலாம்.

6—

விதை உற்பத்தி

வினா எண் 7375—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதியில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விதை உற்பத்தி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் உள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விதை உற்பத்தி செய்து, விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய பணிகள் நடைபெற்று வருகின்றன.

2023 ஏப்ரல் 21]

7—

வேளாண் பொருட்கள்

வினா எண் 7757—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளாண்மையை மேம்படுத்த அனைத்து விவசாயிகளுக்கும் விலையில்லாத வேளாண் பொருட்கள் மற்றும் வேளாண் உபகரண பொருட்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து விவசாயிகளுக்கும் விலையில்லா வேளாண் பொருட்கள் மற்றும் வேளாண் உபகரண பொருட்கள் வழங்கும் திட்டம் ஏதும் வேளாண்மைப் பொறியியல் துறையின்மூலம் செயல்படுத்தப்படவில்லை.

8—

மரம் ஏற பயிற்சி

வினா எண் 7758—திரு. செ. ராஜேஷ் குமார்: *மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு தென்னை ஏறும் இயந்திரம் மற்றும் பால் வெட்டுதல் போன்றவற்றிற்கு பயிற்சி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில், விவசாயிகளுக்கு தென்னை மரம் ஏறும் இயந்திர பயிற்சி வழங்க வேளாண் மற்றும்

உழவர் நலத் துறையின் வாயிலாக வேளாண்மை தொழில்நுட்ப வேளாண்மை முகமை (ATMA) திட்டத்தின்மூலம், 2021–2022 ஆம் ஆண்டில் 9 வட்டாரங்களில் 40 பயிற்சிகளை நடத்துவதற்கு ரூ.1.60 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட வேளாண்மை–உழவர் நலத் துறைமூலம் 40 இயந்திரங்களைப் பயன்படுத்தி தென்னை மரம் ஏறும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

9—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 12798—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, கால்நடை மருத்துவக் கல்லூரி அருகில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

நாமக்கல் தொகுதி, கால்நடை மருத்துவக் கல்லூரி அருகில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

10—

விதைப் பண்ணை

வினா எண் 12806—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, தோகைமலை முதலைப்பட்டியில் உள்ள அரசு விதைப் பண்ணையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

குளித்தலை தொகுதி, தோகைமலை முதலைப்பட்டியில் வேளாண்மைத் துறையின் கட்டுப்பாட்டில் அரசு விதைப் பண்ணை ஏதும் செயல்படவில்லை.

11—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 15123—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மையம் அருகிலுள்ள அரசு நிலத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மையம் அருகிலுள்ள அரசு நிலத்தில் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

12—

சர்க்கரை ஆலை

வினா எண் 15350—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதியில் கூட்டுறவுத் துறையின் சார்பில் சர்க்கரை ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் தொகுதியில் புதிய சர்க்கரை ஆலை அமைக்க முன்மொழிவுகள் ஏதும் அரசிடம் இல்லை.

13—

உலர்களம்

வினா எண் 15400—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு ஊராட்சி, ஆத்திரிக்குப்பம் வடக்குத் தெருவில் உலர்களம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதி, மேலிருப்பு ஊராட்சி, ஆத்திரிக்குப்பம் வடக்குத் தெருவில் உலர்களம் அமைப்பது தொடர்பான கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 17661—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூரில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூரில் நெல் ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

15—

ஆராய்ச்சி மையம்

வினா எண் 17663—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் வட்டம், படவேடு பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் வட்டம், படவேடு பகுதியில் மஞ்சள் ஆராய்ச்சி மையம் அமைக்க கருத்துரு எதுவும் தற்போது பரிசீலனையில் இல்லை.

16—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 17673—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூரில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் 2020–2021-ன்கீழ், ரூ.2.00 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு, போளூரில் ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையம் கட்டப்பட்டு வருகிறது.

17—

கதிரடிக்கும் நெற்களம்

வினா எண் 37972—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

காவேரிப்பட்டினம் ஒன்றியம், பையூர் ஊராட்சி, வளையல்காரப்பட்டி கிராமத்தில் கதிரடிக்கும் நெற்களம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர்:

காவேரிப்பட்டினம் ஒன்றியம், பையூர் ஊராட்சி, வளையல்காரப்பட்டி கிராமத்தில் கதிரடிக்கும் நெற்களம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

18—

விவசாய இயந்திரங்கள் பயன்பாடு

வினா எண் 52621—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு விவசாய இயந்திரங்கள் பயன்பாடு குறித்த பயிற்சி மையம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள வேளாண்மைக் கருவிகள் பணிமனையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியுடன், 2022–2023 ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் சூரிய சக்தி பம்புசெட்டுகள் பழுது பார்த்தல் மற்றும் பராமரித்தல் குறித்தான பயிற்சிகள் பிரிவு பிரிவாக நடைபெறுகிறது.

முதல் பிரிவு 8–6–2022 அன்று முடிவுற்றது. இதில், சுமார் 17 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றுள்ளனர். இரண்டாவது பிரிவு பயிற்சியில் 16 வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றுள்ளனர். இப்பயிற்சி 29–10–2022 அன்று முடிவுற்றது.

மேலும், இப்பயிற்சியில் கலந்துகொள்பவர்களுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், சூரிய சக்தி பம்புசெட்டுகள் தயாரிக்கும் நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களின் முகவர்களின் மூலம் வேலைவாய்ப்பினை உருவாக்கிடவும், சுய தொழில் தொடங்கவும் தகுந்த வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

19—

வேளாண்மைக் கல்லூரி

வினா எண் 52622—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு வேளாண்மை–உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதியில் அரசினர் வேளாண்மைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வேளாண்மை—உழவர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதியில் அரசினர் வேளாண்மைக் கல்லூரி அமைக்க கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

20—

அலுவலகக் கட்டடம்

வினா எண் 39—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, விஷ்ணம்பேட்டை வருவாய் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பூதலூர் வட்டம், விஷ்ணம்பேட்டை வருவாய் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலர் கட்டடம் கட்டும் கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை.

21—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 926—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் தெற்கு மற்றும் வடக்கு தொகுதிகளில் வீடு இல்லாதவர்களுக்கு நிலம் ஒதுக்கி இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு மற்றும் வடக்கு வட்டங்களில் ஆட்சேபனையற்ற புறம்போக்கு நிலங்களில் வீடு கட்டி வசித்துவரும் நபர்களுக்கு தகுதியின் அடிப்படையில், விதிமுறைகளுக்குட்பட்டு பட்டா வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

22—

புதிய வட்டம்

வினா எண் 928—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் தெற்கு தொகுதி, பெருமாநல்லூரில் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டத்தில் பெருமாநல்லூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தியாகாததால், பெருமாநல்லூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

வட்டாட்சியர் அலுவலகம்

வினா எண் 1420—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 21*

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டாட்சியர் அலுவலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் தியாகதுருகத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தியாகாததால், தியாகதுருகத்தை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

24—

புதிய கட்டடம்

வினா எண் 2555—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதிக்குட்பட்ட வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பாக கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. எனினும், மாவட்ட ஆட்சியரிடம் மதிப்பீட்டறிக்கை பெறப்பட்டு,

2023 ஏப்ரல் 21]

உரிய முன்மொழிவுகள் கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் வழியாக அரசுக்கு பெறப்படும்போது, புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

25—

கட்டடம்

வினா எண் 2588—திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிணத்துக்கடவு தொகுதி, கிணத்துக்கடவில் கட்டப்பட்டுள்ள தாலுகா அலுவலகக் கட்டடத்தை திறக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிணத்துக்கடவு தொகுதி, கிணத்துக்கடவு வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தினை தேர்வு செய்து, பொதுப் பணித் துறையினரால் கட்டடம் கட்டி முடிக்கக்கூடிய நிலையில், கட்டுமானப் பணிகளை எதிர்த்து திரு. சிவகுமார் மற்றும் சத்தியபிரதாஸ் ஆகியோரால் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு எண் 5566/2016 in W.P.No.*6229/2016* and *25067/2019–ல் வழக்கு தொடரப்பட்டு, தடையாணை பெறப்பட்டுள்ளது. அதனால் எஞ்சிய கட்டுமானப் பணிகள் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற தடையாணையை நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நீதிமன்ற தடையாணை நீக்கம் செய்யப்பட்ட பின் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும்.*

26—

வருவாய் வட்டம்

வினா எண் 2743—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை மாவட்டத்தில் புதிதாக செம்பனார் கோயில், கொள்ளிடம், மணல்மேடு ஆகிய மூன்று புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை மாவட்டத்தில் செம்பனார் கோயில், கொள்ளிடம், மணல்மேடு ஆகிய மூன்று புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்குவது தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தியாகாததால், மேற்படி புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்கிட சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

வருவாய் வட்டம்

வினா எண் 2745—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் புதிதாக தலைஞாயிறு, திருமருகல் ஆகிய இரண்டு வருவாய் வட்டங்கள் உருவாக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாகப்பட்டினம் வருவாய் வட்டத்தை இரண்டாகப் பிரித்து தலைஞாயிறு மற்றும் திருமருகல் புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்குவது

2023 ஏப்ரல் 21]

தொடர்பாக அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில், கிராம எண்ணிகையைத் தவிர மற்ற அளவுகோல்கள் பூர்த்தியாகாததால், தலைஞாயிறு மற்றும் திருமருகல் புதிய வருவாய் வட்டங்கள் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

28—

வருவாய் வட்டம்

வினா எண் 4520—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், இராயக்கோட்டையை மையமாகக் கொண்டு புதிய வட்டம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9-6-2003-ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்கள் பூர்த்தியாகாததால், இராயக்கோட்டையை தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

29—

கட்டடம்

வினா எண் 24053—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஊர்குடி ஊராட்சி பழுதடைந்த கிராம நிர்வாக அலுவலகக் கட்டடம் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஊர்குடி ஊராட்சி கிராம நிருவாக அலுவலக கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரி ஒன்றியம், ஊர்குடி ஊராட்சி கிராம நிருவாக அலுவலக கட்டடம் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

வருவாய் கோட்டம்

வினா எண் 24969—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, போளூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், போளூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279,

2023 ஏப்ரல் 21]

வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில் குறைந்தபட்ச காரணிகளை நிறைவு செய்யாததால் போளூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் கோட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

31—

வருவாய் வட்டம்

வினா எண் 24971—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் தொகுதி, சேத்துப்பட்டு வட்டத்திலிருந்து பெரிய கொழப்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய வட்டம் உருவாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டத்திலுள்ள பெரிய கொழப்பலூர் உள்வட்டம் புதிய வருவாய் வட்டமாக உருவாக்குவது தொடர்பாக, அரசாணை (நிலை) எண் 279, வருவாய்த் துறை, நாள் 9–6–2003–ன்படி, நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களில் குறைந்தபட்ச காரணிகளை நிறைவு செய்யாததால், பெரிய கொழப்பலூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய வருவாய் வட்டம் உருவாக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

32—

புதிய கட்டடம்

வினா எண் 40731—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சியில் பழுதடைந்த கிராம நிருவாக அலுவலக கட்டடம் புதுப்பித்தல் தொடர்பான கருத்துரு ஏதும் அரசளவில் நிலுவையில் இல்லை. மேற்படி கட்டடம் புதுப்பித்தல் தொடர்பாக உரிய மதிப்பீட்டறிக்கை பொதுப் பணித் துறையிலிருந்து பெறப்பட்டு, கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையரிடமிருந்து கருத்துரு பெறப்படும்போது, திருத்துறைப்பூண்டி தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சியில் பழுதடைந்த கிராம நிருவாக அலுவலக கட்டடம் புதுப்பித்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

அருங்காட்சியகம்

வினா எண் 17554—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தூத்துக்குடி மாவட்டம், சிவகளை மற்றும் கொற்கையில் சைட் மியூசியம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின்போது கிடைத்த அரிய பொருட்களை அழகுற காட்சிப்படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் "பொருநை அருங்காட்சியகம்" அமைப்பது தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு பொதுப் பணித் துறையால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

2023 ஏப்ரல் 21]

34—

அகழாய்வு அறிக்கை

வினா எண் 17555—திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கையில் மாநில அரசு மூலமாக அகழாய்வு செய்த (2020) அறிக்கையை வெளியிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கையில் 2019–2020 மற்றும் தொடர்ச்சியாக 2021–2022 வரை மேற்கொண்ட அகழாய்வில் கிடைக்கப்பெற்ற தரவுகளை இணைத்து பொருநை நாகரிகம் என்ற தலைப்பில் இடைக்கால அறிக்கை நூல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 9–9–2021 அன்று வெளியிடப்பட்டது.

35—

கட்டடம்

வினா எண் 8653—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், திருப்பாலைவனம் ஊராட்சி, திருப்பாலைவனம் கிராமத்தில் ஆலையம்மன் நகர் பகுதிக்கு மகளிர் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பாலைவனம் ஊராட்சியில் மொத்தம் 22 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. திருப்பாலைவனம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு சுய உதவிக் குழுக் கட்டடம் இயங்கி வருகிறது. ஆலையம்மன் நகர் பகுதியில் 3 சுய உதவிக் குழுக்களும், திருப்பாலைவனம் பகுதியில் 12 சுய உதவிக் குழுக்களும், காஞ்சிவாயலில் 4 சுய உதவிக் குழுக்களும், செஞ்சியம்மன் நகரில் 2 சுய உதவிக் குழுக்களும், காஞ்சிவாயல் இருளர் காலனியில் 1 சுய உதவிக் குழுவும் உள்ளது. அனைத்து சுய உதவிக் குழுக்களும் திருப்பாலைவனம் கிராமத்தில் இயங்கிவரும் சுய உதவிக் குழுக் கட்டடத்தையே பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, ஆலையம்மன் நகரில் தனியாக சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டிய சூழல் எழவில்லை.

36—

கட்டடம்

வினா எண் 10626—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஞாயிறு ஊராட்சி, ஞாயிறு காலனி, பசும்பவம்பாளையம் மற்றும் கன்னியம்பாளையம் பகுதிகளில் மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், ஞாயிறு ஊராட்சியில் மொத்தம் 46 சுய உதவிக் குழுக்கள் இயங்கி வருகின்றன. பசும்பவம்பாளையம் பகுதியில் 3 சுய உதவிக் குழுக்களும், கன்னியம்பாளையம் பகுதியில் 6 சுய உதவிக் குழுக்களும், பிற பகுதிகளில் மற்ற சுய உதவி குழுக்களும் இயங்கி வருகின்றன. அனைத்து சுய உதவிக் குழுக்களும் ஞாயிறு காலனி மற்றும் அட்டப்பாளையம் பகுதிகளில் உள்ள கிராம சேவை மையக் கட்டடத்தில் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. எனவே, தனியாக பசும்பவம்பாளையம் மற்றும் கன்னியம்பாளையம் பகுதிகளில் சுய உதவிக் குழுக் கட்டடம் கட்ட வேண்டிய சூழல் எழவில்லை.

37—

கட்டடம்

வினா எண் 10944—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சி 6 மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வடபாதிமங்கலம் ஊராட்சியில் 8 குக்கிராமங்கள் உள்ளன. இக்குக்கிராமங்களில் 35 மகளிர் சுய உதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வூராட்சியில்

[2023 ஏப்ரல் 21

வடபாதிமங்கலம் பகுதியில் ஒரு கிராம சேவை மையக் கட்டடமும், கிளியனூர்–உச்சிவாடியில் கிராமங்களுக்கிடையே ஒரு மகளிர் சுய உதவிக் குழு கட்டடமும் உள்ளது. இந்த மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் பழுதான நிலையில் உள்ளதால், மன்னார்குடி ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.1.3 இலட்சம் மதிப்பீட்டில் பராமரிப்புப் பணிகள் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வூராட்சியில் உள்ள 8 குக்கிராமங்களிடையே சுமார் 1 முதல் 1.5 கி.மீ. வரை உள்ள தொலைவில் கிராம சேவை கட்டடம் அமைந்துள்ளதால், தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்கள் கிராம சேவை மையக் கட்டடத்தை பயன்படுத்தி, சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடப் பராமரிப்புப் பணி முழுவதும் முடிவு பெற்றவுடன், இவ்வூராட்சியில் உள்ள 35 மகளிர் சுய உதவிக் குழுக்களும் மேற்காணும் இரண்டு கட்டடங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, 6 புதிய மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டுவதற்கான சூழல் எழவில்லை.

38—

கட்டடம்

வினா எண் 13789—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலை தொகுதி, மேலபச்சகுடி ஊராட்சி, மேலபச்சகுடியில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேலபச்சகுடி ஊராட்சி, மேலபச்சகுடி கிராமத்தில் 2004–2005 ஆம் ஆண்டு Sampoorna Grameen Rozgar Yojana (SGRY) திட்டத்தின்கீழ், ரூ.1,00,000/– மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்டப்பட்டு தற்போது செயல்பட்டு

2023 ஏப்ரல் 21]

வருகிறது. இதனால் மேலபச்சகுடி கிராமத்தில் மகளிர் சுய உதவிக் குழு கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

39—

குடியிருப்புகள்

வினா எண் 696—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பணிபுரியும் அரசு அலுவலர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு ஊழியர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் தற்போது ஏதும் பரிசீலனையில் இல்லை,

40—

குடியிருப்புகள்

வினா எண் 1719—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி கிராம ஊராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி கிராம ஊராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

[2023 ஏப்ரல் 21

41—

குடியிருப்புகள்

வினா எண் 5357—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, முள்ளூர் பகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக குடியிருப்புகள் கட்டும் திட்டம் ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

42—

நியாய விலைக் கடை

வினா எண் 3061—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் அடையாறு மகளிர் பண்டகசாலையின்கீழ் இயங்கிவரும் நியாய விலைக் கடைகள் அனைத்தையும் சோழிங்கநல்லூர் நகர கூட்டுறவுக் கடன் சங்கத்தின்மூலம் மீண்டும் நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார்மலை வட்டாரத்தில் இயங்கிவரும் சோழிங்கநல்லூர் நகர கூட்டுறவுக்

2023 ஏப்ரல் 21]

கடன் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு கீழ்க்கண்டவாறு கடன்கள் வழங்கி வருகின்றது:

1. நகைக் கடன்கள்

2. மகளிர் சுய உதவிக் குழு கடன்கள்

3. டாப்செட்கோ கடன்கள்

4. டாம்கோ கடன்கள்

5. வீடு அடமானக் கடன்கள்

6. சிறுதொழில் கடன்கள்

மேலும், உறுப்பினர்களிடமிருந்து வைப்புத் தொகைகள் பெற்று, அதன்பேரில் கடன் வழங்குதல் மற்றும் அரசு அறிவிக்கும் திட்டங்களைச் செயல்படும் விதமாக கடன்களை வழங்கி வருகின்றது.

சோழிங்கநல்லூர் நகர கூட்டுறவுக் கடன் சங்கம் மேற்கண்டவாறு அதன் அங்கத்தினர்களுக்கு பல்வேறு கடன்கள் வழங்கிவரும் நிலையில், அடையாறு மகளிர் பண்டகசாலையின்கீழ் இயங்கிவரும் நியாய விலைக் கடைகளை எடுத்து நடத்தினால் சங்கம் வளர்ச்சி அடைய முடியாத நிலை ஏற்படும் என்பதாலும், சங்கத்தின் உறுப்பினர்களின் நலனைக் கருத்தில்கொண்டும், சங்கத்தின் வளர்ச்சியை கருத்தில்கொண்டும் இனிவருங்காலங்களில் அடையாறு மகளிர் பண்டகசாலையின்கீழ் இயங்கிவரும் நியாய விலைக் கடைகளை மீண்டும் சோழிங்கநல்லூர் நகர கூட்டுறவுக் கடன் சங்கம் எடுத்து நடத்த இயலாத நிலை உள்ளது.

43—

புதிய கட்டடம்

வினா எண் 11447—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சிக்குட்பட்ட சித்திரப்பட்டி கிராமத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், மஞ்சாரஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் சித்திரப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை 281 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

சித்திரப்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதாலும், அக்கட்டடம் நல்ல நிலையில் உள்ளதாலும், புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

44—

உரக் கிடங்கு

வினா எண் 11865—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருக்கோவிலூர் ஒன்றியம், கீழத்தாழனூர் ஊராட்சியில் உள்ள வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் உரக் கிடங்கு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் ஒன்றியத்தில் செயல்படும் ஐ.ஐ.574 கீழத்தாழனூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 19 கிராமங்களை விவகார எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில், 50 மெ.டன் கொள்ளளவு கொண்ட உரக் கிடங்கு பயன்பாட்டில் உள்ளது. எனவே, மேலும் ஓர் உரக் கிடங்கு அமைக்க வேண்டிய நிலை எழவில்லை.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21]

45—

மத்திய கூட்டுறவு வங்கி

வினா எண் 12644—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் மாவட்டத்தில் செயல்படும் கூட்டுறவு வங்கிகள் சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கீழே செயல்பட்டு வருகிறது. அதனைப் பிரித்து, நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியாக செயல்பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி, நாமக்கல் மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டம் முழுவதையும் செயற்பாட்டுப் பகுதியாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. ஒருங்கிணைந்த சேலம் மாவட்டத்திலிருந்து நாமக்கல் மாவட்டம் 1-1-1997 அன்று தனியாக பிரிக்கப்பட்டுள்ளது.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கி சேலம் மாவட்டத்தில் 45 கிளைகளோடும், நாமக்கல் மாவட்டத்தில் 29 கிளைகளோடும், மொத்தம் 74 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி 2018–2019–ல் ரூ.19.46 கோடியும், 2019–2020–ல் ரூ.20.09 கோடியும், 2020–2021–ல் ரூ.22.77 கோடியும் மொத்த இலாபத்துடன் செயல்பட்டு வருகிறது.

சேலம் மத்திய கூட்டுறவு வங்கியை பிரித்து, நாமக்கல் மாவட்டத்திற்கு என தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தால், இரண்டு வங்கிகளும் வாழ்திறனற்ற வங்கிகளாக செயல்படும் நிலை உருவாகும். மேலும், புதிதாக உருவாக்க கோரப்பட்டுள்ள மத்திய கூட்டுறவு வங்கி போதுமான நிதியாதாரங்கள் இல்லாமல் செம்மையாக செயல்பட முடியாத நிலையும் உருவாகும்.

கூட்டுறவுக் கடன் நிறுவனங்களைச் சீரமைக்க அமைக்கப்பட்ட வைத்தியநாதன் குழு கூட்டுறவு வங்கிகளை இணைக்குமாறு மட்டுமே பரிந்துரை செய்துள்ளது.

தமிழ்நாட்டில் செயல்பட்டுவரும் 23 மத்திய கூட்டுறவு வங்கிகளில் ஏற்கெனவே 12 மத்திய கூட்டுறவு வங்கிகள் ஒன்றுக்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களை தமது செயற்பாட்டுப் பகுதியாகக் கொண்டு செயல்படும் சூழ்நிலையில், நாமக்கல் மாவட்டத்திற்கென தனியாக மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

மத்திய கூட்டுறவு வங்கி

வினா எண் 12781—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூரைத் தலைமையிடமாகக் கொண்டு மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டத்தில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விரண்டு வங்கிகளைப் பிரித்து, திருவாரூர் மாவட்டத்திற்கென தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தால், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியும், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியும் வாழ்திறனற்ற வங்கிகளாகச் செயல்படும் நிலை உருவாகும். மேலும், புதிதாக உருவாக்க கோரப்பட்டுள்ள மத்திய கூட்டுறவு வங்கியும் போதுமான நிதியாதாரங்கள் இல்லாமல் செம்மையாக செயல்பட முடியாத நிலையும் உருவாகும். கூட்டுறவுக் கடன் நிறுவனங்களைச் சீரமைக்க அமைக்கப்பட்ட வைத்தியநாதன் குழு கூட்டுறவு வங்கிகளை இணைக்குமாறு மட்டுமே பரிந்துரை செய்துள்ளது.

ஏற்கெனவே, 12 மத்திய கூட்டுறவு வங்கிகள் தமது செயற்பாட்டுப் பகுதியில் விவகார எல்லையில் ஒன்றுக்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில் செயல்படும் சூழ்நிலையில், திருவாரூர் மாவட்டத்திற்கென தனியாக மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 21]

47—

கடன் தள்ளுபடி

வினா எண் 12812—திருமதி வானதி சீனிவாசன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

விவசாயக் கடன் தள்ளுபடி செயல்பாட்டுத் திட்டம் குறித்து அறிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

அரசாணை (நிலை) எண் 15, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 8–2–2021–ல், 31–1–2021 அன்று கூட்டுறவு நிறுவனங்களில் நிலுவையிலிருந்த 16,43,347 விவசாயிகளின் ரூ.12,110.74 கோடி அளவிலான பயிர்க் கடன்களைத் தள்ளுபடி செய்து அரசு ஆணையிட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 16, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 8–2–2021–ல் பயிர்க் கடன் தள்ளுபடி 2021 திட்டத்தினை நடைமுறைப்படுத்திட ஏதுவாக வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் சுற்றறிக்கை எண் 2/2021, நாள் 26–2–2021–ல் பயிர்க் கடன் தள்ளுபடி 2021 தொடர்பான கணக்கு பதிவினை மேற்கொள்வது குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசால் தள்ளுபடி செய்யப்பட்ட பயிர்க் கடன்களுக்கான தொகையில், தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் (நபார்டு) கூட்டுறவு வங்கிகளுக்கு கே.சி.சி. மறுகடனாக வழங்கப்பட்ட அசல் தொகை ரூ.4,200 கோடியும், அதற்கான வட்டி ரூ.176.04 கோடியும் நடப்பு நிதியாண்டில் அரசால் முழுமையாக விடுவிக்கப்பட்டு வழங்கப்பட்டுவிட்டது. மேலும், கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி தொகைக்கு 2021–2022 ஆம் நிதியாண்டிற்கு வழங்கப்பட வேண்டிய வட்டியும் நடப்பு நிதியாண்டில் ஒரே தவணையில் விடுவிக்கப்பட்டு

வழங்கப்பட்டுவிட்டது. கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய தள்ளுபடி தொகை, எதிர்வரும் நான்காண்டுகளில் நான்கு சம தவணைகளில் வட்டியுடன் வழங்கப்படும்.

48—

பயிர்க் கடன்

வினா எண் 12893—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் வட்டியில்லா கடன் 30% பட்டியல் இனத்தவர்களுக்கு அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்மூலம் 7% வட்டி விகிதத்தில் பயிர்க் கடன்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எய்தும் வகையில், சிறு, குறு விவசாயிகள், பட்டியலின வகுப்பு/ பட்டியலின பழங்குடியின விவசாயிகள் உட்பட புதிய உறுப்பினர்களுக்கு பயிர்க் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிர்க் கடனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி வசூலிப்பதில்லை. அதாவது உரிய காலத்தில் பயிர்க் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

2021–2022 ஆம் ஆண்டில் 14,84,052 விவசாயிகளுக்கு ரூ.10,292.02 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், 1,48,963 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.860.46 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது மொத்த கடனில் 8.36 சதவீதம் ஆகும்.

2023 ஏப்ரல் 21]

நிகழ்வாண்டில் 15–9–2022 வரை 4,66,187 விவசாயிகளுக்கு ரூ.3,539.53 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதில், 37,727 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.249.72 கோடி பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. இது மொத்த கடனில் 7.05 சதவீதம் ஆகும்.

கடன் பெறத் தகுதியான அனைத்து ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாய உறுப்பினர்களுக்கும் தடையின்றி பயிர்க் கடன் வழங்கப்பட்டு வருகின்றது.

49—

மத்திய கூட்டுறவு வங்கி

வினா எண் 23103—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் மாவட்டத்தை தலைமையிடமாகக் கொண்டு திருவாரூரில் மத்திய கூட்டுறவு வங்கி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டத்தில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டத்திற்கென தனியாக ஒரு மத்திய கூட்டுறவு வங்கி அமைத்தால், கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கியும், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கியும் வாழ்திறனற்ற வங்கிகளாக செயல்படும் நிலை உருவாகும். மேலும், புதிதாக உருவாக்க கோரப்பட்டுள்ள மத்திய கூட்டுறவு வங்கியும் போதுமான நிதியாதாரங்கள் இல்லாமல் செம்மையாகச் செயல்பட முடியாத நிலையும் உருவாகும்.

ஏற்கெனவே 12 மத்திய கூட்டுறவு வங்கிகள் தமது செயற்பாட்டுப் பகுதியில் ஒன்றுக்கு மேற்பட்ட வருவாய் மாவட்டங்களில்

[2023 ஏப்ரல் 21

செயல்படும் சூழ்நிலையில், திருவாரூர் மாவட்டத்திற்கென தனியாக மத்திய கூட்டுறவு வங்கி அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

50—

உரக் கிடங்கு

வினா எண் 38049—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஒன்றியம், பெல்லாரம்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்க அலுவலகத்திற்கு உர குடோன் அமைக்க புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

பெல்லாரப்பள்ளி ஊராட்சிக்குட்பட்டு செயல்படும் கே.கே.115 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு சொந்தமாக உள்ள இடத்தில் சங்க அலுவலகக் கட்டடம் மற்றும் உரக் கிடங்கும் நல்ல நிலையில் பயன்பாட்டில் உள்ளது. புதிதாக உரக் கிடங்கு கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

51—

நியாய விலைக் கடை

வினா எண் 52669—திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேப்பனஹள்ளி தொகுதிக்குட்பட்ட சூளகிரி ஒன்றியத்திலுள்ள சின்னாரன்தொட்டி ஊராட்சியிலுள்ள கெதலான் தொட்டி நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஒன்றியம், சின்னாரன்தொட்டி ஊராட்சிக்குட்பட்ட டி.கே.80, பேரிக்கை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்பட்டுவரும் கெதலான் தொட்டி (30GP074P1) பகுதிநேர நியாய விலைக் கடை 174 குடும்ப அட்டைகளுடன் அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

மேற்படி கெதலான் தொட்டி பகுதிநேர நியாய விலைக் கடை ஏற்கெனவே அரசு கட்டடத்தில் செயல்பட்டு வருவதால், புதிய கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.

52—

புதிய கட்டடம்

வினா எண் 52700—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஒன்றியம், குண்டலப்பட்டி ஊராட்சி, குட்டூர் கிராமத்தில் அமைந்துள்ள S615 கூட்டுறவு தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள S615 குண்டலப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் குண்டலப்பட்டி கிராமத்திலேயே அதன் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இவ்வலுவலகக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளதால், சங்கத்திற்கு குட்டூர் கிராமத்தில் புதிய அலுவலகக் கட்டடம் கட்ட வேண்டிய தேவை எழவில்லை.

[2023 ஏப்ரல் 21

53—

தொழிற்சாலை

வினா எண் 693—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சி பகுதிகளில் சவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சி பகுதிகளில் சவ்வரிசி தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க தனியார் தொழில்முனைவோர் யாரேனும் முன்வரும்பட்சத்தில், தமிழக அரசு அறிவித்துள்ள சிறப்புத் திட்டமான புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தகுதியினடிப்படையில் (வங்கிக் கடனுக்காக) ஆவன செய்யப்படும்.

54—

புவிசார் குறியீடு

வினா எண் 1228—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் வெள்ளிக் கொலுசு தொழிலுக்கு புவிசார் குறியீடு பெற்றுத் தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், கைத்திறத் தொழில்களுக்கு மட்டுமே புவிசார் குறியீடு பெற்று வருகிறது. சேலம் வெள்ளிக் கொலுசு தொழில், கைத்திறத் தொழில்களின்கீழ் வரவில்லை. எனினும் அதற்கான தகவல்கள் மற்றும் ஆவணங்கள்

2023 ஏப்ரல் 21]

சேகரிக்கப்பட்டு, சேலம் வெள்ளிக் கொலுசு தொழிலுக்கு புவிசார் குறியீடு பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

55—

தொழிற்பேட்டை

வினா எண் 3694—திரு. ப. கார்த்திகேயன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வேலூர் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், வேலூர் தொகுதியில் சுமார் 20 ஏக்கருக்குமேல் அரசு புறம்போக்கு, அனாதீனம் மற்றும் மிகை வெற்று நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், டான்சிட்கோமூலம் தொழிற்பேட்டை அமைக்கப்படும். எனினும் தொழில் தொடங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20 தொழில்முனைவோரை உள்ளடக்கிய தொழில்முனைவோர் கூட்டமைப்புகள் சுமார் 50 ஏக்கர் நிலத்துடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில், ரூ.15 கோடி வரையிலான மாநில அரசின் மானியத்துடன் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிட்கோமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

56—

தொழிற்சாலை

வினா எண் 4096—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சங்கரன்கோவிலில் எலுமிச்சைப் பழத்தினை பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அல்லது எலுமிச்சைப் பழம் சார்ந்த தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சங்கரன்கோவிலில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவும், கடையநல்லூரில் 200 மெட்ரிக் டன் கொள்ளளவும் கொண்ட அரசு குளிர்பதனக் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் குளிர்பதனக் கிடங்குகளில் எலுமிச்சைப் பழத்தை பாதுகாக்கும் உட்கட்டமைப்பு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இருப்பினும், தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் பகுதியில் எலுமிச்சைப் பழத்தை மூலப்பொருளாகக் கொண்டு உற்பத்தி சார்ந்த தொழிற்சாலை அல்லது எலுமிச்சைப் பழத்தினை பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க தொழில்முனைவோர் எவரேனும் முன்வரும் நிலையில், தமிழக அரசு அறிவித்துள்ள திட்டங்களின்கீழ் தகுதியின் அடிப்படையில் வங்கிக் கடனுக்கு பரிந்துரை செய்யப்படும்.

57—

தொழிற்சாலை

வினா எண் 7519—திரு. M. ராஜமுத்து: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வீரபாண்டி தொகுதியை மையமாகக் கொண்டு பழச்சாறு மற்றும் ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் மாம்பழ வகைகளில் பழச்சாறு தயாரிக்க ஏற்றதாக உள்ள மாம்பழங்கள் உள்ளூர் சந்தையிலும் மற்றும் வெளி மாவட்ட கடைகளுக்கு உணவுப் பொருள்களாக பயன்படுத்தப்படுவதாலும், சேலம் மாவட்டத்தில் அதிகளவில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலைகள்

2023 ஏப்ரல் 21]

இயங்கி வருவதாலும் அல்போன்சா மற்றும் பெங்களூரா இரகங்கள் மட்டும் மேற்கூறியவாறு நேரடி பயன்பாட்டிற்குப் போக மீதமுள்ளவை அத்தொழிற்சாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

மேலும், சேலம் மாவட்டத்தில் விளைவிக்கப்படும் தக்காளி இரகங்கள் புளிப்புத்தன்மை அதிகம் கொண்டதாகவும், எளிதில் அழுகக்கூடியதாகவும் உள்ளதால் தக்காளிச்சாறு மற்றும் ஜாம் உற்பத்திக்கு ஏற்றதாக இல்லை.

மேற்கூறிய காரணங்களினால் சேலம் மாவட்டத்தில் பழச்சாறு மற்றும் ஜாம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் சொந்தமாக பழச்சாறு மற்றும் ஜாம் தயாரிக்கும் நிறுவனங்கள் தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற பரிந்துரை செய்யப்படும்.

58—

தொழிற்சாலை

வினா எண் 9690—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி, களக்காட்டில் வாழைக்காய்மூலம் உற்பத்தி செய்யும் பல்பொருள் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) களக்காடு மற்றும் அதைச் சுற்றிலும் உற்பத்தி செய்யப்படும் வாழைப்பழம் பெரும்பாலும் நேரடி உணவுப் பொருளாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதர வாழை

[2023 ஏப்ரல் 21

சார்ந்த உற்பத்தி பொருள்களான வாழைக்காய், வாழைத்தண்டு போன்றவையும் நேரடியாகவே வீட்டு உபயோகம் மற்றும் சிப்ஸ் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், உள்ளூர் பருவகால வாழை உற்பத்தி, தொழிற்கூடங்கள் ஆண்டு முழுவதும் இயங்குவதற்கு போதுமான அளவில் இல்லை. எனவே, திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, களக்காடு ஊராட்சி, களக்காட்டில் வாழைக்காய்மூலம் உற்பத்தி செய்யும் பல்பொருள் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் சொந்தமாக வாழைக்காய்மூலம் உற்பத்தி செய்யும் பல்பொருள் தொழிற்சாலை அமைக்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற பரிந்துரை செய்யப்படும்.

59—

தொழிற்பேட்டை

வினா எண் 9729—திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூந்தமல்லி தொகுதி, எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியம், சேத்துப்பாக்கம் ஊராட்சியில் தொழிற்பேட்டை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், எல்லாபுரம் ஊராட்சி மற்றும் சேத்துப்பாக்கம் ஊராட்சியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க ஏதுவான அரசு புறம்போக்கு நிலங்கள் இல்லை என திருவள்ளூர் வட்டாட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

எனினும், தொழில் துவங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20 தொழில்முனைவோரை உள்ளடக்கிய தொழில்முனைவோர்

2023 ஏப்ரல் 21]

கூட்டமைப்புகள் சுமார் 50 ஏக்கர் நிலத்துடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில் ரூ.15 கோடி வரையிலான மாநில அரசின் மானியத்துடன் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தமிழ்நாடு சிட்கோமூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

60—

வீட்டுமனைப் பட்டா

வினா எண் 10161—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, சதாசிவம் தெரு, சாலைமா நகரில் வசிப்பவர்களுக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலமாக கிரயப் பத்திரமும், வீட்டுமனைப் பட்டாவும் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, சதாசிவம் தெரு, சாலைமா நகரில் வசிப்பவர்களுக்கு குறிப்பிட்ட நிலம் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் பெயரில் பத்திரப் பதிவு செய்யப்பட்ட பின்னர் தகுதிவாய்ந்த ஒதுக்கீடுதாரர்களுக்கு கிரயப் பத்திரம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

61—

தொழிற்சாலை

வினா எண் 10351—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரியை மையமாகக் கொண்டு தக்காளி பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டத்தில் 13,540.50 ஹெக்டேரில் வருடத்திற்கு இரண்டு பருவங்களில் சாகுபடி செய்யப்பட்டு, 4,06,215 மெட்ரிக் டன் தக்காளி விளைவிக்கப்படுகிறது. இவ்வாறு விளைவிக்கப்படும் தக்காளி முழுவதும் தருமபுரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்ட பகுதிகள் மற்றும் கோயம்பேடு காய்கறி சந்தை மூலமாகவும் நேரடி உணவு பயன்பாட்டிற்கே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறாக உணவுத் தேவைக்கே சில சமயங்களில் தட்டுப்பாடு நிலவும் சூழலில், தக்காளியை மூலப்பொருளாக கொண்டு தக்காளி பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவு. மேலும், இது தொடர்பான கருத்துருக்கள் ஏதும் அரசிடம் இல்லை.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் தருமபுரி மாவட்டத்தில் தக்காளி பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), *பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்* (PMEGP) *மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்* (NEEDS) *ஆகியவற்றின்கீழ், கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கிக் கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில், முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச் சான்றிதழ் மானியம் ஆகியவை விதிகளுக்குட்பட்டு வழங்க பரிசீலனை செய்யப்படும்.*

62—

தொழிற்சாலை

வினா எண் 10352—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணி பகுதியில் தேங்காய் பாலிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தாலுகாவில் ஆண்டு ஒன்றுக்கு 179.62 இலட்சம் தேங்காய் கொப்பரைகள் கிடைக்கப்பெறுகிறது. இவற்றில் 125.74 இலட்சம் தேங்காய் கொப்பரைகள் உள்ளூர் சந்தைகள்மூலம் நேரடி உணவுத் தேவைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. மீதம் உள்ள தேங்காய் கொப்பரைகள் பிற மாவட்டங்களுக்கு உணவுப் பயன்பாட்டிற்காக அனுப்பி வைக்கப்படுகிறது. இந்நிலையில், அரசுமூலம் எண்ணெய் ஆலை அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் சொந்தமாக தேங்காய் கொப்பரையிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலைகள் தொடங்க முன்வரும்பட்சத்தில், தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற, படித்த வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் (NEEDS) திட்டத்தின்கீழ் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கிக் கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில், பல்வேறு மானியங்கள் விதிகளுக்குட்பட்டு அரசு ஆணை (நி.) எண் 37, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பி) துறை, நாள் 6–7–2021–ன்கீழ் பரிசீலனை செய்யப்பட்டு வழங்கப்படும்.

63—

தொழிற்சாலை

வினா எண் 11627—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 21

தருமபுரி மாவட்டம், தொப்பூர் பகுதியில் பூக்களிலிருந்து தயாரிக்கும் வாசனைத் திரவியம் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தருமபுரி மாவட்டம், தொப்பூர் பகுதி உள்ளடங்கிய நல்லம்பள்ளி வட்டத்தில் ரோஜா, முல்லை, சாமந்தி, அரளி, காக்கடாமல்லி மற்றும் ட்யூப் ரோஜா ஆகிய பூக்கள் வருடத்திற்கு 38,039.3 மெட்ரிக் டன் அளவில் கிடைக்கின்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பூக்கள் பெரும்பாலும் உள்ளூர் பயன்பாட்டிற்கும், சென்னை மற்றும் இதர பூச்சந்தைகள் மூலமாக தமிழகத்தின் வடபகுதிகளுக்கும் அனுப்பப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பூக்கள் முழுவதுமாக மாலை கட்டுதல், மலர் அலங்காரம் ஆகியவற்றிற்கே பயன்படுத்தப்படுவதால் பூக்களிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவு.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் தருமபுரி மாவட்டத்தில் பூக்களிலிருந்து வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) ஆகியவற்றின்கீழ் கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கிக் கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில் முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி மானியம், மின்னாக்கி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச் சான்றிதழ் மானியம், முத்திரை வரி மற்றும் பதிவுக் கட்டணங்களை திரும்ப வழங்குதல், வர்த்தக முத்திரை அல்லது புவிசார் குறியீட்டு பதிவுக்கான ஊக்கத்தொகை ஆகியவை விதிகளுக்குட்பட்டு வழங்க பரிசீலனை செய்யப்படும்.

2023 ஏப்ரல் 21]

64—

தொழிற்பேட்டை

வினா எண் 12255—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையை மையமாகக் கொண்டு சிட்கோ தொழிற்பேட்டை துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கந்தர்வகோட்டை வட்டாட்சியரின் அறிக்கையின்படி, "கந்தர்வக்கோட்டை தாலுகாவில் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கேற்ற உபரி நிலம் மற்றும் மாற்று நிலங்கள் ஏதும் இல்லை" என்று சிட்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

இருப்பினும், கந்தர்வகோட்டையை மையமாகக் கொண்டு தொழிற்பேட்டை தொடங்க ஆர்வமுள்ள குறைந்தபட்சம் 20 தொழில்முனைவோரை உள்ளடக்கிய தொழில்முனைவோர் கூட்டமைப்புகள் சுமார் 50 ஏக்கர் நிலத்துடன் தொழிற்பேட்டை அமைக்க முன்வரும்பட்சத்தில், ரூ.15 கோடி வரையிலான மாநில அரசின் மானியத்துடன் தொழிற்பேட்டை அமைப்பதற்கு மாவட்ட ஆட்சியருடன் கலந்தாலோசித்து தமிழ்நாடு சிட்கோமூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

65—

தொழிற்சாலை

வினா எண் 13021—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 21*

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி, சேசம்பட்டி பகுதியில் தக்காளி பழக்கூழ் தயாரிப்பு தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டத்தில் 13,540.50 ஹெக்டேரில் தக்காளி சாகுபடி செய்யப்படுகிறது. வருடத்தில் இரண்டு பருவங்களில் சாகுபடி செய்யப்பட்டு, 4,06,215 மெட்ரிக் டன் அளவு தக்காளி விளைவிக்கப்படுகிறது. இவ்வாறு விளைவிக்கப்படும் தக்காளி முழுவதும் தருமபுரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்ட பகுதிகள் மற்றும் கோயம்பேடு காய்கறி சந்தை மூலமாகவும் நேரடி உணவுப் பயன்பாட்டிற்கே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறாக உணவுத் தேவைக்கே சில சமயங்களில் தட்டுப்பாடு நிலவும் சூழலில் தக்காளியை மூலப்பொருளாகக் கொண்டு தக்காளி பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக்கூறுகள் குறைவு. மேலும், இது தொடர்பான கருத்துருக்கள் அரசிடம் ஏதும் இல்லை.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி, சேசம்பட்டி பகுதியில் தக்காளி பழக்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), *பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்* (PMEGP) *மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்* (NEEDS) *ஆகியவற்றின்கீழ் கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கிக் கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில், முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி மானியம், மின்னாக்கி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச் சான்றிதழ் மானியம், முத்திரை வரி மற்றும் பதிவுக் கட்டணங்களை திரும்ப வழங்குதல், வர்த்தக முத்திரை அல்லது*

2023 ஏப்ரல் 21]

புவிசார் குறியீட்டு பதிவுக்கான ஊக்கத்தொகை ஆகியவை விதிகளுக்குட்பட்டு வழங்க பரிசீலனை செய்யப்படும்.

66—

தொழிற்சாலை

வினா எண் 17912—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதியில் சவ்வரிசி தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை தொகுதியில் உற்பத்தி செய்யப்படும் 9,962 மெட்ரிக் டன் மரவள்ளிக்கிழங்கு நேரடி உணவுப் பயன்பாட்டிற்கும், நொறுக்குத் தீனிகள் தயாரிக்கவுமே பெருமளவு பயன்படுத்தப்படுகிறது. மேலும், சவ்வரிசி தொழிற்சாலை ஆண்டு முழுவதும் இயங்குவதற்கு உற்பத்தி செய்யப்படும் மரவள்ளிக்கிழங்கு பற்றாக்குறையாக இருப்பதால், கந்தர்வகோட்டை தொகுதியில் சவ்வரிசி தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் மிகவும் குறைவு.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் கந்தர்வகோட்டை தொகுதியில் சவ்வரிசி தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), *பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்* (PMEGP) *மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்* (NEEDS) *ஆகிய திட்டங்களின்கீழ் அவர்களின் கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர சொந்த முதலீடு*

[*2023 ஏப்ரல் 21*

அல்லது நேரடி வங்கி கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில், விதிகளுக்குட்பட்டு முதலீட்டு மானியம், குறைந்தழுத்த மின் மானியம், பின்–முனை வட்டி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச் சான்றிதழுக்கான கட்டணங்களை திருப்பித்தரும் திட்டம், முத்திரை வரி மற்றும் பதிவுக் கட்டணங்களை திரும்ப வழங்குதல், வர்த்தக முத்திரை பதிவு/புவிசார் குறியீடுகள் பதிவுக்கான ஊக்கத்தொகை ஆகியவற்றை வழங்க பரிந்துரை செய்யப்படும்.

67—

தொழிற்சாலை

வினா எண் 21614—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் பகுதியில் வாசனைத் திரவிய தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டத்தில் மலர் சாகுபடி ஏறத்தாழ 1,600 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்டு, சுமார் 20,240 மெட்ரிக் டன் அளவு பூக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பூக்கள் முழுவதுமாக நேரடி பயன்பாடுகளான மாலை கட்டுதல், மலர் அலங்காரம் போன்ற பயன்பாடுகளுக்கே சென்னை உள்ளிட்ட சுற்றுப்புற பகுதிகளில் சந்தைப்படுத்தப்படுகிறது. மேலும், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் சி.எஸ்.சி. பிளேவர்ஸ் அன்ட் ப்ராக்ரன்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையும் இயங்கி வருகிறது. எனவே, கும்மிடிப்பூண்டி தொகுதியில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவு.

2023 ஏப்ரல் 21]

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்கள் கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் பகுதியில் வாசனைத் திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில் மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), *பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்* (PMEGP) *மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்* (NEEDS) *ஆகிய திட்டங்களின்கீழ் கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கிக் கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில், முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி மானியம், மின்னாக்கி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச் சான்றிதழ் மானியம், முத்திரை வரி மற்றும் பதிவுக் கட்டணங்களை திரும்ப வழங்குதல், வர்த்தக முத்திரை/புவிசார் குறியீடு பதிவுக்கான ஊக்கத்தொகை ஆகியவை அரசாணை (நிலை) எண் 37, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (பி) துறை, நாள் 6–7–2021–ன்கீழ் பரிசீலனை செய்யப்பட்டு, விதிகளுக்குட்பட்டு வழங்க பரிந்துரை செய்யப்படும்.*

68—

தொழிற்சாலை

வினா எண் 21834—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பகுதியில் 1,038 ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்பட்டு, இதன்மூலம்

ஆண்டுக்கு 10,380 மெட்ரிக் டன் அளவிற்கு மாம்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் மாம்பழங்கள் முழுவதும் நேரடி உணவு பயன்பாட்டிற்காக தருமபுரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பிற மாவட்டங்களில் சந்தைப்படுத்தப்படுகிறது. எனவே, பெண்ணாகரம் பகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை.

இருப்பினும், ஆர்வமுள்ள தொழில்முனைவோர் பெண்ணாகரம் பகுதியில் மாம்பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்க முன்வரும்பட்சத்தில், தகுதியின் அடிப்படையில், மானியத்துடன்கூடிய கடன் உதவிபெற, வேலையற்ற இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), *பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம்* (PMEGP) *மற்றும் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்* (NEEDS) *ஆகிய திட்டங்களின்கீழ் கடன் விண்ணப்பம் வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்படும். இதைத் தவிர சொந்த முதலீடு அல்லது நேரடி வங்கிக் கடன் வசதியுடன் தொழில் தொடங்கும் தொழில்முனைவோர்களுக்கு தகுதியின் அடிப்படையில், முதலீட்டு மானியம், மின் மானியம், வட்டி மானியம், மின்னாக்கி மானியம், ஆற்றல் சேமிப்பு மானியம், தரச் சான்றிதழ் மானியம், முத்திரை வரி மற்றும் பதிவுக் கட்டணங்களை திரும்ப வழங்குதல், வர்த்தக முத்திரை அல்லது புவிசார் குறியீட்டு பதிவுக்கான ஊக்கத்தொகை ஆகியவை விதிகளுக்குட்பட்டு வழங்க பரிசீலனை செய்யப்படும்.*

69—

உற்பத்தி நிலையம்

வினா எண் 22050—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூரில் பூம்புகார் உற்பத்தி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் கற்சிற்பம் வேலை செய்யும் கைவினைஞர்கள் மட்டுமே உள்ளனர். அவர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக 21–10–2019 முதல் 3–12–2019 வரை 30 கைவினைஞர்களுக்கு வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப பயிற்சியும், 100 கற்சிற்ப கைவினைஞர்களுக்கு இலவச உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் மாமல்லபுரத்தில் கற்சிற்ப கைவினைஞர்களுக்காக ஏற்கெனவே ஓர் உற்பத்தி நிலையம் அமைத்துள்ளது. இந்த உற்பத்தி நிலையத்தினை போளூர் மற்றும் முடையூரில் உள்ள கைவினைஞர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். எனவே, போளூரில் மேலும் ஓர் உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதற்கான அவசியம் எழவில்லை.

70—

தொழிற்சாலை

வினா எண் 29194—திரு. இரா. அருள்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் பப்பாளி பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டத்தில் ஏறக்குறைய, 120 ஹெக்டேர் பரப்பளவில் பப்பாளி பயிரிடப்பட்டு, அதில் 750 மெட்ரிக் டன் பப்பாளி பழம் விளைவிக்கப்படுகிறது. இவ்வாறு உற்பத்தியாகும் பப்பாளி பழங்கள் முழுவதும் "நேரடி உணவுப் பயன்பாடு மற்றும் இதர நுகர்வுகளுக்காக" சேலம் மற்றும் அருகில் உள்ள மாவட்டங்களில் சந்தைப்படுத்தப்படுகிறது. மேலும், பப்பாளியிலிருந்து பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை ஆண்டு முழுவதும் இயங்க மேற்கண்ட விளைச்சலைவிட அதிக அளவில் பழங்கள் தேவைப்படுவதால், அரசு சார்பில் சேலம் மாவட்டத்தில் பப்பாளி பழச்சாறு தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் குறைவு.

[2023 ஏப்ரல் 21

71—

தொழிற்சாலை

வினா எண் 39013—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மொடக்குறிச்சி தொகுதியில் வேளாண் உற்பத்திக்கு உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

மொடக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட சிவகிரி, கொடுமுடி மற்றும் அரச்சலூர் பகுதிகளில் சுமார் 50–க்கும் மேற்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் விவசாயக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளன.

ஏற்கெனவே, 50–க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இவ்வுற்பத்தியில் ஈடுபட்டுள்ளதால் மொடக்குறிச்சி தொகுதியில், அரசு சார்பில் வேளாண் உற்பத்திக்கு உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

72—

வீடுகள் ஒதுக்குதல்

வினா எண் 49007—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, முத்து கிராமின் தெரு மற்றும் கற்பூர முதலி தெரு நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாக உள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிதாக வீடுகள் கட்டவும் அரசு முன்வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, முத்து கிராமின் தெரு மற்றும் கற்பூர முதலி தெரு நடைபாதைகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு எழும்பூர் தொகுதிக்குள்ளாகவே தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் காலியாக உள்ள வீடுகளை ஒதுக்கவும் அல்லது புதிய வீடுகள் கட்டுவது தொடர்பாகவும் தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நேரத்தில் பரிசீலனை செய்யப்படும்.

73—

மறு குடியமர்த்துதல்

வினா எண் 49011—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எழும்பூர் தொகுதி, மண்டலம் 5, வார்டு எண் 58, கண்ணப்பர் திடல் பகுதியில் பழுதடைந்துள்ள வணிக வளாகத்தை அகற்றி அவ்விடத்தில் தரை தளத்தில் வணிக வளாகமும் மற்றும் மேல் தளங்களில் அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டி, அக்குடியிருப்புகளில் கண்ணப்பர் திடல் நடைபாதைகளில் வசித்துவரும் பொதுமக்களை மறு குடியமர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

எழும்பூர் தொகுதி, மண்டலம் 5, வார்டு எண் 58, கண்ணப்பர் திடல் பகுதியில் பழுதடைந்துள்ள வணிக வளாகத்தை அகற்றி அவ்விடத்தில் தரை தளத்தில் வணிக வளாகமும் மற்றும் மேல் தளங்களில் அடுக்குமாடி குடியிருப்புகளும் கட்டப்படும்முன் இக்குடும்பங்கள் பெருநகர சென்னை மாநகராட்சிமூலம் கணக்கெடுப்பு செய்யப்பட வேண்டும். ஏனெனில், சென்னை மாநகர நடைபாதைகள் பெருநகர சென்னை மாநகராட்சி

பொறுப்பில் உள்ளன. மேலும், மேற்காணும் நடைபாதை வாழ் குடும்படுங்களுக்கு கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கட்டுமானச் செலவின் நிதி ஆதாரத்தில் பயனாளிகளின் பங்களிப்பும் அடங்கும். எனவே, பயனாளிகளின் பங்களிப்பினை வீடுகளை ஒதுக்கீடு செய்யும் முன்னர் பெற வேண்டிய அவசியம் தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு வாரியத்திற்கு ஏற்பட்டுள்ளது. பயனாளிகளின் பங்களிப்புத் தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி செலுத்த முன்வந்தால் இக்குடும்பங்களுக்கு குடியிருப்புகள் கட்டுவதற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

74—

குடியிருப்புகள்

வினா எண் 51214—திரு. செ. முருகேசன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பரமக்குடி தொகுதி, பரமக்குடி நகரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதி, பரமக்குடி நகரில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

75—

பதப்படுத்தும் நிலையம்

வினா எண் 51645—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

(அ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராமத்தில் மாம்பழம் பதப்படுத்தும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், காவேரிராசபுரம் கிராமத்தில் விளைவிக்கப்படும் மாம்பழங்கள் உள்ளூர் சந்தைகளில் நேரடி உணவுப் பயன்பாட்டிற்காக முழுவதும் பயன்படுத்தப்படுவதால், அங்கு மாம்பழம் பதப்படுத்தும் நிலையம் அரசு சார்பில் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

76—

குடியிருப்புகள்

வினா எண் 51646—திரு. வி.ஜி. இராஜேந்திரன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியில் உள்ள ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், வெங்கத்தூர் ஊராட்சியில் உள்ள ஊராட்சிக்கு சொந்தமான இடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக அடுக்குமாடி குடியிருப்பு கட்டும் திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

[2023 ஏப்ரல் 21

77—

வகுப்பறைகள்

வினா எண் 51684—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சுதந்திரா நகர் திட்டப் பகுதியில் திறன் வளர்ச்சி பயிற்சிக்காக வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்கு தொகுதி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சுதந்திரா நகர் திட்டப் பகுதியில் திறன் வளர்ச்சி பயிற்சிக்காக வகுப்பறைகள் கட்ட போதிய இடம் தற்போது இல்லை.

78—

வகுப்பறைகள்

வினா எண் 51685—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக டாக்டர் தாமஸ் சாலை திட்டப் பகுதியில் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்கு தொகுதி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக டாக்டர் தாமஸ் சாலை திட்டப் பகுதியில் திறன் மேம்பாட்டு பயிற்சிக்கான வகுப்பறைகள் கட்டுவது குறித்த திட்டம் ஏதும் பரிசீலனையில் இல்லை.

79—

குடியிருப்புகள்

வினா எண் 51688—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, சுதந்திரா நகர் குடிசைப்பகுதி மக்களுக்கு அதே இடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்கு தொகுதி, சுதந்திரா நகர் குடிசைப்பகுதி மக்களுக்கு அதே இடத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் மூலமாக குடியிருப்புகள் கட்ட அரசு உரிய நேரத்தில் தமிழ்நாடு நகர்ப்புர மேம்பாட்டு வாரியம்மூலம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

[2023 ஏப்ரல் 21

80—

குடியிருப்புகள்

வினா எண் 51690—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆயிரம் விளக்கு தொகுதி, வடக்கு கிரியப்பா சாலையில் உள்ள குடிசைப் பகுதிக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அதே இடத்தில் குடியிருப்புகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆயிரம் விளக்கு தொகுதி, வடக்கு கிரியப்பா சாலையில் உள்ள குடிசைப் பகுதிக்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அதே இடத்தில் குடியிருப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

81—

குடியிருப்புகளை சீரமைத்தல்

வினா எண் 52521—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராயபுரம் தொகுதி, ஜீவரத்தினம் நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, இராயபுரம் சட்டமன்றத் தொகுதி, ஜீவரத்தினம் நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள 464 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு புனரமைப்புப் பணிகள் (Refurbishment works) *2022–2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசால் திட்டமிடப்பட்டுள்ளது.*

82—

குடியிருப்புகளை சீரமைத்தல்

வினா எண் 52523—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராயபுரம் தொகுதி, இந்திரா நகர் பகுதியில் பழுதடைந்துள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம், எனில் எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, இராயபுரம் சட்டமன்றத் தொகுதி, இந்திரா நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள 210 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு புனரமைப்புப் பணிகள் (Refurbishment works) *2022–2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ள அரசால் திட்டமிடப்பட்டுள்ளது.*

[2023 ஏப்ரல் 21

83—

அடுக்குமாடி குடியிருப்பு

வினா எண் 53126—திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ராஜபாளையம் நகர்ப்புறப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) ராஜபாளையம் நகர்ப்புறப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் அடுக்குமாடி குடியிருப்புகள் தற்போது கட்டப்பட்டு வருகின்றன. ராஜபாளையம் நகராட்சி எல்லைப் பகுதிக்குட்பட்ட நீர்நிலை புறம்போக்கு பகுதிகளில் வாழும் ஆக்கிரமிப்புதாரர்களை அடுக்குமாடி குடியிருப்புகளில் மறு குடியமர்வு செய்ய, ராஜபாளையம் வட்டம், மேலபாட்ட கரிசல்குளம் கிராம பஞ்சாயத்துக்குட்பட்ட சம்மந்தபுரம் திட்டப் பகுதியில் அனைவருக்கும் வீட்டு வசதி (*PMAY HFA AHP*) திட்டத்தின்கீழ் தரை மற்றும் 3 தளங்கள் மேம்பாட்டில் 864 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூ.77.40 கோடி திட்ட மதிப்பீட்டில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டப் பணிகள் விரைவில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.*

84—

பூங்காக்கள்

வினா எண் 53162—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15, வார்டு எண் 196, கண்ணகி நகர் தமிழ்நாடு

2023 ஏப்ரல் 21]

நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் பூங்காக்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தை சென்னை மாநகராட்சியில் ஒப்படைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–15, வார்டு எண் 196, கண்ணகி நகர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளில் பூங்காக்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க வாரியத்தால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

85—

தொழிற்சாலை

வினா எண் 54747—திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நிலக்கோட்டை பகுதியில் வாசனைத் திரவிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டத்தில் ஏறத்தாழ 3,500 ஹெக்டேர் பரப்பளவில் ஏறத்தாழ 34,700 மெட்ரிக் டன் மலர் சாகுபடி செய்யப்படுகிறது. திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை பகுதியில் தற்பொழுது ஐந்து சிறு தொழில் நிறுவனங்கள் பூக்களிலிருந்து வாசனைத் திரவியத்திற்கான மூலப்பொருட்கள் (*Floral Concentrates and absolutes*) தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.*

[2023 ஏப்ரல் 21

இவ்வாறாக, பூக்கள் குறிப்பிட்ட பருவங்களில் மட்டும் உற்பத்தி செய்யப்படுவதாலும், திருவிழாக் காலங்களில் நல்ல விலைக்கு விற்கப்படுவதாலும் பூக்கள் உபரியாவதில்லை. எனவே, இதுபோன்ற சூழல்களில் அதிக விலை கொடுத்து பூக்களை வாங்கி வாசனைத் திரவியம் தயாரிப்பது மிகவும் சிரமம். எனவே, நிலக்கோட்டை பகுதியில் அரசு சார்பில் வாசனைத் திரவிய தொழிற்சாலை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

86—

புதிய குடியிருப்பு

வினா எண் 75591—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தியாகராய நகர் தொகுதி, 134-வது வார்டு, பிருந்தாவன் நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு கட்டடங்களை அகற்றி, புதிதாக வீடு கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, வார்டு எண் 134, தியாகராய நகர் தொகுதி, மேற்கு மாம்பலம் பகுதியில் அமைந்துள்ள பிருந்தாவனம் திட்டப் பகுதியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு கட்டடங்களை அகற்றி, புதிதாக கட்ட அரசு உரிய நேரத்தில் பரிசீலனை செய்யும்.

87—

புதிய குடியிருப்பு

வினா எண் 75592—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

தியாகராய நகர் தொகுதி, 135-வது வார்டு, அசோக் நகர், புதூர் முதல் தெரு பகுதியிலுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு கட்டடங்களை அகற்றி, புதிதாக கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தியாகராய நகர் தொகுதி, 135-வது வார்டு, அசோக் நகர், புதூர் முதல் தெரு பகுதியிலுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு கட்டடங்களை அகற்றி, புதிதாக கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

88—

புதிய குடியிருப்பு

வினா எண் 75593—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தியாகராய நகர் தொகுதி, 141-வது வார்டு, லலிதாபுரம் பகுதியிலுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை அகற்றி, புதிதாக கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தியாகராய நகர் தொகுதி, 141-வது வார்டு, லலிதாபுரம் பகுதியிலுள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை அகற்றி, புதிதாக கட்ட அரசு உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.

[2023 ஏப்ரல் 21

89—

புதிய குடியிருப்பு

வினா எண் 75594—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தியாகராய நகர் தொகுதி, 141–வது வார்டு, காமராஜர் குடியிருப்பில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை அகற்றி, புதிதாக கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்:

தியாகராய நகர் தொகுதி, 141–வது வார்டு, காமராஜர் குடியிருப்பில் உள்ள 328 பழைய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புகளை அகற்றி, புதிதாக கட்டுவது குறித்து CUBE *நிறுவனத்திடமிருந்து மொத்த திட்ட மதிப்பீடு அறிக்கை பெறப்பட்டப்பின், அரசுடன் ஆலோசித்து தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் உரிய நேரத்தில் நடவடிக்கை மேற்கொள்ளும்.*

90—

நல வாரியம்

வினா எண் 7505—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புகைப்படக் கலைஞர்களுக்கு நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புகைப்படக் கலைஞர்களுக்கு நல வாரியம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

91—

நினைவுச் சின்னம்

வினா எண் 21701—திரு. இரா. அருள்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுக்கு சென்னையில் நினைவுச் சின்னம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுக்கு புதுக்கோட்டையில் திருவுருவச் சிலை அமைக்க அரசாணை வெளியிடப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அன்னாருக்கு சென்னையில் நினைவுச் சின்னம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

92—

மணிமண்டபம்

வினா எண் 50678—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் கே.பி. சுந்தராம்பாள் அவர்களுக்கு சிலை மற்றும் மணிமண்டபம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடியில் கே.பி. சுந்தராம்பாள் அவர்களுக்கு சிலை மற்றும் மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

93—

மணிமண்டபம்

வினா எண் 51526—திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேதாரண்யம் தொகுதி, துளசியாப்பட்டினம் கிராமத்தில் ஔவையாருக்கு மணிமண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேதாரண்யம் தொகுதி, துளசியாப்பட்டினம் கிராமத்தில் ஔவையாருக்கு மணிமண்டபம் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசலனையில் இல்லை.

94—

நினைவிடம்

வினா எண் 54770—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மன்னார்குடி வட்டம், மேலநாகையில் பாரதியார் தங்கிய இடத்தை நினைவிடமாக மாற்றவும், ஆராய்ச்சி நூலகம் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளதாலும், எட்டயபுரத்தில் மகாகவி பாரதியாரின் இல்லத்தை பழமை மாறாமல் அழகுற மேம்படுத்தப்பட்டு, அதில் அவருடைய புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளதாலும், உத்தரப்பிரதேச மாநிலம், காசியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லத்தில் உள்ள அறையில் மார்பளவு சிலையுடன்கூடிய நினைவகம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 11-12-2022 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ளதாலும், மன்னார்குடி வட்டம், மேலநாகையில் பாரதியார் தங்கிய இடத்தை நினைவிடமாக மாற்றவும், ஆராய்ச்சி நூலகம் அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

95—

தையல் இயந்திரம்

வினா எண் 54776—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) 21 வயது நிரம்பிய பயிற்சி பெற்று திருமணம் ஆகாத மகளிருக்கும் தையல் இயந்திரம் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1979-ம் ஆண்டு தொடங்கப்பட்டு செயல்படுத்தப்படும் சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தில் 20-40 வயது வரையிலுள்ள ஆதரவற்ற விதவைகள், சமூக மற்றும் பொருளாதார ரீதியில் நலிவுற்ற பெண்கள், கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், உடல் ஊனமுற்ற ஆண் மற்றும் பெண்களுக்கு தையல் இயந்திரம்

[*2023 ஏப்ரல் 21*

வழங்கப்படுகிறது. 21 வயது நிரம்பிய திருமணமாகாத பெண்களும் ஆண்டு வருமானம் ரூ.72,000/-க்கு மிகாமல் இருக்கும்பட்சத்தில் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம்.

96—

கட்டடம்

வினா எண் 55022—திரு. A.P. நந்தகுமார்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அணைக்கட்டு தொகுதி, கீழ்கிருஷ்ணாபுரம் ஊராட்சி, கீழ்கிருஷ்ணாபுரம் கிராமத்தில் அங்கன்வாடி மையக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்:

வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, கீழ்கிருஷ்ணாபுரம் ஊராட்சி, கீழ்கிருஷ்ணாபுரம் கிராமத்தில் செயல்பட்டுவரும் குழந்தைகள் மையத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ், ரூ.10.93 இலட்சம் செலவில் புதிய கட்டடம் கட்டுவதற்கு வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

97—

வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல்

வினா எண் 143—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கடல் நீர்மட்ட உயர்வால் பாதிக்கப்படும் மீனவ கிராமங்களில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கடல் நீர்மட்ட உயர்வு, கடலரிப்பு மற்றும் கடல்நீர் உட்புகுதல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

தமிழ்நாட்டின் 14 கடலோர மாவட்டங்களில் கடலரிப்பைத் தடுப்பதற்கு நேர்கல் சுவர் மற்றும் தூண்டில் வளைவுகள் சுமார் 50 கிராமங்களில் அமைக்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகின்றன. தற்போது, இந்நிதியாண்டில் 34 மீனவ கிராமங்களில் கடலரிப்பு தடுப்புப் பணிகள் மேற்கொள்ள நபார்டு வங்கி உதவியுடன் நிதியாதாரம் பெற அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், கடல் நீர்மட்டம் உயர்வு ஏற்படும் மீனவ கிராமங்களில் உரிய தொழில்நுட்ப ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, நேர்கல் சுவர், கரை அரிப்பு தடுப்புச் சுவர், தூண்டில் வளைவு போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திட அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

98—

விற்பனை அங்காடி

வினா எண் 725—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, பெசன்ட் நகர், வேளாங்கண்ணி மாதா கோயில் அருகில் புதிய மீன் விற்பனை அங்காடி கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை பெசன்ட் நகர், வேளாங்கண்ணி மாதா கோயிலுக்கு அருகிலுள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தின் தெற்கு பகுதியில் (சர்வே எண் 155/2 APT) *ஓடைமாநகர் மீனவ கிராமத்தைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட மீனவ மகளிர் தற்காலிக கொட்டகை அமைத்து மீன் வியாபாரம் செய்து வருகின்றனர். இவ்விடத்தில் மீன் அங்காடி அமைத்திட தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திலிருந்து ஒப்புதல் கிடைக்கும்பட்சத்தில், உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

99—

விற்பனை அங்காடி

வினா எண் 726—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணியில் மீன் வளர்ச்சி கழகம்மூலம் மீன் விற்பனை அங்காடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி பகுதியில் மீன் விற்பனை நிலையம் அமைத்திடும் கோரிக்கையின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியினரால் உரிய இட ஒதுக்கீடு பெறப்படும்பட்சத்தில், மீன்விற்பனை அங்காடி அமைத்து

2023 ஏப்ரல் 21]

செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இருப்பினும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம் தற்போது அறிமுகப்படுத்தியுள்ள உரிமம் மாற்றம் முறையில் (Franchisee) வேளச்சேரி தொகுதி, தரமணி பகுதியில் ஆர்வமுள்ளோர் விண்ணப்பிக்கும்பட்சத்தில், மேற்படி இடத்தில் மீன் விற்பனை அங்காடி அமைக்கும் திட்டத்தினை செயல்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

100—

மருத்துவமனையை நவீனப்படுத்துதல்

வினா எண் 1655—திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையிலுள்ள கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறையில் உள்ள கால்நடை பெருமருத்துவமனை 6–9–1989 முதல் செயல்பட்டு வருகிறது. அங்கு அதிகளவு (80–க்குமேல்) கால்நடைகள் மற்றும் செல்லப்பிராணிகள் சிகிச்சைக்கு வருகின்றன. எனவே, மயிலாடுதுறையில் உள்ள கால்நடை மருத்துவமனையை நவீனப்படுத்த சாத்தியக்கூறுகள் உள்ளது. மேலும், இப்பெருமருத்துவமனையை பன்முக மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசின் செயல்திட்டம் இடம்பெறும்பொழுது பரிசீலிக்கப்படும்.

[2023 ஏப்ரல் 21

பட்டியல்—14

1—

மீன் விற்பனை நிலையம்

வினா எண் 1768—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, இந்திரா நகர் நெடுஞ்சாலைகளில் உள்ள மீன் கடைகளுக்கு இடம் ஒதுக்கி மீன் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இந்திரா நகர் நெடுஞ்சாலைகளில் உள்ள மீன் கடைகளுக்கு இடம் ஒதுக்கி மீன் விற்பனை நிலையம் அமைக்க வேண்டிய அவசியம் குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி நிர்வாகத்துடன் இணைந்து ஆய்வு செய்து, வழிவகை இருப்பின் மீன் விற்பனை நிலையம் அமைத்துத் தர தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

தூண்டில் வளைவு

வினா எண் 1798—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், பழவேற்காடு பகுதியில் உள்ள முகத்துவாரத்தில் தூண்டில் வளைவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தினை தூர்வாரி தூண்டில் வளைவு அமைப்பது தொடர்பாக அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொன்னேரி தொகுதி, பொன்னேரி வட்டம், பழவேற்காடு ஏரி முகத்துவாரத்தை நிரந்தரமாக நிலைப்படுத்தும் பணிக்காக ஒன்றிய அரசின் அனுமதி கிடைக்கப்பெற்றதும் பழவேற்காடு பகுதியில் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டு முகத்துவாரம் நிலைப்படுத்தப்படும்.

3—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 3083—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா***—**

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், வீரமங்கலம் கிராமத்தில் புதியதாக கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம், வீரமங்கலம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2023 ஏப்ரல் 21

4—

கால்நடை ஆராய்ச்சி மையம்

வினா எண் 3094—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், புதுக்கோட்டை கிராமத்தில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, தூத்துக்குடி ஒன்றியம், புதுக்கோட்டை கிராமத்தில் கால்நடை ஆராய்ச்சி மையம் அமைக்க அவசியம் ஏதும் தற்போது எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

5—

மீன் விதைப் பண்ணைகள்

வினா எண் 3150—திரு. கோ. ஐயப்பன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடலூர் தொகுதி, கடலூரில் மீன் விதைப் பண்ணைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) கடலூர் தொகுதியில் பின்வரும் அரசு மீன் விதைப் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன:

1. லால்பேட்டை அரசு பழைய மீன் விதை வளர்ப்பு பண்ணை

2. லால்பேட்டை அரசு புதிய மீன் விதை வளர்ப்பு பண்ணை

3. அகரம் அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை

மேற்படி அரசு மீன் விதை பண்ணைகள்மூலம் ஆண்டொன்றிற்கு 41 இலட்சம் மீன் விரலிகள் உற்பத்தி செய்யப்பட்டு, கடலூர் மற்றும் அருகாமையிலுள்ள மாவட்ட மீன் வளர்ப்போருக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், ஒன்றிய அரசின் நீலப்புரட்சி திட்டத்தின்கீழ் 2 தனியார் மீன்குஞ்சு பொரிப்பகங்கள் அமைக்கப்பட்டு, இதன்மூலம் ஆண்டொன்றிற்கு 50 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டம், லால்பேட்டையில் ரூ.500.00 இலட்சம் செலவினத்தில் மீன் விதை வங்கி அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(ஆ) பிரதம மந்திரி மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டம், லால்பேட்டையில் ரூ.500.00 இலட்சம் செலவினத்தில் மீன் விதை வங்கி அமைத்திட நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீடு பெறப்பட்டவுடன் மீன் விதை வங்கி அமைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

6—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3672—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பழைய எருமைவெட்டி பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, பழைய எருமைவெட்டி பாளையம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், பழைய எருமைவெட்டி பாளையம் ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000-க்கும் குறைவாக அதாவது 2,043 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 3673—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஆங்காடு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், ஆங்காடு கிராமத்தில் கால்நடை மருந்தகம் அரசு வரையறைகளின்படி நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடை கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடை கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். ஆங்காடு கிராமத்தில் 1,676 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 21]

8—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 4279—திரு. பால் மனோஜ் பாண்டியன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், காவூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, காவூர் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ஆலங்குளம் தொகுதி, காவூர் கிராமத்தில் கால்நடை அலகுகள் 119 மட்டுமே உள்ளதால் அங்கு கால்நடை கிளை நிலையம் துவக்கிடவும் சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 7393—திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, ஏகனாபுரம் ஊராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி கால்நடை மருத்துவமனை நேரடியாக துவக்க இயலாது. கால்நடை அலகுகளின் அடிப்படையில் கால்நடை கிளை நிலையம் முதற்கட்டமாக துவக்கப்படும். கால்நடை கிளை நிலையம் அமைக்க 3,000 அலகுகள் இருக்க வேண்டும். 5,000 கால்நடை அலகுகள் உள்ள இடங்களில் கால்நடை கிளை நிலையம், கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். ஏகனாபுரம் ஊராட்சியில் 313 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளதால் அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 9712—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) பெண்ணாகரம் தொகுதி, செல்லியம்பட்டி ஊராட்சி, வரகூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) பெண்ணாகரம் தொகுதி, செல்லியம்பட்டி ஊராட்சி, வரகூர் கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளது.

(ஆ) அரசின் கொள்கை முடிவிற்கு உட்பட்டு பரிசீலிக்கப்படும்.

2023 ஏப்ரல் 21]

11—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 9921—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர் தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன்பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.–க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். அந்த கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேலாக இருக்க வேண்டும்.

திருவாரூர் தொகுதி, வடபாதிமங்கலம் கிராமத்தில் அரசு வரையறைகளின்படி, கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்கும் குறைவாக (அதாவது 359 மட்டுமே) உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

[*2023 ஏப்ரல் 21*

12—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 9922—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், திருராமேஸ்வரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், திருராமேஸ்வரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏதும் செயல்படவில்லை. கால்நடை கிளை நிலையம் மட்டுமே வாடகையில்லா பஞ்சாயத்து கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. தற்போது அதற்கு கட்டடம் கட்டும் திட்டம் ஏதுமில்லை. எனவே, உள்ளாட்சி/தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு பெறும்பட்சத்தில், திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், திருராமேஸ்வரம் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும்.

13—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 10105—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் ஊராட்சி, நாகர்கூடல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, நாகர்கூடல் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், நாகர்கூடல் ஊராட்சி, நாகர்கூடல் கிராமத்தில் 4,027 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

14—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 10152—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு 2021–22 ஆம் நிதியாண்டில் நபார்டு ஆர்.ஐ.டி.எப்.–27 திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கு பிரேரணை பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

15—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 11940—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 21

(அ) விராலிமலை தொகுதி, கல்குடி கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர் தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.–க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். அந்தக் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேலாக இருக்க வேண்டும்.

விராலிமலை தொகுதி, கல்குடி கிராமத்தில் அரசு வரையறைகளின்படி, கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்கும் குறைவாக (அதாவது 1,050 மட்டுமே) உள்ளதால், அங்கு கால்நடை கிளை நிலையத்தை, கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் சாத்தியக்கூறுகள் இல்லை.

16—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 11942—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, வேலூர் ஊராட்சி, கொன்னைகாட்டுபட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) தற்போது உள்ள அரசு வரையறைகளின்படி விராலிமலை தொகுதி, வேலூரர் ஊராட்சி, கொன்னைகாட்டுபட்டியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

17—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 11962—திரு. க.சொ.க. கண்ணன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) ஜெயங்கொண்டம் தொகுதி, வரதராஜன்பேட்டை பேரூராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன.

(ஆ) அரசு கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

18—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 12152—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பாவந்தூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, பாவந்தூர் ஊராட்சியில் நேரடியாக கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. ரிஷிவந்தியம் தொகுதி, பாவந்தூர் ஊராட்சியில் 5,666 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

19—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 14223—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சாமிசெட்டிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, சாமிசெட்டிப்பட்டியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தருமபுரி தொகுதி, சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, சாமிசெட்டிப்பட்டியில்

2023 ஏப்ரல் 21]

3,099 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளது. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

20—

மீன் பதப்படுத்தும் மையம்

வினா எண் 14305—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், தங்கச்சிமடம் கிராமத்தில் கடல் உணவுகளை பதப்படுத்தி ஏற்றுமதி செய்ய அதிநவீன மீன் பதப்படுத்தும் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 770 மீன்பிடி விசை படகுகள் மற்றும் மண்டபம் பகுதியைச் சேர்ந்த 550 விசை படகுகள்மூலம் மீன் பிடிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி மீன்பிடி விசைபடகுகள்மூலம் பிடிக்கப்படும் மீன்களில் ஏற்றுமதிக்கு உகந்த மீன்களான வாவல், கணவாய் மற்றும் பாறை வகை மீன்கள் ஆண்டொன்றுக்கு சராசரியாக 1,500 டன் பிடிக்கப்படுகிறது. இராமேஸ்வரம் மற்றும் மண்டபம் சரக பகுதிகளில் பிடிக்கப்படும் ஏற்றுமதிக்கு உகந்த மீன்கள் ஏற்றுமதியாளர்களால் கொள்முதல் செய்யப்பட்டு மண்டபம் பகுதியில் அமைந்துள்ள மீன்பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தனியார் நிறுவனங்களான M/s Baby Marine Seafood Pvt. Ltd., M/s Liberty Seafood, M/s Neela Seafood *மற்றும்* M/s Kadalkanni Seafoods *ஆகிய மீன் பதனிடும்*

[*2023 ஏப்ரல் 21*

தொழிற்சாலைகள்மூலம் முறையாக பதனிடப்பட்டு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறையின்மூலம் தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ள குந்துக்கல் மீன் இறங்கு தள வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன்கள் பதப்படுத்தும் நிலையம் தங்கச்சிமடம் உட்பட அதன் அருகாமையில் உள்ள மீனவ கிராமங்கள் பயன்பெறும்வகையில் மீன் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கான உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டுள்ளது. குந்துக்கல் மீன் இறங்குதள வளாகத்தில் உள்ள மீன்பதப்படுத்தும் நிலையத்தை தங்கச்சிமடம் பகுதி மீனவர்கள் தங்களுடைய மீன்களை பதப்படுத்திக்கொள்ள மீன்வளத் துறையின்மூலம் அனுமதி வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தங்கச்சிமடம் மீனவ கிராமப் பகுதியில் பிடிக்கப்படும் ஏற்றுமதிக்கு உகந்த மீன்களைக் கையாள தற்போது குந்துக்கல் மீன் இறங்குதள வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மீன்கள் பதப்படுத்தும் நிலையம் போதுமானதாக அமைந்துள்ளது. எனவே, தங்கச்சிமடம் மீனவ கிராமத்தின் சுற்றுப்புறப் பகுதியில் போதிய எண்ணிக்கையில் தனியார் மீன் பதனிடும் தொழிற்சாலை மற்றும் அரசு கட்டுப்பாட்டில் உள்ள மீன் பதப்படுத்தும் நிலையம் உள்ள காரணத்தினால் தங்கச்சிமடம் மீனவ கிராமத்திற்கு தனியாக கடல் உணவுகளைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கான அதிநவீன மீன் பதப்படுத்தும் மையம் அமைப்பதற்கான சூழ்நிலை எழவில்லை.

21—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 15523—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பெரியபாப்பனூத்து ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பெரியபாப்பனூத்து கிராமம் பகுதியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. மடத்துக்குளம் தொகுதி, பெரியபாப்பனூத்து கிராமத்தில் 3,087 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு முதற்கட்டமாக கால்நடை கிளை நிலையம் துவக்கிட சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே, இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசீலிக்கப்படும்.

22—

மீன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 28637—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரையில் மீன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரையில் மீன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

[2023 ஏப்ரல் 21

23—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38115—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியம், பருத்திக்குடி ஊராட்சியில் பகுதிநேர கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டு வரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ.–க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். அந்தக் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேலாக இருக்க வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, திருவிடைமருதூர் தொகுதி, திருவிடைமருதூர் ஊராட்சி, பருத்திக்குடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 21]

24—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38340—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) திருவையாறு தொகுதி, குருவாடிப்பட்டி கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, குருவாடிப்பட்டி கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

25—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38343—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) திருவையாறு தொகுதி, வீரசிங்கம்பேட்டை கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, வீரசிங்கம்பேட்டை கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

[2023 ஏப்ரல் 21

26—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38347—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, நாகத்தி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, நாகத்தி ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

27—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 38348—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, ராஜகிரி ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருவையாறு தொகுதி, ராஜகிரி ஊராட்சியில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

28—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 38826—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

திருத்துறைப்பூண்டி தொகுதி, மருதவனம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர் தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ–க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். அந்தக் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேலாக இருக்க வேண்டும்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, மருதவனம் ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்கும் குறைவாக,

[*2023 ஏப்ரல் 21*

அதாவது, 371 மட்டுமே உள்ளதால் தற்போது நடைமுறையில் உள்ள அரசு வரையறைகளின்படி, திருத்துறைப்பூண்டி தொகுதி, மருதவனம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

29—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 39025—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, தருமபுரி வட்டம், ஏ. கொல்லஅள்ளி ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு, ஏற்கெனவே கால்நடை மருந்தகம் செயல்பட்டு வரும்பட்சத்தில் அதனைக் கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்த இயலும். மேலும், கால்நடை அலகுகள் 5,000–க்கும் அதிகமாகவும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 5 கி.மீ–க்கு மேல் இருக்கும்பட்சத்தில், புதியதாக கால்நடை மருந்தகம் அமைக்கப்படும். தருமபுரி தொகுதி, தருமபுரி வட்டம், ஏ.கொல்லஅள்ளி ஊராட்சி பகுதியில் கால்நடை மருத்துவமனை துவக்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. தருமபுரி தொகுதி, தருமபுரி வட்டம், ஏ.கொல்லஅள்ளி ஊராட்சியில் கால்நடை அலகுகளின் எண்ணிக்கை 3,000–க்கும் அதிகமாக, அதாவது, 3,420 உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ–க்கு மேல் உள்ளதாலும், முதற்கட்டமாக புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட இயலும்.

2023 ஏப்ரல் 21]

30—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 44365—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், ஆலகிராமம் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர், தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–த்திற்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ–க்கு மேல் இருந்தால் அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். அந்தக் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேலாக இருக்க வேண்டும்.

ஆலகிராமம் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் ஏதும் இதுவரை தோற்றுவிக்கப்படாத நிலையிலும், ஆலகிராமம் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் (அதாவது 6,989) அதிகமாக உள்ளதாலும், அக்கிராமத்தைச் சுற்றியுள்ள கால்நடை நிலையங்களின் தூரம் 3 கி.மீ–க்கு மேல் உள்ளதாலும், அரசு வரையறைகளின்படி புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட வாய்ப்புள்ளது. இது அரசின் கொள்கை முடிவிற்குட்பட்டு பரிசிலிக்கப்படும்.

[2023 ஏப்ரல் 21

31—

தீவனப் பயிர் சாகுபடி திட்டம்

வினா எண் 48249—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ஆலங்கோட்டை கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ள 10 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தீவனப் பயிர் சாகுபடி திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

ஆம். மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி ஒன்றியம், ஆலங்கோட்டை கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ள 10 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலத்தில் மாநில தீவன அபிவிருத்தி திட்டத்தின்கீழ் தீவனப் பயிர் சாகுபடி செய்ய சர்வே எண் 385, 386 மற்றும் 389–ல் இடம் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

32—

கால்நடை மருத்துவமனை

வினா எண் 49739—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்தங்கூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

அரசு வரையறைகளின்படி, கால்நடை கிளை நிலையம்தான் முதலில் துவக்கப்படுகிறது. பின்னர் தகுதிக்கேற்ப அக்கிளை நிலையம், கால்நடை மருந்தகமாகவும், அதன் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படுகிறது. கால்நடை கிளை நிலையம் அமைக்க கோரும் கிராமத்தில்/பகுதியில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000–த்திற்கு அதிகமாகவும், அப்பகுதியைச்சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை கிளை நிலையங்களுக்கும் இடைப்பட்ட தொலைவு 3 கி.மீ–க்கு அதிகமாக இருக்குமானால், அங்கு ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும். பின்னர் அங்குள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 5,000–க்கும் மேல் அதிகரிக்கும்பட்சத்தில், அப்பகுதியைச் சுற்றி செயல்பட்டுவரும் கால்நடை நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 5 கி.மீ–க்கு மேல் இருந்தால், அக்கிளை நிலையம் கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்தப்படும். அந்தக் கால்நடை மருந்தகம், கால்நடை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40–க்கும் மேலாக இருக்க வேண்டும்.

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்தங்கூர் ஊராட்சியில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் குறைவாக (அதாவது 216) உள்ளதால், அங்கு கால்நடை மருத்துவமனை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

33—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 52576—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம், தொண்டியக்காடு கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை ஒன்றியம், தொண்டியக்காடு கிராமத்தில் புதிய கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

34—

கால்நடை மருத்துவக் கல்லூரி

வினா எண் 52577—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமானில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, வலங்கைமானில் கால்நடை மருத்துவக் கல்லூரி அமைக்க அவசியம் ஏதும் தற்போது எழவில்லை.

35—

மீன் விற்பனை அங்காடி

வினா எண் 53157—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, நீலாங்கரை பகுதியில் வலைகளைப் பின்னும் கூடம் மற்றும் நவீன முறையில் மீன் விற்பனை அங்காடி கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, நீலாங்கரை பகுதியில் போதிய இட வசதி இல்லாததால் வலை பின்னும் கூடம் அமைத்திட வழிவகையில்லை. மேலும், நீலாங்கரை கிழக்கு கடற்கரை சாலையில் மீன் விற்பனை அங்காடி ஏற்கெனவே நல்ல நிலையில் செயல்பட்டு வருவதால் புதியதாக மீன் அங்காடி அமைத்திட அவசியம் எழவில்லை.

36—

மீன் விற்பனை அங்காடி

வினா எண் 53161—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மீன்வளம்-மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, கொட்டிவாக்கம் பகுதியில் வலைகளைப் பின்னும் கூடம் மற்றும் நவீன முறையில் மீன் விற்பனை அங்காடி கட்ட அரசு ஆவன செய்யுமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, கொட்டிவாக்கம் பகுதியில் இடம் தேர்வு செய்து வலை பின்னும் கூடம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பகுதிக்குட்பட்ட கிழக்கு கடற்கரை சாலையில் ஏற்கெனவே ஒரு மீன் விற்பனை அங்காடி அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், இம்மீன் அங்காடியே கொட்டிவாக்கம் பகுதி மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்கிறது. எனவே, இப்பகுதியில் மீன் விற்பனை அங்காடி அமைக்க அவசியம் எழாது.

[2023 ஏப்ரல் 21

37—

கால்நடை மருந்தகம்

வினா எண் 57870—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலம் தொகுதி, மயிலம் ஒன்றியம், வீடூர் கிராமத்தில் கால்நடை மருந்தகம் தோற்றுவிக்கப்படாத நிலையில் அங்கு கட்டடம் கட்டுவதற்கான வினா எழவில்லை.

38—

கால்நடை கிளை நிலையம்

வினா எண் 59028—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், திருக்களர் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், திருக்களர் ஊராட்சியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 21]

39—

கால்நடை ஆராய்ச்சி நிலையம்

வினா எண் 59138—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் புதிய கால்நடை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அவசியம் ஏதும் தற்போது எழவில்லை.

40—

புதிய கட்டடம்

வினா எண் 62738—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்– மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள கால்நடை கிளை நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்— மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், மழவராயநல்லூர் ஊராட்சியில் பழுதடைந்துள்ள கால்நடை கிளை நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

[2023 ஏப்ரல் 21

41—

மீன்பிடி துறைமுகம்

வினா எண் 62742—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, பேட்டையில் மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, பேட்டையில் தல ஆய்வு செய்ததில் மீன்பிடி துறைமுகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

42—

பெயர் சூட்டுதல்

வினா எண் 62926—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரத்தில் உள்ள கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பெயரைச் சூட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்—மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

மாதவரத்தில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் பெயரைச் சூட்டுவது அரசின் கொள்கை முடிவினைச் சார்ந்தது.

43—

மீனவர் கூட்டுறவுச் சங்கம்

வினா எண் 69458—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, ஒகேனக்கல் காவேரி ஆற்றில் மீன் பிடிப்பவர்களுக்கு மீனவர் கூட்டுறவு சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரம் பகுதியில் ஏற்கெனவே எப்.எம்.ஆர்.2 பெண்ணாகரம் வட்ட மீனவர் கூட்டுறவு சங்கம் 21–2–1987 முதல் பதிவு செய்யப்பட்டு நாகமரை, ஒகேனக்கல், ஊட்டமலை, மண்ணேரி, மாக்கனூர், இண்டூர், நாகாவதி அணை மற்றும் தின்னப்பட்டி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி 920 மீனவ உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி, இக்கூட்டுறவு சங்கத்தில் ஒகேனக்கல் காவேரி ஆற்றில் மீன்பிடிக்கும் 100–க்கும் மேற்பட்ட மீனவர்களும் உறுப்பினர்களாக சேர்ந்து பயனடைந்து வருவதால் பெண்ணாகரம் தொகுதி ஒகேனக்கல் காவேரி ஆற்றில் மீன்பிடிப்பவர்களுக்கென புதியதாக மீனவர் கூட்டுறவு சங்கம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

44—

கூடுதல் கட்டடம்

வினா எண் 1362—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, தரமணி சாலையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதியை விரிவாக்கம் செய்து, கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தரமணி சாலையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் விடுதிகள் ஏதும் செயல்படவில்லை. எனவே, இத்துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத விடுதியினை விரிவாக்கம் செய்து கூடுதல் கட்டடம் கட்டுவதற்கான வினா எழவில்லை.

45—

காதி கிராஃப்ட் அங்காடி

வினா எண் 22051—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூரில் காதி கிராஃப்ட் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை கோயில் அருகில் உள்ள காதி கிராப்ஃட்–ல் கதர், பட்டு, சோப்பு, தேன் மற்றும் காலணிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. மேலும், அம்மாவட்டத்திலுள்ள அரசு அலுவலகங்களில் பண்டிகைக் காலங்களில் தற்காலிக கதர் அங்காடிகள் அமைத்து கதர் மற்றும் பனைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், மேலும் பொது விநியோகத் திட்ட அங்காடிகளில் சோப்பு வகைகளும், பனை வெல்லமும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. எனவே, போளூரில் காதி கிராப்ஃட் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21]

46—

தொழிற் கருவிகள்

வினா எண் 48872—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டத்தில் முடிதிருத்துவோர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் தொழிற் கருவிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:

இத்துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வந்த முடிதிருத்தும் கருவிகள் வழங்கும் திட்டம் பயனாளிகளிடம் போதிய வரவேற்பு இல்லாத காரணத்தால், அரசாணை எண் 23, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, நாள் 29–5–2002–ன்படி 2002–2003 ஆம் ஆண்டு முதல் தொடராமல் கைவிடப்பட்டது. எனவே, சேலம் மாவட்டத்தில் முடிதிருத்துவோர்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின்கீழ் தொழிற் கருவிகள் வழங்க வழிவகை இல்லை.

47—

பொழுதுபோக்கு இடங்கள்

வினா எண் 2220—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாகப்பட்டினம் நகராட்சி, நாகப்பட்டினம் மற்றும் நாகூர் கடற்கரைகள் முக்கிய பொழுதுபோக்கு இடங்களாக அமைந்துள்ளன. இந்த 2 கடற்கரைகளிலும் உள்கட்டமைப்பை மேம்படுத்த 3 கோடி ரூபாயில் (தற்போது ரூ.6 கோடியில் திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது) மாவட்ட ஆட்சித் தலைவரால் சுற்றுலா ஆணையருக்கு 26–8–2020 அன்று மதிப்பீடு அனுப்பப்பட்டுள்ளது. இதற்கு உடனடியாக நிர்வாக அனுமதியும் நிதி ஒதுக்கீடும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினத்திலிருந்து சுமார் 7 கி.மீ. தொலைவில் நாகூர் கடற்கரை அமைந்துள்ளது. நாகப்பட்டினம் நகராட்சியில் உள்ள நாகப்பட்டினம் மற்றும் நாகூர் கடற்கரைகளில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரிய 26-8-2020 நாளிட்ட நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம்மூலம் கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் சுற்றுலா இயக்குநர் அலுவலகத்தில் பெறப்பட்டது.

மேற்காண் பொருள் தொடர்பாக கருத்துரு பரிசீலிக்கப்பட்டதில், அரசாணை நிலை எண் 135, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 7-6-2017-ல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி இல்லாததால், திருத்திய கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகளை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு சுற்றுலா இயக்குநர் அலுவலக கடிதம் (கடித எண் 5437/திமவ-2/2021, நாள் 28-9-2021) மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காண் கருத்துரு ஏதும் சுற்றுலா இயக்ககத்தில் நிலுவையில் இல்லை என தெரிவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

*மேலும், இப்பொருள் தொடர்பான திருத்திய கருத்துருவை 2021-2022 ஆம் நிதியாண்டில் பரிசீலிக்க ஏதுவாக மேற்காண் அரசாணையில் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, கருத்துரு மற்றும் திட்ட மதிப்பீடுகள் மாவட்ட ஆட்சித் தலைவர், நாகப்பட்டினம் அவர்களின் பரிந்துரையுடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. இருப்பினும், நடப்பாண்டில் மேற்காண் திட்டத்திற்கு திருத்தப்பட்ட விலை விகிதத்தின் (*Revised Schedule rates*) அடிப்படையில், அரசாணை நிலை எண் 155, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள் 3-11-2021-ன்படி, விரிவான திட்ட அறிக்கை மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின், அத்திட்ட அறிக்கை சுற்றுலாத் துறையால் பரிசீலிக்கப்படும்.*

2023 ஏப்ரல் 21]

48—

அரண்மனை சீரமைப்பு

வினா எண் 7652—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கன்னியாகுமரி மாவட்ட இரணியல் அரண்மனையைப் புதுப்பித்து சுற்றுலா மையமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

இரணியல் அரண்மனை கன்னியாகுமரியிலிருந்து சுமார் 35 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. இரணியல் அரண்மனை கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிர்வாகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அரசின் நிதி ஒப்பளிப்புமூலம் கன்னியாகுமரி மாவட்ட திருக்கோயில்கள் நிர்வாகத்தின் வாயிலாக ரூ.3.85 கோடியில் இந்த அரண்மனை புனரமைக்கப்பட்டு வருகிறது.

49—

தமிழ்நாடு ஓட்டல் சீரமைப்பு

வினா எண் 12729—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பாம்பன் பாலம் பூங்காவைப் புனரமைக்கவும், மண்டபத்திலுள்ள தமிழ்நாடு ஓட்டலைப் புனரமைக்கவும், பயன்பாட்டிற்குக் கொண்டுவரவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பாம்பன் பாலம் பூங்காவிற்கு 28–12–2021 அன்று

[2023 ஏப்ரல் 21

15-வது நிதிக் குழு மூலமாக ரூ.15.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பேவர் பிளாக் போடப்பட்டது. 1-2-2022 அன்று பொது நிதியில் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு கழிப்பறை புனரமைக்கப்பட்டது. சிறுவர் பூங்காவிற்கு விளையாட்டுப் பொருட்கள் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் வாங்கப்பட்டு சிறுவர் பூங்கா 13-10-2022 அன்று புனரமைக்கப்பட்டது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் வெல்னஸ் ரிசார்ட் (Wellness Resort) மண்டபம் ஊராட்சி ஒன்றியத்தில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

50—

கம்பிவட ஊர்தி

வினா எண் 12973—திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் தொகுதி, உதகமண்டலத்தில் படகு இல்லம் முதல் தொட்டபெட்டா வரை கம்பிவட ஊர்தி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊட்டி என்று அழைக்கப்படும் உதகமண்டலம் "மலைகளின் அரசி" என்று அழைக்கப்படுகிறது. இது கடல் மட்டத்திலிருந்து சுமார் 2,286 மீட்டர் உயரத்தில் உள்ளது.

உதகமண்டலம் படகு இல்லத்திலிருந்து தொட்டபெட்டா வரை கம்பிவட ஊர்தி அமைப்பது தொடர்பாக திட்டங்களின் தேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த பின்னர் முடிவெடுக்கப்படும். சுற்றுலாத் தலங்களில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள அரசின் வழிகாட்டுதல்கள் நெறிமுறைகளின்படி, பணிகளைச் செயல்படுத்தும் தொடர்புடையத் துறையின்மூலம், கருத்துரு மற்றும் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு,

2023 ஏப்ரல் 21]

மாவட்ட ஆட்சியரின் பரிந்துரையுடன் பெறப்படுமாயின் சுற்றுலாத் துறையின் நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும்.

51—

கூடுதல் பேருந்துகள்

வினா எண் 15315—திரு. இரா அருள்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏற்காடு பேருந்து நிலையத்திலிருந்து மஞ்சக்குட்டை, வெள்ளகடை, காவேரி பீக், செம்மநத்தம், நாகலூர் வழியாக மீண்டும் ஏற்காடு வரை மலை வளங்களைக் கண்டு களிக்கவும் சுற்றுலாவை மேம்படுத்தவும் விடுமுறை நாட்களில் கூடுதல் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

ஏற்காடு பேருந்து நிலையத்திலிருந்து, ஏற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள சுற்றுலா தலங்களான மஞ்சக்குட்டை, வெள்ளகடை, காவேரி பீக், செம்மநத்தம், நாகலூர் வரை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகமே பேருந்துகளை இயக்கி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் ஏற்காடு பேருந்து நிலையத்திலிருந்து எவ்வித பேருந்துகளும் இயக்கப்படவில்லை.

ஓட்டல் தமிழ்நாடு, ஏற்காட்டிலிருந்து ஒருநாள் ஏற்காடு சுற்றுலாவை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து சாத்தியக்கூறுகள் இருக்கும்பட்சத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்மூலம் இயக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

52—

விற்பனை மையம்

வினா எண் 15324—திரு. இரா. அருள்: *மாண்புமிகு சுற்றுலா துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஏற்காடு ரோஜா பூங்காவை, ஊட்டி பூங்காவைப்போல் மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகரிக்கவும், ரோஜா கன்றுகள் விற்பனை செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம், ஏற்காடு ரோஜா பூங்கா, ஏற்காடு படகு இல்லத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இப்பூங்கா தமிழ்நாடு அரசு தோட்டக்கலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது.

சேலம் மாவட்டம், ஏற்காடு ரோஜா பூங்காவை, ஊட்டி பூங்காவைப்போல் மேம்படுத்துதல் தமிழ்நாடு அரசின் தோட்டக்கலைத் துறை சார்ந்த பொருளாகும். தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறைமூலம் ஏற்காடு ரோஜா பூங்கா உள்ளிட்ட சுற்றுலாத் தலங்கள் குறித்து அவ்வப்போது சுற்றுலா விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன. இதன் பயனாக இவ்விடங்களுக்கு சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாக அதிகரித்துள்ளது.

ரோஜா பூங்காவில் ரோஜா கன்றுகள் விற்பனை செய்தல் தோட்டக்கலைத் துறையைச் சார்ந்ததாகும்.

53—

கட்டணத்தை முறைப்படுத்துதல்

வினா எண் 49154—திரு. இரா. அருள்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏற்காடு மஞ்சக்குட்டை பகுதியில் உள்ள சன் ஷைன் வ்யூ பாயிண்ட் (Sunshine view point) காண வரும் சுற்றுலாப் பயணிகளின் கட்டணத்தை முறைப்படுத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

ஏற்காட்டிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் சன் ஷைன் வ்யூ பாயிண்ட் அமைந்துள்ளது.

2023 ஏப்ரல் 21]

ஏற்காடு சிறந்த கோடை வாசஸ்தலமாக திகழ்கிறது. சராசரியாக ஆண்டிற்கு 20 இலட்சத்திற்கும் மேலான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் ஏற்காடு கோடை வாசஸ்தலத்திற்கு வந்து செல்கின்றனர். இது ஊரக வளர்ச்சித் துறை கட்டுப்பாட்டில் உள்ளது.

மேலும், மஞ்சக்குட்டை பகுதியில் உள்ள சன் ஷைன் வ்யூ பாயிண்ட் (Sunshine view point) *காண வரும் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்கப்படுவது இல்லை என வட்டார வளர்ச்சி அலுவலர், ஏற்காடு அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

54—

சுற்றுலாத் தலம்

வினா எண் 58109—திரு. எஸ். அம்பேத்குமார்: *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

வந்தவாசி நகரத்தில் சரித்திரம் வாய்ந்த வந்தவாசி கோட்டையை ஆக்கிரமித்துள்ள முட்களை அகற்றி, சீர்செய்து ஒலி, ஒளி அமைப்பை ஏற்படுத்தி அதைச் சுற்றுலாத் தலமாக அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், சுற்றுலாத் துறை அமைச்சர்:

வந்தவாசி கோட்டை திருவண்ணாமலையிலிருந்து 76 கி.மீ. தொலைவிலும், காஞ்சிபுரத்திலிருந்து 41 கி.மீ. தொலைவிலும், மாநில தலைமையிடமான சென்னையிலிருந்து 116 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. தற்போது இக்கோட்டையில் ஆக்கிரமித்துள்ள முட்களை அகற்றி அங்கு கண்டெடுக்கப்பட்ட பீரங்கி குண்டுகள் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளன.

இக்கோட்டை சீரமைத்த பிறகு சுற்றுலாப் பயணிகளின் வருகையைப்பொறுத்து, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரை மற்றும் மாநில தொல்லியல் துறையின் உரிய அனுமதியுடன் திட்ட மதிப்பீட்டுடன் கருத்துரு பெறப்பட்டால் சுற்றுலாத் துறையின் நிதிநிலையின் அடிப்படையில் ஒலி, ஒளி காட்சியகம் அமைக்க பரிசீலிக்கப்படும்.

[2023 ஏப்ரல் 21

55—

மின் கம்பங்கள்

வினா எண் 1639—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை நகர் பகுதியில் வடக்குப் பிரிவு மின்பகிர்மான வட்டம், வள்ளியப்பா நகர் பள்ளி வாசல் அருகில் சாலையின் நடுவே உள்ள உயரமூத்த மின் கம்பங்களை வேறு இடத்தில் மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகர் பகுதியில் வடக்குப் பிரிவு மின்பகிர்மான வட்டம், வள்ளியப்பா நகர் பள்ளிவாசல் அருகில் சாலையின் நடுவே உள்ள உயரமூத்த மின் கம்பங்களை வேறு இடத்தில் மாற்றியமைக்க புதுக்கோட்டை நகராட்சி ஆணையரிடம் விண்ணப்பம் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

56—

கூடுதல் மின்மாற்றி

வினா எண் 1940—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் தொழிற்பேட்டையில் உள்ள துணை மின் நிலையத்தில் கூடுதலாக மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆசனூர் தொழிற்பேட்டை பகுதியில் 110/33–1 துணை மின் நிலையம் நிறுவப்பட்டு

2023 ஏப்ரல் 21]

பயன்பாட்டில் உள்ளது. ஆசனூர் தொழிற்பேட்டை பகுதியில் தொழில் வளர்ச்சிக்கேற்ப எதிர்வரும் காலங்களில் இத்துணை மின் நிலையத்தில் கூடுதலாக மின்மாற்றிகள் அமைக்க மின் தொடரமைப்பு கழகம் முன்வரும்.

57—

ப்ரீபெய்டு ஸ்மார்ட் மீட்டர்

வினா எண் 3807—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தமிழகத்தில் ப்ரீபெய்டு ஸ்மார்ட் மீட்டர் பொருத்தும் திட்டம் முதலில் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்படவுள்ளது என்பதைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள அனைத்து தாழ்வழுத்த மின் நுகர்வோர்களுக்கும், விவசாயம் மற்றும் குடிசை இணைப்புகள் நீங்கலாக, முன் பணம் செலுத்தும் வசதி கொண்ட சீர்மிகு மின்னவிகளைப் (Smart Meters With Prepaid Functionality) *பொருத்தும் திட்டத்தினை ஒன்றிய அரசின், புதுப்பிக்கப்பட்ட விநியோகத் துறை* (RDSS) *திட்டத்தின்மூலம் செயல்படுத்த, தமிழ்நாடு அமைச்சரவை முடிவெடுத்துள்ளது.*

58—

துணை மின் நிலையம்

வினா எண் 4072—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதியில் ஜெக்கேரி ஊராட்சி, ஜெக்கேரி கிராமத்தில் 110/33 KV *திறன்கொண்ட துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் ஜெக்கேரி கிராமத்தில், ஜெக்கேரி 33/11 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு, இதற்குத் தேவையான நிலம் கண்டறியப்பட்டு, இந்நிலத்தைக் கையகப்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்யப்படும்.

59—

துணை மின் நிலையம்

வினா எண் 5309—திரு. R.D. சேகர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பூர் தொகுதி, கொடுங்கையூர், கண்ணதாசன் நகரில் 110/33 கி.வோ. திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பூர் தொகுதி, கொடுங்கையூர், கண்ணதாசன் நகரில் ஒரு புதிய 110/33 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி துணை மின் நிலையம் அமைக்க தொழில்நுட்ப சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 ஏப்ரல் 21]

60—

மின்மாற்றி

வினா எண் 7961—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மீஞ்சூர் சூரியா நகரில் கூடுதல் திறன்கொண்ட மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், மீஞ்சூர் சூரியா நகரில் கூடுதல் திறன் கொண்ட மின்மாற்றியினை விரைவில் அமைக்க உரிய நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

61—

இலவச மும்முனை மின்சாரம்

வினா எண் 9774—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களுக்கு தொடர்ந்து இலவச மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட அனைத்து கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் உள்ள விவசாய

[2023 ஏப்ரல் 21

மின் இணைப்புகளுக்கு இலவச மும்முனை மின்சாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.

62—

மின் உற்பத்தி

வினா எண் 10382—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்க புதிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

(i) தற்போது நடைபெற்றுவரும் அனல் மற்றும் புனல் மின் திட்டங்களை விரைவாக செயல்படுத்தி முடிப்பதன்மூலம் 3,960 மெகா வாட் அளவிற்கு புதிய மின் உற்பத்தி திறன் சேர்க்கப்படும்.

(ii) சென்னையில் அதிகரித்துவரும் மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும் மரபுசாரா எரிசக்தி நிர்வாகத்திற்கும் சிறு அளவிலான திறன்கொண்ட (18 முதல் 20 மெகா வாட்) அதிக எண்ணிகையிலான இயந்திரங்களைக்கொண்டு 2,000 மெகா வாட் அளவிற்கு எரிவாயு இயந்திர மின் திட்டம் சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவப்படும் எனவும் மற்றும் தமிழகம் முழுவதும் 4,000 மெகா வாட் சூரிய ஒளி மின் உற்பத்தி நிலையம் மற்றும் 2,000 மெகா வாட் திறனுள்ள மின்கலன் சேமிப்பு திட்டத்துடன்கூடிய "சூரிய மின் சக்தி பூங்கா" (Solar Power Park) தொழில்நுட்ப மற்றும் வர்த்தகரீதியான சாத்தியக்கூறின் அடிப்படையில் நிறுவப்படும் எனவும், 2021–2022 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்

2023 ஏப்ரல் 21]

துறை அமைச்சர் சட்டப் பேரவையில் அறிவித்துள்ளார். இதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.

63—

மின் விளக்கு வசதி

வினா எண் 12000—திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, நாமக்கல்–சேலம்–கரூர் தேசிய நெடுஞ்சாலை மற்றும் இணைப்புச் சாலையில் மின் விளக்கு வசதிகள் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

நாமக்கல் தொகுதி, நாமக்கல்–சேலம்–கரூர் தேசிய நெடுஞ்சாலை மற்றும் இணைப்புச் சாலையில் மின் விளக்கு வசதிகள் செய்ய ஆவன செய்யப்படும்.

64—

மின்மாற்றி

வினா எண் 22810—திரு. ப. சிவகுமார் (எ) தாயகம் கவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 70, எலிகண் தெருவில் மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 70 எலிகண் தெருவிற்கு ஏற்கெனவே அருந்ததி நகர் SS–I *500 கே.வி.ஏ. மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.*

அம்மின்மாற்றியிலுள்ள மின்பளுவைப் பிரித்து புதிதாக கோவிந்தன் தெரு SS–II–*250* KVA *மின்மாற்றி நிறுவப்பட்டு, எலிகண் தெருவிற்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் ஒரு புதிய மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.*

65—

புதிய மின்மாற்றி

வினா எண் 22831—திரு. ப. சிவகுமார் (எ) தாயகம் கவி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 72, வெங்கடேசன்புரம் நியூ காலனி குறுக்குத் தெருவில் புதியதாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) திரு.வி.க. நகர் தொகுதி, சென்னை மாநகராட்சி, வார்டு எண் 72, வெங்கடேசன்புரம் நியூ காலனிக்கு ஏற்கெனவே தாஸ் நகர் 500 கே.வி.ஏ. நவீன மின்மாற்றியிலிருந்து (*RMU*) மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.*

மேலும், வெங்கடேசன்புரம் நியூ காலனி பகுதியில் புதிதாக ஒரு 100 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 21]

66—

புதிய மின்மாற்றி

வினா எண் 38293—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சிப் பகுதியில் புதியதாக மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சிப் பகுதிக்கு ஏற்கெனவே விஜயநல்லூர் 250 கே.வி.ஏ. மின்மாற்றியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது.

நல்லூர் ஊராட்சிக்கென தனியாக புதிய நல்லூர் 100 கே.வி.ஏ. மின்மாற்றி நிறுவப்பட்டு, சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருவதால் புதியதாக மின்மாற்றி அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

67—

மும்முனை மின்சாரம்

வினா எண் 38377—திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராயபுரம் தொகுதி, 48-வது வட்டம், பார்த்தசாரதி தெருவிற்கு மும்முனை மின்சாரம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சென்னை, இராயபுரம் தொகுதி, 48-வது வட்டம், பார்த்தசாரதி தெருவிற்கு மும்முனை மின்சாரம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

68—

மின்மாற்றி அமைத்தல்

வினா எண் 38744—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பெல்லம்பள்ளி ஊராட்சி, பாலிகானூர் கிராமத்தில் வடமேற்கு தென்பெண்ணை ஆற்றங்கரையில் பைப்லைனில் மோட்டார் இயக்குவதற்கான மின்மாற்றி அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி தொகுதி, கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பெல்லம்பள்ளி ஊராட்சி, பாலிகானூர் கிராமத்தில் வடமேற்கு தென்பெண்ணை ஆற்றங்கரையில் பைப்லைனில் மோட்டார் இயக்குவதற்கான மின் இணைப்பு கோரும் விண்ணப்பம் பெறப்படும்பட்சத்தில் மின்மாற்றி அமைக்க வாரிய விதிமுறைகளுக்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

69—

புதைவடக் கம்பிகள்

வினா எண் 44076—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரம், அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் தேர் ஓடும் வீதிகளில் உள்ள மின்கம்பிகளைப் பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி அருள்மிகு ராஜகோபாலசுவாமி திருக்கோயிலின் தேர் ஓடும் வீதிகளில் உள்ள மின்கம்பிகளைப் பூமிக்கடியில் புதைவடங்களாக மாற்றியமைத்திட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இதற்கான நிருவாக அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் ஒப்பந்தம் கோரப்பட்டு, பணிகள் மேற்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

70—

மின்மாற்றிகள்

வினா எண் 49942—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், குளந்திரான்பட்டு களச்சன்காடு கிராமத்தில் பழுதடைந்துள்ள நரங்கியப்பட்டு SS-3, தீத்தான்விடுதி SS-4 ஆகிய இரண்டு மின்மாற்றிகளையும் சீரமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

கந்தர்வகோட்டை தொகுதி, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியம், குளந்திரான்பட்டு களச்சன்காடு கிராமத்தில் பழுதடைந்துள்ள நரங்கியப்பட்டு SS-3(M) 100 கே.வி.ஏ/22 கி.வோ. மின்மாற்றியானது 11-1-2022 அன்று புதிய மின்மாற்றி வைத்தும், பழுதடைந்த தீத்தான்விடுதி SS-4(M) 100 கே.வி.ஏ/22 கி.வோ. மின்மாற்றிக்கு

மாற்றாக வேறொரு மின்மாற்றி வைத்தும் மின்னூட்டம் கொடுக்கப்பட்டு, தற்போது களச்சன்காடு கிராமத்திற்கு சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

71—

பெயர் மாற்றம்

வினா எண் 52476—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விவசாயத்திற்கான புதிய மின் இணைப்பு வழங்குதல் மற்றும் பெயர் மாற்றம் செய்வதற்கான முறைகளை எளிமைப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விவசாயத்திற்கான புதிய மின் இணைப்பு வழங்குதல் மற்றும் பெயர் மாற்றம் செய்வதற்கான வழிமுறைகளை ஏற்கெனவே அரசு எளிமைப்படுத்தி உள்ளது.

72—

புதைவடக் கம்பிகள்

வினா எண் 53144—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, புழுதிவாக்கம் பகுதியில் உள்ள மின்கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட கிண்டி கோட்டத்தில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்ற 221.94 கோடி ரூபாய் மதிப்பில் ஒப்புதல் அளிக்கப்பட்டு ஒப்பந்தம் கோருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, புழுதிவாக்கம் பகுதியும் அடங்கும்.

73—

புதைவடக் கம்பிகள்

வினா எண் 53145—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், நன்மங்கலம் ஊராட்சி பகுதியில் உள்ள மின்கம்பிகளைப் புதைவடங்களாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:

சென்னை மாநகராட்சி பகுதிகளுக்குட்பட்ட தாம்பரம் கோட்டத்தில் உள்ள மேல்நிலை மின் கம்பிகளைப் புதைவடங்களாக மாற்ற கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் சோழிங்கநல்லூர் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, நன்மங்கலம் பகுதியும் அடங்கும்.

[2023 ஏப்ரல் 21

74—

கண்காட்சி மையம்

வினா எண் 423—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூரில் பின்னலாடை தொழிலை ஊக்குவிக்க, உள்நாட்டு பின்னலாடை சந்தை மற்றும் கண்காட்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் பின்னலாடை தொழிலை ஊக்குவிக்க உள்நாட்டு பின்னலாடை சந்தை மற்றும் கண்காட்சி மையம் அமைக்க திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம்மூலம் கோரிக்கைகள் பெறப்படும்போது அரசால் பரிசீலனை செய்யப்படும்.

75—

கைத்தறி விற்பனையகம்

வினா எண் 718—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி பகுதியில் கைத்தறி விற்பனையகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. ஆர். காந்தி, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது, சென்னையில் 15 கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி விற்பனையகங்கள் இயங்கி வருகின்றன. அதில்

2023 ஏப்ரல் 21]

வேளச்சேரி பகுதிக்கு மிக அருகில் சுமார் 2–3 கி.மீ. தொலைவில் மடிப்பாக்கம் பகுதியில் கோ–ஆப்டெக்ஸ் விற்பனையகம் ஒன்று இயங்கி வருகின்றது. எனவே, வேளச்சேரி பகுதியில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்கும் அவசியம் எழவில்லை.

76—

செவிலியர் பணியிடம் நிரப்புதல்

வினா எண் 203—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, சுவாமிமலை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிரந்தர செவிலியர் மற்றும் ஆய்வக நுட்புநர் பணியிடங்களை உருவாக்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் சுகாதாரப் பகுதி மாவட்டத்திலுள்ள சுவாமிமலை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தொகுப்பூதிய அடிப்படையில் 4 செவிலியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. தற்போது நான்கு செவிலியர்களும் சுகாதாரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே நிரந்தர செவிலியர் பணியிடம் இதுவரை ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது. எனவே, சுவாமிமலை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தர செவிலியர் பணியிடம் தோற்றுவிப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

சுவாமிமலை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆய்வக நுட்புநர் நிலை–III பணியிடம் உருவாக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[*2023 ஏப்ரல் 21*

77—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 233—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்போரூர் தொகுதியில் மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்பிற்கான கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்பு, அந்தந்த மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையுடன் இணைந்தே செயல்பட்டு வருகின்றது. மேலும், தற்போது திருப்போரூருக்கு மிக அருகில் உள்ள சென்னை மற்றும் செங்கல்பட்டு மாவட்டங்களில் உள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்புகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

எனவே, இனிவரும் ஆண்டுகளில், தேவைக்கேற்ப நிதிநிலையின் அடிப்படையில் மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்புகளுக்கான கல்லூரி இல்லாத மாவட்டங்களில் திருப்போரூர் மாவட்டம் உட்பட எஞ்சியுள்ள மாவட்டங்களில் புதியதாக மருத்துவம் சார்ந்த பட்டயப் படிப்பிற்கான கல்லூரி தொடங்குவதற்கு படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

78—

செவிலியர், மருத்துவர் நியமித்தல்

வினா எண் 438—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் ஒன்றியம், பெருமாநல்லூர் அரசு மருத்துவமனையில் படுக்கை வசதிகள் ஏற்படுத்திடவும், செவிலியர்,

2023 ஏப்ரல் 21]

மருத்துவர்களை நியமிக்கவும் மற்றும் உடற்கூறு மேற்கொள்ளும் அளவில் வசதிகளை ஏற்படுத்தவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3–2–2011 மற்றும் அரசாணை (நிலை) எண் 26, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 6–2–2013-ன்படி திருப்பூர் மாவட்டம் திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெருமாநல்லூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

பெருமாநல்லூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் 5 மருத்துவ அலுவலர்கள் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, 5 மருத்துவ அலுவலர்களும் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். காலமுறை ஊதியத்தில் ஒரு செவிலியர் பணியிடமும், தொகுப்பு ஊதியத்தின் அடிப்படையில் 4 செவிலியர் பணியிடங்களும் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன. தற்போது 4 செவிலியர்கள் பணியாற்றி வருகின்றனர். பெருமாநல்லூர் பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 20 கி.மீ. தொலைவில் திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இயங்கி வருகிறது. உடற்கூறு மேற்கொள்ளும் அளவில் வசதி அம்மருத்துவமனையில் உள்ளது.

79—

புதிய செவிலியர் கல்லூரி

வினா எண் 462—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் புதியதாக செவிலியர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் சட்டமன்றத் தொகுதி அருகில் உள்ள அரசு செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் 50 இருக்கைகள் கொண்ட செவிலியர் கல்லூரியும், 100 இருக்கைகள் கொண்ட செவிலியர் பயிற்சி பள்ளியும், சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரியில் 50 இருக்கைகள் கொண்ட செவிலியர் கல்லூரியும், 100 இருக்கைகள் கொண்ட செவிலியர் பயிற்சி பள்ளியும், வேலூர், அரசு வேலூர் மருத்துவக் கல்லூரியில் 100 இருக்கைகள் கொண்ட செவிலியர் பயிற்சி பள்ளியும், காஞ்சிபுரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 50 இருக்கைகள் கொண்ட செவிலியர் பயிற்சி பள்ளியும் இயங்கி வருகின்றன. எனவே, திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில் புதியதாக கல்லூரி தொடங்குவதற்கு படிப்படியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

80—

கட்டமைப்பு வசதிகள்

வினா எண் 463—திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியம், சோமாசிபாடி ஊராட்சியில் இயங்கிவரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருந்துகள் பாதுகாக்கும் அறை மற்றும் சுற்றுச்சுவர் கட்டவும், ஜெனரேட்டர் வசதி ஏற்படுத்தவும் அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பெண்ணாத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் சோமாசிபாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 21]

*சோமாசிபாடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேற்குப் பக்கம் சுற்றுச்சுவர் உள்ளது. மீதமுள்ள மூன்று பக்கங்களுக்கு சுற்றுச்சுவர் அமைக்கவும், மருந்துகள் பாதுகாக்கும் அறை ஏற்படுத்தவும் பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கீடு பெற்று சுற்றுச்சுவர் கட்டவும், மருந்துகள் பாதுகாக்கும் அறை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், இக்கூடுதல் சுகாதார நிலையத்திற்கு, மின்மாற்றி (*Invertor*) வசதி செய்யப்பட்டு நல்லமுறையில் இயங்கி வருகின்றது. ஜெனரேட்டர் வசதி தேசிய நலக் குழுமத்திடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று செய்து தரப்படும்.*

81—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 481—திரு. ப. அப்துல் சமது: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மணப்பாறை தொகுதி, மருங்காபுரி ஒன்றியம், வேம்பனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப் பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், வேம்பனூர் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் ஆவிக்காலபட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருச்சி மாவட்டம், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம் வேம்பனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

[2023 ஏப்ரல் 21

82—

புதிய கட்டடம்

வினா எண் 532—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், கட்டக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கட்டக்குடி கிராமத்தில் பேரையூர் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பேரையூர் துணை சுகாதார நிலைய கட்டடத்தில் சிறு சிறு பழுதுகள் இருந்ததன் காரணமாக 2017–2018 ஆம் நிதியாண்டில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூ.8.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பொதுப் பணித் துறைமூலம் கட்டக்குடி கிராமத்தில் உள்ள பேரையூர் துணை சுகாதார நிலையக் கட்டட பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பேரையூர் துணை சுகாதார நிலையக் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது. எனவே, கட்டக்குடி கிராமத்தில் உள்ள பேரையூர் துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை.

83—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 599—திரு. S.R. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம் தென் ஊராட்சியில் உள்ள சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி, மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப்பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அகரம் தென் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. அகரம் தென் ஊராட்சி புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் எட்டு ஆரம்ப சுகாதார நிலையங்களும், 2 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், அகரம் தென் ஊராட்சியிலிருந்து 1 கிலோ மீட்டர் தொலைவில் பதுவஞ்சேரி ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் குரோம்பேட்டை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம், அகரம் தென் ஊராட்சியில் உள்ள துணை சுகாதார நிலையத்தை ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த வழிவகை இல்லை.

84—

தாய்–சேய் நல விடுதிக் கட்டடம்

வினா எண் 2367—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, தாராசுரம் பேரூராட்சி, கருபலூர் காலனியில் உள்ள தாய்–சேய் நல விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஊராட்சி ஒன்றியத்தில் சுந்தரபெருமாள்கோவில் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் கருபலூர் காலனியில் தாராசுரம் 1 துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

தாராசுரம் 1 துணை சுகாதார நிலையக் கட்டடத்தின் ஒரு பகுதி பழுதடைந்துள்ளது. தற்பொழுது, துணை சுகாதார நிலையம், கட்டடத்தின் மறுபகுதியில் இயங்கி வருகிறது. இத்துணை சுகாதார நிலையக் கட்டடத்தினைப் பழுதுநீக்கம் செய்ய பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்டவுடன் முன்னுரிமை அடிப்படையில் நிதியொதுக்கப்பட்டு, தாராசுரம் 1 துணை சுகாதார நிலையக் கட்டடப் பழுதுபார்ப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

85—

மருத்துவக் கல்லூரி

வினா எண் 2474—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு மருத்துவக் கல்லூரி தொடங்குவது என்பது மாநில அரசின் கொள்கை முடிவாகும். தமிழக அரசானது மருத்துவக் கல்லூரி இல்லாத

2023 ஏப்ரல் 21]

மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதனடிப்படையில் மத்திய அரசின் நிதியுதவி திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் மாவட்டங்களில் புதியதாக 11 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகள் மத்திய–மாநில அரசின் பங்கீட்டின்படி இராமநாதபுரம், விருதுநகர், நீலகிரி, திண்டுக்கல், திருப்பூர், நாமக்கல், நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், கள்ளக்குறிச்சி மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 2021–2022 ஆம் கல்வியாண்டு முதல் மாணவர் சேர்க்கை தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும், வரும் ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரி இல்லாத மயிலாடுதுறை மாவட்டம் உட்பட எஞ்சிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரி தொடங்குவதற்கு படிப்படியாக விதிகளின்படி ஆய்வு மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

86—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 2947—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஒன்றியம், கதிரம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் கதிரம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்துதல் என்பது அரசின்

[*2023 ஏப்ரல் 21*

கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30–4–2007–ன்படி திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஆண்டியப்பனூர் பிரதான ஆரம்ப சுகாதார நிலையமும், அரசாணை (நிலை) எண் 52, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21–2–2014–ன்படி திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதூர்நாடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகளுடன்கூடிய மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. எனவே, கதிரம்பட்டி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

87—

MRI **ஸ்கேன்**

வினா எண் 2957—திரு. A. நல்லதம்பி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் MRI *ஸ்கேன் வசதி செய்ய அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் அரசு மருத்துவமனை 440 படுக்கை வசதிகள் மற்றும் பல்வேறு சிறப்புப் பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1,503 வெளிநோயாளிகளும், 283 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 521 பிரசவங்களும், 258 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 353 பெரிய மற்றும் 957 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 30,664 ஆய்வக பரிசோதனைகள், 314 எக்ஸ்–ரே, 560 யுஎஸ்ஜி, 315 இசிஜி,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21]

781 சிடி ஸ்கேன் எடுக்கப்பட்டு வருகின்றன. திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு, Programme Implementation Plan *(*PIP*) 2021–2022 ஆம் நிதியாண்டின்கீழ், ரூ.6.50 கோடி செலவில்* MRI *ஸ்கேன் கருவி வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

88—

மருத்துவமனை

வினா எண் 3033—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை முத்தனேந்தல் மருத்துவமனையைத் தரம் உயர்த்தி அறுவை சிகிச்சைப் பிரிவுடன் அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் பகுதியில், முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், மானாமதுரை தொகுதியிலேயே தஞ்சக்கூர் மற்றும் பெரிய கோட்டை ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 13 கி.மீ. தொலைவில் மானாமதுரை அரசு வட்ட மருத்துவமனை 68 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 401 வெளிநோயாளிகளும், 19 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மேலும், 28 கி.மீ. தூரத்தில் அனைத்து வசதிகளையும் கொண்ட சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. மானாமதுரை தொகுதியில், முத்தனேந்தல் பகுதியிலிருந்து

[*2023 ஏப்ரல் 21*

மிக அருகிலேயே அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மானாமதுரை அரசு வட்ட மருத்துவமனை மற்றும் சிவகங்கை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை செயல்பட்டு வருவதால், முத்தனேந்தல் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

89—

பன்நோக்கு மருத்துவமனை

வினா எண் 3064—திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சோழிங்கநல்லூர் தொகுதி, சோழிங்கநல்லூரில் பன்நோக்கு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னையில் போதுமான அளவு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு புறநகர் மருத்துவமனைகள், அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருந்தகங்கள், அரசு மருத்துவமனைகள் ஆகியவை செயல்பட்டு வருகின்றன. சென்னையைச் சுற்றிலும் 108 அவசர கால ஊர்திகள் தேவையான அளவு இருக்கின்றன. சோழிங்கநல்லூர் அருகிலேயே திருப்போரூர் அரசு மருத்துவமனை மற்றும் 213 படுக்கை வசதிகளுடன்கூடிய தாம்பரம் அரசு வட்ட மருத்துவமனை பல்வேறு சிறப்பு பிரிவுகளுடன் செயல்பட்டு வருகின்றன. தாம்பரம் மருத்துவமனையில் உள்ள தலைக்காய சிகிச்சை பிரிவை ரூ.10 கோடியில் மேம்படுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், உயர் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் பிற மருத்துவமனைகளில் இருந்து மேற்படி அரசு மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, சோழிங்கநல்லூர் தொகுதியில் பன்நோக்கு மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

90—

புதிய ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 3383—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறை தொகுதியில் உளுத்துக்குப்பை ஊராட்சியில் அல்லது அதன் அருகில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. உளுத்துக்குப்பை ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. உளுத்துக்குப்பை ஊராட்சியிலிருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் வில்லியநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையும் செயல்பட்டு வருவதால், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள உளுத்துக்குப்பை ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

91—

புதிய கட்டடம்

வினா எண் 3609—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 21

(அ) நன்னிலம் தொகுதி, வலங்கைமான் வட்டம் அரித்துவாரமங்கலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் ஊராட்சி ஒன்றியத்தில், அரித்துவாரமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரித்துவாரமங்கலம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்ள புறநோயாளிகள் பிரிவு கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளதால், தற்போது மகப்பேறு கட்டடத்தில் உள்ள நோயாளிகள் காத்திருப்பு அறையில் இயங்கி வருகிறது. பழுதடைந்த கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. தகுதி நீக்கச் சான்றிதழ் பெறப்பட்டவுடன், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

92—

புதிய கட்டடம்

வினா எண் 3628—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், கழுகூர் ஊராட்சியில் செயல்படாமல் மூடப்பட்டுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கரூர் மாவட்டம், தோகைமலை ஊராட்சி ஒன்றியம், தோகைமலை பிரதான/மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார

2023 ஏப்ரல் 21]

நிலையத்தின்கீழ் கழுகூர் ஊராட்சியில் அ. உடையாப்பட்டி துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அ. உடையாப்பட்டி துணை சுகாதார நிலையக் கட்டடம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. தற்போது அ. உடையாப்பட்டி துணை சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. பழுதடைந்த கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்கச் சான்றிதழ் பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, அ. உடையாப்பட்டி துணை சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

93—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 3629—திரு. இரா. மாணிக்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

குளித்தலை தொகுதி, பஞ்சப்பட்டி பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்தில் பஞ்சப்பட்டி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. கிருஷ்ணராயபுரம் ஒன்றியத்திலேயே கள்ளபள்ளி, செங்கல் மற்றும் வேப்பங்குடி ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. பஞ்சப்பட்டியிலிருந்து 20 கி.மீ. தொலைவில் 151 படுக்கை வசதிகள் கொண்ட குளித்தலை வட்ட அரசு மருத்துவமனை பல்வேறு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 439 வெளிநோயாளிகளும், 94 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, குளித்தலை தொகுதி, பஞ்சப்பட்டி பகுதியில் உள்ள

[2023 ஏப்ரல் 21

ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

94—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 3922—திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் அரசு மருத்துவமனை 204 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1,117 வெளிநோயாளிகளும், 200 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். தற்சமயம் இம்மருத்துவமனை 1.55 ஏக்கரில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த 10 கட்டடங்களுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள் பிரிவு, சீமாங், NBSU, விஷமுறிவு சிகிச்சைப் பிரிவு, அறுவை அரங்கம் ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனையில் இசிஜி, எக்ஸ்–ரே, ஸ்கேன், சிடி–ஸ்கேன், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி, சுற்றுச்சுவர், நவீன சமையல் அறை ஆகிய வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் கண் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளின் தேவையைக் கருத்தில்கொண்டு அறுவை அரங்கம், 22 படுக்கை வசதிகளுடன்கூடிய கண் சிகிச்சைப் பிரிவு ரூ.99.00 இலட்சத்தில் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இம்மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

95—

வட்ட மருத்துவமனை

வினா எண் 4171—திரு. G.V. மார்க்கண்டேயன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் வட்ட மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் அரசு மருத்துவமனை 56 படுக்கைகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 282 வெளிநோயாளிகள், 10 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதம் ஒன்றுக்கு சராசரியாக 5,055 ஆய்வக பரிசோதனை, 30 எக்ஸ்–ரே, 70 இசிஜி, 63 யு.எஸ்.ஜி., ஸ்கேன் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மாதம் ஒன்றுக்கு 11 பிரசவங்கள், 3 அறுவை சிகிச்சை பிரசவங்கள், 13 பெரிய மற்றும் 136 சிறிய வகை அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, தொற்றா நோய் சிகிச்சை, அவசர சிகிச்சை, அறுவை சிகிச்சை முன் மற்றும் பின் கவனிப்பு, வெளிநோயாளிகள் பிரிவு, சித்தா, தொழுநோய் சிகிச்சை, கொரோனா சிகிச்சை, மனநல நோய் சிகிச்சை, பல் சிகிச்சை, காசநோய் சிகிச்சை, ICTC மற்றும் யோகா போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், மின்னாக்கி, 108 ஆம்புலன்ஸ், சமையல் அறை, குடிநீர் போன்ற வசதிகள் உள்ளன. ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மட்டுமே ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்திற்கு ஏற்கெனவே கோவில்பட்டி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அனைத்து வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் வட்ட மருத்துவமனையை மாவட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

[2023 ஏப்ரல் 21

96—

கூடுதல் கட்டடம்

வினா எண் 4212—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனை 152 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 852 வெளிநோயாளிகளும், 86 உள் நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மேலும், தேசிய நலக் குழுமத்தின்மூலம் ரூ.175.00 இலட்சத்தில் சிடி–ஸ்கேன் கருவி, ரூ.16.99 இலட்சத்தில் 2 டையாலிசிஸ் கருவி, ENT *பிரிவுக்கு ரூ.8.00 இலட்சத்தில் கருவி, ரூ.2.50 இலட்சத்தில்* Day Care Chemotherapy *மற்றும் ரூ.15.00 இலட்சத்தில் அவசர சிகிச்சைக்கான கருவிகள்,* Palliative Care Unit-*ஐ மேம்படுத்த ரூ.15.00 இலட்சம், கண் சிகிச்சை பிரிவுக்கு ரூ.3.00 இலட்சத்தில் கருவிகள் போன்றவை ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனை ஆண்கள் மற்றும் பெண்களுக்கான புறநோயாளிகள் பிரிவு, ஆண்கள் மற்றும் பெண்கள் அறுவை சிகிச்சை முன் மற்றும் பின் கவனிப்புப் பிரிவு, பிரசவத்திற்கு முன் மற்றும் பின் கவனிப்புப் பிரிவு, குழந்தைகள் பிரிவு, பிரசவப் பிரிவு, குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைப் பிரிவு, பச்சிளங் குழந்தைகள் பிரிவு, தலைக்காய சிகிச்சைப் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு, விஷமுறிவு சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டப் பிரிவு ஆகியவை போதிய கட்டடங்களுடன் செயல்பட்டு வருகின்றன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட*

2023 ஏப்ரல் 21]

படுக்கை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். தற்போது இம்மருத்துவமனையில் உள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

97—

மருத்துவமனை

வினா எண் 4392—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குளச்சல் தொகுதி, குளச்சல் மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) குளச்சல் தொகுதி, குளச்சல் அரசு மருத்துவமனை 50 படுக்கைகள் கொண்ட வட்டம் சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 353 வெளிநோயாளிகளும், 41 உள்நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனை ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு, தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு மற்றும் குழந்தை நலப் பிரிவு, X-Ray, ECG, USG Scan *மற்றும் முழுமையான ஆய்வகம் ஆகிய வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். இம்மருத்துவமனையின் செயல்பாட்டிற்கேற்ப மருத்துவம், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்கள் மற்றும்*

வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பாக சேவையை வழங்கி வருகிறது. எனவே, குளச்சல் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

98—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 5231—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், பெருங்காவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) *ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

பெருங்காவூர் ஊராட்சி, சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் 5 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், பெருங்காவூர் ஊராட்சியிலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் பூதூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பெருங்காவூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.

2023 ஏப்ரல் 21]

99—

டயாலிசிஸ்

வினா எண் 5281—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அனைத்து வட்டத்திலும் உள்ள தலைமை மருத்துவமனைகளில் டயாலிசிஸ் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அனைத்து வட்டங்களிலும் உள்ள தலைமை மருத்துவமனைகளில் தொற்றா நோய் சிகிச்சைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இதில் சர்க்கரை நோய் மற்றும் இரத்த அழுத்த நோயாளிகள் உரிய சிகிச்சை பெறுகிறார்கள். அனைத்து நோயாளிகளுக்கும் டயாலிசிஸ் சிகிச்சை தேவையில்லை. மேலும், டயாலிசிஸ் சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. நோயாளிகளின் நலனைக் கருத்தில்கொண்டு மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரக கட்டுப்பாட்டின்கீழ் உள்ள இரண்டாம் நிலை மருத்துவமனைகளில் அனைத்து மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் சில வட்ட மருத்துவமனைகள் உட்பட 75 மருத்துவமனைகளில் டயாலிசிஸ் சிகிச்சை வழங்குவதற்கென 295 டயாலிசிஸ் கருவிகள் உள்ளன. இதன்மூலம் மாதமொன்றுக்கு சராசரியாக 1,729 நோயாளிகளுக்கு டயாலிசிஸ் சுழற்சி முறையில் 13,682 நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். தேவைக்கேற்ப பிற மருத்துவமனைகளுக்கும் இவ்வசதி வழங்கப்பட்டு வருகிறது.

100—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6870—திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா*—

(அ) திருப்பூர் வடக்கு தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், கணக்கம்பாளையத்திலுள்ள தாய்-சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. கணக்கம்பாளையம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் பெருமாநல்லூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருப்பூர் மாவட்டம், திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கணக்கம்பாளையம் கிராமத்திலுள்ள தாய்-சேய் நல விடுதியை ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 21]

பட்டியல்—15

1—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6871—திரு. K.N. விஜயகுமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர் வடக்கு தொகுதி, திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், காளிபாளையம் ஊராட்சி, காளிபாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோமீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

காளிபாளையம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. காளிபாளையம் கிராமம் தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 96,495 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே இயங்கி வருவதால் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள காளிபாளையம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 6924—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 21*

(அ) செங்கம் தொகுதி, தண்டாரம்பட்டு வட்டம், அல்லப்பனூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி சமவெளிப் பகுதியில் 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மலைப்பகுதியில் 20000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையிலும், இரு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (*Norms*) ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. அல்லப்பனூர் கிராமம் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. இவ்வூராட்சி ஒன்றிய மக்கள் தொகை 1,94,265 ஆகும். இவ்வூராட்சி ஒன்றியத்தில் ஏற்கெனவே 6 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மக்கள் தொகை அடிப்படையில் திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அல்லப்பனூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை இல்லை.*

3—

சுகாதார நிலையம்

வினா எண் 7077—திரு. J.L. ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ஆற்காடு தொகுதி, விளாப்பாக்கம் சுகாதார நிலையத்தை தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

30 படுக்கை வசதிகள் இல்லாத ஊராட்சி ஒன்றியத்தில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை தரம் உயர்த்துதல் என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 43, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 3–2–2011-ன்படி திமிரி ஊராட்சி ஒன்றியத்தில் திமிரி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், இதே ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள விளாப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

4—

மருத்துவ உபகரணங்கள்

வினா எண் 7197—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருத்தணி தொகுதி, திருத்தணியிலுள்ள அரசு மருத்துவமனைக்கு M.R.I. *ஸ்கேன்,* R.O. *வாட்டர் பிளாண்ட், சீவேஜ் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் மற்றும் இரத்த வங்கி அமைத்துத் தர அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, திருத்தணி அரசு மருத்துவமனை, 205 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 731 வெளிநோயாளிகளும், 108 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். MRF Limited, *இச்சிபுத்தூர்*

[*2023 ஏப்ரல் 21*

நிறுவனத்தின்மூலம் ரூ.25.00 இலட்சத்தில் X-Ray Machine with Computerized Radiography *உபகரணம் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது மற்றும் பயனாளிகள் காத்திருப்பு கூடம் கட்டப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.* MRI *ஸ்கேன் தற்பொழுது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சில மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.* MRI *ஸ்கேன் மூலமாக பரிசோதனை தேவைப்படும் நோயாளிகள் மிக மிக குறைவாகவே உள்ளதால், அருகில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். மேலும், இம்மருத்துவமனையில் 2* R.O. *பிளாண்ட் வசதி உள்ளது. கழிவுநீரை உரிய முறையில் அகற்றுவதற்கான வசதிகள் இம்மருத்துவமனையில் உள்ளது. எனவே, சீவேஜ் ட்ரீட்மெண்ட் பிளாண்ட் தற்சமயம் இம்மருத்துவமனைக்கு தேவையில்லை. இம்மருத்துவமனையில் இயங்கி வந்த இரத்த சேமிப்பு நிலையத்தை இரத்த வங்கியாக தரம் உயர்த்த தேசிய சுகாதார திட்டம்-* Programme Implementation plan *(*PIP*) 2021-2022-ன்கீழ் ரூ.49.96 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

5—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7205—திரு. S. சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஆலங்குளம் தொகுதி, இரா.கி.பேட்டை வட்டம், வெடியங்காடு ஊராட்சி, புச்சிரெட்டிபள்ளி ஊராட்சிகளில் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு

2023 ஏப்ரல் 21]

சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வெடியங்காடு ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வெடியங்காடு ஊராட்சியிலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் புன்னை (இராணிப்பேட்டை மாவட்டம்) ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், இரா.கி.பேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வெடியங்காடு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

புச்சிரெட்டிபள்ளி ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. புச்சிரெட்டிபள்ளி ஊராட்சியிலிருந்து 5 கிலோமீட்டர் தொலைவில் மத்தூர் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புச்சிரெட்டிபள்ளி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

6—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7285—திரு. இரா. அருள்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் ஒன்றியம், மல்லமூப்பம்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 21

மல்லமூப்பம்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. மல்லமூப்பம்பட்டி கிராமத்திலிருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் சர்க்கார்கொல்லப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், சேலம் மாவட்டம், சேலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மல்லமூப்பம்பட்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

7—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7345—திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குருவிகுளம் ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்தில் உள்ள குருவிகுளம் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக இயங்கி வருகிறது. மேலும், குருவிகுளத்திலிருந்து 16 கிலோ மீட்டரில் 186 படுக்கை மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய சங்கரன்கோவில் அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 851 வெளிநோயாளிகளும், 114 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். எனவே, குருவிகுளம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

8—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7356—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

எல்லாபுரம் ஒன்றியம் கன்னிகைபேரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோமீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

கன்னிகைப்பேர் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. கன்னிகைப்பேர் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் பெரியபாளையம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கன்னிகைப்பேர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

9—

பொது மருத்துவமனை

வினா எண் 7357—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் செயல்பட்டுவரும் அரசு பொது மருத்துவமனையை தரம் உயர்த்த அரசு முன்வருமா?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கும்மிடிப்பூண்டி பேரூராட்சியில் செயல்பட்டுவரும் கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனை 38 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது. மேலும், கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையிலிருந்து 17 கிலோ மீட்டரில் 150 படுக்கைகள் மற்றும் பல்வேறு வசதிகள் கொண்ட பொன்னேரி அரசு வட்ட மருத்துவமனையும், 18 கிலோ மீட்டரில் 64 படுக்கை வசதிகள் கொண்ட மாதவரம் அரசு வட்ட மருத்துவமனையும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. எனவே, கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

10—

கூடுதல் கட்டடங்கள்

வினா எண் 7360—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டி அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனை 38 படுக்கை வசதிகளுடன்கூடிய வட்ட மருத்துவமனையாக இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 672 வெளிநோயாளிகள், 35 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மாதமொன்றுக்கு சராசரியாக 3,230 ஆய்வகப் பரிசோதனைகளும், 26 எக்ஸ்ரேக்களும், 841 ECG, *42* USG *எடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு மாதமொன்றுக்கு சராசரியாக 8 பெரிய அறுவை சிகிச்சைகளும், 338 சிறிய அறுவை சிகிச்சைகளும், 13 பிரசவங்களும், 2 அறுவை சிகிச்சை பிரசவங்களும்*

2023 ஏப்ரல் 21]

நடைபெறுகின்றன. இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, சித்தா பிரிவு, தொற்றா நோய் சிகிச்சை போன்ற பிரிவுகள் உள்ளன. மேலும், 50 கே.வி. மின்னாக்கி வசதி, 108 அவசரகால ஊர்தி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் போன்ற வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையை விட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருகின்றனர். தற்போது இம்மருத்துவமனையில் உள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கும்மிடிப்பூண்டி அரசு பொது மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

11—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7364—திரு. டீ. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, பேவநத்தம் ஊராட்சி, பேவநத்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

பேவநத்தம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. பேவநத்தம் கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் நாகமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால், கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பேவநத்தம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

[2023 ஏப்ரல் 21

12—

மருத்துவமனை

வினா எண் 7600—திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் புதியதாக அரசு மருத்துவமனை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்திலிருந்து 17 கி.மீ. தொலைவில் 202 படுக்கை வசதிகளுடன்கூடிய பட்டுக்கோட்டை அரசு வட்ட மருத்துவமனை பல்வேறு வசதிகளுடன் இயங்கி வருகிறது. இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 977 வெளிநோயாளிகள், 200 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், பேராவூரணி தொகுதியிலேயே பேராவூரணி வட்ட அரசு மருத்துவமனை 70 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 534 வெளிநோயாளிகளும், 29 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். திருவோணம் ஒன்றியத்திலேயே திருவோணம் மற்றும் சில்லாத்தூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமும் மற்றும் அதம்பை, வெண்கரை மற்றும் நெய்வேலி வடபாதி ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. எனவே, திருவோணம் ஒன்றியம், ஊரணிபுரத்தில் புதியதாக அரசு மருத்துவமனை அமைத்துத்தர தற்சமயம் அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

13—

ஜெனரேட்டர்

வினா எண் 7611—திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பழவேற்காடு அரசு மருத்துவமனைக்கு ஜெனரேட்டர் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம் பழவேற்காடு அரசு மருத்துவமனை 32 படுக்கைகள் வசதியுடன் வட்டம்சாரா அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 543 வெளிநோயாளிகளும், 29 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். பழவேற்காடு அரசு மருத்துவமனையில் 15 KVA மின்னாக்கி உள்ளது. மின்சாரத் தடை ஏற்படும்போது, இதனைப் பயன்படுத்தி எவ்வித இடையூறும் இல்லாமல் 24 X 7 மணி நேரமும் சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

14—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7666—திரு. க. கணபதி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரவாயல் தொகுதி, அயப்பாக்கம் ஊராட்சி அரசு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்திற்கு இணைப்பு கட்டடம் அதாவது உள்நோயாளிகள் பிரிவு கட்டடம், ஆய்வுக்கூடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், வில்விவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் அயப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அயப்பாக்கம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் உள்நோயாளிகள் பிரிவு 6 படுக்கை வசதிகளுடன் தேவைக்கேற்ப உள்ளது. ஆய்வகத்திற்கென அறை ஒதுக்கப்பட்டு ஆய்வகம் இயங்கி வருகிறது. கூடுதலாக உள்நோயாளிகள் பிரிவு கட்டடம் மற்றும் ஆய்வுக்கூடம் கட்ட தற்போது அவசியம் எழவில்லை. எனவே, கூடுதலாக உள்நோயாளிகள் பிரிவு கட்டடம் மற்றும் ஆய்வுக்கூடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

15—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7693—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, இட்டமொழி ஊராட்சி, இட்டமொழியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தொகுதி, இட்டமொழி ஊராட்சியில் இட்டமொழி கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. நாங்குநேரி தொகுதியில் முனன்ஜிப்பட்டி மேம்படுத்தப்பட்ட

2023 ஏப்ரல் 21]

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் மூலக்கரைப்பட்டி, தெற்கு விஜய நாராயணபுரம் மற்றும் திருவெங்கடநாதபுரம் ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேலும், நாங்குநேரி தொகுதியிலேயே 52 படுக்கை வசதிகள் கொண்ட நாங்குநேரி வட்ட அரசு மருத்துவமனை பல்வேறு வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, நாங்குநேரி தொகுதி, இட்டமொழி ஊராட்சி, இட்டமொழியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

16—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7837—**திரு. துரை. சந்திரசேகர்:** *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், காட்டூர் ஊராட்சி, காட்டூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மகப்பேறு அறை மற்றும் படுக்கை வசதி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தில் காட்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. காட்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் என்பதால், 6 படுக்கைக்கான வசதிகள் தேவைக்கேற்ப உள்ளது. மேலும், காட்டூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில், தேசிய ஊரக நல குழும நிதி உதவியின்கீழ் 2011–2012 ஆம் நிதியாண்டில் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் பிரசவ பின் கவனிப்பு அறை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

[*2023 ஏப்ரல் 21*

17—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 7858—திரு. சீ. கதிரவன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மண்ணச்சநல்லூர் பிச்சாண்டார்கோவில் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோமீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

பிச்சாண்டார்கோவில் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. பிச்சாண்டார்கோவில் ஊராட்சியிலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் மண்ணச்சநல்லூர் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதால், திருச்சி மாவட்டம் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பிச்சாண்டார்கோவில் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

18—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 10180—திரு. சி. மகேந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மடத்துக்குளம் தொகுதி, கணியூர் பேரூராட்சியில் உள்ள

2023 ஏப்ரல் 21]

ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மடத்துக்குளம் தொகுதி, கணியூர் பேரூராட்சியில் 30 படுக்கை வசதிகள் கொண்ட கணியூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மடத்துக்குளம் தொகுதியில் குமாரலிங்கம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், பாப்பன்குளம் மற்றும் துங்கவி கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேலும், கணியூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 14 கி.மீ. தூரத்தில் 224 படுக்கைகள் மற்றும் அனைத்து வசதிகளுடன்கூடிய உடுமலைப்பேட்டை அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, கணியூர் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக தற்சமயம் தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

19—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 10203—திரு. ஆ. கிருஷ்ணசாமி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஒன்றியம், வெள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஒன்றியம், வெள்ளியூரில் 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட

அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. மேலும், திருவள்ளூர் ஒன்றியத்தில் பெருமாள்பட்டு, புலியூர் மற்றும் கல்யாணக்குப்பம் ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. வெள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 18 கி.மீ. தொலைவில் திருவள்ளூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உயர் சிகிச்சை வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், 21 கி.மீ. தொலைவில் ஆவடி அரசு வட்ட மருத்துவமனை 57 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஒன்றியம், வெள்ளியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

20—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 10205—திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், திருமழிசை பேரூராட்சியில், பூந்தமல்லி ஒன்றியத்தில் திருமழிசை கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பூந்தமல்லி ஒன்றியத்தில், நேமம் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், திருநின்றவூர், சோராஞ்சேரி மற்றும் பாரிவாக்கம் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேலும், திருமழிசை கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 5.5 கி.மீ. தூரத்தில் பூந்தமல்லி 32 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, திருமழிசை பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார

2023 ஏப்ரல் 21]

நிலையத்தை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

21—

சுற்றுச்சுவர்

வினா எண் 11377—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, இரத்தினகிரி ஊராட்சி, தடிக்கல் துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், கெலமங்கலம் ஊராட்சி ஒன்றியம் தடிக்கல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் தடிக்கல் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச்சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

சுற்றுச்சுவர்

வினா எண் 11378—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, கும்ளாபுரம் ஊராட்சி, கும்ளாபுரம் துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தளி ஊராட்சி ஒன்றியம், கும்ளாபுரம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் கும்ளாபுரம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே சுற்றுச்சுவர் கட்ட முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. துணை சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

23—

மருத்துவமனை

வினா எண் 11422—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, கடற்கரை சாலையில் மல்லிப்பட்டினம் பகுதியில் சிறப்பு வசதியுடன்கூடிய அவசரகால சிகிச்சை மருத்துவமனை புதியதாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, கடற்கரை சாலையில் உள்ள மல்லிப்பட்டினத்தில் துணை சுகாதார நிலையம் (*Health Sub Centre*) செயல்பட்டு வருகிறது. பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினத்திலிருந்து 16 கி.மீ. தொலைவில் 70 படுக்கை வசதிகள் கொண்ட பேராவூரணி வட்ட அரசு மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், 19 கி.மீ. தொலைவில் அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய பட்டுக்கோட்டை அரசு வட்ட மருத்துவமனை 202 படுக்கை*

2023 ஏப்ரல் 21]

வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. மேலும், பேராவூரணி தொகுதியில் சிறுவாவிடுதி மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமும், கலகம், குறிச்சி மற்றும் பின்னவாசல் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே, மல்லிப்பட்டினம் பகுதியில் சிறப்பு வசதியுடன்கூடிய அவசரகால சிகிச்சை மருத்துவமனை புதியதாக அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

24—

புதிய கட்டடம்

வினா எண் 11423—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணியில் உள்ள அரசு மருத்துவமனையில் 180 படுக்கைகள் கொண்ட கட்டடம் புதியதாக கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனை 70 படுக்கை வசதிகளுடன் வட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 534 வெளிநோயாளிகளும், 29 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகிறார்கள். மேலும், இங்கு ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மகப்பேறு, விஷமுறிவு, சீமாங் மற்றும் NBSU உள்ளிட்ட சிறப்புப் பிரிவுகள் உள்ளன. இம்மருத்துவமனையில் ஸ்கேன், எக்ஸ்ரே, இசிஜி, Ventilator போன்ற மருத்துவ கருவிகளுடன் மின்னாக்கி, குளிரூட்டப்பட்ட அறுவை அரங்கம், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி ஆகியவை உள்ளன. 108 அவசர சிகிச்சை ஊர்தி வசதி உள்ளது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகளும், குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகளும் சிகிச்சைக்கு

வருவதால் தற்போதுள்ள மருத்துவர்கள், மருத்துவம் சாரா மற்றும் இதர பணியாளர்களை கொண்டு பிற வசதிகளைக் கொண்டும் நோயாளிகளுக்கு 24 மணி நேரமும் அவசர சிகிச்சை உட்பட சிறப்பான சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, பேராவூரணி தொகுதி, பேராவூரணி அரசு மருத்துவமனையில் 180 படுக்கைகள் கொண்ட புதியக் கட்டடம் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

25—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11426—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, மல்லிபட்டினம் கடற்கரை சாலையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் (Norms) *ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.*

மல்லிப்பட்டினம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. மல்லிப்பட்டினம் கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் அழகிய நாயகிபுரம் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் ராஜமடம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், தஞ்சாவூர் மாவட்டம் சேதுபவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் கடற்கரை சாலையில் உள்ள மல்லிப்பட்டினம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 21]

26—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11459—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி மாவட்டம், சித்தேரி மலையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையம் முழுநேரமும் மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், சித்தேரி மலையில் சித்தேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது.

அரசாணை (நிலை) எண் 142, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 30-04-2007-ன்படி பாப்பிரெட்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தில், பையர்நத்தம் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், அரசாணை (நிலை) எண்33, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை, நாள் 24-02-2006-ன்படி, சித்தேரி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தில் 3 செவிலியர்கள் நியமிக்கப்பட்டு சுழற்சி முறையில் 24 மணி நேர பிரசவ கவனிப்பு சேவை வழங்கப்பட்டு வருகிறது.

27—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11595—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 21*

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி வட்டம், மானியதஅள்ளி ஊராட்சி, ஜருகு கிராமத்தை மையமாகக் கொண்டு புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. ஜருகு கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள் தொகை 2,11,002 ஆகும். மக்கள் தொகை அடிப்படையிலும், தூரத்தின் அடிப்படையிலும் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க வழிவகை உள்ளது. இனிவருங்காலத்தில் தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் புதியதாக துவக்கும்போது ஜருகு கிராமத்தை மையமாகக் கொண்டு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு முன்னுரிமை அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

28—

அரசு மருத்துவமனை

வினா எண் 11650—திரு. க. கணபதி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுரவாயல் தொகுதி, வார்டு 92, முகப்பேரில் அரசு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுரவாயல் தொகுதி, வார்டு 92, முகப்பேரிலிருந்து 9 கி.மீ. தொலைவில் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனை அனைத்து உயர் சிகிச்சை வசதிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், முகப்பேரிலிருந்து 10 கிலோ மீட்டரில் 32 படுக்கை வசதிகள் கொண்ட பூந்தமல்லி அரசு வட்ட மருத்துவமனையும் மற்றும் 14 கி.மீ. தொலைவில் 57 படுக்கை வசதிகள் கொண்ட ஆவடி அரசு வட்ட மருத்துவமனையும் செயல்பட்டு வருகின்றன. எனவே, மதுரவாயல் தொகுதி, வார்டு-92, முகப்பேரில் அரசு மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

29—

அரசு மருத்துவமனை

வினா எண் 11715—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை அரசு மருத்துவமனையில் கூடுதல் படுக்கை அறை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) விராலிமலை தொகுதி, விராலிமலை அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றிற்கு சராசரியாக 348 வெளிநோயாளிகளும் மற்றும் 10 உள்நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனை ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு, பேறு கால பின்

[2023 ஏப்ரல் 21

கவனிப்பு பிரிவு, NBSU, காப்பீட்டு பிரிவு, எலும்பு முறிவு சிகிச்சை பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் சிகிச்சை பிரிவு, விஷமுறிவு சிகிச்சை பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, பல் சிகிக்சை பிரிவு, மனநல மருத்துவம், குடும்ப நல அறுவை சிகிச்சை மற்றும் தலைக்காய சிகிச்சை ஆகிய பிரிவுகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட படுக்கை வசதிகளைவிட குறைந்த எண்ணிக்கையிலேயே உள் நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், விராலிமலை அரசு மருத்துவமனைக்கு கூடுதல் படுக்கை அறை அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

30—

பிரேத பரிசோதனைக் கூடம்

வினா எண் 11718—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை அரசு மருத்துவமனை 60 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 348 வெளிநோயாளிகளும் மற்றும் 10 உள்நோயாளிகளும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். விராலிமலை அரசு மருத்துவமனையில் மிக மிக குறைந்த எண்ணிக்கையிலேயே பிரேத பரிசோதனைக்காக பிரேதங்கள் பெறப்படுகின்றன. அத்துடன் இம்மருத்துவமனையிலிருந்து 14 கி.மீ. தொலைவில் உள்ள மணப்பாறை அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் 15 கி.மீ. தொலைவில் உள்ள இலுப்பூர் அரசு மருத்துவமனைகளிலும்

2023 ஏப்ரல் 21]

பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே விராலிமலை தொகுதி, விராலிமலை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக் கூடம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

31—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 11753—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் தொகுதி, அச்சரப்பாக்கம் ஒன்றியம், வேடந்தாங்கல் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

வேடந்தாங்கல் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. வேடந்தாங்கல் ஊராட்சியிலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் ஜி.ஜி.பேட்டை (ஞானகிரீஸ்வரன்பேட்டை) ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் லா.எண்டத்தூர் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வேடந்தாங்கல் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

32—

மருத்துவமனை

வினா எண் 11754—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சென்னை-திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் மதுராந்தகம் தொகுதியில் தலைக்காய சிகிச்சை பிரிவுடன் மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகம் தொகுதியில், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்ககத்தின்கீழ் மதுராந்தகம் அரசு மருத்துவமனை 110 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இங்கு நாளொன்றுக்கு சராசரியாக 1038 வெளிநோயாளிகளும், 40 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப்பிரிவு, இரத்த வங்கி, வெண்டிலேட்டர், அல்ட்ரா சவுண்டு ஸ்கேன், முழுமையான ஆய்வுக்கூடம் உள்ளிட்ட பல வசதிகள் உள்ளன. மேலும் இம்மருத்துவமனையிலிருந்து 25 கி.மீ. தொலைவில் தலைக்காய சிகிச்சை பிரிவு உட்பட அனைத்து உயர் சிகிச்சை வசதிகளுடன் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. எனவே, மதுராந்தகம் தொகுதியில் தலைக்காய சிகிச்சை பிரிவுடன் புதியதாக மருத்துவமனை அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

33—

அரசு மருத்துவமனை

வினா எண் 11756—திருமதி கு. மரகதம் குமரவேல்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மதுராந்தகம் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் அரசு மருத்துவமனை 110 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 1,038 வெளிநோயாளிகளும், 40 உள்நோயாளிகளும் சிகிச்சைபெறுகின்றனர்.இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில்கொண்டு மகப்பேறு பிரிவு, விபத்து மற்றும் அறுவை சிகிச்சைப்பிரிவு முதலமைச்சர் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டப் பிரிவு, பச்சிளங்குழந்தைகள் நலப் பிரிவு (NBSU), *இரத்த வங்கி, பிணவறை குளிர்விப்பான் பெட்டி வசதிகளுடன்கூடிய வெண்டிலேட்டர். அல்ட்ரா சவுண்டு ஸ்கேன், முழுமையான ஆய்வுக்கூடம் உள்ளிட்ட வசதிகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. அனைத்து வசதிகளுடன் அப்பகுதி மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவைகள் காலதாமதம் இன்றி குறித்த காலத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இம்மருத்துவமனையிலிருந்து 25 கி.மீ. தொலைவில் செங்கல்பட்டு அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் 28 கி.மீ. தொலைவில் செய்யூர் அரசு மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால், தற்சமயம் இம்மருத்துவமனையில் உள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி*

மக்களுக்கு சிறப்பாக சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, மதுராந்தகம் அரசு மருத்துவமனையை தற்போது தரம் உயர்த்த அவசியம் எழவில்லை.

34—

அரசு மருத்துவமனை

வினா எண் 12593—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, கொடைக்கானல் அரசு மருத்துவமனையை தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் அரசு மருத்துவமனை 62 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 242 வெளிநோயாளிகளும், 35 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, பச்சிளம் குழந்தைகள் பிரிவு, தொற்றா நோய் சிகிச்சை பிரிவு, சீமாங் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, தாய் சேய் நலப் பிரிவு, சித்தா பிரிவு, முதலமைச்சரின் மருத்துவ காப்பீட்டு பிரிவு ஆகியவை உள்ளன. இம்மருத்துவமனையில் இசிஜி, எக்ஸ்ரே, USG Scan, *சிடி–ஸ்கேன், டயாலிஸிஸ் யூனிட், இரத்த வங்கி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மின்னாக்கி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், சுற்றுச்சுவர், நவீன சமையல் அறை ஆகிய வசதிகள் உள்ளன. இம்மருத்துவமனையில் ஒப்பளிக்கப்பட்ட படுக்கை எண்ணிக்கையைவிட குறைவான எண்ணிக்கையிலேயே உள்நோயாளிகள் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலேயே வெளிநோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் தற்போதுள்ள வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனவே, கொடைக்கானல் அரசு மருத்துவமனையை மேலும் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.*

2023 ஏப்ரல் 21]
35—

ஆய்வகம்

வினா எண் 12600—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனைக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய ஆய்வகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை 207 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,117 வெளிநோயாளிகளும், 180 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனை ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள், அவசர சிகிச்சைப் பிரிவு, சித்தா பிரிவு, பொது அறுவை சிகிச்சை பிரிவு, எலும்பு சிகிச்சை பிரிவு, விபத்து சிகிச்சை பிரிவு (AE Ward), *தலைக்காய சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் சிகிச்சை பிரிவு, பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு (*NBSU*), தீவிர சிகிச்சை பிரிவு, விஷமுறிவு சிகிச்சை பிரிவு, முதலமைச்சரின் காப்பீட்டு திட்டம், சீமாங்,* NICU *ஆகிய பிரிவுகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தற்சமயம், இம்மருத்துவமனையில் அனைத்து வசதிகளுடன்கூடிய முழுமையான ஆய்வகவசதிகள், எக்ஸ்ரே, இசிஜி,* USG, *சிடி ஸ்கேன் மருத்துவக் கருவிகள் உட்பட பல வசதிகள் உள்ளன. இவ்வசதிகளைப் பயன்படுத்தி மாதமொன்றுக்கு சராசரியாக 695 எக்ஸ்ரே, 442 ஸ்கேன், 1336 இசிஜி, 366 சிடி–ஸ்கேன் மற்றும் 27,435 ஆய்வக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாதமொன்றுக்கு சராசரியாக 161 பிரசவங்களும், 68 அறுவை சிகிச்சை பிரசவங்களும், 162 பெரிய மற்றும் 682 சிறிய அறுவை சிகிச்சைகளும் நடைபெறுகின்றன.*

[*2023 ஏப்ரல் 21*

36—

இயந்திரங்கள்

வினா எண் 12602—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனைக்கு எம். ஆர்.ஐ. ஸ்கேன் (MRI Scan), டிஜிட்டல் எக்ஸ்ரே (X-ray) ஆகிய இயந்திரங்கள் புதியதாக வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனை 207 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1033 வெளிநோயாளிகளும், 187 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். பழனி அரசு மருத்துவமனையில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆய்வகம், எக்ஸ்ரே, இசிஜி, யு.எஸ்.ஜி ஸ்கேன், சிடி-ஸ்கேன், டயாலிசிஸ் யூனிட், வெண்டிலேட்டர் போன்ற வசதிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு நோயாளிகளுக்கு தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. தேவையின் அடிப்படையில் MRI ஸ்கேன் தற்பொழுது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சில மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் உள்ள X-ray-யைப் பயன்படுத்தி, மாதமொன்றுக்கு சராசரியாக 698 எக்ஸ்ரே எடுக்கப்பட்டு வருகின்றன. டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளுக்கும், தேவையின் அடிப்படையில் சில பெரிய வட்ட அரசு மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் பழனி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மற்றும் டிஜிட்டல் எக்ஸ்ரே கருவி தேவைப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகவே உள்ளதால், அருகில் உள்ள மாவட்ட தலைமை மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, பழனி தொகுதி,

2023 ஏப்ரல் 21]

பழனி அரசு மருத்துவமனைக்கு எம்.ஆர்.ஐ. ஸ்கேன் (MRI Scan), டிஜிட்டல் எக்ஸ்ரே (X–ray) ஆகிய இயந்திரங்கள் புதியதாக வழங்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

37—

கூடுதல் கட்டடம்

வினா எண் 12603—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனைக்கு சீமாங் அறுவை அரங்கிற்கு கூடுதல் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை 207 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,033 வெளிநோயாளிகளும், 187 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், மகப்பேறு, குழந்தைகள், அவசர சிகிச்சை பிரிவு, சித்தா பிரிவு, பொது அறுவை சிகிச்சை பிரிவு, எலும்பு சிகிச்சை பிரிவு, விபத்து சிகிச்சை பிரிவு (AE Ward), தலைக்காய சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் சிகிச்சை பிரிவு, பச்சிளங் குழந்தைகள் பராமரிப்பு பிரிவு (NBSU), தீவிர சிகிக்சை பிரிவு, விஷமுறிவு சிகிச்சை பிரிவு, முதலமைச்சரின் காப்பீட்டு திட்டம், சீமாங், NICU ஆகிய பிரிவுகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனையில் தற்சமயம் அறுவை அரங்கத்துடன்கூடிய சீமாங் பிரிவு 30 படுக்கை வசதிகளுடன் தரைதளத்துடன்கூடிய ஒரு மாடி கட்டடத்தில் (G+1) இயங்கி வருகிறது. மேலும், இம்மருத்துவமனையில் மாதமொன்றுக்கு சராசரியாக 190 பிரசவங்களும், 95 அறுவை சிகிச்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன. மேலும், இம்மருத்துவமனைக்கு 2021–2022 PIP (Programme Implementation Plan) திட்டத்தின்கீழ், கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு ரூ.9.00 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. எனவே பழனி தொகுதி, பழனி அரசு

மருத்துவமனைக்கு சீமாங் அறுவை அரங்கிற்கு தனியாக கூடுதல் கட்டடம் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.

38—

புதிய கட்டடம்

வினா எண் 12604—திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனைக்கு அலுவலகம், மருந்து கிடங்கு மருத்துவ பதிவேடுகள் பாதுகாப்பிற்கு புதியதாக கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனை 207 படுக்கை வசதிகள் கொண்ட அரசு வட்ட மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,033 வெளிநோயாளிகளும், 187 உள்நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும், 2021–2022 PIP (Programme Implementation Plan) *திட்டத்தின்கீழ், கூடுதல் கட்டடம் கட்டுவதற்கு ரூ.9.00 கோடி நிதி ஒப்பளிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்சமயம் பழனி அரசு மருத்துவமனையில் அலுவலகம், மருந்து கிடங்கு மற்றும் மருத்துவ பதிவேடுகள் பாதுகாப்பிற்கு போதுமான வசதிகளுடன்கூடிய கட்டடம் உள்ளது. எனவே, தற்சமயம் பழனி தொகுதி, பழனி அரசு மருத்துவமனையில் புதியதாக கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை*

39—

கட்டடம்

வினா எண் 12696—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், பூசலாங்குடியில் செயல்படும் துணை சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியம், திருத்தங்கூர் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் பூசலாங்குடியில் ஆலிவலம் துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. பூசலாங்குடியில் உள்ள ஆலிவலம் துணை சுகாதார நிலையம் தற்போது இ-சேவை மையத்தில் இயங்கி வருகிறது. ஆலிவலம் துணை சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட வேண்டியுள்ளது. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின்னர் முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, ஆலிவலம் துணை சுகாதார நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

40—

அரசு மருத்துவமனை

வினா எண் 12720—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், புதுமடம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், புதுமடம் ஊராட்சியில் புதுமடம் சமூக நல மையம் செயல்பட்டு வருகிறது. மண்டபம் ஒன்றியத்தில் மண்டபம் மற்றும் உச்சிபுலி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப

சுகாதார நிலையம் மற்றும் பாம்பன், புதுவலசை, தாமரைக்குளம் மற்றும் தங்கச்சிமடம் ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேலும், மண்டபம் ஒன்றியத்திலேயே, மண்டபம் முகாம் வட்டம்சாரா அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே, இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், புதுமடம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

41—

அரசு மருத்துவமனை

வினா எண் 12721—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் தொகுதி, பெரியபட்டினம் ஆரம்ப சுகதாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதியில், 30 படுக்கை வசதிகள் கொண்ட பெரியபட்டினம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. திருப்புல்லானி ஒன்றியத்தில் திருஉத்திரகோசமங்கை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் திருப்புல்லானி, வேலனூர் மற்றும் ரகுநாதபுரம் ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகின்றன. மேலும், பெரியபட்டினம் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து 18 கி.மீ. தூரத்தில், 60 படுக்கை வசதிகள் கொண்ட கீழக்கரை வட்ட அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே, இராமநாதபுரம் தொகுதி, பெரியபட்டினம்

2023 ஏப்ரல் 21]

ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

42—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 12724—திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஊராட்சி ஒன்றியம் புதுமடம் ஊராட்சியில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், புதுமடம் ஊராட்சியில் புதுமடம் சமூக நல மையம் செயல்பட்டு வருகிறது. மண்டபம் ஒன்றியத்தில் மண்டபம் மற்றும் உச்சிபுலி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் பாம்பன், புதுவலசை, தாமரைக்குளம் மற்றும் தங்கச்சிமடம் ஆகிய பகுதிகளில் கூடுதல் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களும் இயங்கி வருகிறது. மேலும், மண்டபம் ஒன்றியத்திலேயே, மண்டபம் முகாம் வட்டம்சாரா அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. எனவே, இராமநாதபுரம் தொகுதி, மண்டபம் ஒன்றியம், புதுமடம் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்சமயம் அவசியம் எழவில்லை.

[2023 ஏப்ரல் 21

43—

அரசு மருத்துவமனை

வினா எண் 12748—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் சீமாங் திட்டத்தின்கீழ் விரிவுபடுத்திட, கந்தர்வகோட்டை ஊராட்சி நிர்வாகம் 4 1/2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தினை கந்தர்வகோட்டைக்கு ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனை 52 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 543 வெளிநோயாளிகளும், 34 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, மகப்பேறு பிரிவு, பேறுகால பின் கவனிப்பு பிரிவு, காப்பீட்டு பிரிவு, சீமாங் பிரிவு, வெளிநோயாளிகள் பிரிவு, உள்நோயாளிகள் பிரிவு, பச்சிளம் குழந்தைகள் பிரிவு, தொற்றாநோய் பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, விஷமுறிவு சிகிச்சை போன்ற பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், ஆய்வக பரிசோதனை, ஸ்கேன், எக்ஸ்ரே, இசிஜி வசதி, போதுமான மருத்துவக் கருவிகள், பிணவறை, மின்னாக்கி, சுற்றுச்சுவர், 108 அவசர ஊர்தி, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் ஆகிய வசதிகளுடன் இம்மருத்துவமனை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் சீமாங் திட்டத்திற்காக, கந்தர்வகோட்டை ஊராட்சி நிர்வாகத்தின்கீழ் 4 1/2 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்து அரசாணை ஏதும் வெளியிடப்படவில்லை.

2023 ஏப்ரல் 21]

44—

புதிய கட்டடம்

வினா எண் 12785—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, ஆலங்காடு துணை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், முத்துப்பேட்டை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தின்கீழ் ஆலங்காடு துணை சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஆலங்காடு துணை சுகாதார நிலைய கட்டடம் பழுதடைந்த நிலையில் உள்ளதால், தற்போது இ-சேவை மையத்தில் இயங்கி வருகிறது. பழுதடைந்த கட்டடத்திற்கு பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் கோரப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையிடமிருந்து தகுதி நீக்க சான்றிதழ் பெறப்பட்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் நிதி ஒதுக்கப்பட்டு, ஆலங்காடு துணை சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

45—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 12944—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்றாண்டார்கோவிலில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில், ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. குன்றாண்டார்கோவில் கிராமத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் அண்டக்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதால் புதுக்கோட்டை மாவட்டம் குன்றாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குன்றாண்டார்கோவில் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

46—

அரசு மருத்துவமனை

வினா எண் 12954—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையை சீமாங் சென்டராக தரம் உயர்த்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனை 52 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 434 வெளிநோயாளிகளும், 17 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையில் 10 படுக்கை வசதிகள் கொண்ட மகப்பேறு பிரிவு செயல்பட்டு வருகிறது. இங்கு பணிபுரியும்

2023 ஏப்ரல் 21]

3 மகப்பேறு மருத்துவர்கள், 1 மயக்கவியல் மருத்துவரைக் கொண்டு பிரசவத்திற்கு வரும் தாய்மார்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. மாதமொன்றுக்கு சராசரியாக 7 பிரசவங்களும், 2 அறுவை சிசிக்சை பிரசவங்களும் நடைபெறுகின்றன. பிரசவத்திற்கு வரும் தாய்மார்களின் எண்ணிக்கை மிக குறைவாகவே உள்ளதால், கந்தர்வகோட்டை அரசு மருத்துவமனையை சீமாங் சென்டராக தரம் உயர்த்திட தற்போது அவசியம் எழவில்லை.

47—

அதிர்ச்சி பராமரிப்பு மையம்

வினா எண் 14401—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கிழக்குக் கடற்கரை சாலையில் உள்ள தரங்கம்பாடி–சீர்காழி–கொள்ளிடம் வரை உள்ள பகுதியில் அதிக வாகன விபத்துக்கள் ஏற்படுவதால் நடுவில் அமைந்துள்ள சீர்காழி அரசு மருத்துவமனையில் அதிர்ச்சி பராமரிப்பு மையம் (*TRAUMA CARE CENTRE*) அமைக்க அரசு முன்வருமா?*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனை 272 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 970 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 133 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனை தற்போதுள்ள விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, X–Ray. ECG, USG Scan *மற்றும் முழுமையான ஆய்வகம், இரத்த வங்கி, குளிர்சாதன வசதியுடன்கூடிய அறுவை அரங்கம், 108 அவசர ஊர்தி உள்ளிட்ட பல வசதிகளைக் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சிறப்பாக சேவையை வழங்கி வருகிறது. மேலும், இம்மருத்துவமனைக்கு 2022–2023 நிதியாண்டின்கீழ்,* Pradhan Mantri Ayushman Bharat Health Infrastructure Mission (PM ABHIM) *திட்டத்தின்மூலம், 50 படுக்கை வசதிகளுடன்கூடிய*

Critical Care Block கட்டுவதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

48—

இருதய நோய்ப் பிரிவு

வினா எண் 14403—திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சீர்காழி தொகுதியில் சீர்காழி நகரில் அமைந்துள்ள சீர்காழி அரசு மருத்துவமனையில் இருதய நோய் பிரிவு துவக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி அரசு மருத்துவமனை 272 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் சராசரியாக நாள் ஒன்றுக்கு 970 நபர்கள் வெளிநோயாளிகளாகவும், 133 நபர்கள் உள்நோயாளிகளாகவும் சிகிச்சை பெறுகின்றனர். இம்மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு, பொது அறுவை சிகிச்சை பிரிவு, அறுவை அரங்குகள், தொற்றா நோய் சிகிச்சை பிரிவு (NCD) *ஆகியவை சிறப்பாக செயல்படுகின்றன. எக்கோ கார்டியோகிராம்* (Echocardiogram), *வெண்டிலேட்டர் போன்ற வசதிகளும் உள்ளன. மேலும், 6 படுக்கை வசதிகள் கொண்ட* ICCU *தீவிர இருதய சிகிச்சை பிரிவு செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் பணிபுரியும் எம்.டி. பொது மருத்துவரைக் கொண்டு இருதய சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு உரிய முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், உயர்சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள் அருகில் உள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்யப்படுகிறார்கள். எனவே, சீர்காழி அரசு மருத்துவமனையில் தற்போது இருதய நோய் பிரிவு துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை.*

2023 ஏப்ரல் 21]

49—

கூடுதல் கட்டடம்

வினா எண் 17512—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) போளூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் தாலுகா அரசு மருத்துவமனை 78 படுக்கை வசதிகளுடன் செயல்பட்டு வரும் அரசு மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 620 வெளிநோயாளிகள் மற்றும் 41 உள்நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இம்மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவு, பிரசவ பிரிவு, பிரசவ பின் கவனிப்பு பிரிவு, சீமாங் பிரிவு, பச்சிளங் குழந்தை பராமரிப்பு மையம் (NBSU), *ஆண்கள் பிரிவு, பெண்கள் பிரிவு, தொற்றா நோய் பிரிவு, சித்தா பிரிவு, தொழுநோயாளிகள் பிரிவு ஆகிய பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், முழுமையான ஆய்வக வசதி. இசிஜி, எக்ஸ்ரே,* USG *ஸ்கேன், வெண்டிலேட்டர் போன்ற வசதிகளும் போதிய அளவில் மருத்துவ உபகரணங்களும் உள்ளன. மேலும், குளிர்சாதன வசதியுடன்கூடிய 2 அறுவை அரங்குகள், இரத்த சேமிப்பு நிலையம், அவசர ஊர்தி போன்ற வசதிகள் உள்ளன. மேற்குறிப்பிடப்பட்டுள்ள வசதிகள் போதுமான கட்டடங்களில் செயல்பட்டு வருகிறது. எனவே, போளூர் அரசு மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட தற்சமயம் அவசியம் எழவில்லை.*

50—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 17639—திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை வட்டம், புளியறை ஆரம்ப சுகாதார நிலையம் உயரமான பகுதியில் இருப்பதால் அதை தாழ்வான பகுதிக்கு மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தொகுதி, செங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் புளியறை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. புளியறை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் 44 ஆண்டுகளாக இந்த பகுதியில் இயங்கி வருகிறது. மேலும், ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பொது மக்கள் மற்றும் வாகனங்கள் செல்வதற்கு சீரான பாதை மற்றும் சாலை வசதிகள் உள்ளன. மேலும், இதன் அருகில் சமுதாய நலக்கூடம், வனச்சரக அலுவலகம், அங்கன்வாடி மையம் போன்றவை சிறப்பாக இயங்கி வருகின்ற காரணங்களினால் இதனை மாற்றம் செய்ய சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

துணை சுகாதார நிலையம்

வினா எண் 17737—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, நாகமரை ஊராட்சிக்குட்பட்ட ஏமனூர் கிராமத்தில் புதிய துணை சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி சுகாதார பகுதி மாவட்டம், பெண்ணாகரம் வட்டாரத்தைச் சார்ந்த எரியூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட ஏமனூர் ஊராட்சியில் ஏற்கெனவே ஏமனூர் துணை சுகாதார நிலையம் அரசு கட்டடத்தில் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

52—

எம்.ஆர்.ஐ. ஸ்கேன் மையம்

வினா எண் 17742—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் மாவட்ட தலைமை மருத்துவமனையில் புதிய MRI *ஸ்கேன் மையம் அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் அரசு மருத்துவமனை 152 படுக்கை வசதிகளுடன்கூடிய அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது. நாளொன்றுக்கு சராசரியாக 684 வெளிநோயாளிகளும், 91 உள்நோயாளிகளும் சிகிச்சை பெறுகின்றனர். மாதமொன்றுக்கு சராசரியாக 246 CT-Scan *எடுக்கப்படுகிறது. பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஆய்வகம், எக்ஸ்ரே, இசிஜி, ஸ்கேன் போன்ற வசதிகள் உள்ளன. இவற்றைக் கொண்டு நோயாளிகளுக்குத்*

தேவையான பரிசோதனைகள் செய்யப்பட்டு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன. MRI ஸ்கேன் தற்பொழுது மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சில மாவட்ட தலைமை மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. MRI ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் மிக, மிக குறைவாகவே உள்ளனர். MRI ஸ்கேன் தேவைப்படும் நோயாளிகள் அருகிலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு பரிந்துரைக்கப்படுகிறார்கள். எனவே, பெண்ணாகரம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் MRI ஸ்கேன் மையம் அமைக்க தற்சமயம் அவசியம் எழவில்லை.

53—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 21462—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளச்சல் தொகுதி, வெள்ளிச்சந்தை துணை சுகாதார நிலையத்தை அனைத்து அடிப்படை வசதிகளுடன்கூடிய ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் சுகாதார மாவட்டம், குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் வெள்ளிச்சந்தை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசாணை (நிலை) எண் 257, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 21-07-2017-ன்படி குருந்தன்கோடு ஊராட்சி ஒன்றியத்தில், குருந்தன்கோடு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

2023 ஏப்ரல் 21]
54—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 25777—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பாலக்கோடு ஒன்றியம், புலிக்கரை பகுதியில் இயங்கி வரும் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் புலிக்கரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களில், ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தினை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்துவது என்பது அரசின் கொள்கை முடிவாகும். அரசாணை (நிலை) எண் 293, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள் 12–10–2001–ன்படி, பாலக்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் மாரண்டஅள்ளி பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்கெனவே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருவதால், புலிக்கரை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

[*2023 ஏப்ரல் 21*

55—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 38657—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, நக்கசேலம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. நக்கசேலம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. நக்கசேலம் கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் அடைக்கம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் செட்டிக்குளம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருவதால், பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள நக்கசேலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

56—

கூடுதல் அவசர ஊர்தி

வினா எண் 48289—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, மன்னார்குடி மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு கூடுதல் அவசர ஊர்தி வழங்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மன்னார்குடி தலைமை அரசு மருத்துவமனை மற்றும் அதன் அருகாமையில் கீழ்க்காணும் இடங்களில் 108 ஆம்புலன்ஸ் ஏற்கெனவே நிலைநிறுத்தப்பட்டு சிறப்பாக சேவையாற்றி வருகிறது:-

மாவட்டம்	அவசரகால ஊர்தி நிலைநிறுத்தப்பட்ட இடங்கள்	அவசரகால ஊர்திகளின் எண்ணிக்கை	மன்னார்குடி தலைமை அரசு மருத்துவமனையிலிருந்து தொலைவு (கி.மீட்டரில்)
திருவாரூர்	மன்னார்குடி தலைமை மருத்துவமனை	1	0
	மன்னார்குடி நகர்ப்புற ஆரம்ப சுகாதார நலையம்	1	1
	கூத்தாநல்லூர்	1	12
	கோட்டூர்	1	15
	திருமாகோட்டை	1	16

57—

தனி மருத்துவமனை

வினா எண் 48302—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில் மனநலம் மற்றும் குழந்தைகளுக்கென தனி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டத்திலுள்ள மன்னார்குடி தலைமை மருத்துவமனையில் மனநலம் மற்றும் குழந்தைகளுக்கென தனிப்பிரிவு ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. அதில், மொத்தம் 354 படுக்கை வசதிகளில், மாவட்ட மனநல திட்டத்தின்கீழ் 10 படுக்கை வசதிகளுடனும், குழந்தைகளுக்கென 22 படுக்கை வசதிகளுடனும், சிறப்பு பச்சிளங்குழந்தைகளுக்கான பிரிவில் 16 படுக்கை வசதிகளுடனும் செயல்பட்டு வருகின்றன.

58—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 48410—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, கோட்டூர் ஒன்றியம், தென்பரையில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

மத்திய அரசின் இலக்கின்படி, 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன. தென்பரை கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. தென்பரை கிராமத்திலிருந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் திருமக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் தலையாமங்கலம் மற்றும் களப்பால் ஆரம்ப சுகாதார நிலையங்களும் செயல்பட்டு வருவதால், திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம் தென்பரை கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

2023 ஏப்ரல் 21]

59—

மறுவாழ்வு மையம்

வினா எண் 50677—டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மொடக்குறிச்சி தொகுதியில் போதை மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்களுக்கு மறுவாழ்வு மையம் அமைக்கவும் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு மறுவாழ்வு மையம் அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 398, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (அஉதி1-2) துறை, நாள் 14–11–2017-ன் வாயிலாக காஞ்சிபுரம், திருப்பூர், கடலூர் ஆகிய 3 மாவட்டங்களில் போதை ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும், அரசாணை (நிலை) எண் 27, உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (VII) *துறை, நாள் 11–9–2020-ன் வாயிலாக கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகிய 7 இடங்களில் போதை ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மனநலப் பிரிவில் போதை ஒழிப்பு மற்றும் மறுவாழ்வு மையம் செயல்பட்டு வருகிறது.*

60—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 50785—திரு. கே. பொன்னுசாமி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேந்தமங்கலம் தொகுதி, நாமகிரிபேட்டையில் இயங்கி வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை ஊராட்சி ஒன்றியத்தில் நாமகிரிபேட்டை பிரதான ஆரம்ப சுகாதார நிலையம் 2001 ஆம் ஆண்டிற்கு முன்னரே 30 படுக்கை வசதிகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்தப்பட்டு அனைத்து வசதிகளுடன் செயல்பட்டு வருகிறது.

61—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 51857—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி ஒன்றியம், விளக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் விளக்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. விளக்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் சிறு சிறு பழுதுகள் உள்ளதால் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள பொதுப் பணித் துறையிடமிருந்து மதிப்பீடு பட்டியல் கோரப்பட்டுள்ளது. மதிப்பீடு பட்டியல் பெறப்பட்ட பின்னர் முன்னுரிமை அடிப்படையில் விளக்குடி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடத்தில் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

2023 ஏப்ரல் 21]

62—

அவசரகால ஊர்தி

வினா எண் 51860—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், எடையூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய அவசரகால ஊர்தி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை, களப்பால் மற்றும் முத்துப்பேட்டை ஒன்றியம், எடையூர் ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களில் 108 அவசரகால ஊர்திகள் நிலைநிறுத்தப்பட்டு தேவைக்கேற்ப, சிறப்பாக சேவையாற்றி வருகின்றன.

63—

ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண் 58461—திரு. இ. கருணாநிதி: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பல்லாவரம் தொகுதி, திரிசூலம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 30,000 மக்கள் தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி எட்டு கிலோ மீட்டருக்குமேல் இருத்தல் வேண்டும் என்ற நியதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படுகின்றன.

திரிசூலம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் ஒன்று இயங்கி வருகிறது. இத்துணைச் சுகாதார நிலையம் பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்தது.

திரிசூலம் ஊராட்சியிலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் ஜமீன் பல்லாவரம் மற்றும் கீழ்கட்டளை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களும், 3 கிலோ மீட்டர் தொலைவில் மூவரசம்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையமும், 4 கிலோ மீட்டர் தொலைவில் ஜமீன் ராயப்பேட்டை (குளக்கரை) நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையமும், 6 கிலோ மீட்டர் தொலைவில் பம்மல் நகர்ப்புற ஆரம்ப சகாதார நிலையமும், 6.5 கிலோ மீட்டர் தொலைவில் பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 7 கிலோ மீட்டர் தொலைவில் திருநீர்மலை ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கிலோ மீட்டர் தொலைவில் தாம்பரம் அரசு மருத்துவமனையும், 9 கிலோ மீட்டர் தொலைவில் மேடவாக்கம் ஆரம்ப சுகாதார நிலையமும் செயல்பட்டு வருகின்றன.

எனவே செங்கல்பட்டு மாவட்டம், புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் திரிசூலம் ஊராட்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

64—

வணிக வரி அலுவலகம்

வினா எண் 15176—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையில் இயங்கி வந்த வணிக வரித் துறை அலுவலகம் மாவட்ட ஆட்சியர் அலுவலகமாக எடுத்துக்

2023 ஏப்ரல் 21]

கொண்டதால், வணிக வரித் துறை அலுவலகத்திற்கு மீண்டும் அலுவலகம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை உதவி ஆணையர் (மாநில வரி) அலுவலகம் மற்றும் மாநில வரி அலுவலர், சீர்காழி அலுவலகங்களை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது. அக்கட்டடம் தற்காலிகமாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் அலுவலக பயன்பாட்டில் உள்ளது என்றும், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்டப்பட்ட பின், உதவி ஆணையர் (மாநில வரி), மயிலாடுதுறை மற்றும் மாநில வரி அலுவலர், சீர்காழி ஆகிய அலுவலகங்கள் தற்போது இயங்கி வரும் அண்ணா திருமண மண்டபத்திலிருந்து மயிலாடுதுறை ஒருங்கிணைந்த வணிக வரி அலுவலக கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்படும். எனவே, மயிலாடுதுறையில் வணிக வரி அலுவலகங்களுக்கு அரசு கட்டடம் ஏற்கெனவே உள்ளதால், புதிய கட்டடம் கட்டுவதற்கான தேவை எழவில்லை.

65—

பேருந்து இயக்குதல்

வினா எண் 159—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, திருக்காட்டுப்பள்ளி, கல்லணை மற்றும் திருவாணைக்காவல் நம்பர்-1 டோல்கேட் வழியாக சமயபுரம் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கும்பகோணத்திலிருந்து திருவையாறு, திருக்காட்டுப்பள்ளி வழியாக கல்லணை வரை தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்து தடம் எண் 462B, கல்லணை புதிய பாலம் கட்டுமான பணி முடிந்த பிறகு, திருவானைக்காவல் நம்பர்-1 டோல்கேட் வழியாக சமயபுரம் வரை நீட்டித்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

66—

பேருந்து இயக்குதல்

வினா எண் 160—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, பாபநாசத்திலிருந்து கும்பகோணம், நாச்சியார்கோவில், திரவாஞ்சேரி, பூந்தோட்டம், சன்னாநல்லூர், திருமருகல், திட்டச்சேரி மற்றும் நாகூர் வழியாக வேளாங்கண்ணி திருத்தலத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பாபநாசத்திலிருந்து கும்பகோணம், நாச்சியார்கோவில், திரவாஞ்சேரி, பூந்தோட்டம், சன்னாநல்லூர், திருமருகல், திட்டச்சேரி, வேளாங்கண்ணி மிக நெடிய சுற்று வழியாகும். எனவே, கும்பகோணத்திலிருந்து நாச்சியார்கோவில், நன்னிலம், சன்னாநல்லூர், திருமருகல், திட்டச்சேரி வழியாக நாகப்பட்டினத்திற்கு தினசரி 7 அரசு பேருந்துகள்மூலம் 18 நடைகளும், கும்பகோணத்திலிருந்து குடவாசல் திருவாரூர் வழியாக நாகப்பட்டினத்திற்கு தினசரி 6 அரசு பேருந்துகள்மூலம் 16 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், நாகப்பட்டினத்திலிருந்து வேளாங்கண்ணிக்கு 10 நிமிட இடைவெளியிலும், திருவாரூரிலிருந்து வேளாங்கண்ணிக்கு

2023 ஏப்ரல் 21]

30 நிமிட இடைவெளியிலும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கும்பகோணத்திலிருந்து நாச்சியார்கோவில், திரவாஞ்சேரி வழியாக பூந்தோட்டம் வரை தினசரி 7 அரசு பேருந்துகள்மூலம் 20 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது உள்ள பேருந்து வசதியே மிகவும் போதுமானதாகும்.

67—

பேருந்து இயக்குதல்

வினா எண் 161—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பாபநாசம் தொகுதி, பாபநாசத்திலிருந்து சென்னைக்கு விரைவு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக தஞ்சாவூரிலிருந்து பாபநாசம் வழியாக சென்னைக்கு தடம் எண் 323 Ultra Deluxe*-ல் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்துகளில், பாபநாசத்திலிருந்து சென்னைக்கு முன்பதிவு செய்து பயணிக்க இணையதளத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.*

68—

பேருந்து நிலையம்

வினா எண் 407—திரு. கே.பி. சங்கர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவொற்றியூர் தொகுதி, திருவொற்றியூரில் பேருந்து நிலையம் அமைத்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதியில் 2.50 ஏக்கர் நிலப்பரப்பில் திருவொற்றியூர் பணிமனையுடன்கூடிய பேருந்து நிலையமாக 1978 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் உள்ளது. தற்பொழுது, பேருந்து நிலைய நிலத்தில் சென்னை மெட்ரோ இரயில் பணிகள் நடைபெற்று வருவதால் நிலத்தை மாநகர் போக்குவரத்துக் கழகத்திடம் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் ஒப்படைக்காமல் உள்ளது. இதனால், அருகில் உள்ள நிலத்தில் பேருந்து நிலையம் தற்காலிகமாக பயன்பாட்டில் உள்ளது. எனவே, திருவொற்றியூரில் பேருந்து நிலையம் தற்போது அமைப்பதற்கான சாத்தியக்கூறு இல்லை.

69—

பேருந்து இயக்குதல்

வினா எண் 445—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், மகாராஜபுரம் கிராமத்திற்கு காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலம், தஞ்சாவூர் நகர்–1, கிளை பேருந்து தடம் எண் A10A மூலம் இயக்கப்படும் சோழபுரம்–அய்யாநல்லூர்–கடமங்குடி வழித்தடத்தில் மகாராஜபுரம் உள்ளது. அய்யாநல்லூரில் இருந்து மகாராஜபுரம் 2 கி.மீ. தொலைவில் உள்ளது. இந்த சாலை மிகவும் குறுகலாக உள்ளதால், மகாராஜபுரத்திற்கு பேருந்து செல்ல இயலாத நிலை உள்ளது.

2023 ஏப்ரல் 21]

70—

கூடுதல் பேருந்து

வினா எண் 446—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, கீழ்மாத்தூர் ஊராட்சி, கயலூர் கிராமத்திற்கு இயக்கப்படும் தடம் எண்–54 பேருந்தினை கூடுதலாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் மண்டலம், கும்பகோணம் நகர்–1 கிளையிலிருந்து தடம் எண் A54 மூலம் கயலூர் கிராமத்திற்கு 2 நடைகளும், முழையூர் கிராமத்திற்கு 6 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. கயலூர் கிராமத்திற்கு கூடுதலாக இயக்கப்பட்டால் இயக்க நேரம் காலம் மாறுபட்டு அடுத்த நடை இயக்கக்கூடிய முழையூர் கிராம மக்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, தற்பொழுது உள்ள பேருந்து வசதியே போதுமானது.

71—

பேருந்து இயக்குதல்

வினா எண் 654—திரு. S. பழனி நாடார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தென்காசி தொகுதி, தென்காசியிலிருந்து சேலத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தற்போது தென்காசியிலிருந்து அரசு பேருந்துகள்மூலம் மதுரைக்கு நாளொன்றுக்கு சுமார் 100–க்கும் மேற்பட்ட சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. இச்சுற்றுகளை பயன்படுத்தி மதுரைக்கு சென்று அங்கிருந்து அரசு பேருந்துகள்மூலம் இயக்கப்படும் சுமார் 95 சுற்றுகளை பயன்படுத்தி சேலம் செல்லலாம். மேலும், கோரிக்கை வழித்தடமானது 300 கிலோ மீட்டருக்கு கூடுதலான வழித்தடமாகும். எனவே, மேற்கூறப்பட்ட பேருந்து வசதியே போதுமானதாகும்.

72—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1291—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கள்ளக்குறிச்சியிலிருந்து கோயம்புத்தூர், திருச்செந்தூர், பழனி ஆகிய பகுதிகளுக்கு புதிய வழித்தடத்தில் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, கள்ளக்குறிச்சியிலிருந்து கோயம்புத்தூர், திருச்செந்தூர், பழனி ஆகிய பகுதிகளுக்கு நேரடி பேருந்துகள் இயக்கப்படவில்லை. இருப்பினும், பகுதிவாரியாக பேருந்து சேவை அளிக்கப்பட்டு வருகிறது. குறுகிய கால இடைவெளியில், கள்ளக்குறிச்சியிலிருந்து சேலத்திற்கும், சேலத்திலிருந்து கோயம்புத்தூர் வழித்தடத்திற்கும் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும், உளுந்தூர்பேட்டையிலிருந்து திருச்சிக்கும், திருச்சியிலிருந்து பழனிக்கும் குறுகிய கால இடைவெளியில் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 21]

அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் வாயிலாக தடம் எண் 191 Ultra Deluxe*-ல் 5 பேருந்துகள் உளுந்தூர்பேட்டை வழியாக சென்னையிலிருந்து திருச்செந்தூருக்கும் மற்றும் தடம் எண் 193* Ultra Deluxe*-ல் இரு பேருந்துகள் சென்னையிலிருந்து திருச்செந்தூர் வழியாக உடன்குடிக்கும் தினசரி இயக்கப்படுகிறது. இப்பேருந்துகளில் உளுந்தூர்பேட்டை ஏறுமிடமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், கள்ளக்குறிச்சியிலிருந்து செல்லும் பயணிகள் 37 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள உளுந்தூர்பேட்டைக்கு வந்தடைந்து மேற்கூறிய பேருந்து வசதிகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.*

73—

பேருந்து இயக்குதல்

வினா எண் 1292—திரு. மா. செந்தில்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தியாகதுருகம் பேரூராட்சியிலிருந்து திருப்பதிக்கு புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கள்ளக்குறிச்சியிலிருந்து திருப்பதிக்கு 8 புறநகர் பேருந்துகள் வாயிலாக தினசரி 16 நடைகளும் மற்றும் உளுந்தூர்பேட்டையில் எலவனாசூர்கோட்டை வழியாக திருப்பதிக்கு 1 புறநகர் பேருந்து வாயிலாக 2 நடைகள் இயக்கப்படுகின்றன. தியாகதுருகம் பேரூராட்சி பயணிகள், புறநகர் பேருந்து வசதிகளைப் பயன்படுத்தி கள்ளக்குறிச்சி மற்றும் உளுந்தூர்பேட்டை வந்தடைந்து மேற்கூறிய பேருந்து வசதிகளை பயன்படுத்தி திருப்பதிக்கு செல்லலாம்.

74—

கூடுதல் பேருந்து

வினா எண் 2434—டாக்டர் வை. முத்துராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 21*

(அ) புதுக்கோட்டையிலிருந்து அறந்தாங்கிக்கு தினமும் கூடுதலாக பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டையிலிருந்து குளவாய்ப்பட்டி, எரிச்சி வழியாக அறந்தாங்கிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், புதுக்கோட்டை மண்டலத்தின் 44 அரசு புறநகர் பேருந்துகள்மூலம், நாள் ஒன்றுக்கு 94 நடைகளும், புதுக்கோட்டையிலிருந்து குளவாயப்பட்டி, எரிச்சி வரை, எரிச்சியிலிருந்து அறந்தாங்கி வரை புதுக்கோட்டை மண்டலத்தின் 3 அரசு நகர் பேருந்துகள்மூலம் 14 நடைகள் என பகுதி, பகுதியாக கோரிக்கை வழித்தடத்தில் இயங்கி வருகின்றன. இவ்வழித்தடத்தில் பயணிகள் அடர்வு 77.6% ஆகும். தற்போது இயக்கப்பட்டு வரும் பேருந்துகளே போதுமானதாகும்.

75—

பணிமனை அமைத்தல்

வினா எண் 2970—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புதுக்கோட்டை மாவட்டம், கீரனூரில் பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில், 2014–2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 23–7–2014 ஆம் தேதியன்று புதுக்கோட்டை மண்டலம் கீரனூரில்

2023 ஏப்ரல் 21]

புதிய பணிமனை அமைக்க அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து கீரனூர் கிராமத்தில் சர்வே எண் 446/17, 446/18, 446/19 மற்றும் 446/20–ல் 2.02 ஏக்கர் (0.82.0 ஹெக்டேர்) நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பணிமனை கட்ட தோராயமாக ரூபாய் 200.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணி துவங்க சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடுக்காக நிலுவையிலுள்ளது.

76—

ஓய்வறை கட்டடம்

வினா எண் 2986—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டியில் கிளை பணிமனையில் ஓட்டுநர், நடத்துனர் மற்றும் ஊழியர்களுக்கு ஓய்வறை கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், கும்பகோணத்தில் தற்போது உள்ள நிதிநிலைமையின்படி, கழகத்தின்மூலம் திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி கிளை பணிமனையில் ஓட்டுநர், நடத்துனர் மற்றும் ஊழியர்களுக்கு புதிய ஓய்வறைக் கட்டடம் கட்டுவதற்கு இயலாத நிலையில் உள்ளது. இருந்தபோதிலும், தற்போது ஓய்வறை கட்டடத்தில் உள்ள குறைபாடுகள் சரிசெய்யப்பட்டுள்ளது. தற்போது இதுவே போதுமானதாக உள்ளது.

77—

குளிர்சாதன பேருந்து

வினா எண் 3377—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 21

(அ) மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு புதிய குளிர்சாதன பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு விரைவு போக்குவரத்து கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு தடம் எண் 304A/C-ல் ஒரு பேருந்து வாயிலாக 2 நடைகளும், கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை வழியாக 307A/C-ல் 3 பேருந்துகள் மற்றும் 307ASS-ல் 4 பேருந்துகள் வாயிலாக 14 நடைகளும் இரு முனைகளிலிருந்தும் தினசரி இயக்கப்படுகின்றன. இப்பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது.

78—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3378—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையிலிருந்து திருமங்கலம், காளி வழியாக பந்தநல்லூர் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை – பந்தநல்லூர் (வழி: திருமங்கலம், காளி) வழித்தடம் 25 கி.மீ. ஆகும். கோரிக்கை வழித்தடத்தில், மயிலாடுதுறை முதல் காளி வரை 16 கி.மீ. தொலைவிற்கு தடம் எண்: A17 மூலம் 12 நடைகளும், தடம் எண் A17A மூலம் 10 நடைகளும் இயக்கப்படுகின்றன. காளி முதல் பந்தநல்லூர் வரை 9 கி.மீ. தொலைவிலான சாலை, பேருந்து இயக்கிட இயலாத நிலையில் உள்ளது.

2023 ஏப்ரல் 21]

மேலும், மயிலாடுதுறையிலிருந்து பந்தநல்லூருக்கு மணல்மேடு வழியாக தடம் எண் A18A மூலம் 10 நடைகள் இயக்கப்படுகிறது. தடம் எண்: A17 கோரிக்கை வழித்தடமான திருமங்கலம், காளி வழியாக மணல்மேடு வரை இயக்கப்படுகிறது. எனவே, கோரிக்கை வழித்தடத்தில் பகுதி பகுதியாக பேருந்து வசதி உள்ளது.

79—

பேருந்து இயக்குதல்

வினா எண் 3380—திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலாடுதுறையிலிருந்து வானதிராஜபுரம் வழியாக கும்பகோணத்திற்கு (கல்லணை சாலையில்) பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறையிலிருந்து வானதிராஜபுரம் வழியாக கும்பகோணம் 46 கி.மீ. தொலைவில் உள்ளது. குத்தாலத்திலிருந்து வேப்பத்தூர் வழியாக கல்லணை சாலையில் கும்பகோணம் வரை (31 கி.மீ.) தடம் A2A பேருந்துமூலம் 6 நடைகளும் மற்றும் A2B பேருந்துமூலம் 5 நடைகளும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மயிலாடுதுறையிலிருந்து வானதிராஜபுரம் 8 கி.மீ. தொலைவில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்து வானதிராஜபுரம் செல்லும் வழியில் மாப்படுகை 5 கி.மீ. தொலைவில் உள்ளது. தினசரி மாப்படுகை வரை தடம் எண் A17 மூலமாக 6 நடைகளும் A17A மூலமாக 9 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. வானதிராஜபுரத்திலிருந்து குத்தாலம் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. இதில் அஞ்சலாறிலிருந்து குத்தாலம் 7 கி.மீ. தொலைவில் உள்ளது. தினசரி தடம் எண் A5, A22, A26, A35 ஆகிய பேருந்துகள்மூலம்

குத்தாலத்திலிருந்து அஞ்சலாறு வரை இயக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறாக கோரிக்கையில் கோரப்பட்டுள்ள வழித்தடத்தில் மேற்கண்டுள்ளவாறு பயணிகள் பயன்பாட்டிற்கேற்ப பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

80—

சிற்றுந்து இயக்குதல்

வினா எண் 3661—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, மாதவரம் பழைய பேருந்து நிலையத்திலிருந்து தபால்பெட்டி, மூலக்கடை வழியாக புதிய பேருந்து நிலையம் வரை சிற்றுந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாநகர் போக்குவரத்துக் கழகம் தடம் எண் 121M (மாதவரம் பேருந்து நிலையம்-கோயம்பேடு)-ல் 4 பேருந்துகள், தடம் எண் 121F (மாதவரம் பேருந்து நிலையம்–தாம்பரம்)-ல் 2 பேருந்துகள் மாதவரம் பேருந்து நிலையத்திலிருந்து, மாதவரம் பழைய பேருந்து நிலையம், தபால்பெட்டி, மூலக்கடை, புதிய மாதவரம் புறநகர் பேருந்து நிலையம் (MMBT) வழியாக பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப இயக்கப்படுகின்றன. எனவே, பேருந்துகள் இயக்கப்படும் இவ்வழித்தடத்தில் சிற்றுந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழாது.

81—

பணிமனை

வினா எண் 3885—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

(அ) குளச்சல் தொகுதி, அழகிய மண்டபத்தில் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாகர்கோவில் மண்டலத்தில் கோரிக்கையில் கேட்கப்பட்ட அழகிய மண்டபத்திலிருந்து சுமார் 7.0 கிலோ மீட்டர் தொலைவில் திங்கள்நகர் பணிமனையும், சுமார் 10.0 கிலோ மீட்டர் தொலைவில் திருவட்டாறு பணிமனையும், சுமார் 9.9 கிலோ மீட்டர் தொலைவில் மார்த்தாண்டம் பணிமனையும் அமைந்துள்ளது. இப்பணிமனைகளிலிருந்து அழகிய மண்டபம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளுக்கு போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேற்கண்ட பணிமனைகளில் பேருந்துகள் பராமரிப்பு மற்றும் இயக்கங்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே, அழகிய மண்டபத்தில் பணிமனை அமைக்கப்படுவதற்கான அவசியம் தற்போது இல்லை.

82—

சுற்றுலா பேருந்து

வினா எண் 3887—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத் தலங்களுக்கு போக்குவரத்துக் கழகம் சார்பில் சுற்றுலா பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்ட சுற்றுலாத் தலங்களான கன்னியாகுமரி, சுசீந்திரம், பத்மநாபபுரம் அரண்மனை, முட்டம்,

திற்பரப்பு முதலான அனைத்து பகுதிகளுக்கும் மாவட்டத்தின் முக்கிய இடங்களான நாகர்கோவில், தக்கலை, மார்த்தாண்டம் பேருந்து நிலையங்களிலிருந்து குறைந்த இடைவெளி நேரங்களில் பேருந்துகள் தேவைக்கேற்ப இயக்கப்படுகின்றன. இயக்கப்பட்டு வரும் இப்பேருந்துகளை பயன்படுத்தி தேவைக்கேற்ப பயணம் செய்யலாம். சுற்றுலா பகுதிகளை இணைத்து நீண்ட காலங்களுக்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட ஒரு பேருந்து, பயணிகளின் பயன்பாடு இல்லாமையால் ஆரம்ப நிலையிலேயே நிறுத்தப்பட்டது. மேலும், தற்போது உள்ள பேருந்துகள் 40 சதவிகிதத்திற்கும் குறைவான பயணி அடர்வுடன் செயல்பட்டு வரும் நிலையில், மேலும் கூடுதலாக சுற்றுலா தலங்களை இணைத்து பேருந்து இயக்கத் தேவை எழவில்லை.

83—

கூடுதல் பேருந்து

வினா எண் 4226—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, இடையன்குளம், களக்காடு வழியாக நாங்குநேரிக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி–களக்காட்டை தொடர்புபடுத்தி திருநெல்வேலி மண்டல புறநகரப் பேருந்துகள் தடம் எண் 182N மூலம் 4 சுற்றுக்களும், தடம் எண் 102C மூலம் 4 சுற்றுக்களும், நகரப் பேருந்துகள் தடம் எண் 18A, 18B, 18C, 18D, 18F மூலம் 22 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. கோரிக்கையில் தெரிவித்துள்ள இடையன்குளம் வழியாக களக்காடு சேரன்மகாதேவி என தடம் எண் 23E மூலம் 10 சுற்றுக்களும்,

2023 ஏப்ரல் 21]

*தடம் எண் 23*F *மூலம் 2 சுற்றுக்களும் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் தடம் எண் 23*E*மூலம் இயக்கப்படும் 10 சுற்றுக்களில் 6 சுற்றுக்கள் காமநேரி வரை இயக்கப்படுகிறது. இவ்வழித்தடங்களில் நேரடி பயணிகள் பயன்பாடு குறைவாக உள்ளதால் இடையன்குளம் களக்காடு-நாங்குநேரி என பகுதி, பகுதியாக போதிய பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.*

84—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4362—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாதவரம் தொகுதி, சோழவரம் ஒன்றியம், காரனோடை முதல் தாம்பரம் வழியாக வண்டலூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) மாநகர் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் காரனோடையிலிருந்து செங்குன்றம் வழியாக தடம் எண் 57*F, *57*H, *57*J, *57*X *வரிசை மற்றும் தடம் எண் 114*D, *114*E, *114*S, *தடம் எண். 512, 514, 547, 547*A*-ல் சுமார் 35 பேருந்துகள் பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப இயக்கப்பட்டு வருகின்றன. காரனோடை பகுதிவாழ் மக்கள் மேற்குறிப்பிட்ட தட பேருந்துகளை பயன்படுத்தி, செங்குன்றம் வந்தடைந்தால், அங்கிருந்து இயக்கப்படும் தடம் எண் 104-ன் (செங்குன்றம்-தாம்பரம்)மூலம் இயக்கப்படும் 13 பேருந்துகளை பயன்படுத்தி தாம்பரம் சென்றடையலாம். தாம்பரத்திலிருந்து தடம் எண் 70*G, E*18*, G*18*, *21*G, *500-ல் இயக்கப்படும் 100-க்கும் மேற்பட்ட பேருந்துகளை பயன்படுத்தி காரனோடை பொதுமக்கள் வண்டலூர் சென்றடையலாம்.*

[2023 ஏப்ரல் 21

85—

பேருந்து இயக்குதல்

வினா எண் 4382—திரு. கே.எஸ். சரவணக்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகுளம் தொகுதி, G. கல்லுப்பட்டியில் இருந்து தேவதானப்பட்டி, சில்வார்பட்டி, கானாவிலக்கு வழியாக தேனிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரியகுளம்–வத்தலக்குண்டு (வழி) தேவதானப்பட்டி, காட்ரோடு, கெங்குவார்பட்டி, G.கல்லுப்பட்டி வழித்தடத்தில் 14 தனி நடைகளும், வத்தலக்குண்டு–ஜெயமங்கலம் (வழி) காட்ரோடு, தேவதானப்பட்டி, சில்வார்பட்டி மற்றும் பெரியகுளம்–ஜெயமங்கலம் (வழி) தேவதானப்பட்டி, சில்வார்பட்டி வழித்தடத்தில் 34 தனி நடைகளும் பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. இப்பேருந்து வசதிகளை பயன்படுத்தி G.கல்லுப்பட்டியிலிருந்து பெரியகுளம் மற்றும் ஜெயமங்கலம் வரும்பட்சத்தில் பெரியகுளம்–தேனிக்கு நகர் பேருந்துமூலம் தினசரி 45 தனி நடைகளும், புறநகர் பேருந்துகள்மூலம் தினசரி 250 தனி நடைகள் என தேனிக்கு போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலும், ஜெயமங்கலம்–கானாவிலக்கு நகர் பேருந்துமூலம் தினசரி 4 தனி நடைகளும், கானாவிலக்கு–தேனிக்கு நகர் பேருந்துமூலம் தினசரி 90 தனி நடைகளும் புறநகர் பேருந்துகள்மூலம் தினசரி 260 தனி நடைகளும் தேனிக்கு போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, இப்பேருந்து வசதிகளே போதுமானதாகும்.

2023 ஏப்ரல் 21]

86—

பேருந்து இயக்குதல்

வினா எண் 7035—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு மலைச் சுற்றுப் பாதையில் அரசு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக, திருச்செங்கோடு பேருந்து நிலையத்திலிருந்து நாமக்கல் செல்லும் பேருந்துகள் மலைச் சுற்றுப்பாதையில் உள்ள பாதமுனியப்பன் பேருந்து நிறுத்தம் வழியாகவும், பரமத்தி—வேலூர் செல்லும் பேருந்துகள் வாலரைகேட் பேருந்து நிறுத்தம் வழியாகவும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, மலைச் சுற்றுப்பாதையில் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக போதுமான அளவு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

87—

சொந்தக் கட்டடம்

வினா எண் 7129—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, பனிக்கன்குப்பத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டில் 12 சரக அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களும், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் (பகுதி) அலுவலகங்களும், 22 சோதனைச்சாவடிகளும் என மொத்தம் 181 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. வட்டாரப் போக்குவரத்து அலுவலர், கடலூர் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் பண்ருட்டி பகுதி அலுவலகத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு பனிக்கன்குப்பம் கிராமத்தில் சர்வே எண் 134 பிரிவு 12, 2, 8, 9, 6, 7–ல் உள்ள 5.71 ஏக்கர் பரப்பளவுள்ள இடம் கண்டறியப்பட்டு மேற்கண்ட நிலத்தினை போக்குவரத்து துறைக்கு ஒதுக்கீடு செய்து தருமாறு கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடம் போக்குவரத்துத் துறைக்கு கடலூர் ஆட்சியர் அவர்களால் ஒதுக்கீடு செய்து அனுமதி வழங்கிய உடன் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் பண்ருட்டி வட்டாரப் போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

88—

பணிமனை

வினா எண் 7359—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கும்மிடிப்பூண்டியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், பெத்திக்குப்பம் கிராமத்தில் புல எண் 173/3 மற்றும் 173/4–ல்,

2023 ஏப்ரல் 21]

1.90.5 ஹெக்டேர் நிலம் சென்னை மாநகர் போக்குவரத்துக் கழகத்திற்கு பணிமனை மற்றும் பேருந்து நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்நிலத்திற்கான நில மதிப்பாக நிர்ணயிக்கப்பட்ட தொகையில் சிறப்பு நேர்வாக கருதி 50% குறைத்து மாவட்ட ஆட்சியர், திருவள்ளூர் அவர்களின் செயல்முறை ஆணையில் நிர்ணயம் செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், அந்நிலத்திற்கான தொகையை செலுத்த மாநகர் போக்குவரத்துக் கழக நிர்வாக குழும ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. நில மதிப்பை செலுத்துவதற்கான நிர்வாக குழும ஒப்புதலைப் பொறுத்து மட்டுமே புதிய பணிமனை அமைப்பது குறித்து பரிசீலிக்கலாம்.

89—

நகரப் பேருந்து

வினா எண் 7367—திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தளி தொகுதி, தேன்கனிக்கோட்டையிலிருந்து பெட்டமுகிலாளம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தேன்கனிக்கோட்டையிலிருந்து பெட்டமுகிலாளத்திற்கு தேன்கனிக்கோட்டை கிளை நகர் பேருந்து தடம் எண் E36-ன்மூலம் நாளொன்றுக்கு 8 நடைகள் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காக தொடர்ந்து இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் தற்போதுள்ள பேருந்து வசதியே போதுமானதாகும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 21

90—

பணிமனையில் நவீன வசதி

வினா எண் 10171—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கலைஞர் கருணாநிதி நகர் பேருந்து பணிமனையை நவீன வசதிகளுடன் மாற்றிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

மாநகர் போக்குவரத்துக் கழகத்தில் வணிக வளாகங்களுடன் பணிமனைகளை நவீனமயமாக்கி வருவாய் ஈட்டுதல் திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்ட 16 பணிமனை/பேருந்து நிலையங்கள் நவீனப்படுத்த தேர்வு செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு உள்கட்டமைப்பு வளர்ச்சி குழுமம் (TNIDB) *மூலம் நிதி உதவியுடன் தமிழ்நாடு உள்கட்டமைப்பு நிதி மேலாண்மை நிறுவனத்தின்* (TNIFMC) *ஒருங்கிணைப்புடன் விரிவான சாத்தியக்கூறு அறிக்கை* (DFR) *தயாரிக்கப்பட்டு வருகிறது. தேர்வு செய்யப்பட்ட 16 பணிமனை/பேருந்து நிலையங்களில் கலைஞர் கருணாநிதி நகர் பேருந்து பணிமனையும் நவீனப்படுத்தப்பட உள்ளது.*

91—

புதிய வழித்தடத்தில் பேருந்து

வினா எண் 11420—திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

விருகம்பாக்கம் தொகுதி, கலைஞர் கருணாநிதி நகர் பேருந்து பணிமனையிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

கோரிக்கை வழித்தடமான கே.கே. நகர் அருகிலுள்ள சைதாப்பேட்டை மேற்கு பகுதியிலிருந்து அசோக்பில்லர் வழியாக ஸ்ரீபெரும்புதூருக்கு தடம் எண் 553W–ல் 2 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், தி.நகரிலிருந்து கே.கே.நகர் பேருந்து நிறுத்தம் வழியாக பூந்தமல்லிக்கு இயக்கப்படும் தடம் எண் 49A–ஐ பயன்படுத்தி பூந்தமல்லி வந்தடைந்தால், அவ்வழியாக இயக்கப்படும் தடம் எண் 578–ஐ பயன்படுத்தி ஸ்ரீபெரும்புதூர் சென்றடையலாம். அதேபோன்று, தடம் எண் 70G (வடபழனி–கூடுவாஞ்சேரி) மற்றும் தடம் எண் 70C (கோயம்பேடு–தாம்பரம்) பேருந்துகளை பயன்படுத்தி தாம்பரம் வந்தடைந்தால், அங்கிருந்து தாம்பரம்–ஸ்ரீபெரும்புதூர் வரை இயக்கப்படும் தடம் எண் 583, 583C, 583D பேருந்துகளைப் பயன்படுத்தி ஸ்ரீபெரும்புதூர் சென்றடையலாம். மேற்கண்டவாறு கோரிக்கை வழித்தடத்தில் பயணிகளின் பயன்பாட்டிற்கு ஏற்ப பகுதி பகுதியாக பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

92—

மினி பேருந்து

வினா எண் 11520—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரியிலிருந்தும் பொம்மிடியிலிருந்தும் வத்தல்மலைக்கு மினி பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வட்டார போக்குவரத்து அதிகாரி, தருமபுரி அவர்கள் தலைமையில் தருமபுரி மாவட்ட போக்குவரத்துக்

[2023 ஏப்ரல் 21

குழு, 21-09-2021 அன்று மலைப் பாதையை ஆய்வு செய்ததில் அவ்வழித்தடம் மிகவும் குறுகலாகவும், மண் சரிவு ஏற்படும் அபாயமும் உள்ளதாகவும் எனவே, மினி பேருந்து போக்குவரத்து அனுமதிக்கும்பட்சத்தில் விபத்து மற்றும் உயிரிழப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஆகவே, தேவையான இடங்களில் தடுப்புச் சுவர் அமைத்து பாதையை அகலப்படுத்தினால் மட்டுமே மினி பேருந்து இயக்க இயலும். எனவே, தற்போதைய சூழ்நிலையில் அனுமதி வழங்க இயலாத நிலை உள்ளது.

93—

மினி பேருந்து

வினா எண் 11522—திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் முட்டம் பகுதியிலிருந்து கல்வராயன் மலைக்கு மினி பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் முட்டம் பகுதியிலிருந்து கல்வராயன் மலைக்கு செல்லும் வழித்தடம் இருசக்கர வாகனங்கள் மட்டும் செல்லும் வகையில் உள்ளது. இவ்வழித்தடத்தில் மினி பேருந்து இயக்க அனுமதி தற்போது வழங்க இயலாத சூழ்நிலை உள்ளது.

94—

பேருந்து இயக்குதல்

வினா எண் 12584—திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 21]

பழனி தொகுதி, பழனி வட்டம், பெரியம்மாபட்டி ஊராட்சி, புளியம்பட்டி கிராமத்திற்கு அரசு பேருந்து இயக்கிட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பழனி தொகுதி, பழனி வட்டம், பெரியம்மாபட்டி ஊராட்சி, புளியம்பட்டி கிராமம் பழனியிலிருந்து சுமார் 18 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது. மேலும், சண்முகம்பாறையிலிருந்து புளியம்பட்டி கிராமம் 2 கி.மீ. தூரத்தில் உள்ள ஒரு புதிய வழித்தடமாகும். தற்போது அரசு நகரப் பேருந்துகள்மூலம் பழனியிலிருந்து பெருமாள்புதூர் வரை தினசரி 4 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. பெருமாள்புதூரிலிருந்து சண்முகம்பாறை வரை உள்ள சாலையில் 1.0 கி.மீ. தூரம் பழுதடைந்து பேருந்து இயக்க இயலாமல் இருப்பதாலும், சண்முகம்பாறைக்கும் புளியம்பட்டிக்கும் இடையில் 2.0 கி.மீ. தூரம் பாலம் கட்டுமான பணிகள் நடைபெறுவதாலும் தற்போது புளியம்பட்டி வரை பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

95—

சொகுசு பேருந்து

வினா எண் 12742—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தஞ்சாவூரிலிருந்து கந்தர்வகோட்டை வழியாக புதுக்கோட்டை, மதுரை வரை செல்ல அரசு சொகுசுப் பேருந்து (SETC) *இயக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு வழிகாட்டுதலின்படி அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக 300 கிலோ மீட்டருக்கு மேல் தூரம் உள்ள இடங்களுக்கு மட்டுமே பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, 176 கிலோ மீட்டர் தூரம் உள்ள தஞ்சாவூரிலிருந்து கந்தர்வகோட்டை வழியாக புதுக்கோட்டை, மதுரை வரையிலான வழித்தடத்தில் நேரடி பேருந்துகள் இயக்க வழிவகை இல்லை.

96—

பணிமனை

வினா எண் 12902—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கீரனூரில் போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 2014–2015 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் 23–7–2014 ஆம் தேதியன்று புதுக்கோட்டை மண்டலம், கீரனூரில் புதிய பணிமனை அமைக்க அறிவிக்கப்பட்டது. கீரனூர் கிராமத்தில் சர்வே எண் 446/17, 446/18, 446/19 மற்றும் 446/20–ல் 2.02 ஏக்கர் (ஹெக்டேர் 0.82.0 ஏர்ஸ்) நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பணிமனை கட்ட தோராயமாக ரூபாய் 237.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பணி துவங்க சட்டமன்ற மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடுக்காக நிலுவையிலுள்ளது.

2023 ஏப்ரல் 21]

97—

பேருந்து

வினா எண் 12931—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதியில் உள்ள நொடியூர் ஊராட்சி, மு.சோழகம்பட்டி ஊர்மக்கள் பயன்பெறும் வகையில் திருக்காட்டுப்பள்ளி – ஆச்சாம்பட்டி வரை செல்லும் பேருந்தை மு.சோழகம்பட்டி வரை நீட்டிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 26-06-2022 அன்று முதல் தஞ்சாவூர் நகர்-2 கிளையிலிருந்து புறநகர் பேருந்து தடம் எண் 475Dமூலம் காலை 07.00 மணி, மாலை 5.30 மணி என தினசரி 4 நடைகள் திருக்காட்டுப்பள்ளியிலிருந்து செங்கிப்பட்டி, ஆச்சாம்பட்டி வழியாக மு.சோழகம்பட்டி வரை இயக்கப்பட்டு வருகின்றன.

98—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 12961—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கந்தர்வகோட்டை, கறம்பக்குடி, குன்றாண்டார்கோவில், ஆதனக்கோட்டை ஆகிய ஒன்றியங்களை உள்ளடக்கி கந்தர்வகோட்டையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவக்க அரசு முன்வருமா?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டில் 12 சரக அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து அலுவலகங்களும், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும் (பகுதி அலுவலகம்) மற்றும் 22 சோதனைச் சாவடிகளும் என மொத்தம் 181 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

2. புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும் அறந்தாங்கி, இலுப்பூர் மற்றும் ஆலங்குடி ஆகிய பகுதிகளில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும் (பகுதி அலுவலகம்) இயங்கி வருகின்றன. கந்தர்வகோட்டையிலிருந்து புதுக்கோட்டை 34 கி.மீ. தொலைவிலும், ஆலங்குடி 29 கி.மீ. தொலைவிலும், இலுப்பூர் 58 கி.மீ. தொலைவிலும் மற்றும் அறந்தாங்கி 56 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. கந்தர்வகோட்டைக்கு மிக அருகில் நான்கு போக்குவரத்துத் துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

3. கந்தர்வகோட்டை பகுதியில் 1,800 போக்குவரத்து வாகனங்களும், 6,100 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. மேலும் ஒரு புதிய பகுதி அலுவலகம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 2,500 போக்குவரத்து வாகனங்களும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவங்குவதற்கு 7,500 போக்குவரத்து வாகனங்களும் இருத்தல் வேண்டும். எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் கந்தர்வகோட்டை பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வருங்காலங்களில் இப்பகுதியில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயப்படும்.

2023 ஏப்ரல் 21]

99—

பேருந்து இயக்குதல்

வினா எண் 14336—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதிக்குட்பட்ட கீழபுலிவார்டு சாலை வழியாக பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்பகோணம்) லிமிடெட், திருச்சி மண்டலத்தின் 3 நகரப் பேருந்துகள்மூலம் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் – டவுன் நிலையம், கீழப்புலிவார்டு சாலை வழியாக துவாக்குடி, தேவராயநேரி, பழங்கனாகுடி ஆகிய ஊர்களுக்கு தினசரி 7 நடைகளும், திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் – திருச்சி மத்திய பேருந்து நிலையம் (வழி) கீழப்புலிவார்டு வழியாக தினசரி 4 நடைகளும் ஆக மொத்தம் தினசரி 11 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 22–9–2021 அன்று முதல் திருச்சி சத்திரம் பேருந்து நிலையம் – திருவெறும்பூர் (வழி) கீழப்புலிவார்டு ரோடு வழியாக இரு நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 2 நடைகள் பள்ளி மாணாக்கர்களுக்கு பயனளிக்கும் வகையில் கூடுதலாக இயக்கப்படுகின்றன.

100—

பேருந்து வழித்தடம்

வினா எண் 15398—திரு. வே. சம்பத்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நரிப்பள்ளி–தீர்த்தமலை–ஊத்தங்கரை வழியாக திருப்பதி செல்ல புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

பேருந்து வசதி கோரியுள்ள நரிப்பள்ளி, தீர்த்தமலை, ஊத்தங்கரை வழியாக திருப்பதி வழித்தடத்தின் நீளம் 292.0 கிலோ மீட்டர் ஆகும். இதில் நரிப்பள்ளியிலிருந்து அரூருக்கு 9 அரசு பேருந்துகளின்மூலம் 32 நடைகளும், 41 தனியார் பேருந்துகளின்மூலம் 40 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. அரூரிலிருந்து வேலூர் (வழி) ஊத்தங்கரை, திருப்பத்தூர் 38 பேருந்துகளின்மூலம் 76 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், வேலூரிலிருந்து திருப்பதிக்கு ஒவ்வொரு 30 நிமிட இடைவெளியில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோரியுள்ள வழித்தடத்தில் உள்ள அனைத்து ஊர்களுக்கும் பகுதிவாரியாக பேருந்து வசதியுள்ளது.

பட்டியல்–16

1—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 17594—திரு. மா. சின்னதுரை: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கந்தர்வகோட்டை தொகுதி, கந்தர்வகோட்டையில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் புதியதாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டில் 12 சரக அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து அலுவலகங்களும், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும்

2023 ஏப்ரல் 21]

(பகுதி அலுவலகம்) மற்றும் 22 சோதனைச் சாவடிகளும் என மொத்தம் 181 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

2. புதுக்கோட்டை மாவட்டத்தில், புதுக்கோட்டையில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும் அறந்தாங்கி, இலுப்பூர் மற்றும் ஆலங்குடி ஆகிய பகுதிகளில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும் (பகுதி அலுவலகம்) இயங்கி வருகின்றன. கந்தர்வகோட்டையிலிருந்து புதுக்கோட்டை 34 கி.மீ. தொலைவிலும், ஆலங்குடி 29 கி.மீ. தொலைவிலும், இலுப்பூர் 58 கி.மீ. தொலைவிலும் மற்றும் அறந்தாங்கி, 56 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. கந்தர்வகோட்டைக்கு மிக அருகில் நான்கு போக்குவரத்துத் துறை அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

3. கந்தர்வகோட்டை பகுதியில் 1,800 போக்குவரத்து வாகனங்களும், 6,100 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. மேலும், ஒரு புதிய பகுதி அலுவலகம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 2,500 போக்குவரத்து வாகனங்களும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவங்குவதற்கு 7,500 போக்குவரத்து வாகனங்களும் இருத்தல் வேண்டும். எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் கந்தர்வகோட்டை பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வருங்காலங்களில் இப்பகுதியில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயப்படும்.

2—

போக்குவரத்து அலுவலகம்

வினா எண் 17721—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் பகுதியில் வாகனங்களின் எண்ணிக்கையை கருத்தில்கொண்டு புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போக்குவரத்துத் துறை கட்டுப்பாட்டில் 12 சரக அலுவலகங்களும், 2 செயலாக்க இணைப் போக்குவரத்து ஆணையர் அலுவலகங்களும், 91 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களும், 54 மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும் (பகுதி அலுவலகம்) மற்றும் 22 சோதனைச் சாவடிகளும் என மொத்தம் 181 அலுவலகங்கள் இயங்கி வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில், தருமபுரியில் ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகமும் அரூர் மற்றும் பாலக்கோடு ஆகிய பகுதிகளில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்களும் (பகுதி அலுவலகம்) இயங்கி வருகின்றன. பெண்ணாகரத்திலிருந்து தருமபுரி 31 கி.மீ. தொலைவிலும், பாலக்கோடு 32 கி.மீ. தொலைவிலும் மற்றும் அரூர் 73 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளது. தருமபுரி மாவட்டத்தில் ஏற்கெனவே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் மற்றும் இரண்டு மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் (பகுதி அலுவலகம்) இயங்கி வருகின்றன.

மேலும், பெண்ணாகரம் பகுதியில் 1,937 போக்குவரத்து வாகனங்களும், 21,050 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் உள்ளன. ஒரு புதிய பகுதி அலுவலகம் துவங்குவதற்கு குறைந்தபட்சம் 2,500 போக்குவரத்து வாகனங்களும், வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் துவங்குவதற்கு 7,500 போக்குவரத்து வாகனங்களும் இருத்தல் வேண்டும். எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் பெண்ணாகரம் பகுதியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும், வருங்காலங்களில் இப்பகுதியில் போக்குவரத்து வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து ஆராயப்படும்.

2023 ஏப்ரல் 21]

3—

சிற்றுந்துகள் இயக்குதல்

வினா எண் 18957—திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மேற்கு மாம்பலம்–சாமியார்மடம்–கோடம்பாக்கம்–கோயம்பேடு வரை செல்ல சிற்றுந்துகளை இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

*மேற்கு மாம்பலத்திலிருந்து தடம் எண் 11*G, *12*G, *11*H, *12*M, *11*G, Extn *போன்ற பேருந்துகளைப் பயன்படுத்தி பயணிகள் அசோக்பில்லர் வந்தடைந்தால், அவ்வழியாக இயக்கப்படும் தடம் எண்கள் 70*V, *70, 170*C, *113, 111, 76, 78 போன்ற பேருந்துகளைப் பயன்படுத்தி கோயம்பேடு சென்றடையலாம்.*

4—

பேருந்து இயக்குதல்

வினா எண் 21149—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெண்ணாகரம் முதல் திருப்பூர் வரை இயக்கப்பட்ட புறநகர் பேருந்தை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெண்ணாகரத்திலிருந்து திருப்பூருக்கு நேரடி பயணிகளின் பயன்பாடு மிகவும் குறைவாக இருப்பதால்

[*2023 ஏப்ரல் 21*

பெண்ணாகரத்திலிருந்து திருப்பூருக்கு நேரடி பேருந்து இயக்கப்படவில்லை. இருப்பினும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக தருமபுரி மண்டலத்தின்மூலம் பெண்ணாகரத்திலிருந்து ஈரோட்டிற்கு செல்ல பெண்ணாகரம் கிளை தடம் எண் 750A பேருந்தின்மூலம் காலை மற்றும் தடம் எண் 245B பேருந்தின்மூலம் மாலை என இருவேளைகளிலும் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், ஈரோட்டிலிருந்து திருப்பூருக்கு தருமபுரி புறநகர் கிளை தடம் எண் 213D காலை 2.50 மணிக்கும் மற்றும் ராசிபுரம் கிளை தடம் எண் 755A பேருந்தின்மூலம் காலை 08.27 மணிக்கும் மற்றும் மாலை 04.22 மணிக்கும் மற்றும் 5005E பேருந்தின்மூலம் 10.16 மணிக்கும் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், ஈரோட்டிலிருந்து திருப்பூருக்கும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோவை) வரையறுக்கப்பட்டதுமூலம் நாளொன்றுக்கு 57 பேருந்துகளின்மூலம் 171 புறப்பாடுகளும் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்கூறிய வழித்தடத்திற்கு பகுதிவாரியாக போதுமான அளவு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

5—

பேருந்து இயக்குதல்

வினா எண் 21558—திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ)ஒட்டப்பிடாரம்தொகுதிக்கும்தூத்துக்குடி–புதுக்கோட்டை–தெய்வச்செயல்புரம்– புளியம்பட்டி–வேப்பங்குளம்–கயத்தாறு வரை புதுவழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி புறநகரக் கிளையைச் சார்ந்த தடம் எண் 104 பேருந்துமூலம் தற்போது தூத்துக்குடி பழைய பேருந்து நிலையத்திலிருந்து புதுக்கோட்டை, தெய்வச்செயல்புரம், புளியம்பட்டி வழியாக வேப்பங்குளம் வரை காலை மற்றும்

2023 ஏப்ரல் 21]

*மாலை வேளைகளில் 4 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. கோவில்பட்டி கிளை பேருந்து தடம் எண் 158*B *பேருந்துமூலம் திருநெல்வேலி, புளியம்பட்டி, கயத்தாறு, கோவில்பட்டி என 4 சுற்றுகள் இயக்கப்படுகின்றன. இவ்வாறாக, கோரிக்கை தடத்தை தொடர்புபடுத்தி பகுதி பகுதியாக இரு பேருந்துகள் இயக்கப்படுகின்றன.*

6—

பேருந்து இயக்குதல்

வினா எண் 11327—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, திருநெல்வேலியிலிருந்து கூந்தன்குளம் பறவைகள் சரணாலயத்துக்கு கூடுதல் பேருந்துகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

*(அ) மற்றும் (ஆ) நாங்குநேரியிலிருந்து கூந்தன்குளத்திற்கு ஒரு நகரப் பேருந்து 18*E*மூலம் 2 சுற்றுகளும் திருநெல்வேலியிலிருந்து இரண்டு புறநகரப் பேருந்துகள் 165*J *மற்றும் 165*H *மூலம் 7 சுற்றுகளும் இயக்கப்படுகின்றன. இப்பேருந்துகளில் பயணிகளின் பயன்பாடு குறைவாகவே இருப்பதால் இப்பேருந்துகளே போதுமானதாக உள்ளது.*

7—

பேருந்து இயக்குதல்

வினா எண் 37749—திரு. ரூபி ஆர். மனோகரன்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரியிலிருந்து நாச்சான்குளம்,

பத்மநாபமங்களம் ஆகிய ஊர்களுக்கு புதிய அரசு பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரியிலிருந்து காலை 9.30 மணிக்கு தடம் எண் 18E பேருந்து திருமலாபுரம் செல்லும்போது, நாங்குநேரி வரும்போதும் நாச்சான்குளம் வழியாக நாளொன்றுக்கு 2 சுற்றுகள் இயக்கப்பட்டு வருகின்றன. நாங்குநேரியிலிருந்து பத்மநாபமங்களம் சுமார் 52.8 கி.மீ. தூரம் உள்ளது. [(வழி) மூலகரைபட்டி, முனைஞ்சிபட்டி, சிந்தாமணி, தெற்குகாரசேரி, ஆழ்வார்கற்குளம்]. எனவே, புறநகர் பேருந்து மட்டுமே இயக்க இயலும். இப்பேருந்துகளில் பயணிகளின் பயன்பாடு குறைவாகவே இருப்பதால் இப்பேருந்துகளே போதுமானதாக உள்ளது.

8—

பேருந்து இயக்குதல்

வினா எண் 52653—திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து திருச்செந்தூருக்கு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம்மூலம் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு வரையறுக்கப்பட்டது வாயிலாக கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூர், புதுக்கோட்டை வழியாக திருச்செந்தூருக்கு காலை

2023 ஏப்ரல் 21]

மற்றும் இரவு நேரங்களில் 2 பேருந்துகள் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், புதுக்கோட்டையிலிருந்து திருச்செந்தூருக்கு செல்ல இணையதள முன்பதிவுமூலம் முன்பதிவு செய்து பயணிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், பேராவூரணி பயணிகள் சுமார் 49 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள புதுக்கோட்டைக்கு வந்தடைந்து மேற்படி பேருந்து வசதியினை பயன்படுத்திக்கொள்ளலாம்.

9—

பேருந்து இயக்குதல்

வினா எண் 54706—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், நன்னிலம் முதல் ஸ்ரீவாஞ்சியம், ஸ்ரீவாஞ்சியம் முதல் நன்னிலம் வரை காலையிலும், மாலையிலும் பள்ளி மாணவர்களுக்காக இயங்கி வந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோரிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நன்னிலம்– ஸ்ரீவாஞ்சியம் தடத்தில் நன்னிலம் கிளை நகரப் பேருந்து தடம் எண் A51மூலம் நன்னிலத்திலிருந்து காலை 8.15 மற்றும் மாலை 5.40 மணிக்கும் தினசரி நான்கு நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது.

10—

பேருந்து இயக்குதல்

வினா எண் 57994—திரு. ச. சிவகுமார்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மயிலம் தொகுதி, வல்லம் ஒன்றியம், வீரணாமூர் கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் நலன்கருதி காலை 8.30 மணிக்கும் மாலை 4.30 மணிக்கும் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) வரையறுக்கப்பட்டது வாயிலாக செஞ்சி கிளையைச் சார்ந்த நகரப் பேருந்துகள் T18Aமூலம் 6 நடைகளும், T21Aமூலம் 10 நடைகளும், T9Aமூலம் 4 நடைகளும், புறநகர் பேருந்து தடம் எண் 140Vமூலம் 4 நடைகளும் மற்றும் திண்டிவனம் கிளை தடம் எண் T20Cமூலம் 4 நடைகளும் வீராணாமூர் பகுதி பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் வசதிக்காகவும் தொடர்ந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், 21-11-2022 முதல், தடம் எண் T21Aமூலம் காலை 07.45 மணிக்கு வெள்ளிமேடுபேட்டையில் நடையெடுத்து 08.20 மணிக்கு வீராணாமூர் வந்தடைந்து செஞ்சி வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. மாலை 15.35 மணிக்கு செஞ்சியில் நடையெடுத்து 16.30 மணிக்கு வீராணமூர் சென்றடைந்து வெள்ளிமேடுப்பேட்டை வழித்தடத்தில் இயக்கப்படுகிறது. எனவே, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் இப்பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

11—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 1209—திரு. இரா. அருள்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம், உத்தமசோழபுரம், அருள்மிகு கரபுரநாதசுவாமி திருக்கோயிலை புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், உத்தமசோழபுரம் அருள்மிகு கரபுரநாதசுவாமி திருக்கோயிலில் திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துவதற்கு முன்னேற்பாடாக தொல்லியல் துறை கருத்துரு பெற்று மண்டல அளவிலான வல்லுநர் குழுவில் ஒப்புதல் பெறப்பட்டு, மாநில அளவிலான வல்லுநர் குழுவிற்கு பரிந்துரை செய்யப்பட்டு நடவடிக்கையில் இருந்து வருகிறது. மாநில அளவிலான வல்லுநர் குழு மற்றும் மாண்பமை உயர் நீதிமன்ற வல்லுநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டவுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உபயதாரர்கள்மூலம் திருப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

12—

திருத்தேர் வழங்குதல்

வினா எண் 1600—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

திருவையாறு தொகுதி, செந்தலை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, செந்தலை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயிலுக்கு புதிய திருத்தேர் செய்திட திருக்கோயிலில் போதிய நிதி ஆதாரம் இல்லை. மேலும், திருத்தேர் செய்யும் பணிக்கு உபயதாரர்கள் நிதி வேண்டி அறிவிப்பு செய்யப்பட்டதில் நன்கொடையாளர்கள் எவரும் முன்வரவில்லை. எனவே, மேற்படி பணியினை செய்திட நன்கொடையாளர்கள் முன்வரும்பட்சத்தில் புதிய திருத்தேர் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13—

திருப்பணி செய்தல்

வினா எண் 1601—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவையாறு தொகுதி, திங்களூர் அருள்மிகு கைலாசநாதர் திருக்கோயிலுக்கு திருப்பணி செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருவையாறு சட்டமன்றத் தொகுதி, திங்களூர் அருள்மிகு கைலாசநாதர் சுவாமி திருக்கோயில் மிகவும் தொன்மையான திருக்கோயில் என்பதால் திருப்பணி செய்வது குறித்து இந்து சமய அறநிலையத் துறையின் தற்போதைய நடைமுறையின்படி தொல்லியல் துறை வல்லுநர் கருத்துரு பெற்று அதன் அடிப்படையில் மண்டல, மாநில அளவில் Heritage Screening Committee *மற்றும் மாண்பமை உயர் நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. எனவே, மேற்படி குழுவில் வழங்கப்பட்ட கருத்துருவின் அடிப்படையில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வருகிறது. விரைவில் உரிய அனுமதி பெற்று திருப்பணி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

14—

பணி நிரந்தரம்

வினா எண் 1668—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதியில் அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரியும் தற்காலிகப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கும்பகோணம் தொகுதியில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் தற்காலிகப் பணியாளர்களை விதிமுறைகளின்படி பணிநிரந்தரம் செய்வது தொடர்பான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

15—

தடுப்புச் சுவர் கட்டுதல்

வினா எண் 1911—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், தாயமங்கலம், அருள்மிகு முத்துமாரியம்மன் கோயில் வளாகத்தில் தடுப்புச் சுவர் கட்டவும், பொது சுகாதார வசதி, தங்கும் வசதி செய்யவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தடுப்புச் சுவர். மானாமதுரை தொகுதி, இளையான்குடி ஒன்றியம், தாயமங்கலம் அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோயில் சர்வே எண் 72-ல் 16 ஏக்கர் 27 சென்ட்டில் அமைந்துள்ளது. மேற்படி திருக்கோயிலைச் சுற்றி கிராமங்களுக்கு செல்வதற்கான தார்ச்சாலைகள் செல்வதால் அதற்கேற்ப தடுப்புச்சுவர் அமைக்க சிவகங்கை இந்து சமய அறநிலையத் துறை உதவி கோட்டப் பொறியாளர்மூலம் மதிப்பீடு தயார் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 21

பொது சுகாதாரம்

மேற்படி திருக்கோயிலில் நான்கு இடங்களில் பக்தர்களுக்கு கழிவறை வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், மூன்று இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், ஓர் இடத்தில் தரைத்தொட்டியும் அமைக்கப்பட்டு பக்தர்களுக்கு குடிநீர் வசதி தடையில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயில் 16 ஏக்கர் 27 சென்ட்டில் அமைந்துள்ளதால் அவுட்சோர்சிங்மூலம் சுகாதார வசதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தங்கும் வசதி

மேற்படி திருக்கோயிலில் பக்தர்கள் தங்கும் வசதிக்காக நான்கு பெரிய மண்டபங்கள் கட்டப்பட்டு பக்தர்களின் வசதிக்காக இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், பக்தர்கள் தங்கும் அறைகள் கட்டுவதற்கு சிவகங்கை உதவி கோட்டப் பொறியாளர் அவர்கள்மூலம் மதிப்பீடு தயார் செய்து செயல்படுத்த திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

16—

வடிகால் வசதி செய்தல்

வினா எண் 1960—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, தாராசுரம் பேரூராட்சியில் உள்ள அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அம்மன் கோயிலில் மழைநீரை வெளியேற்ற வடிகால் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம், தாராசுரம், அருள்மிகு ஐராவதீஸ்வரர் திருக்கோயில்

2023 ஏப்ரல் 21]

இரண்டாம் இராஜராஜசோழனால் கட்டப்பட்டதும், யுனெஸ்கோ நிறுவனத்தால் உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்ட வரலாற்றுப் புகழ்பெற்ற திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு இந்திய தொல்லியல் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி, திருக்கோயில் மற்றும் அம்மன் கோயிலில் மழைநீரை வெளியேற்ற நிரந்தர வடிகால் திட்டம் அமைக்கும் பணி இந்தியத் தொல்லியல் துறைமூலம் நடைபெற்று வருகிறது.

17—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 7541—முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவிடைமருதூர் தொகுதி, நவகிரக கோயிலான கஞ்சனூர் அருள்மிகு அக்னீஸ்வா சுவாமி திருக்கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவிடைமருதூர் வட்டம், கஞ்சனூர், அருள்மிகு அக்னீஸ்வர சுவாமி திருக்கோயிலுக்கு கடைசியாக குடமுழுக்கு 31-8-2006 அன்று நடைபெற்றது. குடமுழுக்கு நடைபெற்று 15 ஆண்டுகள் முடிவடைந்த நிலையில் மீண்டும் குடமுழுக்கு நடத்திட தொல்லியல் கருத்துரு பெறப்பட்டு 20-2-2020 அன்று மாநில அளவிலான Heritage Screening Committee *முன் வைக்கப்பட்டது. பின்னர், மேற்படி கருத்துரு உயர் நீதிமன்ற குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டவுடன் குடமுழுக்கு நடத்திட உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

[2023 ஏப்ரல் 21

18—

செயல் அலுவலர் நியமனம்

வினா எண் 11950—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு செயல் அலுவலரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை, விராலிமலை வட்டம், விராலிமலை கிராமத்தில் உள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் புதுக்கோட்டை தேவஸ்தானத்தின் கீழுள்ள திருக்கோயில்களில் ஒன்றாகும். புதுக்கோட்டை தேவஸ்தான திருக்கோயில்கள் நிலை-1 செயல் அலுவலர் மற்றும் பரம்பரை அல்லாத அறங்காவலர் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற நிலையில், விராலிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கென தனி செயல் அலுவலரை நியமனம் செய்வதற்கான அவசியம் எழவில்லை.

19—

இராஜகோபுரம் அமைத்தல்

வினா எண் 12020—திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானிசாகர் தொகுதி, பண்ணாரி அம்மன் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் அமைக்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர், அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோயிலில் புதியதாக ஒன்பது நிலை இராஜகோபுரம் கட்டுவதற்கு தொல்லியல் வல்லுநர் கருத்துரு பெறப்பட்டு, மண்டல அளவிலான வல்லுநர் குழு, மாநில அளவிலான வல்லுநர் குழு மற்றும் வரைபடத்திற்கு ஒப்புதல் வழங்கும் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்டு அதனடிப்படையில் ரூ.11,50,00,000/-க்கு மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் இம்மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் பெற்று பணி துவங்கப்படும்.

20—

குடமுழுக்கு நடத்துதல்

வினா எண் 51056—திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் நகர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், தேக்கம்பட்டி, அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலின் உபகோயிலாகும். இத்திருக்கோயில் பரம்பரை அறங்காவலராலும், உதவி ஆணையர்/செயல் அலுவலராலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு திருப்பணி செய்யும்பொருட்டு 14–2–2011–ல் பாலாலயம் செய்யப்பட்டு, சுமார் ரூ. 110.00 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்மூலம் திருப்பணிகள் நிறைவு பெற்று 5–9–2022 அன்று குடமுழுக்கு விழா நடைபெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 21

21—

இராஜகோபுரம் அமைத்தல்

வினா எண் 54805—திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பவானிசாகர் தொகுதி, சத்தியமங்கலத்தில் உள்ள அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோயிலுக்கு இராஜகோபுரம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் புதியதாக ஒன்பது நிலை இராஜகோபுரம் கட்டும் பணியினை ரூ.11.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை வெளியிடப்பட்டு, தற்போது ஒப்பந்தப்புள்ளிக்கு அங்கீகாரம் வழங்க நடவடிக்கையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெறப்பட்டவுடன், புதியதாக ஒன்பது நிலை இராஜகோபுரம் கட்டும் பணி துவங்கப்படும்.

22—

இராஜகோபுரம் அமைத்தல்

வினா எண் 55432—திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரியகள்ளிப்பட்டி அருள்மிகு மாகாளி அம்மன் திருக்கோயிலின் கட்டடப் பணிக்கு நிதியுதவி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பெரியகள்ளிப்பட்டி, அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயிலுக்கு 2021–2022 ஆம் ஆண்டு சட்டமன்ற அறிவிப்பின்படி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதியில் உள்ள திருக்கோயில் திருப்பணிக்கு நிதியுதவி வழங்கும் திட்டத்தின்கீழ் திருப்பணி மேற்கொள்ள நிதியுதவி வழங்கப்பட்டு, திருப்பணி செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

23—

கண்காணிப்பு கேமரா பொருத்துதல்

வினா எண் 1964—திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணத்தில் உள்ள சார்நிலைக் கருவூலத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கருவூலக் கணக்குத் துறையின்கீழ் உள்ள 40 அலுவலகங்களில் முதற்கட்டமாக அதிக மக்கள் தொடர்புடைய அலுவலகங்களில் 390 கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதற்கு அரசாணை (நிலை) எண் 196, நிதி (க.க.3)த் துறை, நாள் 31–8–2021–ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், படிப்படியாக மற்ற கருவூல அலுவலகங்களில் மற்றும் மேற்கண்ட கும்பகோணம் சார்நிலை கருவூலத்திற்கும் கண்காணிப்பு கேமரா பொருத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

24—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 14274—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி கருவூல அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி தொகுதியில், திருத்துறைப்பூண்டி சார்நிலை கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு திருத்துறைப்பூண்டி வட்டம் மற்றும் நகரம் வார்டு A, Block 8-ல் நகரளவை எண் 62-1 (பழைய புல எண் 154/2) மொத்தப் பரப்பு 1.31.00 எக்டேர் பரப்பில் 0.40.60 எக்டேர் அரசு புறம்போக்கு நிலத்தில் திருத்துறைப்பூண்டி வட்டாட்சியரால் இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து நிலம் ஒதுக்கீடு செயல்முறை ஆணை பெறப்பட்டவுடன், திருத்துறைப்பூண்டி சார்நிலை கருவூலத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

25—

சார்நிலைக் கருவூலம் அமைத்தல்

வினா எண் 17811—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சேத்துப்பட்டு வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் புதியதாக அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் புதியதாக அமைப்பது தொடர்பாக கருத்துரு வரப்பெற்று அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும், அரசின் நிதிநிலைமை மற்றும் திட்டத்தின் செயல்படுத்தும் தன்மை அறிந்து, திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டு வட்டத்தில் சார்நிலைக் கருவூலம் புதியதாக அமைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

26—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 526—திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தாம்பரம் தொகுதி, அகரம்தென் ஊராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி அகரம்தென் ஊராட்சியில் ஆவின் பாலகம் அமைக்க தகுதியின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

27—

ஆவின் பாலகம் அமைத்தல்

வினா எண் 714—திரு. JMH அசன் மௌலானா: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2023 ஏப்ரல் 21

(அ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி இரயில் நிலைய வளாகத்தில் ஆவின் பாலகம், பால் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வேளச்சேரி தொகுதி, வேளச்சேரி இரயில் நிலைய வளாகத்தில் ஆவின் பாலகம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

28—

பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம்

வினா எண் 1156—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

நெய்வேலி தொகுதியில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

2023 ஏப்ரல் 21]

29—

கட்டடம் கட்டுதல்

வினா எண் 1720—திரு. V.P. கந்தசாமி: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், து.கிருஷ்ணாபுரம் ஊராட்சி, வங்கப்பாளையம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சூலூர் தொகுதி, சுல்தான்பேட்டை ஊராட்சி ஒன்றியம், து.கிருஷ்ணாபுரம் ஊராட்சி, வங்கப்பாளையம் கிராமத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியுதவியுடன் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

30—

ஆவின் பால் பண்ணை மேம்படுத்துதல்

வினா எண் 1909—திருமதி ஆ. தமிழரசி: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மானாமதுரையில் உள்ள ஆவின் பால் பண்ணையை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மானாமதுரையில் உள்ள ஆவின் பால் பண்ணையை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

31—

பால் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 3666—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றயம், நெற்குன்றம் ஊராட்சி பகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

மாதவரம் தொகுதி, சோழவரம் ஊராட்சி ஒன்றியம், நெற்குன்றம் ஊராட்சி பகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 7440—திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) செங்கம் தொகுதி, தண்டராம்பட்டில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதி, தண்டராம்பட்டில் புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

33—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 11946—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, அன்னவாசலில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, அன்னவாசலில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

34—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்

வினா எண் 11947—டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை தொகுதி, விராலிமலை ஒன்றியம், நீர்பழனியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

பால் பண்ணை அமைத்தல்

வினா எண் 17818—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் திருவண்ணமலையில் பால்பண்ணை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தின் சார்பில் திருவண்ணமலையில் பால்பண்ணை அமைக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

36—

பால் கொள்முதல் நிலையம் அமைத்தல்

வினா எண் 38052—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பெரம்பலூர் தொகுதி, பழைய மரவநத்தம் பகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. சா.மு. நாசர், பால்வளத் துறை அமைச்சர்:

பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை வட்டம், பிம்பலூர் ஊராட்சிக்கு உட்பட்ட மரவநத்தம் கிராமத்தில் ட்டி.ஆர்.டி.1411 மரவநத்தம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் செயல்பட்டு வருவதால், இதே பகுதியில் பால் கொள்முதல் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

37—

உலமா ஓய்வூதியம்

வினா எண் 11298—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தமிழ்நாட்டில் உலமாக்களின் ஓய்வூதியம் உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) 1981 ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிவாசல்களில் பணியாற்றி ஓய்வுபெற்ற உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்க உலமா ஓய்வூதிய திட்டம் தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, மாதந்தோறும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. 1–4–2020 முதல் உலமா ஓய்வூதியம் ரூ.1,500/–லிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இச்சூழ்நிலையில் தற்போது உலமா ஓய்வூதியத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் தேவை எழவில்லை.

[2023 ஏப்ரல் 21

38—

வெளிநாடு வாழ் தமிழர் நலன்

வினா எண் 11602—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வெளிநாடு வாழ் (NRI) தமிழர்களின் நலன் காக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வெளிநாடு வாழ் தமிழர்களின் நலனுக்காக, தமிழகத்திற்கு வெளியே வாழும் தமிழர் நலச்சட்டம் 2011-ல் இயற்றப்பட்டது. இச்சட்டத்தில், 2022 ஆம் ஆண்டில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அரசாணை (நிலை) எண் 588, பொது (மறுவாழ்வு.2)த் துறை, நாள் 13–9–2022-ன்படி இச்சட்டத்திற்கான விதிகள் ஏற்படுத்தப்பட்டு, அரசிதழில் 14–9–2022–ல் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அரசாணை (நிலை) எண் 827, பொதுத் (மறுவாழ்வு.2)த் துறை, நாள் 24–12–2022-ன்படி தலைவர் மற்றும் 14 உறுப்பினர்களை கொண்ட அயலகத் தமிழர் நல வாரியம் அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி வாரியத்தின்மூலம் கீழ்க்காணும் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன:

i. இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டம், ஓய்வூதியம் அடையாள அட்டையுடன் வழங்கப்படும்.

ii. வெளிநாடுகளில் பணியாற்றும்போது, குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 21]

iii. கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காகத் தமிழர்கள் புலம்பெயரும்போது, பயண புத்தாக்கப் பயிற்சி சென்னை மட்டுமின்றி, இனி இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

iv. வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு என தனியாக சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.

v. வெளிநாடுவாழ் தமிழர் குறித்த தரவு தளம் நிறுவுதல்.

vi. கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்கு சென்று அங்கே நிரந்தரமாக குடியுரிமை பெற்றுள்ள தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் கற்கும் ஆர்வத்தை உருவாக்கிடவும், தமிழ் மொழியினை கற்றிட ஏதுவாகவும், தமிழ் பரப்புரைக் கழகம் மற்றும் தமிழ் இணைய கல்விக் கழகம் மூலமாக குழந்தைகளுக்கு தமிழ் கற்றுக் கொடுக்கப்படும். அதுமட்டுமின்றி, அங்குள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிப்பதற்காக ஊக்கத்தொகை மற்றும் தமிழ் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சியும் அளிக்கப்படும்.

vii. புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும். இச்சங்கங்களின்மூலம் கலை, இலக்கியம் மற்றும் கலாச்சார பரிமாற்றங்கள் ஏற்படும்.

39—

சாலை அமைத்தல்

வினா எண் 21536—திரு. கி. அசோக்குமார்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

கிருஷ்ணகிரி ஒன்றியம், வெங்கடாபுரம் ஊராட்சியில் உள்ள தேசிய நெடுஞ்சாலை முதல் தர்கா வழியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் செல்லும் மண்சாலையை தார்ச்சாலையாக மாற்ற இடையில் 400 மீட்டர் மண்சாலை வக்ஃப் வாரியத்திற்கு சொந்தமான இடமாக உள்ளதால் வக்ஃப் வாரியம் சாலை அமைக்க அனுமதி வழங்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் டவுன் செங்கல்தோப்பு தர்கா, ஹஜ்ரத் சையத் ஷா ஷாஹபுதீன் மற்றும் ஹஜ்ரத் சையத் ஷா பஹாவுதீன் அவ்லியா தர்கா வக்ஃப் புதியதாக நில அளவை செய்யப்பட்ட வக்ஃப் ஆகும். இதன் பதிவு எண் NS.No.8/தர்மபுரி ஆகும். மேற்கண்ட தர்கா கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலை டோல்கேட் அருகில் அமைந்துள்ளது. இந்த தர்காவின் நுழைவாயில் ஆர்ச்சு (தேசிய நெடுஞ்சாலை) முதல் தர்கா வரை வக்ஃப் சொத்தாகும். இந்த இடத்திற்கு தமிழ்நாடு அரசுமூலம் தார்ச்சாலை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த இடம் முழுவதுமே மண்தடமாக உள்ளது. மேற்கண்ட தர்கா ஆவண அளவிலே தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின்கீழ் உள்ளது. இது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு செல்லும் பொது வழியாக செயல்படுத்திவிடுவார்களோ என்ற எண்ணத்தினால் இந்த இடத்தில் இன்று வரையிலும் தார்ச்சாலை அமைக்க முடியவில்லை. (மாவட்ட ஆட்சியர் அலுவலகம் செல்வதற்கு மாற்று வழி பெரியதாக உள்ளதால் அந்த வழியாகத்தான் இன்று வரையிலும் பொது மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள்) மேலும், சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள டோல்கேட் அருகில் செங்கல்தோப்பு தர்கா இருப்பதனால், தர்கா நுழைவாயிலில் தார்ச்சாலை அமைத்தால் மக்கள் அனைவருமே டோல்கேட்டை பயன்படுத்தாமல் தர்காவின் சாலையைத்தான் பயன்படுத்துவார்கள். இதனால் அரசுக்கு நுழைவு வரி இழப்பீடு ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. எனவே, அவ்விடத்தில் தார்ச்சாலை அமைக்க வாய்ப்பில்லை.

40—

வெளிநாடுவாழ் தமிழர் நலன்

வினா எண் 54687—திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கே இருக்கின்ற தமிழர்களின் நிலையை விளக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்:

இது சர்வதேச அளவில் நாடுகளின் பிரச்சினை. இதை விளக்குவது என்பது அந்நாட்டின் இறையாண்மையில் தலையிடுவது போன்றது ஆகும். எனினும், அண்டை நாடான இலங்கையில் தமிழர்கள் கடுமையான பொருளாதார நெருக்கடியில் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் அரிசி, பால்பவுடர், மருந்து ஆகியன அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

41—

நூலகம் கட்டுதல்

வினா எண் 413—திரு. க. செல்வராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருப்பூர்–ஊத்துக்குளி சாலை, மண்ணரை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் நூலகம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்கான வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி சாலை, மண்ணரை ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் பகுதிநேர நூலகம் கட்டுவதற்குத் தேவையான நிபந்தனைகள்

[2023 ஏப்ரல் 21

பூர்த்தி செய்யப்படாத நிலையில் நேரடியாக நூலகம் கட்ட வழிவகையில்லை.

42—

நூலகம் கட்டுதல்

வினா எண் 708—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதி, டான்சி நகர் பகுதியில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் கிளை நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்கான வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், பகுதிநேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, சென்னை மாவட்டம், வேளச்சேரி தொகுதி, டான்சி நகர் பகுதியில் மாநகராட்சிக்கு தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் நூலகம் அமைக்க வழிவகையில்லை.

43—

மாணவர் சேர்க்கை அதிகரித்தல்

வினா எண் 1190—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

தமிழகத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

44—

வகுப்பறைக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 1775—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை அரசு நடுநிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைக் கட்டடம் மற்றும் கழிவறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, வேகாக்கொல்லை அரசு நடுநிலைப் பள்ளியில் பழுதடைந்த கட்டடத்தை அப்புறப்படுத்திவிட்டு, புதிய வகுப்பறைக் கட்டடம் மற்றும் கூடுதல் கழிவறை கட்டுவதற்கான கருத்துருக்கள், சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலரால், பண்ருட்டி ஊரக வளர்ச்சித் துறை, வட்டார வளர்ச்சி அலுவலருக்கு அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 21

45—

பள்ளி தரம் உயர்த்துதல்

வினா எண் 9686—திரு. ரூபி. ஆர். மனோகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நாங்குநேரி தொகுதி, செங்குளம் ஊராட்சி, செங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை நாங்குநேரி தொகுதி, செங்குளம் ஊராட்சி, செங்குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி பூர்த்தி செய்யாததால் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வழிவகை இல்லை.

46—

பள்ளி தரம் உயர்த்துதல்

வினா எண் 9912—திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் தொகுதி, மன்னார்குடி. ஊராட்சி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள்

2023 ஏப்ரல் 21]

வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, திருவாரூர் தொகுதி, மன்னார்குடி ஊராட்சி ஒன்றியம், வடபாதிமங்கலம் ஊராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

47—

நூலகம் அமைத்தல்

வினா எண் 9989—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு, கோட்டக்கவுண்டம்பட்டியில் பொது நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதி நேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும், எனவே, சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தொகுதி, கோட்டக்கவுண்டம்பட்டியில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

48—

நூலகம் அமைத்தல்

வினா எண் 10107—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கமலநத்தம் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பொது நூலக இயக்ககத்தால், 1,000 மக்கள் தொகை உள்ள கிராமங்களில், நூலகம் அமைப்பதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், முதற்கட்டமாக பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, கமலநத்தம் கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 231 ஆகும். எனவே, கமலநத்தம் கிராமத்தில் மொத்த மக்கள் தொகை மிக குறைவாக உள்ளதால், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

49—

நூலகம் அமைத்தல்

வினா எண் 10145—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்தில் உள்ள நூலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி கிளை நூலகம் 7–6–1948–ல் துவங்கப்பட்டு, 1976 சதுரடி பரப்பளவு கொண்ட சொந்தக் கட்டடத்தில் நாளிதழ்/பருவ இதழ் பிரிவு, நூல் இரவல் பிரிவு, குறிப்புதவி பிரிவு, குழந்தைகள் பிரிவு, மகளிர் பிரிவு மற்றும் குடிமைப்பணி பிரிவு ஆகிய பிரிவுகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே, இந்நூலகத்திற்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழாது.

2023 ஏப்ரல் 21]

50—

ஆய்வகக் கட்டடம் கட்டுதல்

வினா எண் 10146—திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய ஆய்வகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 135 மாணவ / மாணவியர் பயின்று வருகின்றனர். இதில் 11 ஆம் வகுப்பு அறிவியல் பிரிவில் 15 மாணவர்களும், 12 ஆம் வகுப்பு அறிவியல் பிரிவில் 21 மாணவர்களும் படித்து வருகின்றனர். மொத்தம் 16 வகுப்பறைகளில் மாணவர்கள் பயன்படுத்தும் வகுப்பறைகள் போக மீதம் உள்ள 3 வகுப்பறைகளில் ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனவே புதிய ஆய்வகக் கட்டடம் கட்ட அவசியம் எழவில்லை.

51—

பள்ளி தரம் உயர்த்துதல்

வினா எண் 12018—திரு. ஆ. அருண்மொழிதேவன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சியில் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை புவனகிரி தொகுதி, சேத்தியாதோப்பு பேரூராட்சியில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத சூழல் உள்ளது.

52—

புதிய நூலகம்

வினா எண் 12085—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காட்டாம்புலியூர் ஊராட்சி, காட்டாண்டிக்குப்பத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சி, காட்டாண்டிக்குப்பத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

53—

புதிய நூலகம்

வினா எண் 12086—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சி, பிள்ளையார் குப்பத்தில் புதிய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். கடலூர் மாவட்டம், நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சி, பிள்ளையார் குப்பத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

54—

புதிய நூலகம்

வினா எண் 12087—திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சி, காந்தி நகரில் புதிய நூலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில், பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர கிளை நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, நெய்வேலி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சி, காந்தி நகரில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

[2023 ஏப்ரல் 21

55—

நூலகம்

வினா எண் 12197—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பாக்கம் ஊராட்சி, மேல் புதூர் கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வரும்?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

பொது நூலக இயக்ககத்தால் 1,000 மக்கள் தொகை உள்ள கிராமங்களில், நூலகம் அமைப்பதற்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், முதற்கட்டமாக பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த விழுப்புரம் மாவட்டம், ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பாக்கம் ஊராட்சி, மேல்புதூர் கிராமத்தில் மொத்த மக்கள் தொகை 462 ஆகும். எனவே, மேல்புதூர் கிராமத்தில் மொத்த மக்கள் தொகை மிக குறைவாக உள்ளதால், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

56—

நூலகம்

வினா எண் 12198—திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பாக்கம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில், பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/ கிளை நூலகம்/முழுநேர கிளை நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, விழுப்புரம் தொகுதி, ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், பாக்கம் ஊராட்சி, ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதியில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நூலகம் அமைக்க வழிவகையில்லை.

57—

கூடுதல் வகுப்பறைகள்

வினா எண் 13141—முனைவர் த. இனிகோ இருதயராஜ்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதி, கீழபுலிவார்டு சாலையில் உள்ள வைகவுண்டஸ் கோஷன் அரசு மகளிர் (முஸ்லீம்) மேல்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதி, கீழபுலிவார்டு சாலையில் உள்ள வைகவுண்டஸ் கோஷன், அரசு மகளிர் (முஸ்லீம்) மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட போதிய இடவசதி இல்லை. எனவே, இப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் ஏற்படுத்த இயலாத நிலை உள்ளது.

58—

பள்ளி தரம் உயர்த்துதல்

வினா எண் 13145—திரு. A.J. மணிக்கண்ணன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், இருந்தை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, உளுந்தூர்பேட்டை தொகுதி, திருநாவலூர் ஊராட்சி ஒன்றியம், இருந்தையில் உள்ள உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத நிலை உள்ளது.

59—

பள்ளி தரம் உயர்த்துதல்

வினா எண் 14208—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலவாடி ஊராட்சி, பாலவாடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவது குறித்து அரசால் நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இந்நெறிமுறைகளை, தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பாலவாடி ஊராட்சி, பாலவாடி உயர்நிலைப் பள்ளி நிறைவு செய்யாததால், தற்போது இப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த இயலாத சூழல் உள்ளது.

60—

ஊர்ப்புற நூலகம்

வினா எண் 14212—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, டொக்குபோதனள்ளி ஊராட்சி, கெட்டுப்பட்டி கிராமத்தில் ஊர்ப்புற நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில், பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர கிளை நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, டொக்குபோதனள்ளி ஊராட்சி ஒன்றியம், கெட்டுப்பட்டி கிராமத்தில் பகுதி நேர நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக ஊர்ப்புற நூலகம் அமைக்க வழிவகையில்லை.

[*2023 ஏப்ரல் 21*

61—

ஊர்ப்புற நூலகம்

வினா எண் 14213—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) தருமபுரி தொகுதி, பாளையம்புதூர் ஊராட்சி, தொம்பரக்காம்பட்டி கிராமத்தில் ஊர்ப்புற நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, பாளையம்புதூர் ஊராட்சி, தொம்பரக்காம்பட்டி கிராமத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக ஊர்ப்புற நூலகம் அமைக்க வழிவகையில்லை.

62—

ஸ்மார்ட் வகுப்பறை

வினா எண் 14482—திரு. இரா. அருள்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு தொகுதி, ஜகீர் அம்மாபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ஸ்மார்ட் வகுப்பறை அமைக்க அரசு முன்வருமா?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

*சேலம் மேற்கு தொகுதி, ஜகீர் அம்மாபாளையம் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு உயர்தொழில்நுட்ப ஆய்வக (*Hi-Tech Lab*) வசதி ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் பயன்பாட்டில் உள்ளது. எனவே, தனியாக ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைப்பதற்கான தேவை எழவில்லை.*

63—

நூலகம்

வினா எண் 15225—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, நெக்குந்தி கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். தருமபுரி மாவட்டம், தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி வட்டம், எர்ரபையனள்ளி ஊராட்சி, நெக்குந்தி கிராமத்தில் நூலகம் அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில், அப்பகுதியில் தற்போது நேரடியாக ஊர்ப்புற நூலகம் அமைக்க வழிவகையில்லை.

64—

முழுநேர நூலகம்

வினா எண் 15256—திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பெரம்பலூர் தொகுதி, வெங்கலம் ஊராட்சியில் முழுநேர நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பெரம்பலூர் மாவட்டம், பெரம்பலூர் தொகுதி, வெங்கலம் ஊராட்சியில் 25–3–2013 முதல் பகுதிநேர நூலகம் செயல்பட்டு வருகிறது. நூலகம் அமைப்பதற்காக வரையறுக்கப்பட்ட விதிகளின்படி, முதலில் பகுதிநேர நூலகம் மட்டுமே அமைக்க இயலும். பொதுமக்களின் பயன்பாடு மற்றும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அடிப்படையில், பகுதி நேர நூலகமானது, ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம்/முழுநேர கிளை நூலகமாக தரம் உயர்த்தப்படும். எனவே, பெரம்பலூர் தொகுதி, வெங்கலம் ஊராட்சியில் நேரடியாக முழுநேர நூலகம் அமைக்க வழிவகையில்லை.

65—

பகுதிநேர நூலகம்

வினா எண் 15257—திரு. ம. பிரபாகரன்: *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 11 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 2168 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், ஒப்பளிக்கப்பட்ட 4458 இருக்கைகளில் காலியாக உள்ள 345 இருக்கைகள் உட்பட, 1338 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி முத்துப்பேட்டை பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

122—

அலுவலகம் கட்டுதல்

வினா எண் 16389—திரு. மு. பாபு: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வால்பாறை தொழிலாளர் உதவி ஆணையர் அவர்களுக்கு புதிய அலுவலகம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 21]

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் தொழிலாளர் உதவி ஆணையர் (தோட்டங்கள்) அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இவ்வலுவலகத்திற்கான புதிய அலுவலகம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

123—

பயிற்சி வழங்குதல்

வினா எண் 24003—திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா***—**

(அ) தமிழ்நாட்டில் கிராமப்புறங்களிலுள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்பைப் பெற எலக்ட்ரீசியன், பிளம்பர், செல்போன் சர்வீஸ் பயிற்சி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், தனியார் தொழிற்பள்ளிகளிலும் எலக்ட்ரீசியன், பிளம்பர், ஸ்மார்ட்போன் டெக்னிசியன்–கம்–ஆப்–டெஸ்டர் ஆகிய தொழிற்பிரிவுகள் ஏற்கெனவே துவக்கப்பட்டு, அத்தொழிற்பிரிவுகளில் பயிற்சியாளர்கள் சேர்க்கை செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 21

124—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 25256—திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, கோட்டூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசாணை (நிலை) எண் 133, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எஸ்.1) துறை, நாள் 2–8–2017 இன்படி, வாணியம்பாடி, கோபிசெட்டிபாளையம் மற்றும் கோட்டூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்கள் புதிதாக துவங்கப்பட்டன. அரசாணை (நிலை) எண் 65, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (எஸ்.1), துறை, நாள் 19–3–2020–ன்படி, கோட்டூர் அரசு தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் விடுதி கட்டடப் பணிகளுக்காக ரூ.7,46,94,124/- நிதி வழங்கப்பட்டது. மேலும், கோட்டூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்திற்கு கட்டப்பட்டுவரும் புதிய கட்டடத்தில் அனைத்து அடிப்படை வசதிகளும் முழுமையாக ஏற்படுத்தப்பட்டு, 90% பணிகள் முடிவு பெற்றுள்ளது. மீதமுள்ள பணிகள் விரைவில் முடிக்கப்பட்டு புதிய கட்டடம் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.

125—

தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 25284—திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2023 ஏப்ரல் 21]

(அ) போளூரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) போளூர் சட்டமன்ற தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 3904 இருக்கைகளில், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 50% இடங்களை அரசு ஒதுக்கீட்டின்கீழ் மாவட்ட கலந்தாய்வுமூலம் நிரப்பி பயிற்சி கட்டணத்தை அரசே ஏற்கும் என்ற திட்டத்தின்கீழ், ஒப்பளிக்கப்பட்ட 276 இருக்கைகளில், காலியாக உள்ள 226 இருக்கைகள் உட்பட, 1665 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்ற தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

126—

தேர்வு பயிற்சி மையம் அமைத்தல்

வினா எண் 25352—திரு. செ. ராஜேஷ்குமார்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சொந்தமான இடத்தில் போட்டி தேர்வுகளுக்கான பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் உள்ள தன்னார்வ பயிலும் வட்டங்களில், அரசு பணிகளுக்காக நடைபெறும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அத்துடன் போட்டித் தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்களுடன்கூடிய நூலகங்களும் செயல்படுகின்றன. மேலும், https://tamilnaducareerservices.tn.gov.in *என்ற மெய்நிகர் கற்றல் இணையதளத்தில்* TNPSC, IBPS, RRB, SSC, TNUSRB *ஆகிய போட்டி தேர்வுகளுக்கான அனைத்து பாடகுறிப்புகளும் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். கன்னியாகுமரி மாவட்டத்தில் இயங்கி வரும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தால்* TNPSC, Bank Exams, RRB, SSC, NET, SET *போன்ற அனைத்து போட்டித் தேர்வுகளுக்கும் நேரடி மற்றும் இணைய வழியிலான பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.*

தற்போது, புதிதாக துவங்கப்படவுள்ள கல்வி தொலைக்காட்சியில் போட்டித் தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் தனி அலை வரிசையில் ஒளிபரப்பு செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், கிள்ளியூர் தொகுதி, கருங்கல் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சொந்தமான இடத்தில் தனியே பயிற்சி வகுப்புகள் ஏற்படுத்த வேண்டிய நிலை எழவில்லை.

127—

I.A.S., I.P.S., பயிற்சி அகாடமி அமைத்தல்

வினா எண் 25354—திரு. செ. ராஜேஷ்குமார்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

(அ) கிள்ளியூர் தொகுதியில் I.A.S., I.P.S. *பயிற்சி அகாடமி அமைக்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரசு பணி நியமனம் பெறுவதற்காக, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் உள்ள தன்னார்வ பயிலும் வட்டங்களில், பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. அத்துடன் போட்டித் தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள், நாளிதழ்கள், வார, மாத இதழ்களுடன்கூடிய நூலகங்களும் செயல்படுகின்றன.

இவை நீங்கலாக துறையால் நிறுவப்பட்டுள்ள https://tamilnaducareerservices.tn.gov.in *என்ற மெய்நிகர் கற்றல் இணையதளத்தில் அனைத்து போட்டித் தேர்வுகளுக்கான* (TNPSC, IBPS, RRB, SSC, TNUSRB) *பாடக் குறிப்புகளும் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவற்றை இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.*

IAS, IPS-*பணிகளுக்காக முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் செயல்படும் அனைத்து இந்திய குடிமைப் பணி தேர்வு பயிற்சி மையத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி மையத்தின்* You Tube Channel-*ல்* UPSC *தேர்வுகளுக்கான பதிவு செய்யப்பட்ட காணொளி பயிற்சி வகுப்புகளும் வெளியிடப்படுகிறது. எந்த பகுதியில் இருந்தும் மாணவர்கள் இணைய வழியில் இக்காணொளி பயிற்சி வகுப்புகளைக் காணலாம்.*

எனவே, கிள்ளியூர் தொகுதியில் தனியே மேற்காணும் சூழலில், IAS, IPS *பயிற்சி அகாடமி அமைக்கும் நிலை எழவில்லை.*

[*2023 ஏப்ரல் 21*

128—

வேலைவாய்ப்பு முகாம் நடத்துதல்

வினா எண் 43006—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா*—

மன்னார்குடி தொகுதியை சேர்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்பினை பெறும் வகையில் "வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை" சார்பில் மன்னார்குடி நகரில் ஆண்டுதோறும் "வேலைவாய்ப்பு முகாம்" மற்றும் "திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம்" நடத்த அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் தற்போது 6 மாதங்களுக்கு ஒரு முறை பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும், ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக் கிழமைகளில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடத்தப்படும் முகாம்களில் பல்வேறு துறையைச் சார்ந்த வேலையளிக்கும் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேலைநாடுநர்களுக்கு வேலையளித்து வருகின்றனர். மேற்படி, முகாம்களில் கலந்து கொள்ளும் இளைஞர்கள் உரிய திறன் இன்மையால் வேலைவாய்ப்பு பெற இயலாத நேர்வுகளில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம் தேவையான திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த ஜூன் 2021 முதல் தற்போது வரை 728 பெரிய மற்றும் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டு 93,044 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக மன்னார்குடி தொகுதியில் இடம் பெற்றுள்ள திருவாரூர் மாவட்டத்தில் 26–12–2021 அன்று பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நியூ பாரத் மெட்ரிகுலேசன் உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இவ்வேலைவாய்ப்பு

2023 ஏப்ரல் 21]

முகாமில் 667 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ளனர் மற்றும் இம்முகாமில் 6 திறன் பயிற்சி அளிக்கும் நிறுவனங்கள் கலந்து கொண்டு 41 நபர்களை திறன் பயிற்சி அளிப்பதற்கு தேர்வு செய்துள்ளனர். இந்நிதியாண்டில் திருவாரூர் மாவட்டத்தில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பெரிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும், இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் சிறிய அளவிலான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்களும் ஒவ்வொரு மாதமும் திருவாரூர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் மூலமாக நடத்தப்படும். இம்முகாம்கள் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள மன்னார்குடி உள்ளிட்ட அனைத்து பகுதிவாழ் வேலைநாடுநர்களுக்கு உதவிடும் வகையில் அமையும்.

129—

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியம்

வினா எண் 48356—திரு. இ. பரந்தாமன்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் ஆன்லைன்மூலம் மட்டுமே உறுப்பினராகப் பதிவு செய்துகொள்ள முடியும் மற்றும் பதிவைப் புதுப்பிக்க முடியும் என்ற நடைமுறை தற்பொழுது பின்பற்றப்பட்டு வருகிறது. இந்நடைமுறையோடு அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் நேரில் சென்றும் பதிவு செய்துகொள்ளவும் புதுப்பிக்கவும் அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

அனைத்து அமைப்புசாரா தொழிலாளர்களும் நலவாரியங்களில் பதிவுபெற்று பயனடைய வேண்டும் எனும் நோக்கில், வாரியங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர்கள் தங்களது பதிவு, புதுப்பித்தல் மற்றும் கேட்பு விண்ணப்பங்களை

இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கும் வசதி 19–6–2020 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம், தொழிலாளர்களின் தொழில் பாதிப்படையாதவண்ணம் அவர்களது குடியிருப்புகளுக்கு அருகில் உள்ள அரசு பொது இ–சேவை மையங்கள் அல்லது இதர தனியார் இணையதள சேவை மையங்களில் விண்ணப்பித்து துரிதமாக நலத்திட்ட உதவிகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், வாரியத்தில் உறுப்பினராவதற்கு விண்ணப்பிக்கும் தொழிலாளர்களின் தொழிற்சான்று இணைய வழியிலேயே கிராம நிர்வாக அலுவலரால் சான்றளிக்க வகை செய்யப்பட்டுள்ளதால், தகுதியான தொழிலாளர்களின் விண்ணப்பங்கள் விரைவாக பரிசீலிக்கப்பட்டு விரைவில் பயனடைய இணையதள பதிவு முறை சாத்தியமாகிறது. இப்புதிய நடைமுறையினால், தொழில் நிமித்தமாக வெளிமாவட்டங்களில் சென்று வசிக்கும் தொழிலாளர்களும் தங்களது வசிப்பிடங்களிலிருந்தே நலவாரியங்களில் பதிவு பெற்று பலனடைகின்றனர். எனவே, நேரில் சென்று பதிவு செய்யும் பழைய நடைமுறையினை மாற்றி இணையதள பதிவு நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது மற்றும் இம்முறை சிறப்பாகவும் செயல்பட்டு வருகிறது.

130—

பணியிடம் நிரப்புதல்

வினா எண் 53452—டாக்டர் நா. எழிலன்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தனியார் துறையில் குறிப்பிட்ட அளவு பணியிடங்களை, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போரை கொண்டு நிரப்ப அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களில் பதிவு செய்த பதிவுதாரர்கள்

2023 ஏப்ரல் 21]

தனியார் துறையில் பணிநியமனம் பெற உதவும் வகையில் ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்திலும் மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தல் உதவி பிரிவு செயல்பட்டு வருகிறது. தனியார் துறையில் வேலைநாடுநர்களை அதிக அளவில் பணியமர்த்தும் நோக்கத்தோடு மாதத்தில் இரண்டாம் மற்றும் நான்காம் வெள்ளிக்கிழமைகளில் வேலைவாய்ப்பு முகாம்களும், மாவட்ட அளவில் பெரிய அளவிலான வேலைவாய்ப்பு முகாம்கள் உரிய இடைவெளியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் வாயிலாகவும் நடத்தப்பட்டு வருகின்றன. இதன்மூலம், ஜூன் 2021 முதல் மே 2022 வரை 79,001 நபர்கள் தனியார் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறிவழிகாட்டு மையங்கள், தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு செயல்படுகின்றன.

131—

பணியிடம் நிரப்புதல்

வினா எண் 53453—டாக்டர் நா. எழிலன்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து காத்திருப்போருக்கு உரிய பணி வழங்க புதிய திட்டங்கள் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களின் உயிர்பதிவேட்டில் 30-4-2022 அன்று உள்ளபடி 76,35,059 வேலைநாடுநர்கள் பதிவு செய்து உள்ளனர். இதில் 18-வயதிற்குள் உள்ள பள்ளி மாணாக்கர்கள் 16,09,890 மற்றும் 18 முதல் 23 வரை உள்ள பலதரப்பட்ட கல்லூரி மாணாக்கர்கள்

17,83,755 தற்போது உயர்கல்வி தொடர்ந்து கொண்டிருக்க வாய்ப்புகள் உள்ளது. 24 முதல் 35 வயதிற்குட்பட்ட பதிவுதாரர்களான 28,93,506 நபர்கள் மட்டுமே அரசு பணிவேண்டி காத்திருப்போர் என கருதப்படவேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட பதிவுதாரர்களுள் பலர் தனியார் துறையில் பணிபுரிந்து வருகின்றனர்.

அரசுத் துறையில் அறிவிக்கப் பெறும் பணிக்காலியிடங்களுக்கு நடைமுறை விதிகளுக்குட்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பகம் மற்றும் தொழில்நெறி வழிகாட்டி மையங்களால் பரிந்துரைப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், அரசாணை (நிலை) எண் 44, நாள் 11–3–2015–ன் அடிப்படையில், இப்பணிக்காலியிடங்களுக்கு வேலையளிப்போரால் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. அதன்மூலம் மாவட்ட வேலைவாய்ப்பகம் மற்றும் தொழில்நெறி வழிகாட்டி மையங்களில் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்யாத மனுதாரர்களும் விண்ணப்பிக்கும் வாய்ப்பினைப் பெறுகின்றனர்.

கடந்த 2021 ஆம் ஆண்டு மே மாதம் முதல் தற்போது வரை 2,592 பதிவுதாரர்கள் அரசு பணியிலும், 90,000–க்கும் அதிகமான பதிவுதாரர்கள் பெரிய மற்றும் சிறிய அளவிலான, வேலைவாய்ப்பு முகாம்கள்மூலம் தனியார் துறையிலும் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு தனியார் துறை வேலை இணையமானது (www.tnprivatejobs.tn.gov.in) *வேலைநாடுநர்களையும், வேலையளிக்கும் நிறுவனங்களையும் இணையவழியாக இணைத்து தனியார் துறையில் வேலைவாய்ப்பை பெற்று வழங்குகிறது. அதிகளவிலான வேலைநாடுநர்கள் இந்த இணையவழி வேலைவாய்ப்பு வழியாகவும் பணியமர்த்தம் செய்யப்படுகிறார்கள். ஏற்கெனவே இந்த திட்டங்கள் சிறப்பான முறையில் செயல்பட்டு வருவதால் புதிதாக திட்டங்கள் ஏதும் செயல்படுத்த வேண்டிய அவசியமில்லை.*

132—

பணி வழங்குதல்

வினா எண் 55496—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பொறியியல் கல்லூரி, பல்தொழில்நுட்ப கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) தமிழ்வழியில் பயின்ற

2023 ஏப்ரல் 21]

மாணவர்களுக்கு தொழிற் பழகுநர் வாய்ப்பினை தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு காகித உற்பத்தி கழகம் போன்ற அரசு சார்ந்த நிறுவனங்களில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தொழிற் பழகுநர் சட்டம் 1961–ன் படி இத்துறையின் ஆளுமைக்குட்பட்ட அரசு சார்ந்த நிறுவனங்கள் மற்றும் நான்கு அல்லது அதற்கு மிகைப்படாத மாநிலங்களில் செயல்படும் தனியார் நிறுவனங்களில் ITI தேர்ச்சி பெற்றவர்களுக்கும், புதியவர்களுக்கும் (Freshers) தொழிற் பழகுநர் பயிற்சி திட்டம் அமலாக்கம் செய்யப்படுகிறது. தொழிற் பழகுநர் பயிற்சித் திட்டம் தொழிற்சாலைகளில் தொழிற்பயிற்சி வழங்கப்படுவதன் மூலமாக பகுதி திறன் பெற்ற மாணவர்களை முழுத்திறன் பெற்றவர்களாக உருவாக்குவதை நோக்கமாக கொண்டுள்ளது. 14 வயது பூர்த்தி அடைந்து, 8வது/10வது தேர்ச்சி பெற்றவர்கள் (Freshers) மற்றும் தேசிய தொழிற்சான்றிதழ் (ITI சான்றிதழ்) பெற்றுள்ளவர்கள் தொழிற்பழகுநர் பயிற்சி திட்டத்திற்கு தகுதியானவர்களாவர். தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் 56 வரையறுக்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், தமிழ்நாடு காகித உற்பத்தி போன்ற அரசு சார்ந்த நிறுவனங்களில் ITI தேர்ச்சி பெற்றவர்கள் தொழிற் பழகுநர் பயிற்சி பெறுகிறார்கள். இந்த ஆண்டில், அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்த பயிற்சியாளர்கள் சட்டமன்ற உறுப்பினர் வினாவில் குறிப்பிட்டுள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களில் தொழிற் பழகுநர் பயிற்சி பெற்று வருகிறார்கள்:

[*2023 ஏப்ரல் 21*

வ. எண்	நிறுவனங்கள் பெயர்	பயிற்சி பெறுவோர் எண்ணிக்கை
1	தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்	*1590*
2	தமிழ்நாடு மின்சார வாரியம்	*383*
3	தமிழ்நாடு காகித உற்பத்தி கழகம்	*123*
	மொத்தம்	*2096*

133—

தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 55601—திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அறந்தாங்கி தொகுதி, அரிமழம் ஒன்றியம், ஏம்பலில் மாணவர்கள் தங்கும் விடுதியுடன் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதி அரிமழம் ஒன்றியம், ஏம்பல் அமைந்துள்ள புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் 2 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 20 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 2336 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் 60% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது இயங்கிவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, அரிமழம் ஒன்றியம், ஏம்பல் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

2023 ஏப்ரல் 21]

134—

தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 57426—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) குடவாசலில் தொழிற்பயிற்சி நிலையம் (ITI) தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதிக்குட்பட்ட குடவாசல் பகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 11 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1452 இருக்கைகளுடன் (2021-ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1452 இருக்கைகளில், 43% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன, இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டு வரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதிகுட்பட்ட குடவாசலில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

135—

தொழிற்பயிற்சி மையம்

வினா எண் 58399—திரு. எஸ். சுதர்சனம்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[*2023 ஏப்ரல் 21*

(அ) மேட்டூர் தொகுதிக்குட்பட்ட மேட்டூர் தொழிற்பயிற்சி மையத்தை அதிநவீன இயந்திர வசதியுடன் புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் அணை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை திருத்திய NCVT பாடத்திட்டத்தின்படியும், அந்தந்த காலக்கட்டத்திற்கு ஏற்ற வகையிலும் மேம்படுத்தும் நோக்கில் புதிய இயந்திரங்கள், கருவிகள், தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கொள்முதல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து தொழில் 4.0 எனும் நவீன தரத்திற்கு இத்தொழிற்பயிற்சி நிலையத்தினை ரூ.31.00 கோடி செலவில் தரம் உயர்த்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

136—

தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 63362—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, பேரளம் பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, பேரளம் பகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு

2023 ஏப்ரல் 21]

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 8 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளுடன் (2022-ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளில், 51% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டு வரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவாரூர் மாவட்டம், நன்னிலம் தொகுதி, பேரளம் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

137—

தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல்

வினா எண் 53363—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டையில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டை அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 8 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளுடன் (2022-ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளில், 51% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவாரூர் மாவட்டம்,

[*2023 ஏப்ரல் 21*

திருத்துறைப்பூண்டி வட்டம், முத்துப்பேட்டையில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

138—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 63364—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) நன்னிலம் தொகுதி, இரவாஞ்சேரி பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நன்னிலம் தொகுதி, இரவாஞ்சேரி பகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 8 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளுடன் (2022–ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளில், 51% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டு வரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், நன்னிலம் தொகுதி, இரவாஞ்சேரி பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

139—

தொழிற்பயிற்சி நிலையம்

வினா எண் 63365—திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

2023 ஏப்ரல் 21]

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடுவூர் பகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மன்னார்குடி வட்டம், வடுவூர் பகுதி அமைந்துள்ள திருவாரூர் மாவட்டத்தில் ஏற்கெனவே இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 8 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளுடன் (2022-ன்படி) செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்ட 1340 இருக்கைகளில், 51% இருக்கைகள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கு தற்போது செயல்பட்டுவரும் தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒப்பளிக்கப்பட்டுள்ள இருக்கைகளே போதுமானதாக உள்ளதால், திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், வடுவூர் பகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை.

140—

கேபிள் டிவி நிறுவனம்

வினா எண் 1359—திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வேளச்சேரி தொகுதியில் கேபிள் டிவி நிறுவனத்திற்கு கிளை அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின், சென்னை மாவட்டத்திற்கான கிளை அலுவலகம் எண் 22, 11 மாங்காடு சாமி தெரு, பொன்னாங்கிபுரம், திருமூர்த்தி நகர், நுங்கம்பாக்கம், சென்னை, தமிழ்நாடு–600 034 என்ற முகவரியில் உள்ளது. இங்கு சென்னை மாவட்டத்திற்கான உள்ளூர் கேபிள் டிவி ஆபரேட்டர்களுக்கு செட்டாப் பாக்ஸ் வழங்குதல் மற்றும் ஆபரேட்டர்கள் உரிமத்திற்கான படிவம் மற்றும் செட்டாப் பாக்ஸ் குறித்த சேவைகள் வழங்கப்படுகின்றன. மேலும், இவ்வாறு தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் இச்சேவைகளை வழங்கிட அந்தந்த மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் துணை மேலாளர்/தாசில்தார் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். எனவே, வேளச்சேரி தொகுதிக்கு தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்திற்கான கிளை அலுவலகம் அமைக்கத் தேவையில்லை.

141—

இ-சேவை மையம்

வினா எண் 3876—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களில் இ-சேவை மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தமிழகம் முழுவதும் சுமார் 13,976 இ-சேவை மையங்களில் 14,351 செயலிட முகப்புகள் (Counters) *அமைக்கப்பட்டுள்ளன.*

மேலும், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார்

2023 ஏப்ரல் 21]

மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், படையினர் நகரம் (கண்டோன்மெண்ட் போர்டு) மற்றும் கிராமத் தொழில்முனைவோர் போன்ற சேவை முகவர்கள் வாயிலாக அமைக்கப்பட்டு அரசின் சேவைகள் அவர்களின் இருப்பிடத்தின் அருகாமையிலேயே வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், கூட்டுறவு வீட்டு வசதி சங்கம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின்கீழ் ஒரு சேவை முகவராக சேர்க்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு வீட்டு வசதி சங்கம் பரிந்துரையின் அடிப்படையில் இ-சேவை ID வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

142—

இ-சேவை மையம்

வினா எண் 5484—திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கட்டளையூர் கிராமத்தில் உள்ள இ-சேவை மையத்திற்கு கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) தென்காசி மாவட்டத்தில் இ-சேவை மையம் அமைக்க வேண்டி மொத்தம் 324 இ-சேவை குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன. இதில், கடையம் ஒன்றியம், கட்டளையூர் கிராமத்தில், சேவை முகவரான தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் செயல்படும் மகளிர் திட்டம் சார்பில் இ-சேவை மையம் அமைக்க இ-சேவை பயனாளர் குறியீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

[2023 ஏப்ரல் 21

இச்சட்டமன்றப் பேரவை வினா தொடர்பாக, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்திடம் அறிக்கையை அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதில், கடையம் ஒன்றியம், ஐந்தான்கட்டளை ஊராட்சியில் உள்ள கட்டளையூர் கிராமத்தில் 1–7–2022 முதல் "கட்டளையூர் மதிமகள்" என்ற பெயரில் அரசால் கட்டப்பட்ட ஊராட்சி கிராம சேவை மையத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின்கீழ் இச்சேவை மையம் செயல்பட்டு வருகிறது என்பது தெரியவருகிறது. மேலும், இச்சேவை மையத்தில் தற்போது வரை 5 சான்றிதழ்கள் இணையத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

143—

இ-சேவை மையம்

வினா எண் 18311—திரு. க. செல்வராஜ்: மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்கு, தெற்கு பகுதிகளில் பொது இ-சேவை மையத்தின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்கு, தெற்கு சட்டமன்றத் தொகுதியில், மொத்தம் 29 இ-சேவை மையங்கள் 04 தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், 07 தமிழ்நாடு அரசு கேபிள் டிவி, 18 தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள் சேவை முகவர்கள் வாயிலாக இயங்கி வருகின்றன. இச்சேவை மையங்கள் வாயிலாக 1–3–2022 முதல் 31–8–2022 வரை மொத்தம் 24,764 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும், அதிக பரிவர்த்தனை நடக்கும்பட்சத்தில், இ-சேவை மையங்களை அதிகப்படுத்த சேவை மைய முகவர்களான தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், கிராமப்புற

2023 ஏப்ரல் 21]

தொழில்முனைவோர்கள் போன்ற இ–சேவை முகவர்கள் வாயிலாக பரிசீலனை மேற்கொண்டு, இ–சேவை அமைக்க கோரிக்கை வரும் தருவாயில், இ–சேவை மையம் அமைக்க பயனர் குறியீடுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இ–சேவை குடிமக்கள் இணையதளம் வாயிலாக 24 X 7 அடிப்படையில் மக்களுக்கு சேவைகளை வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

144—

இ–சேவை மையம்

வினா எண் 26523—திரு. இரா. அருள்: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

நாமக்கல் தொகுதி, ஏலூரில் அரசு இ–சேவை மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

நாமக்கல் மாவட்டத்தில் 322 அரசு இ–சேவை மையங்கள் (13 தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், 15 தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற தனியார் மையங்கள், 197 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கம், 84 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், 73 தொழில் முனைவோர்) சேவை முகவர்கள் வாயிலாக இயங்கிவருகிறது. இச்சேவை மையங்கள் வாயிலாக 1–5–2022 முதல் 31–10–2022 வரை மொத்தம் 114235 பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது நாமக்கல் மாவட்டம், ஏலூர் ஊராட்சியில் மகளிர் திட்டம்மூலம் ஒரு புதிய இ–சேவை மையம் அமைக்க தமிழ்நாடு மின் ஆளுமை முகமை வாயிலாக இ–சேவை பயனர் குறியீடு கடந்த மார்ச் 2022 அன்று வழங்கப்பட்டது. இச்சேவை மையத்தை விரைவில் செயல்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

[2023 ஏப்ரல் 21

145—

இ-சேவை மையம்

வினா எண் 48236—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

மன்னார்குடி தொகுதி, நீடாமங்கலம் வட்டம், வடுவூர் தென்பாதி ஊராட்சிக்கு நிரந்தர இ-சேவை மையம் கட்ட அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்:

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையானது சேவை முகவர்கள் வழியாக இ-சேவை மையம் அமைப்பதற்காக பயனாளர் குறியீடுகளை மட்டும் வழங்கி வருகிறது.

தற்போது, வடுவூர் அக்ரஹாரம் ஊராட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கம் வாயிலாக ஒரு இ-சேவை மையம் இயங்கிவருகிறது. மேலும், ஒரு வருடத்தில் (01-07-2021 முதல் 19-07-2022 வரை) மொத்தம் 25 பரிவர்த்தனைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் தொடர்பாக, வடுவூர் தென்பாதி ஊராட்சியில் இ-சேவை மையம் அமைக்க அவசியம் எழுமாயின் சேவை முகவர்கள் வாயிலாக உட்கட்டமைப்பு அமைத்து தமிழ்நாடு மின் ஆளுமை முகமைக்கு பரிந்துரைத்து விண்ணப்பம் வரும் தருவாயில் முன்னுரிமை அடிப்படையில் இ-சேவை மையம் அமைக்க பயனர் குறியீடுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 21]

146—

சமுதாயக் கூடம்

வினா எண் 489—முனைவர் T.R.B. ராஜா: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரம், தாமரைக்குளம் வடகரை அருந்ததியர் தெருவிற்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக் கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவைகளைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி நகரம், தாமரைக்குளம் வடகரை அருந்ததியர் தெருவிற்கு புதிய சமுதாயக் கூடம் கட்டுவது ஆதிதிராவிட மக்கள் தொகை, அருகிலுள்ள சமுதாயக்கூடங்களின் எண்ணிக்கை, போதுமான இடம், நிதி ஒதுக்கீடு மற்றும் முன்னுரிமையின் அடிப்படையில் பரிசீலனை செய்யப்படும்.

147—

ஆதி திராவிடர் மயானம்

வினா எண் 699—திரு. சு. ரவி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி மங்கம்மாபேட்டை ஆதி திராவிடர் மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும், எரிமேடை மற்றும் ஆழ்துளை கிணறு அமைக்கவும் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2023 ஏப்ரல் 21

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், வடமாம்பாக்கம் ஊராட்சி மங்கம்மாபேட்டை ஆதி திராவிடர்களின் மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும், எரிமேடை மற்றும் ஆழ்துளை கிணறு அமைப்பது குறித்த புல தணிக்கை செய்யப்பட்டதில் மேற்படி கிராம புல எண் 486/2 மேய்க்கால் புறம்போக்கில் மங்கம்மாபேட்டை ஆதி திராவிடர் மயானம் அமைந்துள்ளது. இம்மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டவும் எரி மேடை அமைக்கவும் போதுமான இடவசதி உள்ளதால் நிதி நிலைக்கேற்ப இப்பணிகள் மேற்கொள்வது பற்றி அரசு பரிசீலிக்கும்.

148—

மயானத்திற்கு வசதி செய்தல்

வினா எண் 1980—திரு. இரா. அருள்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மேற்கு, சாமிநாயக்கன்பட்டியில் உள்ள புது குடியிருப்பு மயானத்திற்கு எரிமேடை, சுற்றுச்சுவர், அணுகு சாலை, தெரு மின் விளக்குடன்கூடிய கம்பங்கள் மற்றும் புதிய ஆழ்துளை கிணற்றுடன் கைப்பம்பு அமைக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

சேலம் மேற்கு, சாமிநாயக்கன்பட்டி புதுகுடியிருப்பிற்கு அடிப்படை வசதிகள் மேற்கொள்ள ரூ.17.00 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நிதி நிலைக்கேற்ப இப்பணிகள் மேற்கொள்ளுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

2023 ஏப்ரல் 21]

149—

வன்கொடுமைகள்

வினா எண் 2386—திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) வன்கொடுமைகள் தொடர்பாக புகார் செய்வதற்கான Toll Free Number *வழங்க அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான கொடுமைகளுக்கு எதிராக தேசிய உதவி மையம்/கால் சென்டர் அமைக்க தேவையான ஏற்பாடுகளை செய்ய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் வழிகாட்டுதல்களின்படி தமிழகத்தில் உதவி மையம்/கால் சென்டர் அமைப்பதற்கான பணிகள் குறித்து தேசிய தகவல் மையம் மற்றும் கூடுதல் காவல் துறை இயக்குநர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் ஆகியோருடன் கலந்தாலோசித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

150—

சமுதாயக்கூடம்

வினா எண் 3729—திரு. துரை. சந்திரசேகரன்: *மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவையாறு தொகுதி, வெள்ளாம்பெரமூர் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[*2023 ஏப்ரல் 21*

விடை—

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) ஆதி திராவிடர் மக்களின் எண்ணிக்கை, சமுதாயக்கூடம் கட்ட கிடைக்கும் இடம் மற்றும் தேவையான நிதி ஒதுக்கீடு ஆகியவைகளைக் கணக்கில் கொண்டு சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. திருவையாறு தொகுதி, வெள்ளாம்பெரமூர் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் சமுதாயக்கூடம் அமைப்பதற்கு ஏதுவாக தகுதியான அரசு புறம்போக்கு நிலம் ஏதுமில்லை. எனவே, திருவையாறு தொகுதி, வெள்ளாம்பெரமூர் ஊராட்சி, அம்பேத்கர் நகரில் புதிய சமுதாயக்கூடம் கட்டும் செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசிடம் இல்லை. தகுந்த நிலம் தெரிவு செய்யப்பட்டால் நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு—II

(170 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

அவையில் அதிக அளவு மூல வினா கேட்ட உறுப்பினர்களில் முதல் மூன்று நிலைகளில் இருப்பவர்கள்:

தலா 3 கேள்வி கேட்ட உறுப்பினர்கள்

வரிசை எண்	உறுப்பினர் பெயர்
1.	திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி
2.	திரு. கி. அசோக்குமார்
3.	திரு. T.K. அமுல் கந்தசாமி
4.	திரு. க. அன்பழகன்
5.	திரு. கே.பி. முனுசாமி
6.	திரு. பெ. ராமலிங்கம்
7.	டாக்டர் சி. விஜயபாஸ்கர்

தலா 2 கேள்வி கேட்ட உறுப்பினர்கள்

வரிசை எண்	உறுப்பினர் பெயர்
1.	திரு. N. அசோக்குமார்
2.	திரு. பி. அய்யப்பன்
3.	திரு. பொ. அர்ஜுனன்
4.	திரு. ச. அரவிந்த் ரமேஷ்
5.	திரு. இரா. அருள்
6.	திரு. ஆர்.பி. உதயகுமார்
7.	திரு. கோ. ஐயப்பன்
8.	திரு. கடம்பூர் ராஜு
9.	திரு. க.சொ.க. கண்ணன்

[2023 ஏப்ரல் 21

10. திரு. க. கணபதி
11. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
12. திரு. இரா. காமராஜ்
13. திரு. மு.பெ. கிரி
14. திரு. செ. கிருஷ்ணமுரளி
15. திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்
16. திரு. S. சதாசிவம்
17. திரு. மா. சின்னதுரை
18. திரு. எஸ். சுதர்சனம்
19. திரு. ஐ.பி. செந்தில்குமார்
20. திரு. மா. செந்தில்குமார்
21. முனைவர் கோவி. செழியன்
22. திரு. க. செல்வராஜ்
23. திருமதி ஆ. தமிழரசி
24. திருமதி எஸ். தேன்மொழி
25. திரு. நத்தம் இரா. விசுவநாதன்
26. திரு. A.P. நந்தகுமார்
27. திரு. அ. பண்ணாரி
28. திரு. K.A. பாண்டியன்
29. திரு. பால் மனோஜ் பாண்டியன்
30. திரு. ஈ. பாலசுப்ரமணியன்
31. திரு. S.S. பாலாஜி
32. திரு. கே. பொன்னுசாமி
33. திரு. ஓ.எஸ். மணியன்
34. திருமதி கு. மரகதம் குமரவேல்
35. டாக்டர் வை. முத்துராஜா
36. திரு. சு. ரவி

2023 ஏப்ரல் 21]

37. திரு. தி. வேல்முருகன்

38. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

39. திரு. செ. ஸ்டாலின் குமார்

தலா 1 கேள்வி கேட்ட உறுப்பினர்கள்

வரிசை எண்	உறுப்பினர் பெயர்
1.	திரு. JMH. அசன் மௌலானா
2.	திரு. ப. அப்துல் சமது
3.	திரு. அம்மன் K. அர்ச்சுணன்
4.	திரு. S. அம்பேத்குமார்
5.	திரு. P.R.G. அருண்குமார்
6.	திரு. ஆ. அருண்மொழிதேவன்
7.	திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்
8.	முனைவர் இசக்கி சுப்பையா
9.	திரு. சபா. இராசேந்திரன்
10.	திரு. ட்டி. இராமச்சந்திரன்
11.	திரு. S.R. இராஜா
12.	திரு. வி.ஜி. இராஜேந்திரன்
13.	முனைவர் த. இனிகோ இருதயராஜ்
14.	திரு. J.L. ஈஸ்வரப்பன்
15.	திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
16.	திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்
17.	திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்
18.	டாக்டர் நா. எழிலன்
19.	திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி
20.	திரு. ஆர். கணேஷ்

21. திரு. சீ. கதிரவன்
22. திரு. V.P. கந்தசாமி
23. திரு. இ. கருணாநிதி
24. திரு. ஜெ. கருணாநிதி
25. திரு. இராம. கருமாணிக்கம்
26. திரு. எம்.ஆர். காந்தி
27. திரு. க. கார்த்திகேயன்
28. திரு. ப. கார்த்திகேயன்
29. திரு. ஆ. கிருஷ்ணசாமி
30. திரு. ஆ. கோவிந்தசாமி
31. திரு. மு. சக்ரபாணி
32. திரு. கே.பி. சங்கர்
33. திரு. எம்.சி. சண்முகையா
34. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
35. திரு. துரை. சந்திரசேகர்
36. திரு. துரை. சந்திரசேகரன்
37. திரு. S. சந்திரன்
38. திரு. வே. சம்பத்குமார்
39. டாக்டர் சி. சரஸ்வதி
40. திருமதி கு. சித்ரா
41. திருமதி க. சிவகாமசுந்தரி
42. திரு. ச. சிவகுமார்
43. திரு. ப. சிவகுமார் (எ) தாயகம் கவி
44. திரு. க. சுந்தர்
45. திரு. செ. சுந்தரராஜன்
46. திரு. கோ. செந்தில் குமார்

2023 ஏப்ரல் 21]

47. திரு. பெரி. செந்தில்நாதன்
48. திரு. கு. செல்வபெருந்தகை
49. திரு. R.D. சேகர்
50. திரு. S. சேகர்
51. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
52. திரு. அ. சௌந்தரபாண்டியன்
53. திரு. எஸ். தங்கப்பாண்டியன்
54. திரு. T.M. தமிழ்செல்வம்
55. திரு. A. நல்லதம்பி
56. திரு. அ. நல்லதம்பி
57. திரு. வி.பி. நாகைமாலி
58. திரு. நிவேதா எம். முருகன்
59. திரு. இ. பரந்தாமன்
60. திரு. S. பழனி நாடார்
61. திரு. மு. பன்னீர்செல்வம்
62. திரு. மு. பாபு
63. திரு. கு. பிச்சாண்டி
64. திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா
65. திரு. ம. பிரபாகரன்
66. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
67. திரு. பூண்டி கே. கலைவாணன்
68. முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்
69. திரு. சி. மகேந்திரன்
70. திரு. ஜி.கே. மணி
71. திரு. A.J. மணிக்கண்ணன்
72. திரு. இரா. மாணிக்கம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

73. திரு. G.V. மார்க்கண்டேயன்
74. திரு. K. மாரிமுத்து
75. திரு. இ.மா. மான்ராஜ்
76. திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்
77. திரு. செ. முருகேசன்
78. டாக்டர் A.R.R. ரகுராமன்
79. திரு. R. ராதாகிருஷ்ணன்
80. திரு. தி. ராமச்சந்திரன்
81. திரு. S. ராஜகுமார்
82. திரு. M. ராஜமுத்து
83. திரு. ஈ. ராஜா
84. முனைவர் T.R.B. ராஜா
85. திரு. செ. ராஜேஷ் குமார்
86. திரு. ரூபி ஆர். மனோகரன்
87. திருமதி ம. வரலட்சுமி
88. திரு. அ.செ. வில்வநாதன்
89. திரு. K.N. விஜயகுமார்
90. திரு. A.G. வெங்கடாசலம்
91. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்
92. திரு. ஆர். வைத்திலிங்கம்
93. திரு. மு. ஜெகன் மூர்த்தி
94. திரு. S. ஜெயக்குமார்
95. திரு. A.P. ஜெயசங்கரன்
96. திரு. பொன். ஜெயசீலன்
97. திரு. கே.ஆர். ஜெயராம்
98. திரு. ஜோசப் சாமுவேல்

இணைப்பு—III

(174 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

உறுப்பினர்கள் வருகை

9-1-2023 முதல் 21-4-2023 வரை பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகை புரிந்த உறுப்பினர்கள் பட்டியல்

வரிசை எண்	உறுப்பினர் பெயர்
1.	திரு. கி. அசோக்குமார்
2.	திரு. கா. அண்ணாதுரை
3.	திரு. மு. அப்துல் வஹாப்
4.	திரு. S. அம்பேத்குமார்
5.	திரு. அம்மன் கே. அர்ச்சுணன்
6.	திருமதி V. அமலு
7.	திரு. பொ. அர்ஜுனன்
8.	திரு. ச. அரவிந்த் ரமேஷ்
9.	திரு. ஆ. அருண்மொழிதேவன்
10.	திரு. இரா. அருள்
11.	திரு. கே.பி. அன்பழகன்
12.	திரு. வி.ஜி. இராஜேந்திரன்
13.	டாக்டர் இரா. லட்சுமணன்
14.	முனைவர் த. இனிகோ இருதயராஜ்
15.	திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்
16.	திரு. தா. உதயசூரியன்
17.	திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்
18.	திரு. ஐட்ரீம் இரா. மூர்த்தி
19.	திரு. கடம்பூர் ராஜூ

20. திரு. க.சொ.க. கண்ணன்
21. திரு. க. கணபதி
22. திரு. இ. கருணாநிதி
23. திரு. காதர்பாட்சா முத்துராமலிங்கம்
24. திரு. ஆ. கிருஷ்ணசாமி
25. திரு. செ. கிருஷ்ணமுரளி
26. திரு. ஆ. கோவிந்தசாமி
27. திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்
28. திரு. மு. சக்ரபாணி
29. திரு. எம்.சி. சண்முகையா
30. டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்
31. திரு. S. சதாசிவம்
32. திரு. S. சந்திரன்
33. திரு. வே. சம்பத்குமார்
34. திரு. கே.எஸ். சரவணக்குமார்
35. திருமதி கு. சித்ரா
36. திருமதி க. சிவகாமசுந்தரி
37. திரு. ச. சிவகுமார்
38. திரு. எஸ். சுதர்சனம்
39. திரு. க. சுந்தர்
40. திரு. செ. சுந்தரராஜன்
41. திரு. கே.ஏ. செங்கோட்டையன்
42. திரு. கோ. செந்தில் குமார்
43. திரு. மா. செந்தில்குமார்
44. திரு. பெரி. செந்தில்நாதன்
45. திரு. கு. செல்வபெருந்தகை
46. திரு. R.D. சேகர்

2023 ஏப்ரல் 21]

47. திரு. S. சேகர்
48. திரு. சேவூர் S. இராமச்சந்திரன்
49. திரு. பி. தங்கமணி
50. திரு. T.M. தமிழ்செல்வம்
51. திருமதி ஆ. தமிழரசி
52. திரு. ந. தளவாய் சுந்தரம்
53. திரு. க. தேவராஜி
54. திரு. A.P. நந்தகுமார்
55. திரு. வி.பி. நாகைமாலி
56. திரு. நிவேதா எம். முருகன்
57. திரு. அ. பண்ணாரி
58. திரு. இ. பரந்தாமன்
59. திரு. மு. பன்னீர்செல்வம்
60. திரு. K.A. பாண்டியன்
61. திரு. மு. பாபு
62. திரு. ஈ. பாலசுப்பிரமணியன்
63. திரு. S.S. பாலாஜி
64. திரு. ஒய். பிரகாஷ்
65. திரு. எ.எம்.வி. பிரபாகரராஜா
66. திரு. ஜே.ஜி. பிரின்ஸ்
67. திரு. நா. புகழேந்தி
68. திரு. பொன். ஜெயசீலன்
69. திரு. கே. பொன்னுசாமி
70. திரு. ரா. மணி
71. திரு. ஜி.கே. மணி
72. திரு. A.J. மணிக்கண்ணன்
73. திரு. ஓ.எஸ். மணியன்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 21

74. திரு. தே. மதியழகன்

75. திரு. G.V. மார்க்கண்டேயன்

76. திரு. K. மாரிமுத்து

77. திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்

78. டாக்டர் வை. முத்துராஜா

79. திரு. செ. முருகேசன்

80. திரு. கே.பி. முனுசாமி

81. திரு. சு. ரவி

82. திரு. பெ. ராமலிங்கம்

83. திரு. M. ராஜமுத்து

84. திரு. ஈ. ராஜா

85. திருமதி ம. வரலட்சுமி

86. திரு. அ.செ. வில்வநாதன்

87. திரு. K.N. விஜயகுமார்

88. திரு. A.G. வெங்கடாசலம்

89. திரு. ஆ. வெங்கடேசன்

90. திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்

91. திரு. அ. வெற்றிஅழகன்

92. திரு. த. வேலு

93. திரு. எஸ்.பி. வேலுமணி

94. முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா

95. திரு. S. ஜெயக்குமார்

96. திரு. கே.ஆர். ஜெயராம்

97. திரு. ஜோசப் சாமுவேல்

98. திரு. ஒ. ஜோதி

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the
Commissioner of Stationery and Printing, Chennai-600 002.